# முடிந்து போன தசைப்பாடல் பற்றிய கதை



மு.பொ

யாழ்ப்பாணம் புங்குடுதீவில்
1939இல் பிறந்த
மு. பொன்னம்பலம்,
ஆன்மீகத்தை அடிப்படையாகக்
கொண்டு சமூக மாற்றத்திற்காக
உழைக்கும் சர்வமத சங்கம் –
பூரண சர்வோதய இயக்கத்தில்
முழுநேர ஊழியராகப்
பணிபுரிந்தவர்.
அறிவார்த்த சகல விடயங்களிலும்
அக்கறை காட்டுபவர்.

1950களின் இறுதியிலிருந்து இன்று
வரை கவிதை எழுதிவரும் இவர்,
சிறுகதைகளும் நாவலும்
விமர்சனங்களும் எழுதியுள்ளார்.

1989 தை முதல் 1990 வைகாசி
வரை, யாழ்ப்பாணத்திலிருந்து
வெளியான மிகவும் காத்திரமான
அரசியல்–சமூக–கலை–இலக்கிய
வாரப் பத்திரிகையான
'திசை'யின் ஆசிரியராகப்
பணிபுரிந்துள்ளார்.

இவர், மு. தளையசிங்கத்தின்
இளைய சகோதரர் என்பதும்
குறிப்பிடத்தக்கது.

# முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை

# முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை

## மு. பொன்னம்பலம்

*மு. பொன்னம்பலம், ஈழத்து இலக்கியப் படைப்பாளிகளில் முக்கிய மானவராகக் கருதப்படுகிறார்.*

*"ஆழமான எழுத்தும் ஆழ்மனத் தேடலும் ஒன்றை ஒன்று தழுவி நிற்பவை. அதனால், ஒருவரின் ஆழமான பண்பாட்டுக்கு அந்நியப் படாத இலக்கிய எடுத்துச்சொல் முறைமையின் புதுமை என்பது இத்தகையோரால் மட்டுமே சாத்தியமாகிறது. காரணம், அவன் ஊடுருவிச் சொல்லும் அகத்தள நிலைகள் எடுக்கும் பன்முக வெளிப்பாட்டுக் கோலங்களே அவை" எனக் கூறும் மு.பொ., பன் முக எழுத்தாக்கங்களில் ஈடுபடுபவர்.*

*இவரது முதற் சிறுகதைத் தொகுதியான 'கடலும் கரையும்' (1996) பற்றி, பேராசிரியர் கா. சிவத்தம்பி பின்வருமாறு கூறுகிறார்:*

*"இந்தத் தொகுதி, ஈழத்து இலக்கியம் பற்றிய சமகால விமர்சனமாக அமைகிறது. அண்மையில் வெளிவந்த நூல்களில் மிகவும் முக்கிய மானது. வெறுமனே அறிக்கை சமர்ப்பிக்கும் போக்காக இல்லாது, வேறு ஒரு பாணியிலான எடுத்துச்சொல் முறைமையில்தான் மு.பொவின் கதைகளை நோக்க வேண்டும்."*

*யாழ்ப்பாணம் புங்குடுதீவில் 1939இல் பிறந்த மு. பொன்னம்பலம், ஆன்மீகத்தை அடிப்படையாகக் கொண்டு சமூக மாற்றத்திற்காக உழைக்கும் சர்வமத சங்கம் - பூரண சர்வோதய இயக்கத்தில் முழுநேர ஊழியராகப் பணிபுரிந்தவர். அறிவார்த்த சகல விடயங் களிலும் அக்கறை காட்டுபவர்.*

*1950களின் இறுதியிலிருந்து இன்றுவரை கவிதை எழுதிவரும் இவர், சிறுகதைகளும் நாவலும் விமர்சனங்களும் எழுதியுள்ளார்.*

*1989 தை முதல் 1990 வைகாசி வரை, யாழ்ப்பாணத்திலிருந்து மிகவும் காத்திரமாக வெளியான அரசியல்-சமூக-கலை-இலக்கிய வாரப் பத்திரிகையான 'திசை'யின் ஆசிரியராகப் பணிபுரிந்துள்ளார்.*

*இவர், மு. தளையசிங்கத்தின் இளைய சகோதரர் என்பதும் குறிப் பிடத்தக்கது.*

**இவரது பிற நூல்கள்:**

*அது (கவிதைகள், 1968), யதார்த்தமும் ஆத்மார்த்தமும் (விமர் சனங்கள், 1991), கடலும் கரையும் (சிறுகதைகள், 1996), காலி லீலை (கவிதைகள், 1997), நோயில் இருத்தல் (நாவல், 1999), திறனாய்வு சார்ந்த பார்வைகள் (விமர்சனங்கள், 2000), ஊஞ்சல் ஆடுவோம் (சிறுவர் கவிதைகள், 2001), பொறியில் அகப்பட்ட தேசம் (கவிதை, 2001), சூத்திரர் வருகை (கவிதைகள், 2003), விசாரம் (கட்டுரைகள், 2004), A Country Entrapped (Poetry, 2007), நீர்க்கோலம் (சிறுவர் ஆக்கங்கள், 2008).*

தமிழியல்
TAMILIYAL

மு. பொன்னம்பலம்

# முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை

காலச்சுவடு பதிப்பகம்

விலை 150 ரூபாய்:

**முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை** • *சிறுகதைகள் • ஆசிரியர்: மு. பொன்னம்பலம் • © மு. பொன்னம்பலம் • முதல் பதிப்பு: ஒகஸ்ட் 2009 • இணைந்து வெளியிடுவோர்: தமிழியல், லண்டன்; காலச்சுவடு பதிப்பகம், 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629 001 • தொலைபேசி: 91–4652 – 278525 • தொலைநகல்: 91–4652 – 231160 • மின்னஞ்சல்: kalachuvadu@sancharnet.in • அச்சுக்கோப்பு: சுவடி, சென்னை 600 005, தொலைபேசி: 91–44 – 2844 1672 • அட்டை வடிவமைப்பு: தயா (பிரான்ஸ்) • அட்டை அச்சாக்கம்: பிரிண்ட் ஸ்பெஷாலிட்டீஸ், சென்னை 600 014 • அச்சாக்கம்: சென்னை மைக்ரோ பிரிண்ட் (பி) லிமிடெட், சென்னை 600 029.*

காலச்சுவடு பதிப்பக வெளியீடு: 293

**Mutintupona Tacaiyatal Patriya Katai** • *Short Stories • Author: Mu. Ponnampalam • © Mu. Ponnampalam • Language: Tamil • First Edition: August 2009 • Size: Demy 1 × 8 • Paper: 24 kg maplitho • Pages: 178 • Copies: 1000 • Jointly Published by Tamiliyal, 27-B High Street, Plaistow, London E13 0AD, UK, Phone: 020 8472 8323, email: info@ tamiliyal.org.uk and Kalachuvadu Pathippagam, 669 K.P. Road, Nagercoil 629 001, India. Phone: 91-4652 - 278525, Fax: 91-4652 - 231160, e-mail: kalachuvadu@sancharnet.in • Typesetting: Chuvadi, Chennai 600 005, Phone: 91-44-2844 1672 • Cover Design: Thaya (France) • Wrapper Printed at: Print Specialities, Chennai 600 014 • Printed at: Chennai Micro Print (P) Ltd., Chennai 600 029 • Price: Rs. 150.*

**Selling Rights:** *Sudarsan Book Processors and Distributors, 669 K.P. Road, Nagercoil 629 001, Phone: 91-4652 - 278525, Fax: 91-4652 - 231160, E-mail: sbpd669@gmail.com*

ISBN 978-81-89945-68-8

8/2009/S.No.293, kcp 462, 24 (1) 1000

அன்பர்களாகவும் எதிரிகளாகவும்,
என் ஆற்றலாகவும் பலவீனமாகவும்
இருந்து இயங்கியபோதும்,
தன்னை எப்பொழுதும்
நிர்குணியாக வெளிக்காட்டி நிற்கும்
அந்தப் பேராற்றலான என் குருவுக்கு
இந்நூல் சமர்ப்பணம்.

# உள்ளடக்கம்

11
பதிப்புரை
13
என்னுரை
17
வீடும் பல்லக்கும் (சரிநிகர் 1998)
29
வெட்டு (களம் 1997)
39
சீதை (களம் 1999)
48
ஆந்தை (தினக்குரல் 2002)
56
அண்டமும் அற்பமும் (தினக்குரல் 2001)
61
அவனுக்கு என்ன நேர்ந்தது. (எரிமலை 2004)
69
துச்சாதனர்கள் (2002)
77
முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை
(காலம் 2002)

81
மரணம் (காலம் 2003)
85
அன்பு (எரிமலை 2005)
94
விடுதலை மூலம் (2005)
102
மஹாநாம தேரர் மான்மியம் (எரிமலை 2005)
109
அகாலிகள் (2005)
117
கைது செய்யப்பட்ட கிராமம் (2000)
161
துவக்குப் பிடியால் வாங்கிய அடி (2005)
169
ஆய்வு (2005)
173
பீதி (2006)

# பதிப்புரை

'மு.பொ.' எனப் பரவலாக ஈழத்து இலக்கிய உலகில் அறியப்படுப வரான மு. பொன்னம்பலம், அறுபதுகள் தொடங்கி இற்றைவரை இடையறாது இயங்கிவருபவர்.

கவிதை, விமர்சனம், சிறுகதை, நாவல், இதழியல், மொழி யாக்கம் எனப் பல்துறைகளில் ஈடுபடுகிறார். 'ஆத்மார்த்தக்' கோட்பாட்டை வரித்துக்கொண்டு, அதனைக் கூர்மையாக விமர் சனங்களிலும் படைப்புகளிலும் பிரயோகித்துவருகிறார். பார்வை, வெளிப்பாடுகள் என்பவற்றில் தனது ஆற்றல் காரணமாய்த் தனக்கெனத் தனி அடையாளத்தையும் நிறுவிக்கொண்டுள்ளார்.

"யாழ்ப்பாணத்தின் முக்கிய புத்திஜீவிகளில் ஒருவர்" என, ஏ.ஜே. கனகரத்தினா இவரைப் பற்றிக் குறிப்பிட்டுள்ளார்; சிந்தனையாளரும் படைப்பாளியுமான மு. தளையசிங்கத்தின் தம்பி என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஏற்கெனவே, 'யதார்த்தமும் ஆத்மார்த்தமும்' என்ற இவரின் கட்டுரைத் தொகுதியைத் 'தமிழியல்' 1991இல் வெளியிட்டுள்ளது; தற்போது இச்சிறுகதைத் தொகுதியை வெளியிடும் வாய்ப்புக் கிட்டியமையிலும் நிறைவுகொள்கிறது.

**தமிழியல்**

என்னுரை

## காலத்தைக் கடந்து செல்லல்

'நமக்குத் தொழில் கவிதை' என்றார் பாரதியார். ஆனால், பாரதியார் தன் கவிதைத் தொழிலால் எந்தவொரு வருவாயும் பெற்றவரில்லை. அவ்வாறே நாமும். இன்று எழுத்தில் ஈடுபடும் அநேக தமிழ் எழுத்தாளர்கள் எவரும் எழுத்தால் பெரும் வருவாய் பெறுவதில்லை. அவர்கள் தம் வாழ்க்கையை ஓட்ட வேறு தொழில் செய்பவராகவே உள்ளனர். ஆயினும் எழுதுகின்றனர். ஏன்? என்னைப் பொறுத்தவரையில் நான் எழுதுவதெல்லாம், என் வருவாய்க்காகச் செய்யும் தொழிலை – என் கற்பித்தல் வேலை போன்றவற்றை – இன்னும் சிறப்புறச் செய்ய என் எழுத்து வேலை பின்னுதைப்பாக நிற்கிறது, என்பதனாலேயே. ஒரு தரமான ஆக்கத்தைப் படைத்து விட்டால் எனக்குள் முகிழ்த்தெழும் இன்னுணர்வு, ஆழமான தியானத்தின் பின்னெழும் ஆனந்தமாக விரியத் தொடங்கும். இந்த உணர்வோடு வகுப்புக்குப் போகும்போது மாணவர்களிடமும் இது தொற்றிக்கொள்ள, வகுப்பே மிகச் சந்தோஷமாக, நான் சொல்வதையெல்லாம் கிரகிக்கும் மனத்தெளிவெய்துவதைக் காணலாம். அந்நேரங்களில் நான் தொட்டுக்கொள்ளும் ஒவ்வொரு வேலையும் கலைப்பரவசமாக இன்பம் தருவதைக் கண்டிருக்கிறேன்.

ஒருநாள் வகுப்பில் எச்.ஜி. வெல்ஸின் 'ரைம் மஷின்' பற்றி எதேச்சையாக விளக்கிக்கொண்டிருந்தபோது, மாணவன் ஒருவன், "காலம் என்றால் என்ன?" என்று கேட்டான். நான், எச்.ஜி. வெல்ஸை ஒருபுறம் வைத்துவிட்டு, "காலம் என்று ஒன்றில்லை. அதை நீங்கள்தான் உருவாக்குகிறீர்கள்" என்று கூறியபோது, "நாங்களா?" என்று ஒருவிதமாக இழுத்தான், அவன். "ஆம்" என்று கூறிய நான் தொடர்ந்து, "தூங்கும்போது நீங்கள் காலத்தை விழுங்கிவிடுகிறீர்கள். விழிக்கும்போது காலத்தை வெளித்தள்ளுகிறீர்கள், இல்லையா?" என்று, நான் எனது கவிதை ஒன்றையே எடுத்து விளக்கியபோது, அங்கிருந்த அனைத்து மாணவர்களது கண்களும் மலர்ந்து சிரித்தன.

○

இத்தொகுப்பில் உள்ள அவனுக்கு என்ன நேர்ந்தது?, அகாலிகள் ஆகிய இரண்டு கதைகளும் காலத்தைக் கடப்பதுபற்றிப் பேசுகின்றன. விடுதலைக்கான விசாரம் என்பது வழமையான நோக்கிலிருந்து விலகிக் காலத்தை முன்னிறுத்தி, புதிய மொழியில் பேசப்படுகிறது. அண்டமும் அற்பமும், முடிந்துபோன தசை யாடல் பற்றிய கதை ஆகியவையும் இவற்றோடு தொடர்பு பட்டவையே. இவற்றைப் படிக்கும்போது, 'நான் என் உடலைத் துப்பிவிட்டேன்' என்று விவேகானந்தர் கூறியதையும், 'இனி நான் வரும்போது உலக உபாதைகளுக்குட்படாத புதிய உடலோடு வருவேன்' என்று மகாயோகிஅரவிந்தர் கூறியதையும் நினைவு படுத்துதல் இதந்தருவதாய் அமையும்.

இவை நீங்கலான ஏனைய அநேகமான கதைகள், ஈழத்தமிழர் விடுதலைப் போராட்டத்தையும், அதன் விளைவுகளையும் கருப் பொருளாகக் கொண்டுள்ளன. விடுதலைப் போராட்டத்தின் ஆரம்ப கட்டத்திலிருந்து அது படிப்படியாக எடுத்த பரிணாம — பரிமாணப் போக்குகளை வீடும் பல்லக்கும், வெட்டு, சீதை, துச்சாதனர்கள், அன்பு, கைது செய்யப்பட்ட கிராமம், துவக்குப் பிடியால் வாங்கிய அடி ஆகியவை விளக்கிநிற்க, இத்தனை அனர்த்தங்களுக் கும் காரணமாய் இருப்பது புரையோடிய சிங்கள இனவாதமே என்பதை மஹாநாமதேரர் மான்மியம் என்னும் ஆக்கம் புத்த சமயக் கொண்டாட்டங்களின் வடிவிலேயே தருகிறது. இன்று ஈழத்தில் தமிழர் விடுதலைப் போராட்டம் தோல்வியை வந்தடைந் துள்ளது. அப்படியெனில், விடுதலைக்கான இத்தகைய எழுச்சியும் லட்சக்கணக்கான மக்களும் போராளிகளும் கொடுத்த பலிகளும், செய்த தியாகங்களும் காற்றோடு கலந்துபோன அர்த்தமற்றவையா? இங்கேதான், அரவிந்தர் கூறுவது, இந்த எழுச்சியை மேற்கொண்ட இனத்திற்கு ஆறுதல் தருவதாய் உள்ளது.

*A nation capable of an act of national*
*self sacrifice ensures its future.*

ஒரு தேசிய இனம் தேசியரீதியான சுயதியாகம் என்னும் செயலுக்கு ஆற்றல் பெறும்போது அதன் எதிர்காலத்தை உறுதிப் படுத்திக்கொள்கிறது.

மொத்தத்தில் தியாகமே விடுதலையின் விளைநிலம். இந்நூல் விடுதலையின் வெவ்வேறு தளங்களின் பார்வை விரிப்பாகவே நிற்கிறது. ஏற்கனவே நான் வெளியிட்டிருந்த 'கடலும் கரையும்' சிறுகதைத் தொகுப்பின் தொடர்ச்சியாகவே இதைக் காணலாம்.

இறுதியாக, எனது இந்த இரண்டாவது சிறுகதைத் தொகுப் பைப் பதிப்பாக்கம் செய்து, எனது கனவை நனவாக்கியதோடு,

பிழைகளைச் சுட்டிக்காட்டித் திருத்தம் செய்வித்து வெளியிடுவதில் சிரத்தை எடுத்துக்கொண்ட பத்மநாப ஐயருக்கும், இந்நூலுக்குப் பொருத்தமான அட்டைப் படத்தினை வரைந்துதவிய ஓவியர் தயாவுக்கும் (பிரான்ஸ்) நான் நன்றியுடையவனாவேன். அடுத்ததாக, எனக்கெதிராக விமர்சனம் வைத்தவர்கள், தூற்றியவர்கள் ஆகியோரும், எனது விமர்சன எழுத்துக்களால் பாதிக்கப்பட்ட அல்லது சந்தோஷப்பட்ட கவிஞர்கள், எழுத்தாளர்கள் ஆகியோரும் என் விஷேடமான அன்புக்குரியவர்கள்.

எனக்குள், மேற்சொன்ன அன்பர்களாகவும் எதிரிகளாகவும், என் ஆற்றலாகவும் பலவீனமாகவும் இருந்து இயங்கியபோதும், தன்னை எப்பொழுதும் நிர்குணியாக வெளிக்காட்டி நிற்கும் அந்தப் பேராற்றலான என் குருவுக்கு இந்நூல் சமர்ப்பணம்.

கொழும்பு

*25–05–2009*

**மு.பொ.**

# வீடும் பல்லக்கும்

"இனிமேல் ஏழாயிரத்து ஐந்நூறுதான் கூலி. அதுக்குக் குறையாது. உங்களுக்கு பிடிச்சா இருங்க. இல்லாட்டி, இந்த மாதம் வீட்டைக் காலிசெய்யுங்க." – வீட்டுச் சொந்தக்காரன் பீரிஸ் சிங்களத்தில் சொல்லிவிட்டுப்போன வார்த்தைகள் அவன் காதில் ஒலித்துக்கொண்டிருந்தன.

திடீரென இரண்டாயிரம் ரூபா ஏற்றம்! ஐயாயிரத்து ஐந்நூறிலிருந்து ஏழாயிரத்து ஐந்நூறுக்கு ஏற்றம். எவ்வளவு சொல்லியும் அவன் இளகுவதாய் இல்லை.

மூன்று வருடங்களுக்கு முன்னர் வந்தபோது நாலாயிரத்து ஐந்நூறிலிருந்து, அடுத்த வருடம் ஐயாயிரத்து ஐந்நூறாகி, இந்த வருடம் ஏழாயிரத்து ஐந்நூறாகிவிட்டது!

இவ்வளவு காலம் பழகிய பழக்கத்தை முன்வைத்து இரந்து பார்த்தும், பீரிஸ் இறங்கிவருவதாய் இல்லை. அவனும் இந்தப் பழக்கத்தைப் பேணுவதுபோலவே சிரித்துக் கதைத்தவாறே தன் நிலைப்பாட்டிலிருந்து இம்மியும் விலகாது இருந்தான்.

அதற்கு மேலும் பேசுவதற்கு இடமில்லை.

பீரிஸ் போய்விட்டான்.

அவன் போனபின், சிவா, மேசையில் கை இரண்டையும் குத்தவைத்து நாடியைத் தாங்கியவாறு உட்கார்ந்திருந்தான்.

பாண்டவர்கள் தங்குவதற்கு ஐந்து கொட்டில்களாவது போட்டுக்கொள்ள இடந்தருமாறு துரியோதனன்முன் இரந்து நின்ற கிருஷ்ணன், மனச்சோர்வோடு திரும்பிக்கொண்டிருந்தான்.

"அவர்களுக்கு ஈ இருக்கும் இடங்கூடத் தரமாட்டேன்" என்று துரியோதனன் கூறியது கிருஷ்ணன் காதுகளில் மீளொலிக்க, அவன் இதழ்களில் மாயப் புன்னகை தவழ்ந்தது.

செல்வநாயகத்தோடு செய்த உடன்படிக்கையை, பண்டார நாயக்கா கிழித்தெறிகிறார்.

செல்வநாயகம் செய்வதறியாது வீட்டுச் சின்னத்தை வைத்துக் கையைப் பிசைந்தபடி பார்த்துக்கொண்டு நிற்கிறார்.

இதைப் பார்த்து ஜெயவர்த்தனா கைகொட்டிச் சிரிக்கிறார். தன் கண்டி யாத்திரைக்கு, கைமேல் பலன் கிடைத்ததில் அவருக்குப் பரம சந்தோஷம்.

வீட்டுச் சொந்தக்காரன் பீரிஸ், ஜெயவர்த்தனாவில் புகுந்து பண்டாரநாயக்காவில் வெளிவருகிறான்.

இப்போ சிவா இருந்த இடத்தில் செல்வநாயகம் நாடியில் கைவைத்தவாறு இருக்கிறார்.

சிவாவுக்குப் பழைய நினைவுகள் கிளம்பி வந்தன.

அவனுடைய அப்பா, சிங்களநாட்டில் பெரிய கடை முதலாளி. அவருடைய கடைக்குப் பின்னால் அன்றாடம் கூலிப் பிழைப்பை நம்பி வாழும் ஏழைச் சிங்களக் குடிகள். அந்தக் குடிசைகளில் வாழும் சிங்களப் பிள்ளைகளும், அவர்களுடைய பெற்றோரும் இவனோடு அன்பாகப் பழகுவதும், இவர்களிடம் அடிக்கடி ஜீவனோபாய உதவிபெறுவதும் வழமையாகிப்போய் விட்ட ஒன்று.

திடீரென, பண்டாரநாயக்கா இருபத்திநாலு மணித்தியாலத்தில் 'சிங்களம் மட்டும்' என்று கத்துகிறார்.

செல்வநாயகம், பொன்னம்பலம் ஆகியோர் பாராளுமன்றத்திற்கு முன்னாலிருக்கும் கடற்கரையில் போய்க் குந்தியிருந்து சத்தியாக்கிரகம் செய்கின்றனர். கல்லெறி விழுகிறது. குந்தியிருந்தோர் நெற்றிகளில் இருந்து இரத்தம் வழிகிறது.

இவன் கடைக்குப் பின்னால், இவனோடு விளையாடிய சிங்களப் பையன்களின் முகத்தில் ஒரு மாறுபாடு. இவனைக் கண்டதும் இப்போ முகத்தைக் கடுகடுப்பாக வைத்துக்கொண்டு "யாப்பன மாடு- ஓடு" என்று, அவர்கள் இடையில் தூஷணத்தைப் புகுத்திக் கொச்சைத் தமிழில் கூறிப் பெரிதாகச் சிரித்தனர். பெரியவர்கள் இவனையும், இவன் அப்பாவையும் பார்த்து, முகத்தில் திடீரென ஏற்பட்ட விகாரத்தோடு, "உம்பலாட்ட பெடறல்த ஓண? உம்பலாட்ட பணாஹட்ட பணஹத ஓண?" என்று கேலி செய்கின்றனர்.

சிவாவின் உள்மனம் ஒருவித அசெளகரியத்தால் கூனிச் சுருக்கங்கள் கண்டது.

அவனது அப்பாவின் கடை, சொத்து, சம்பாத்தியம் எல்லாம் திடீரென அடித்தளம் கெட்டு ஆட்டங்காணுவதுபோல் அவனுக்குப் பட்டது.

○

இனி வீடு தேடும் படலம் ஆரம்பமாயிற்று. செல்வநாயகம் யோசிக்கிறார்.

சிவா அவருக்குள்ளிருந்து வெளிப்பட்டுச் செல்கிறான். அவனது வீடு தேடும் விவகாரத்திற்கு உதவி செய்யப் பல இடைத் தரகர்கள் வந்துசேர்கிறார்கள்.

"இப்ப வீடு வெள்ளவத்தையில் எடுக்கமுடியாதய்யா. மாதம் பத்தாயிரம் ரூபா, ஒன்றரை வருஷம் அட்வான்ஸ். உங்களுக்கு குடுக்க முடியுமா?" – வீட்டு புரோக்கர் பெரேரா கேட்கிறான்.

"எனக்கு இந்தக் கூலி கட்டாது. மாதம் ஐயாயிரம், ஒரு வருஷ அட்வான்ஸ் எண்டா பேசுங்க. அதுக்குமேலே ஒரு சதமும் என்னால் முடியாது." – சிவா கூறினான்.

"அதெல்லாம் முந்தி. இப்ப வெள்ளவத்தையில் நீங்க சொல்லிற கணக்குக்கு வீடில்ல..." புரோக்கர் பெரேரா மிகக் கேலியாகவும் அலட்சியமாகவும் கதைத்தான்.

பெரேராவின் பேச்சிலிருந்த கேலி, முன்னர் அவன் அப்பாவின் கடைக்குப் பின்னால் இருந்த சிங்களவர்கள், அவன் அப்பாவைப் பார்த்து, "உங்களுக்கு சமஷ்டியா வேணும்? உங்களுக்கு ஐம்பதுக் கைம்பதா வேணும்?" என்று கேட்டுக் கேலி பண்ணியதை ஏனோ நினைவூட்டிற்று.

முன்னர் எழுபதுகளில் அவனது நண்பர்கள் ஒரு பெரிய வீட்டை வெள்ளவத்தையில் 250 ரூபா கூலி கொடுத்துத் தங்கியிருந்தபோது அவனும் தங்கியிருக்கிறான். இப்போ 2500 ரூபாவுக்குக்கூட ஒரு அறை எடுக்க முடியாது!

செண்பகப் பெருமாள் யாப்பா பட்டினத்து மண்ணை எடுத்து வந்து தங்கப்பேழையில் வைத்து லங்கா ராணியிடம் கையளித்து வணங்கிநிற்கிறான். அவள் அவனுக்குப் பதவி உயர்வு கொடுத்து முதுகில் தட்டிவிட, பெருங்களி கொள்கிறான்.

முன்னர் இனக்கலவரம் கொழும்பில் வெடித்தபோது, 'லங்கா ராணி' கப்பலில் அகதிகளாகத் தமிழர்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்பட்டபோது அவனும் அதில் போயிருக்கிறான். அப்போது யாழ்ப்பாணத்தில் வீடு இருந்தது. இப்போ வீடு தேடிக் கொழும்பில்...

"ஏன் இப்ப வெள்ளவத்தையில் வீடு எடுக்க முடியாது?" புரோக்கர் பெரேரா கூறியவற்றுக்கு ஏதும் பேசாது தன் சிந்தனை வயப்பட்டிருந்த சிவா, திடீரென முடுக்கிவிடப்பட்டவன்போல் யந்திரகதியில் கேட்டான்.

"இப்ப வன்னியில் இருந்து மிச்சம் சனம் வாறதுதானே மாத்தயா... அதனால, இப்ப எல்லாம் கூடக் காசு."

"அப்ப இனி எங்க வீடு 'சீப்பா' எடுக்கலாம்?"

"தெஹிவளையில் பாப்பமா? அங்க கொஞ்சம் 'றேற்' குறைவு."

"சரி அங்க பாப்பம்."

○

யாழ்ப்பாணத்து மண் கொழும்புக்குக் கொண்டுவரப்பட்ட தன்பின் கொழும்பு மண்ணுக்கு இன்னும் கிராக்கி அதிகரிக்கிறது. அகதிகளாக யாழ்ப்பாணத்தவர் கொழும்பு வந்து நிற்கின்றனர். யாழ்ப்பாணத்தில் இவர்கள் வீடும் தோட்டந்துரவுகளும் புல்டோஷர் கொண்டு இடிக்கப்பட, இங்கே கொழும்பில் மூலைமுடுக்கு, சந்துபொந்துகளிலெல்லாம் வீடுகள் எழுகின்றன. அரைகுறையாகக் கிடந்த வீடுகள் தமிழரின் அட்வான்ஸ் பணத்தில் பெரிதாக நிமிர்கின்றன.

யாழ்ப்பாணத்தில் இவர்களின் கல்லறைகள்கூட இருக்கக் கூடாதென்ற நிலையில் தரைமட்டமாக்கப்பட, அவர்களின் ஆவிகளுக்குக்கூட நிம்மதி கிடைக்காத அந்தரநிலை.

இந்த நிலையில் யாழ்ப்பாணத்தவர் எல்லாம் கொழும்புக்கு அள்ளுப்படுவது தம் உயிரைத் தக்கவைத்து நிம்மதி தேடவா?

வீட்டு புரோக்கர்கள் பலருக்குப் பின்னால் வீடு தேடும் படலத்தில் சிவா.

பெரேரா காட்டிய வீடுகள் ஒன்றும் சரிவரவில்லை. பின்னர், அவனே கைவிட்டுவிட்டான்.

இன்னும் பெரேராவின் சகாவான பீற்றர் எங்கெங்கோவெல்லாம் கொண்டுபோனான். ஆனால், இவன் காட்டிய வீடுகளும், தமிழர்களை எங்காவது தள்ளிவிட்டு, காசு பெற்றுக்கொண்டால் போதும் என்ற சுயநலத் தேவைகளால் உந்தப்பட்டவைபோலவே பட்டன.

"சரனங்கர ரோட்டில் இருக்கிற வீடு எப்படி?" பீற்றர் கேட்டான்.

"அந்த வீடு 'றேற்' குறைவுதான், ஆனா, மிகவும் சின்னவீடாப் போச்சு." சிவா கூறினான்.

"அப்ப வைத்தியா ரோட்டு வீடு?"

"அது பரவாயில்லை. ஆனா, நல்லா உள்ளுக்க போயிற்று. கனதூரம் நடக்கணும், பள்ளிக்கூடம்போற பிள்ளையளுக்கு சரிவராது."

"அப்ப அந்த பன்சல வீடு?"

"அந்த வீட்டுக்கு அருகில இருக்கிற ஆக்கள் நல்ல ஆக்கள் மாதிரிப் படயில்ல..."

"ஆரு சொன்னது?"

"ஆக்களைப் பார்க்க அப்படித்தான் படுகுது..."

"அப்ப அந்த ஹில் ஸ்றீற் வீடு நல்லதுதானே?"

"அதுக்கு இரண்டு பஸ் எடுக்கோணும்..."

"சும்மா போங்கய்ய... உங்களுக்கு வீடு எடுக்கேலாது." – பீற்றர் ஆத்திரப்பட்டுக் கதைத்தான்.

பீற்றர் காட்டிய வீடுகளைச் சிவா நிராகரித்தமைக்கு, அவன் கூறிய வெளிக் காரணிகளைவிட, வீட்டுச் சொந்தக்காரர்கள் வைத்த நிபந்தனைகளே முக்கிய காரணிகளாக நின்றன.

ஒரு வீட்டில், இரவு பத்து மணிக்குமேல் லைற் எரிக்கக் கூடாதென்றனர். இன்னோர் இடத்தில் 'பைப்' தண்ணீரைவிட்டு, கிணற்று நீரையே பாவிக்க வேண்டுமென்றனர். இன்னொரு வீட்டில் 'விசிற்றர்ஸ்' என்று யாரும் வரக்கூடாது என்றனர். இன்னொரு வீட்டில் இரவு பத்து மணிக்குள்ளேயே எல்லோரும் வீட்டுக்கு வந்துவிட வேண்டும் என்றனர்.

பீற்றர் காட்டிய வீடுகளில் முன்வைக்கப்பட்ட இத்தகைய ஐந்து அம்ச, ஆறம்ச நிபந்தனைகள்தான் சிவாவை அந்த வீடுகளை அணுகவிடாது ஓட, ஓட விரட்டின. இந்த விவகாரங்களும், அதை யொட்டியெழும் மனித இருப்பையே நசுங்கவைக்கும் மேலாதிக்கப் போக்குகளும் புரோக்கர்மாருக்கு எங்கே விளங்கப்போகுது?

"தன் நெஞ்சிலேயே வீட்டைச் சின்னமாக வைத்துக்கொண்டு வீடுதேடிய செல்வநாயகத்துக்கே ஒழுங்கான வீடு கிடைக்கேல்லை யாம். நீங்களா வீடு தரப்போறியள்?" சிவா சத்தம்போட்டு, தன் னோடு கூடவந்த புரோக்கர் பீற்றருக்குக் கேட்கும்படியாகச் சொன்னான்.

புரோக்கருக்கு அவன் சொன்னது அரைகுறையாக விளங்கிற்று.

"ஆரு செல்வநாயகம்?" – அவன் கேட்டான்.

"அந்த தமிழ் புரோக்கர்" – சிவா கூறினான்.

"அப்பிடியா? ஆனா, அவங்களுக்கு இந்த ஏரியாவில வீடு எடுக்க ஏலாது. அவங்களுக்கு இந்தப் பக்கம் பழக்கம் இல்ல."

"பழக்கம் என்ன பழக்கம், நெஞ்சில உரம் பத்தாது!"

"அது சரி" –மீண்டும் புரோக்கர் ஒன்றும் விளங்காது ஒத்துக் கொண்டான்.

கையில் காசில்லாமல் என்னைப்போல வீடு தேடும் ஒருவன் எங்கும் இருக்கமாட்டான். இன்னும், வீடு கிடைக்காவிட்டாலும் என்னை வீடு பார்க்கக் கூட்டித்திரியும் புரோக்கர்மாருக்கு ஐம்பது, நூறென்று 'சந்தோஷப்படுத்தல்' வேறு.

ஒவ்வொரு சிறுதொகைச் செலவுகூட எனக்கு, என் இரத்தத்தை உறிஞ்சுவதுபோல் பட்டது.

போன வருடம் வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுப்பதற்காக அடைவுவைத்த நகைகள் இன்னும் மீட்கப்படவில்லை. அவை இருந்தாலாவது இம்முறை வீடு தேடுவதைக் கொஞ்சம் தைரியத் தோடும் செய்யலாம். ஆனால், இப்படி ஒன்றுமே இல்லாத கையறுநிலையில் வீடு எங்கே எடுப்பது!

எவ்வாறானாலும் வீடு தேடியே ஆகவேண்டும்.

ஆனால், எப்படி என்றுதான் தெரியவில்லை.

மந்திரத்தால் மாங்காய் பறிக்கிற விவகாரமா, வீடு தேடுதல் என்பது? எனக்குக் கிடைக்கிற வருவாயின் லட்சணத்தில் வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுக்கமுடியுமா?

வெளிநாட்டிலுள்ள அவன் உறவினர்களுக்குப் பல கடிதம், தொலைபேசிமூலம் செய்தி அனுப்பியாயிற்று. மருமக்கள், பெறா மக்கள், ஒன்றுவிட்ட சகோதரர்கள், பேரர்மார் என்று எத்தனை வகையான உறவுகள். அவர்களுக்கு இங்கிருந்து பிறப்புப் பத்திரம், விவாகப் பத்திரம், கலியாணப் பொருத்தம், நற்சாட்சிப் பத்திரம் என்று உதவி தேவைப்படும்போது கால, நேரம் பார்க்காது தொலை பேசி அழைப்புகள் வந்த வண்ணம் இருக்கும். ஆனால், இவர்க ளிடமிருந்து இப்படி இக்கட்டான நேரத்தில் இங்கிருந்து ஏதாவது உதவி தேவைப்படும்போது, எல்லா உறவுகளும் மூடுண்டு நிசப்த மாகிவிடும். இவ்வேளையில் எந்தவித இரத்த உறவுமற்ற நண்பர் களிடமிருந்து திடீரென வந்து சேரும் உதவிகள் உண்மையில் கடவுளின் வருகையாகவே அவனுக்குப் படுவதுண்டு. இம்முறையும் அப்படி ஒரு நம்பிக்கை அவனுக்கு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் எங்கள் வீடும் இருப்பும் எம் பிரக்ஞையில் தட்டுப்படாத வெறும் சடங்காகவே இருந்திருக் கிறது என்பதை இப்போதே அவன் உணர்கிறான்.

"வீட்டுக்கு நேரே புள்ளடி
அதிகப்படி பத்தாயிரம்
சிறைச்சாலை பூஞ்சோலை
தூக்குமேடை பஞ்சுமெத்தை
வீடின்றி வாழ்வில்லை..."

என்றவாறு முன்னர் ஐந்து வருடத்திற்கொருக்கால் வரும் தேர்தலின்

போதும் பின்னர் மாவட்ட சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் என்று வருகின்ற போராட்டங்களின்போதும் தமிழருக்கு வீடுபெற்றுத்தரப் போராடும் கறுப்புக்கோட்டு புரோக்கர்மார் ஏவிவிடும் ஏவல் பிசாசுகள் இப்படி வந்து யாழ்ப்பாணத்து வாழ்க்கையைச் சுரணைகெட்டதாக்கியிருக்கலாம் என்று அவன் எண்ணியதில் நிரம்ப உண்மையுண்டு.

ஆனால், இப்போ கொழும்பு வந்ததிலிருந்து இந்த இருப்புப் பற்றிய பிரக்ஞை பிறழ்வுபட்டு விகாரப்பட்டது போன்ற நிலை. ஒவ்வொரு ரூபா செலவிலும் அதன் நோண்டுதல், பிராண்டுதல் முதல் எமது பிரக்ஞையை பலூன்மாதிரி உப்பவைத்தது.

மாதம் மாதம் தண்ணீர்க்காசு, கரண்டுக்காசு என்பவற்றோடு நாளாந்தம் பாண், தேயிலை, பால், மீன், மரக்கறி என்று ஒவ்வொன் றுக்கும் கொட்டுகிற காசு, சதா எங்கள் இருப்பைச் சத்துணவு இல்லாத சோமாலியாக் குழந்தைகளின் வயிற்றைப்போல் வீங்க வைத்துக்கொண்டேயிருந்தது.

இவ்வளவோடு இது நின்றுவிடப்போகிறதா?

இரவு பன்னிரெண்டு மணிக்கு வீடே நல்ல உறக்கத்தில் மூழ்கியிருக்கும்போது எமது இருப்பை நிச்சயப்படுத்திக்கொள்வது போல் கதவு தட்டப்படும். துடித்துப்பதைத்துக்கொண்டு தூக்கம் முகமெல்லாம் வழியக் கதவைத் திறந்தால் இரண்டு ராணுவக்காரர் ஆயுதம் சகிதம் காவல்தர பொலிஸார் வீட்டுக்குள் நுழைந்து கொண்டே –

"பொலிஸ் றிப்போட், பொலிஸ் றிப்போட்" என்று ஒருவர் குரல்கொடுக்க, "ஐடென்ரிற்றிக் கார்ட், ஐடென்ரிற்றிக் கார்ட்" என்று அடுத்தவர் கேட்க, நாம் அவற்றை எங்கிருந்தோவெல்லாம் துழாவியெடுத்து பயபக்தியோடு கையளிக்க, வீட்டில் உள்ள அனைவரும் ஆவியுலகத்தவர்போல் தோற்றம் அளிக்க, பொலிஸா ரின் உதடுகளில் ஒருவித கேலிச் சிரிப்பு.

"உங்களுக்கு சமஷ்டியா வேணும்? உங்களுக்கு ஐம்பதுக்கைம் பதா வேணும்?" – முன்னர் சிவாவின் கடைக்குப் பின்னால் இருந்த சிங்களவர்கள் கேட்ட கேள்விகள், இப்போ இந்தப் பொலிஸாரின் கேலிச் சிரிப்பில் எக்காளமிடுவதை அவன் காண்கிறான்.

முன்னர் பொலிஸ் றிப்போட்டுக்கு புகைப்படம் என்பது தேவைப்படவில்லை. இப்போ புகைப்படங்கள் குடும்ப சமேதரராய் எடுத்து அதில் ஒட்டப்பட்டிருக்க, அதில் இவர்களின் அனாதைத் தோற்றம் பொலிஸாரின் கேலிக்கும் கிண்டலுக்கும் மேலும் தூபம் இடுவதாகவே இருந்தது.

இவ்வாறு நள்ளிரவுகளில் தூக்கக் கலக்கத்தோடு பொலிஸா ரோடு போராடும் நிகழ்வுகளுக்கு வால்வைப்பதுபோல் சிலவேளை

களில் பகல் நேரங்களில் கதவு தட்டப்படும். அவசரஅவசரமாகக் கதவைத் திறந்து பார்த்தால், ஒரு 'மகான்' கையில் ஒரு லிஸ்றோடு, இழுவுண்ட காற்சட்டையும் சேர்ட்டுமாக நின்றுகொண்டிருப்பார்.

"என்ன வேணும்?"

"ரோஹினி ரோட்டில் ஹீன் மாத்தையா செத்துப்போனது. அவரை கனத்தைக்குக் கொண்டுபோக உதவி செய்யுங்க..." சாராய நாற்றமும் சிகரட் புகையுமாக நிற்குமவர், ஒரு மாதத்துக்குள் எத்தனையோ பேரைச் சாகடித்துவிட்டு கனத்தைக்குக் கொண்டு போக வந்திருக்கிறார். அப்படி வரும் இத் 'தொண்டர்' எந்த சிங்கள வீட்டுப் பக்கமும் தன் தலையைக் காட்டாமல் பார்த்துக் கொள்வதுதான் அவரது தனி விஷேடம், திறமை.

"இப்ப காசில்லை"

"கொஞ்சமாவது குடுங்க"

"கொஞ்சமும் இல்லை"

"பொய் சொல்ல வாணாம் ஐயா. கொஞ்சமாவது குடுங்க"

"என்னட்ட காசில்லை போ"

"என்ன போ சொல்லிறது? பறதெமலா! நீ பாமன்கட சந்திக்கு வா, நான் பாக்கிறன்!"

ஒவ்வொரு நிகழ்விலும் எமது இருப்பென்பது முள்ளந்தண்டில் குத்தப்படுவதுபோன்ற அனுபவம்.

ஊரில் இருக்கும்போது தமக்குள் சாதிபார்த்து, தன்னினத்தில் பலரைத் தீண்டாதோராய் தள்ளிவைக்கும் தமிழரை, ஏற்கனவே சிங்களவன் பஞ்சமரில் ஒருவனாகக்கண்டு 'பறைத்தமிழன்' என்று தள்ளிவைத்திருக்கிறான் என்பதுதான் வேடிக்கை!

○

இரண்டு மாதகால அலைச்சலுக்குப் பின்னர் ஒருவாறு வீடு கிடைத்தது. அவன் எதிர்பார்த்ததுபோலவே ஓர் அன்புள்ளம் பிறநாட்டில் இருந்து பணம் அனுப்பியது தக்க நேரத்தில் உதவிற்று. அதைக்கொண்டு அவன் புதிய வீட்டுக்கு அட்வான்ஸ் கொடுத் தான். முஸ்லிம் ஒருவருக்குச் சொந்தமான வீடு அது. அவரது பெரிய வீட்டுக்குப் பின்னால் இந்த வீடு இருந்தது. முன்பிருந்த பீரிஸ் தந்த வீட்டைவிட இது எவ்வளவோ மேல். புரோக்கரோடு எனது வீட்டுச் சொந்தக்காரரைச் சந்திக்கச் சென்றபோது என் கண்களை முதலில் கவர்ந்தது, அந்த வீட்டுக் கண்ணாடி அலுமாரிக் குள் தெரிந்த முகமட் ஜின்னாவின் படந்தான். இந்தியாவிடமிருந்து முஸ்லிம்களுக்கு பாகிஸ்தானைப் பெற்றுக்கொடுத்த ஜின்னா! ஏனோ, அந்தப் படம் என்னை உற்றுப் பார்ப்பதுபோல் பட்டது.

அன்றிரவு பதினொரு மணியாகியும் புதிய வீட்டு ஒழுங்குகள் முடியவில்லை. பழைய வீட்டிலிருந்து புதிய வீட்டுக்குப் பொருட் களை ஏற்றி இறக்கியது. அதற்காக லொறிக்காரனுக்கு அறுத்துக் கொட்டிய கூலி. புரோக்கருக்குத் தாரைவார்த்த கூலி. பொலிஸ் றிப்போட்டுக்குப் புகைப்படம் எடுக்க ஸ்ருடியோக்காரனுக்கு அள்ளிக்கொடுத்தது. தமிழர்களை, அவர்கள் வாழும் இடங்களில் இருந்தெல்லாம் குடியெழுப்பி அகதிகளாக அலையவிட்டுக் கொண்டே, அவர்கள்மூலம் சிங்களவர்களுக்கு வியாபாரம் காட் டும் அரசாங்கம்! எல்லாவற்றிலும் இந்த வியாபாரம் உள்ளோடி யிருந்தது. ஏதாவது அவசரமாக யாழ்ப்பாணம் போக வேண்டுமா? இருக்கிறதே, 5000, 6000 ரூபா என்று கறந்துகொண்டு உங்களை அனுப்பிவைக்க 'லயன் எயர்' என்றும், 'மொனறா' என்றும்! வவுனியா தடுப்புமுகாமைவிட்டுக் கொழும்பு வர வேணுமா? 40, 50ஆயிரம் என்று அந்தச் சேவை செய்ய இருக்கிறார்கள் பொலிஸ் அதிகாரிகள்! தமிழ் மக்களின் ஒவ்வொரு விடுதலை இருப்புக்கும் விலைபேச வைக்கும் ஆட்சி!

ஏன் இந்த அவலம்?

யார் செய்த பழி எம்மில் சூழ்ந்தது?

என் நினைவில் பொன்னம்பலம் இராமநாதன் ஓடிவருகிறார். பின்னர் ஜி.ஜி. பொன்னம்பலம் நினைவுக்கு வருகிறார்.

இங்கிலாந்தில் இருந்து வந்து துறைமுகத்தில் இறங்கிய பொன். இராமநாதனை, சிங்களவர்கள் பல்லக்கில் இழுத்துவருகிறார்கள்.

1915இல் சிங்களவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே மூண்ட இனக்கலவரத்தில், சிங்களவர்களுக்காக ஆங்கில ஆட்சியி னரிடம் சென்று பரிந்துரைத்தமைக்காக நன்றி செலுத்தும் முகமாக அவர்கள் இவரைப் பல்லக்கில் வைத்து குதிரைகள்போல் இழுத்து வருகிறார்கள்.

வாறார் வாறார் தலைவர் வாறார்!

எங்கள் லிங்கம் அமிர்தலிங்கம்!

அதிகப்படி பத்தாயிரம்!

வீட்டுக்கு நேரா போடு புள்ளடி!

நான் காணாத பல்லக்கில் காவப்பட்ட தலைவரை, நான் கண்ட கூட்டணிப் பல்லக்குக்காவிகளின் ஊர்வலத்தோடு என் மனம் என்னையறியாமல் ஒப்பிட்டுப் பார்க்கிறது.

இலங்கைக்குச் சுதந்திரம் வழங்கப்பட்டபோது, தான் பல்லக் கில் வைத்துக் காவப்பட்டதால் உச்சி குளிர்ந்து பெரும்பான்மை இனத்தோடு 'ஒண்டுக்கிருக்கலாம்' என்று எண்ணிய பொன்.

இராமநாதன், அருணாச்சலம் ஆதியார் கருத்து, கூட்டணி திருச்செல்வம் ஆதியார் ஊடாக வந்து இன்றுள்ள பல தமிழ்க் கட்சிப் புரோக்கர்களிடம் ஊறி வியாபித்துநிற்கிறதா?

சுதந்திரப் பிரகடன காலத்தில் தமக்கெனத் தனியான இடத்தைக் கேட்கும் சந்தர்ப்பத்தைத் தவறவிட்ட தலையில்லாத தலைவர்கள், இல்லை, தலையில்லாத புரோக்கர்கள்! இல்லை, பல்லக்கில் தூங்கிய மகான்கள்!

ஜின்னா படுபயங்கரமாகச் சிரிக்கிறார்.

ஜின்னா, மகாத்மா காந்தியைக்கூட நம்பவில்லை!

காந்திக்குப் பின் வருபவர்கள் எல்லாம் காந்திமாதிரி இருப்பார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

ஜின்னாவின் தீர்க்கதரிசனம் சரியாகவே இருந்தது.

பாபர் மசூதி – இராமர் கோவில் இடிபாடுகளுக்கிடையில் 'ஈஸ்வர அல்லாஹ் தேரேநாம்' என்ற காந்தியார் பஜனை உயிரற்று ஒலிக்கிறது.

○

அன்று இரவு புது வீட்டில் சிவாவுக்கு நித்திரை வருவதாய் இல்லை.

அவன் படுக்கையில் கிடந்து உழன்றுகொண்டிருந்தான்.

பல கற்பனைகளும் எண்ணங்களும் அரைகுறைக் கனவுகளும் காட்சிகளும் அவனை மூழ்கடித்துக்கொண்டிருந்தன.

ஜின்னாவுக்கு இந்தியப் பிரதமர் பதவியைக் கொடுக்கவேண்டும் என்று காந்தி நிற்கிறார். ஆனால், சுயநல நோக்குடைய நேரு, பட்டேல் போன்றவர்களுக்கு அதில் விருப்பமில்லை.

ஜின்னாவை இந்தியப் பிரதமர் ஆக்கியிருந்தால் பாகிஸ்தான் கிடைத்திருக்குமா?

செல்வநாயகம் யோசிக்கிறார்.

பொன். இராமநாதனைச் சிங்களவர்கள் பல்லக்கில் வைத்து இழுத்திருக்காவிட்டால், தமிழ்ப் பிரதேசங்களுக்கு இன்றுள்ள நிலை ஏற்பட்டிருக்குமா?

ஜெயவர்த்தனா இலங்கையைத் துண்டாடியபடி கண்டியாத்திரை செல்கிறார்.

பண்டாரநாயக்கா, செல்வநாயகத்தோடு செய்துகொண்ட ஒப்பந்தத்தைக் கிழித்தெறிகிறார்.

செல்வநாயகம் யாழ்ப்பாணக் கச்சேரியடியில் சத்தியாக்கிர கத்தை ஆரம்பிக்கிறார்.

மூன்று மாதங்கள் நீடிக்கும் சத்தியாக்கிரகப் போராட்டம்!

ஒரு நாள் இரவு சத்தியாக்கிரகிகளுக்கு எதிராக ராணுவ நடவடிக்கை எடுக்கப்படுகிறது. சத்தியாக்கிரகிகள் அடித்துவிரட்டப் படுகின்றனர். சிறைக்குள் தள்ளப்படுகின்றனர்.

ஒரு நாள் ராணுவ நடவடிக்கையோடு சத்தியாக்கிரகம் நின்று போகிறது!

காந்தியும் ஜின்னாவும் மாறிமாறிப் பெரிதாகச் சிரிக்கின்றனர். "இது சத்தியாக்கிரகமா? இது சத்தியாக்கிரகமா?" என்பதுபோல் அவர்கள் சிரிப்பொலி கேட்கிறது.

கதவு தட்டப்படுவதுபோல் இருக்கிறது.

சிவா விழித்தெழுந்து போய்த் திறக்காமலேயே யாரோ உள்ளே வருவது தெரிந்தது. ஒரு கரிய உருவம்போல் இருந்தது. நெஞ்சு படபடக்க அவன் வந்தவனைப் பார்க்கிறான்.

யார் அவன்? அந்த மாயப் புன்னகை!

கிருஷ்ணனா?

"கிருஷ்ணா, நீ எங்கே இந்த நேரத்தில்...?"

"மீண்டும் துரியோதனிடம் போகிறேன்; பாண்டவர்களுக்கு இடம் கேட்டு."

"பாண்டவர் பிரச்சினை எப்போ முடிந்துபோயிற்றே? இப்போ என்ன திரும்பவும்?"

"இல்லை, காலங்காலமாக ஒவ்வோர் இடத்தில் ஒவ்வோர் தளங்களில் அது நடந்துகொண்டுதான் இருக்கிறது..."

"எங்கள் நிலையைப் பார்த்தாயா?"

"உங்களுக்கென்ன, ஏதோ விதத்தில் தப்பிவந்து கொழும்பில் வாழ்ந்துகொண்டிருக்கின்றீர்கள்... ஆனால்..."

"ஆனால் என்ன...?"

"ஆனால், குந்தியிருக்க இடமின்றி, உடுக்க உடையின்றி ஒருநேரக் கஞ்சிக்கே வழியின்றிக் காட்டிலும் ரோட்டிலும் செத்துக் கொண்டிருக்கும் உன் ஊர் மக்களைத் தெரியுமா?"

'ஆம்' என்பதுபோல் நான் பேசாது இருக்கிறேன்.

"அவர்களுக்காகத்தான் போகிறேன்."

அவன், என்னைக் கடந்து மேலே போவது தெரிந்தது. யூதர்களை அழைத்துச்சென்ற மோசஸ்போல் அவன் நடையில் துயர் தெரிந்தது.

அவன் எடுத்துவைத்த ஒவ்வோர் அடியிலும் துயர். அதற்கு சுருதி கூட்டுவதுபோல் நான் கொஞ்ச நாட்களுக்கு முன்னர் படித்த நம்மூர்க் கவிஞனின் வரிகள் எழுந்துவந்து என்னுள் ஒலித்தன.

"உயிர் வாழ
மீன்கள் தாடையால் சுவாசிக்கின்றன.
மனிதன் நாசியால் சுவாசிக்கின்றான்
விடுதலைக்காகப் போராடும் நாம் உயிர்வாழ
நம் மொழி, நம் நிலம், நம் பண்பாடு மூலமாகச்
சுவாசிக்கின்றோம், இதையிழந்து
வாழ்வதெங்கே?"

❖

# வெட்டு

தியாகு கொழும்புக்கு வந்ததிலிருந்து தனது வலது கால் சுளுக்கிக் கொண்ட உணர்வுக்குட்பட்டுக்கொண்டிருந்தான். உண்மை யாகவே கால் சுளுக்கிக்கொண்டவன்போல், காலை உதறிக்கொண் டான். ஆனால், சுளுக்கு இருந்தால்தானே அதிலிருந்து விடுபடுவ தற்கு? அப்படி ஓர் உணர்வு – வெறும் உணர்வு – ஒருக்கால் முழங்காலுக்குள் நிற்பதுபோல், பின் கணுக்காலுக்கு விரைவது போல், பின் தொடைக்குமேலே சென்று அரையை இறுக்கிக் கொள்வதுபோல்! தியாகுவுக்குத் தெரியும் தனக்கு அப்படி ஒரு சுளுக்கும் இல்லை என்று. இருந்தாலும் அந்த உணர்வினால் பீடிக்கப்பட்டிருந்தான். அதிலிருந்து அவனால் விடுபட முடியாத ஓர் அந்தரம். அந்த உணர்வு கூடிக்கொள்ளும்போதெல்லாம் அவன் தன்னை அறியாமலே தன் சட்டைப் பையில் இருந்த அடையாள அட்டையைத் தொட்டுப்பார்த்துக்கொள்வான். ரோட்டில் நடக்கும்போது இந்த உணர்வு ஏற்பட்டுவிட்டால் அடிக்கொருதரம் அவன் கை, அடையாள அட்டையைத் தொட்டுப் பார்த்துக்கொள்ளும். அறையில் இருக்கும்போது இந்த உணர்வு ஏற்படும் சந்தர்ப்பங்களில், ஏனோ, அவனால் மேசையில் கிடக்கும் அடையாள அட்டையைப் பார்க்காமல் இருக்கமுடிவதில்லை.

இதுபற்றி பூரண விசாரணை அவனுக்கு இல்லை. இருந்த போதும் அவனுக்கு அவன் சுபாவம்பற்றி ஓர் உள்ளுணர்வோட்டம் உண்டு. சிறுவனாய் இருந்த காலத்திலிருந்தே அவனிடம் இந்தக் கோணங்கிக் குணாம்சங்கள் தொற்றிக்கொண்டு வருவது அவனுக் குத் தெரியும். இந்த பித்தலாட்டங்களை சிலவேளைகளில் அவன் அம்மா கண்டுவிட்டு, "என்னடா, கோணங்கிக் கூத்தாடுற?" என்று எரிந்துவிழுந்ததும் அவனுக்குத் தெரியும்.

பாடசாலையில் அவன் எல்லோருக்கும் பயந்தவன். வம்புதும் புக்குப் போகாதவன். ஆசிரியர் வகுப்பில் இல்லாதபோது, அவன் சகமாணவர்கள் வகுப்பையே புரட்டியெடுத்துக்கொண்டிருக் கும்போது, இவன் பேசாது ஒதுங்கியிருந்து பார்த்துக்கொண்டிருப் பான். அந்தப் பார்வையில் ஒவ்வொருவரது குணக்கோளாறுகள்

வெளியே துருத்திக்கொண்டு நிற்பது இவனுக்குப் பட்டெனத் தெரிவதுபோல்… சிரிப்புமேலிடும்போது, வாயைக் கையால் பொத்தி, சிரிப்பை அடக்கிக்கொள்வான். ஏதாவது சிறிது விபரீதமாகப் போய்விட்டால், இவன் பயந்துபோவான். இவனுக்கு வேர்த்துக் கொட்டும். இவனைப் பயமுறுத்தி வேடிக்கை காட்டுவதற்காகவே சிலர் அட்டகாசம்செய்வதும் உண்டு. அப்பொழுதெல்லாம் இவனுக்கு 'ஒண்டுக்கு' போகவேண்டும்போல் இருக்கும் அல்லது வயிற்றை கலக்குவதுபோல் வந்துவிடும். இவன் உடனே மேசையில் முகத்தைக் குப்புறப்போட்டுப் படுத்துக்கொள்வான். அதைக் கண்டு மாணவர்கள் அட்டகாசம் இன்னும் பெரிதாக வெடிக்கும். வகுப்புக்கு யாராவது ஆசிரியர் வந்து பாடத்தை ஆரம்பிக்கும் மட்டும் இவன் தலையை நிமிர்த்தமாட்டான்.

ஒருமுறை பாடசாலைக்குப் புதிதாக வந்த ஆசிரியர் ஒருவர் கணக்குப் படிப்பித்துக்கொண்டிருந்தார். அவர் கரும்பலகையில் கணக்கை எழுதிக்கொண்டிருந்தபோது சுட்டித்தனத்துக்குப் பேர்போன, அவன் பக்கத்தில் இருந்த காந்தன் என்பவன் அவர் எழுதுவதை அபிநயித்தான். எல்லோரும் 'கொல்' என்று சிரித்த போது, ஆசிரியர் கோபத்தோடு திரும்பினார். அப்போது எல்லோரது சிரித்த முகங்களும் காந்தனை நோக்கித் திரும்பியபோது, அவன் பக்கத்தே இருந்து 'திருதிரு'வென முழித்துக்கொண்டிருந்த தியாகுதான் ஆசிரியரின் பார்வைக்கு வித்தியாசமாகப்பட்டான். அவர் உடனே கோபம் கொப்பளிக்க தியாகுவை எழுந்துவரும்படி கட்டளையிட்டார். தியாகுவுக்கு வேர்த்தது. எழுந்துசெல்லமுடியாது கால் மரத்துப்போனதுபோல் தெரிந்தது. இருந்தாலும் அவன் ஒருவாறு எழுந்து, காலை இழுத்து இழுத்து அவர் அருகே போக முயன்றான். கொஞ்சத்தூரம் போயிருக்கமாட்டான், திடீரென என்ன நினைத்துக்கொண்டானோ, வகுப்பைவிட்டுத் தலைதெறிக்க ஓட ஆரம்பித்தான்! பின்னர் அவனது சகமாணவர்கள் எல்லோரும் சேர்ந்து அவனை வளைத்துப் பிடித்து ஆசிரியர் முன் கொண்டுபோய் நிறுத்தியபோது, அவன் கண்கள் பயத்தினால் படபடத்த விதத்தையும், முகம்போன போக்கையும் பார்த்தபோது ஆசிரியருக்கே பெரும் பரிதாபமாகப் போய்விட்டது.

அப்போது, அவனுக்கு வயது பன்னிரண்டு. தியாகுவுக்கு அந்த நினைவு அடிக்கடி மேலெழும். அவன் மட்டுமேன் அப்படித் தொட்டதுக்கும் பயந்து நடுங்க வேண்டும்? அவன் அவற்றிலிருந்தெல்லாம் விடுபட வேண்டும் என்று எவ்வளவோ முயன்றிருக்கிறான். ஆனால், நெருக்கடிகள் நேரும்போது அவன் பழையவனாகவே குவிந்துபோகிறான். அவனால் மற்றவர்கள்மாதிரி நிமிர்ந்துகொள்ள முடிவதில்லை.

1983 ஜூலையில், கொழும்பில் அவனது சொந்தக்காரர்கள் பலர் செத்துப்போனதுபற்றி, அவன் அம்மா சொல்லக் கேள்விப்பட்

டிருக்கிறான். அவள், அவர்கள் செத்தவீட்டுக்குப் போய்வந்தபோது, அவர்கள் எப்படிக் காடையர்களால் வெட்டிக் கொல்லப்பட்டனர், நெருப்புக்குள் தூக்கிப்போடப்பட்டனர், வெட்டிப் புதைக்கப்பட்டனர் என்பதுபற்றி எல்லாம் கதைகதையாகச் சொன்னாள். இவனுக்கு ஏனோ அடிவயிறு அளைவதுபோல்பட்டது. எப்படி ஒருவன் இன்னொருவனை அடித்துக் கொல்லமுடிகிறது, நெருப்புக்குள் தூக்கிப்போட முடிகிறது என்பதுபற்றி அவனுக்குப் புதிராகவே இருந்தது. அப்படியெல்லாம் எப்படிக் கொல்லமுடிகிறது என்று அவன் அம்மாவிடம் கேட்டிருக்கிறான். அப்பொழுதெல்லாம் "அப்படிக் கொல்லிறவங்களெல்லாம் அரக்கச் சாதிகள்" என்று அவள் சொல்லியிருக்கிறாள். நல்ல காலம் அவன் அப்பா கொழும்பில் வேலை பார்க்கவில்லை என்பதில் அவனுக்குச் சந்தோஷம். அவன் அப்பா அக்கராயன்குளத்தில் கமம். அவர், காடு வெட்டவென்று கத்தியோடு போய் மரக்கிளைகளைத் தறிக்கும்போது, 'ஆ' என்று அவன் தனக்குள் முனகிக்கொண்டு, தன் கழுத்தைத் தடவித் தடவிப்பார்த்துக்கொள்வான்.

இன்னொருமுறை அவன் யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் கவசவாகனங்கள் சகிதமாக ஆமிக்காரர்களை முதன்முதலாகக் கண்டபோது, நெஞ்சு பதற அவன் அம்மாவின் கையைப் பற்றிக் கொண்டான். "அம்மா, அம்மா" என்று அவன் எதையோ கேட்க முற்பட்டபோது, "சத்தம்போடாம வாடா, ஆமிக்காரன்கள் நிக்கிறாங்கள்" என்று அவன் அம்மா அடக்க, அவன் கண்கள் அகல விரிய ஆமிக்காரர்களைப் பார்த்து, "அம்மாடி, இவங்கள்தானா ஆக்களைக் கொல்லிறவங்கள்! அதென்ன, அந்தப் பெரிய கறுத்த வானுக்குள் என்னவோ சுத்திச்சுத்தி வருகுது! விசுவுக்கெண்டா எல்லாம் தெரியும், நாளைக்குப் பள்ளிக்கூடத்தில் அவனட்டை கேக்க வேணும்..."

பிறகு, அவன் விசுவைப் பள்ளிக்கூடத்தில் சந்தித்தபோதும் அதுபற்றி அவனோடு கதைக்கமுடியாமல் போய்விட்டது. அவனது இயல்பான குணம் அந்தளவுக்கு விசுவோடு சரளமாகக் கதைக்க விடவில்லை. கதைக்கலாம், கதைக்கலாம் என்று அவன் ஒத்திப் போட்டுக்கொண்டிருப்பதற்குள் விசுவு பள்ளிக்கூடம் வராமலே விட்டுவிட்டான். விசுவு எங்கே போய்விட்டான்? கொஞ்சநாட்களுக்குப் பிறகு தியாகுவுக்கு எல்லாம் தெரியவந்தது. அவனது கிராமத்துப் பெரிய பையன்கள் சிலரோடு சேர்ந்து, விசுவும் இயக்கத்துக்குப் போய்விட்டானாம்! அவனுக்கும் தியாகுவின் வயது தானே? அவனுக்கு என்ன துணிச்சல்! இந்தப் பெரிய ஆமிக்காரங்களை அவனால் எப்படிக் கொல்லமுடியும்? தியாகுவுக்கு அதை நினைத்தபோதே 'ஒண்டு'க்கு வருமாப்போல் இருந்தது. சில நாட்களுக்குப் பின்னர் விசுவும் இயக்க நண்பர்களோடு ஊர்ப் பக்கம் வந்து கூட்டம் ஒன்று போட்டான். அப்போது, இவனும் அவனைப் போய்ப் பார்த்தான். விசுவின் கையிலிருந்த ஏ.கேதான்

இவனைப் பயமுறுத்தியது. ஆனால், விசுவு அதை வெகு அநாயாச மாகக் கையில் வைத்திருந்த பாணி இவனுக்குப் பிரமிப்பூட்டுவதாய், இவன் கைகளை விறைக்கவைப்பதாய் இருந்தது.

வேறொருமுறை இவன் பட்டணம் போனபோது, யாழ். பஸ் நிலையத்துக்கு முன்னால் இருந்த மின்கம்பத்தைச் சுற்றி, ஒரு கூட்டம் கூடி எதையோ மொய்த்துப் பார்த்துக்கொண்டிருந்தது. இவன் அப்பா கூட்டத்தை விலக்கிக்கொண்டு உள்ளே போனார். அவரின் கையைப் பிடித்துக்கொண்டே உள்நுழைந்து பார்த்தபோது, இவனுக்குக் காலும் கையும் நடுங்கத்தொடங்கின. அங்கே, மின்கம் பத்தோடு யாரோ ஒருவன் தலைதொங்கக் கட்டப்பட்டுக் கிடந் தான். அவன் நெஞ்சிலிருந்து கட்டிகட்டியாக இரத்தம் வழிந்து நிலத்தில் சிந்தியிருந்தது. கழுத்தில் ஒரு மட்டை கட்டப்பட்டுத் தொங்கியது. அதில், அவன் செய்த குற்றங்கள் எழுதப்பட்டிருந்தன. அவன் அப்பாவின் வாய் அதை ஒவ்வொன்றாய்ப் படிப்பதுபோல் பட்டது. இவனுக்கோ அவ்வெழுத்துக்கள் வெள்ளெழுத்துக்களாகிக் கொண்டிருந்தன. அவன் கண்முன்னே பாடசாலையிலுள்ள அதி பரின் அறையில் தொங்கிய, சிலுவையில் அறையப்பட்ட ஏசுநாத ரின் படம் பெரிதாகத் தெரிந்தது.

அங்கே நிற்கமுடியாது, அவன் அப்பாவின் கையைப்பிடித்து இழுத்தான். ஒருவாறு அவன் அவரை இழுத்துக்கொண்டு ரோட் டில் நடந்தபோது, அவனுக்கு என்னவோ அந்தரமாக இருந்தது. அவனுக்குள் பல கேள்விகள் எழுந்தவண்ணம் இருந்தன.

சாகிறது என்றால் என்ன? செத்துப்போய்க்கிடந்தவன் இப்ப டியே இனி இல்லாமல்போய்விடுவானா? அவனுக்கு உயிர் கொடுக்க முடியாதா?

தியாகுவுக்கு ஏதோ செய்யவேண்டும்போல் இருந்தது. அவனது அப்பா சட்டைப் பையில் இருந்த தனது அடையாள அட்டையை வெளியே எடுத்துப் பார்த்தார். அவனது அண்ணா சுவிஸிலிருந்து அனுப்பிய காசை மாற்றுவதற்கு யாழ்ப்பாணம் கொமேர்ஷல் வங்கியை நோக்கிப் போய்க்கொண்டிருந்தார்.

மின்கம்பத்தில் கட்டப்பட்டுக் கிடந்தவனுக்கு அடையாள அட்டை இருக்குமா? அவன்ர அடையாள அட்டையை இனி என்ன செய்வார்கள்?

"அப்பா" என்று தியாகு ஆரம்பித்தான்.

"என்னடா" என்றார் தகப்பன்.

"இனி அவன் உயிர்க்கமாட்டானாப்பா?"

"எவனடா?"

"அவன்தான், அந்தக் கம்பத்தில் கட்டியிருக்கிறவன்..."

"உனக்கென்ன விசராடா? செத்தவை ஆரும் உயிர்ப்பினமே?"

"அப்ப, அந்த யேசுநாதர் உயிர்த்தவர் எண்டு எனக்கு சூசை சொன்னாரே?"

"அது யேசுநாதர்! இவன் சாதாரண ஆள், நாங்கள் செத்தா செத்ததுதான்!"

அப்பா சொல்லி முடிப்பதற்குள் அவனுக்குள் ஓர் அந்தரம்.

"அப்ப செத்துப்போனா அதற்குப் பிறகு எங்களுக்கு ஒன்றும் தெரியாமல்போயிருமாப்பா?" தியாகு தட்டுத்தடுமாறிக் கேட்டான்.

"என்னடா விசர்க் கதை கதைக்கிற, சும்மா அலட்டாமல் வா!"

தியாகு அதன்பின்னர் ஒன்றும் கதைக்கவில்லை.

ஆனால், அவனுக்குச் சாகிறதென்றால் என்ன என்று பார்க்க வேண்டும்போல் ஓர் ஆசை எழுந்தது. செத்தால் என்ன நடக்கும்? திடீரென அவனுக்குப் பயமாக இருந்தது. செத்தபின் உயிர்க்க முடியாதென்ற நினைவு வந்ததும் அவனுக்குள் ஓர் அந்தரம். ஏதோ பெரிதாக எழுந்து, திரண்டு அவன் தொண்டையை அடைப்பது போல் ஓர் உணர்வு. அப்பொழுதெல்லாம் அடிக்கொருதரம் அவன் வெறும் எச்சிலை விழுங்கி, விழுங்கித் தன்னைச் சுதாரித்துக் கொண்டான்.

இப்படியெல்லாம் யாருக்கும் எழாத அசாதரண நினைவுகள் ஏற்பட்டுவிட்டால் அவனால் தாங்கிக்கொள்ள முடிவதில்லை. இந்தமாதிரி நினைவுகள் அவனுக்குள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண் டேயிருக்கும். அதனால், அவனுக்குள் ஏதோ ஒரு மூலையில் இருந்து ஒருவித பயம், நீர்க்குமிழிகள்மாதிரி எழுந்தெழுந்து உடைந்த வண்ணம் இருந்துகொண்டுதான் இருக்கும். அதனால், அவனுக்குள் சதா நடுக்கம். இந்த நடுக்கத்தால் அவனது வகுப்பு மாணவர்கள் அவனை எதிலும் சேர்த்துக்கொள்வதில்லை. அவர்கள் பாஷையில் அவன் ஒரு சோணகிரி! இப்படி, அவன் ஒதுக்கப்படும்போதெல் லாம் அவனுக்குத் துக்கம் ஏற்படுவதற்குப் பதில் தன் தலையில் எந்தவித பொறுப்பும் சுமத்தப்படவில்லை என்ற ஆறுதலும் திருப்தி யும்தான் ஏற்படும். கூடவே, தனக்குள் தானே ஒதுங்கிக்கொள்ளும் ஒதுக்கத்தின் சுய அணைப்பு. அந்த ஒதுக்கத்துள் இருந்துகொண்டு தனக்குள் விசாரணைகளையும் கேள்விகளையும் எழுப்பிப் பதில் காண்பதில் அவனுக்கு ஒரு தனி வேட்கை.

அண்ணா வெளிநாட்டுக்குப் போனபின்னர், இவன் பள்ளிக் கூடமும் அக்கராயன் குளக்கட்டுமாகத் திரிந்தான். பயந்தவனாக இருந்தாலும் படிப்பில் கெட்டிக்காரனாய் இருந்தான். எதையாவது படிப்பதென்றால் அவனுக்கு எப்பவுமே ஆர்வம். கிழிந்த பத்திரிகைத்

துண்டையும் எடுத்துப் படித்துக்கொண்டிருப்பான். அவற்றைப் படித்துவிட்டுத் தனக்குள்ளேயே எதையாவது யோசித்து மென்று கொண்டிருப்பான். ஒருநாள் அவன் பத்திரிகையொன்றில் நடுபக்கத்தில் வந்திருந்த கார்ட்டூனைப் பார்த்தான். அதில், ஜே.ஆர். ஜெயவர்த்தனா இலங்கையைத் துண்டாக்கிய படத்தோடு 1957இல் கண்டி யாத்திரை சென்ற படம் சித்திரிக்கப்பட்டிருந்தது. அதுபற்றி அப்போது அவனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. பின்னர் அதுபற்றி அவன் தெரிந்துகொண்டபோது, அதை அவன் வேறு கோணத்தில் பார்த்துச் சிந்தித்தான். இலங்கையை முதன்முதலில் துண்டாடிப் பார்த்தவர் ஜே.ஆர்.தான். அப்படிச் சிந்திக்கும்போது அவன் தனக்குள்ளேயே சிரித்துக்கொள்வான்.

தியாகுவுக்கு இந்த விஷயங்கள் விளங்கிய காலத்தில்தான் இந்திய ராணுவம் தமிழ்ப் பகுதியெல்லாம் தனது ஆட்சியை நடத்திக்கொண்டிருந்தது. தமிழ்த்தேசிய ராணுவத்திற்கான ஆட்சேர்ப்பும் நடந்துகொண்டிருந்த காலம். இவன் அக்கராயன் போவதற்காக யாழ். பஸ் நிலையத்திற்கு அருகே வந்துகொண்டிருந்தான். அப்போ எங்கிருந்தோ திடீரெனத் தோன்றிய ஒரு வான், பஸ் நிலையத்திற்குள் நுழைந்தது. அதிலிருந்து இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலர் வெளியே குதித்தார்களோ இல்லையோ, பஸ் நிலையத்தில் நின்ற இளவட்டங்கள் நாலாபக்கமும் சிதறி ஓடினர். தியாகுவுக்கு விசயம் விளங்கியதுதான் தாமதம், கால்போன திக்கில் ஓட வெளிக்கிட்டான். "அண்ண என்னைப் பிடிக்காதீங்க" என்று தனக்குள்ளேயே பெரிதாய்க் கத்தியவனாய் ஓடினான். வெகுதூரம் ஓடிவிட்டுத் திரும்பிப்பார்த்தபோது, இவனை யாரும் துரத்திவருவதாய் இல்லை. ஒருவாறு மனப்பயம் தெளிந்தவன், அன்று தன் பயணத்தைத் தொடராது வீட்டுக்குத் திரும்பி விட்டான்.

ஒருவாறு கண்ணயர்ந்தபோது ஒரு கனவு கண்டான். கொந்தளிக்கும் கடலுக்குள் அவன் அமிழ்வதும் மேலெழுவதுமாய் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றான். அப்போது ஒரு படகு மிதந்துவருகிறது. தத்தளித்துக்கொண்டிருக்கும் இவன், தன்னருகே வந்த அதன் தலைப்பக்கத்தை தாவிப் பிடிக்கிறான். தாவிப்பிடித்து அதில் ஏற முற்படும்போது திடீரென அது இலங்கையின் உருவமாக மாறுகிறது. இவன் கைபிடித்திருந்த பகுதியில் ஒருவன் தோன்றுகிறான். அது ஜெயவர்த்தனாபோல் தெரிகிறது. அவன், கையில் ஒரு கத்தியை எடுத்து இவன் பிடித்திருந்த பகுதியை வெட்டித்தள்ளுகிறான். இலங்கையின் கால்வாசிப் பகுதி கையோடுவர அவன் மீண்டும் தண்ணீருக்குள் தத்தளிக்கிறான். அவனுக்குத் தாங்க முடியாத நிலை வந்தபோது, பெரிதாக அலறிக்கொண்டு கண் விழிக்கிறான். அப்பாடா! அது கனவு; அவன் இவ்வளவு நேரமும் கனவா கண்டுகொண்டிருந்தான்?

அவன் ஆறுதல் மேலிட எழுந்து உட்கார்ந்தான். எப்பொழுதும் அவன் நெருக்கடியால் பாதிக்கப்படும்போது அவனுக்குத் தண்ணீருக்குள் அமிழ்வதுபோல் கனவு வருவதுண்டு. அதன் காரணமும் அவனுக்குத் தெரியும். அவன் சிறுவனாக இருந்தபோது அவன் ஊர்க் குளத்தில் குளிக்கப்போய்த் தண்ணீருக்குள் தாண்டபோது காப்பாற்றப்பட்ட அனுபவத்தின் ஆழமான பதிவு, இப்படி நெருக்கடி ஏதும் ஏற்படும்போது கனவாகத் தலைகாட்டுவதுண்டு. இப்போ அவன் அண்மையில் பத்திரிகையொன்றில் பார்த்த கார்ட்டூன் படமும் சேர்ந்துகொண்டு, அவனுக்கு எட்டியிருந்த அரசியல் அறிவையும் சேர்த்துக் குழைத்து அவனுக்குக் கனவாக வெளிக் காட்டிற்று. தியாகு இதை மிக எளிதாகவே விளங்கிக்கொண்டான்.

அவன் உதட்டில் ஒரு மெல்லிய சிரிப்பு!

இந்திய ராணுவம் வந்ததிலிருந்து அக்கராயனில் அப்பரின் கமத்தோடு அதிகமாக நேரத்தைக் கழித்தவன், அது போனதற்குப் பிறகு, ஊரில் அடிக்கடி தலைகாட்டினான். இக்காலங்களில் அவன் எத்தனையோ மாற்றங்களைக் கண்டுவிட்டான். இருந்தாலும் அவன் பழைய பயந்தவனாகவே இருந்தான். தாமரை இலைத் தண்ணீர்மாதிரி உருண்டுகொண்டு, ஆனால், எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டு திரிந்தான். இக்காலத்தில் சுவிஸுக்குப் போயிருந்த அவன் அண்ணா, தம்பி தியாகுவையும் அங்குவரக் கேட்டுக் கடிதம் எழுதியிருந்தான்.

இந்தக் கடிதத்தைப் படிக்கும்போது, அவனுக்குத் திடீரென மூத்திரம் முடுக்குவதுபோலிருந்தது. அதன்பின்னர் அவன் அப்பா அவனைக் கொழும்புக்குப் போய் இதுபற்றி அவன் அண்ணனோடு 'போனில்' கதைத்து ஒழுங்குபடுத்துமாறு கூறியபோது அவனுக்கு அடிவயிற்றைக் கலக்குவதுபோலிருந்தது. அன்றிரவு அவன் வெகு நேரம் நித்திரைகொள்ளமுடியாது புரண்டு, புரண்டு படுத்தான். பின் அவன் கண்ணயர்ந்தபோது, அவனை யாரோ தண்ணீருக்குள் அமிழ்த்தி மேலெழமுடியாது செய்வதுபோல்... செய்வது போல்... அவன் பெரிதாகக் கீச்சிட்டலறி விழித்துக்கொண்டான். அப்போது, அவனைத் தண்ணீருக்குள் அமிழ்த்திய அந்தக் கை, அவன் தாவிப்பிடித்தேறிய படகை இரண்டாக வெட்டிய கை, எல்லாம் ஒன்றுபோல் தோன்றி விகாரரூபம் எடுத்துப் பயமுறுத்தின, ஒரு சாத்தான் மாதிரி... அவன் எழுந்து ஒண்டுக்குப் போனான்.

இக்காலத்தில்தான் கொழும்பில் உள்ள கொலன்னாவை எண்ணெய்க் குதங்கள் தகர்க்கப்பட்டன. ஊரடங்குச் சட்டம் போடப்பட்டது.

இது தியாகுவுக்கு நல்லதாகவே முடிந்தது. அவனது கொழும்புப் பயணம் ஒத்திப்போடப்பட்டது. கொழும்புக்குப் போகவேண்டு

மென்பதால் ஏற்பட்ட மனக்கொந்தளிப்பு அடங்குகிறது. அவன் மனம் ஆறுதல் அடைகிறது.

இப்படி ஒத்திப்போடப்பட்ட அவனது பயணம், ஆறேழு மாதங்களுக்குப் பின்னர் மீண்டும் தொடக்கப்பட்டு வெகு அண்மையில்தான் அவனைக் கொழும்புக்குக் கொண்டுவந்துசேர்த்திருந்தது.

○

தியாகு மேசையில் கிடந்த தனது அடையாள அட்டையைப் பார்த்துக்கொண்டு நின்றான். பின்னர், அவனது மாமா போனில் கூறியது ஞாபகத்திற்குவரவே, கொள்ளுப்பிட்டிக்குப் போக ஆயத்தமானான். கொழும்பிலுள்ள ஒரு நண்பருடைய வீட்டில் அவனது பாஸ்போட் எடுக்கும் விசயமாகப் போய்க்கதைக்கும்படி கூறியிருந்தார்.

அடையாள அட்டையை எடுத்துப்பார்த்து, பத்திரமாகத் தனது சட்டைப் பையில் வைத்துக்கொண்டு வெள்ளவத்தையில் தான் தங்கியிருந்த லொட்ஜைவிட்டு வந்து கொள்ளுப்பிட்டிக்கு பஸ் எடுத்தான். சீமாவத்தை ஒழுங்கை அருகில் பஸ்ஸைவிட்டு இறங்கியவன், சற்றுத் தள்ளியிருந்த 15ஆவது லேனை நோக்கி நடந்தான். அப்படியும் இப்படியும் ஒருவித வெருட்சி தெறிக்கப் பார்த்தவனாய், அசாதாரணமாக நிமிர்ந்த நடையோடு போய்க் கொண்டிருந்தான். ராணுவ ட்றக்குகள் இரண்டொன்று அவனுக்கு எதிர்ப்புறமாக விரைந்துகொண்டிருந்தன. அதில் நிறைந்திருந்த ராணுவத்தினரைப் பார்த்தபோது அவனுக்கு ஏனோ அச்சம் மேலெழுந்தது. ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் அவன் ஊரில் பார்த்த தமிழ்த் தேசிய ராணுவம் நினைவுக்கு வந்தது. அவனுக்கு ஏனோ கால்சுளுக்குவதுபோல் இருந்தது. ஆனால், அதைப்பற்றிக் கவலைப்படாமல் முன்னே நடந்தான். முன்னால் பத்து யாருக்கு ஒருவராய் ராணுவத்தினர் துவக்கோடு நின்றுகொண்டிருந்தனர். இன்னும் சிலர், போவோர் வருவோர் சிலரை இடைமறித்துச் சோதித்துக்கொண்டிருந்தனர். இவனுக்கு அடிவயிறு வற்றிக்கொண்டு வருவதுபோல் இருந்தது. இவன், அவர்களைப் பார்த்தும் பார்க்காததுமாய் இன்னும் அதிகரித்த அசாதாரண நிமிர்வோடு பேவ்மென்டோரமாக நடந்ததை மாற்றிச் சிறிது அகல நடந்தான். வாகனங்கள் போக்குவரத்துக் குறைந்ததால் ஆமிக்காரர்கள் இல்லாத அடுத்த பக்கம் போய்விட வேண்டும் என்ற குறியோடு அவன் போனபோது, ஒரு ராணுவத்தினன் அவனைப் பார்த்து, அருகே வரும்படி சைகை செய்தான். இவனுக்குக் கால் ஒன்றோடொன்று இடறுப் படப்போவதுபோல் தெரிந்தது. இருந்தாலும் இவன் சமாளித்துக் கொண்டு அவனைப் பார்க்காதவன்போல் நடந்தான். உடனே அந்த ராணுவத்தினன் சத்தம்போட்டுக் கூப்பிட்டான். இருவரது பார்வையும் ஒன்றாய்ச் சந்தித்தன. இவனால் ஒன்றுமே செய்ய முடியாத நிலை. 'திருதிரு'வென முழித்துக்கொண்டு அவனருகே

நடந்தான். ஒருசில வினாடிகள் சென்றிருக்காது, ஆமிக்காரனை நோக்கி நடந்தவன், என்ன நினைத்துக்கொண்டானோ, திடீரென ஆமிக்காரனைக் கடந்து ஓட வெளிக்கிட்டான். அவனுக்கு அப்படி ஓடக்கூடாதென்று நல்லாகவே தெரியும். இருந்தாலும் அவன் கால்களுக்கு அது தெரிவதாய் இல்லை. இவன் பத்து யார் தூரம் ஓடியிருக்கமாட்டான். அதற்குள், "ஒன்ன கொட்டியெக், ஒன்ன கொட்டியெக்" என்று கத்தியவாறு ஆமிக்காரன் பாய்ந்தான்! அவனது குரல் கேட்டு, ரோட்டில் போய்க்கொண்டிருந்தவர்கள் உஷாரானார்கள். தியாகுவுக்குப் பின்னால் வந்த மோட்டார் சைக்கிள்காரன் ஒருவன் அவன்முன்னேபோய், அவனை மோதுவது மாதிரி வெட்டி மடக்கிப்பிடித்தான். மோட்டார் சைக்கிளை ஒருபுறமாகச் சாத்திவிட்டு தனது ஹெல்மெட்டை எடுத்து, தியாகு வின் மூஞ்சியிலும் தலையிலுமாக விளாசினான். தியாகு குனிந்து தலைக்குமேலே கைகளைத் தூக்கியவாறு அடிகளை வாங்கினான். இதற்குள் அவனைச் சமீபித்த ஆமிக்காரன் துவக்குச் சோங்கினால் அவன் நெஞ்சிலும் மூஞ்சியிலும் அடிவயிற்றிலுமாகக் குத்தினான். அவன் முதன்முதலாக நோவென்றால் என்ன என்பதை உணர்ந்து கொண்டிருந்தான். முகத்திலிருந்து இரத்தம் வழிந்தது. சொண்டு பிளந்து துருத்துவதுபோலிருந்தது. இதற்கிடையில் "ஒன்ன கொட்டி யெக், ஒன்ன கொட்டியெக்" என்று கூக்குரல் இட்டவாறு ரோட்டால் சென்றவர்களெல்லாம் அவனைச் சூழ்ந்து காலாலும் கையாலும் உதைத்தனர், அடித்தனர். கையில் அகப்பட்டவற்றாலும் எடுத்து மொத்தினர். 'இதைத்தான் ஆட்களை ஆட்கள் அடித்துக் கொல்லுறது' என்று அம்மா சொன்னாவா? 83இல் இப்படித்தான் தமிழர்கள் எல்லோரும் அடித்துக்கொல்லப்பட்டனரா? அந்த நேரத்திலும் தியாகுவுக்கு அவை மின்னல் கீற்றுக்களாய் மின்னி மின்னி ஓய்ந்தன. தொடர்ந்து உதையும் அடியும் விழுந்துகொண் டேயிருந்தன. அவனால் தலை உயர்த்த முடியவில்லை. இந்நேரத் தில் நடுத்தரவயது மதிக்கத்தக்க பெண்மணி கூட்டத்தை விலக்கிக் கொண்டு வந்தாள். அவன் அம்மாவின் சாயலையுடைய அவள் ஏதோ ஆதரவுகாட்ட வருகிறாளோ என்ற, சூழலுக்கு மாறான நப்பாசை அவனுக்குள் கசிந்தபோது, வந்தவள் "கொட்டி திரஸ்த வாதயா, மறண்டோன!" என்று கத்தியவளாய், கையில் இருந்த குடையால் அவன் மூஞ்சியில் குத்தினாள். அது, அவனது இடது கண் புருவத்தின் மேலால் சறுக்கிக்கொண்டுபோனது. அவளின் குடையின் முனை உடைந்துசிதறியது. அவன் இன்னும் தலை உயர்த்தவில்லை. அவனது அடையாள அட்டை நிலத்தில் கிடந்தது. அதை எடுக்கலாமா என்ற வெற்றுணர்வு ஓடியபோதும் அது முடியாதென்பது அவனுக்குத் தெரியும். அவன் அடையாள அட்டைமேல் பலர் ஏறி உரசிக்கொண்டு வருவதுபோல் இருந்தது. அது மயக்கமா? அல்லது அவன் சாகப்போகிறானா? அதைப்பற்றி அறிய அவன் கனகாலமாக ஆசைப்பட்டுக்கொண்டிருந்தது இப்படி எதிர்பாராதவிதமாக வந்து சம்பவித்திருக்கின்றதா?

இப்படித்தான் சாகிறதா? அவனுக்கு எல்லாமே கைகடந்துபோய்க் கொண்டிருப்பதுபோல் தெரிந்தது. அவன் ஒரு சிறு துவாரத்திற்குள் போக முனைவதும் பின்னர் ஏதோ ஓடிச்சென்று பொறுக்க, பின்னடைவதுமான நிலையை அனுபவித்துக்கொண்டிருந்தான். அவன் வேகமாக முழுமன ஒப்புதலோடு அந்தத் துவாரத்துள் புக முற்படும்போது அந்த முடிச்சு வந்து பொறுத்தது. அந்த முடிச்சுப் பொறுக்கும்போதுதான் அவனுக்கு அந்தரம் ஏற்பட்டது. தண்ணீருக்குள் அமிழ்ந்துபோகும் அந்தரம். கையைக் காலை அடிக்கும் அந்தரம். அவனை அந்தத் துவாரத்துள் நுழையவிடாமல் தடுக்கும் முடிச்சு என்ன? அவனுக்கு அந்த நிலையிலும் அது மங்கலாக மிதந்துவந்தது. அவனது அம்மாவும் அப்பாவும் அவர்கள் ஊடாட்டத்தால் சோபைபெற்றுத் தெரியும் அவன் வாழ்ந்த வீடும், களைத்துப்போய் முற்றத்து வேம்பின் கீழ் கிடக்க, காற்றள்ளி வரும் அந்தச் செம்மண் வாசனையுமாக அந்த முடிச்சுத் திரண்டு வந்து, வந்து அவனை அந்தத் துவாரத்தினுள் நுழையவிடாமல் தடுத்தது... அம்மா...

தியாகுவை இப்போது அடித்துக்கொண்டும் உதைத்துக் கொண்டும் ஆமி ட்றக் அருகே இழுத்துக்கொண்டுபோகிறார்கள். அவன் நடக்கமுடியாமல் இழுவுண்டுபோகிறான். அவனுக்கு நினைவு தப்பி எல்லாமே இருண்டுபோகிறது. ஒரே வீச்சாக அவன் அந்தத் துவாரத்தை நோக்கி விரைகிறான். ஆனால், அந்த முடிச்சு அவனை விடவில்லை. அந்த முடிச்சு அங்காலும் இல் லாமல் இங்காலும் இல்லாமல் இடையில் பொறுத்துக்கொண்டிருக் கிறதுபோல...

அவன் தண்ணீருக்குள் அமிழ்கிறான். மூச்சடங்கும் அந்தர நிலை. கையையும் காலையும் போட்டு உதறுகிறான். எதையாவது எட்டிப்பிடிக்க வேண்டும் போன்ற அந்தர நிலை. அவன் கண்ணுக்கு ஏதோவொன்று படுகிறது. அதை அவன் பாய்ந்து ஒரே அலக்காகப் பற்றிக்கொள்கிறான். அதை அவன் பற்றிக்கொண்டதுதான் தாமதம், அவன்முன்னே நின்ற அத்தனை சனங்களும், "ஒன்ன கொட்டியெக், ஒன்ன கொட்டியெக்" என்று சத்தமிட்டவாறு, அவன் பற்றிப் பிடித்ததை கத்திகொண்டு வெட்டுகின்றனர். வெட்டி, வெட்டி ஒரேயடியாகத் தம்மிலிருந்து அவனையும், அவன் பற்றியதையும் தள்ளிவிடுகின்றனர்.

அவன் வெட்டப்பட்ட பகுதியோடு அள்ளுப்பட்டுச் செல்கி றான். தன்னையறியாத நிம்மதியோடு அவன் மிதந்துகொண்டிருந்த போது, அவன் தான் பற்றிப்பிடித்திருப்பதைப் பார்க்கிறான். அவன் கண்கள் ஆச்சரியத்தால் விரிகின்றன. அது, அவனை அந்தத் துவாரத்தினுள் நுழையவிடாது தடுத்த முடிச்சுப் போல் தெரிகிறது.

❖

# சீதை

அசோகவனத்தில் சீதை புகையுண்ட ஓவியமாய் இருக்கிறாள். அவள் பசியென்ற ஒன்றை மறந்துபோன பிறவி. அவள்முன் திரிசடை அவளுக்கு ஏதாவது ஊட்டிவிட வேண்டும் என்ற ஆவலில் வட்டிலில் அறுசுவையுடன் அமுது கொண்டுவந்திருந் தாள்.

சீதைக்கு அவற்றைப் பார்த்தபோது நஞ்சு தேவையில்லைப் போல் பட்டது. அருவருப்பால் அவள் உயிரின் உட்குருத்து நடுங்கிற்று.

"தேவி" என்கிறாள் திரிசடை, அவளை ஆவலுடன் பார்த்து.

தூர எறிந்த பார்வையிலிருந்து அவள் மீளவில்லை.

"தேவி" மீண்டும் திரிசடையின் அழைப்பு.

சீதையின் தூர எறிந்த பார்வை வெளியில், அந்த மாயமான் ஓடுகிறது.

அதைத் துரத்திக்கொண்டு முட்பற்றைகளைத் தாண்டித் தாண்டிப் பாய்ந்தோடும் இராகவன் கானல்வெளியில் கரைந்து போவதுபோல். அவள் கண்களில் நீர்முட்டுகிறது. முட்டிய நீரைக் கொட்டிவிடக்கூடாதென்பதற்காய் இதழ்களைப் பற்களால் கடித்து விழிநீரை விழிகளே விழுங்கவைக்கும் பிரயத்தனம்.

"அம்மா சாப்பிடுங்கள். இப்படியே இருந்தால் இராமர் வரும் வரை உங்களால் தாக்குப்பிடிக்கமுடியாது."

சீதையின் இதழ்களில் ஒரு வரண்ட புன்னகை.

"என் உயிரைப் பிடித்துவைப்பது அவர் நினைவுதான்; சாப் பாடல்ல."

"இருக்கலாம், ஆனால், உயிர்வாழ உணவு கொஞ்சமாவது வேணும். எனக்காக இதைக் கொஞ்சம் சாப்பிடுங்கள்." திரிசடை அங்கிருந்த தண்ணீர்க் குவளையை சீதையிடம் எடுத்து நீட்டுகிறாள்.

சீதை அதை வாங்கி, ஒரு மிடறு நீர் பருகுகிறாள். பளபளக்கும் அவள் கண்முன்னே மீண்டும் ஒரு காட்சி.

இலக்குவன் தோளில் தொங்கும் அம்பறாத் தூணியுடன், மூரி விற்கையோடு அவளிருந்த குடிலின்முன்னே அங்கும் இங்குமாய் நடந்து காவல்புரிந்துகொண்டிருக்கிறான்.

அப்போது, "இலக்குமணா, இலக்குமணா!" என்று ஆபத்தில் உதவிகோரும் இராமரின் அழைப்பு, அவர் சென்ற திக்கிலிருந்து ஒலிக்கிறது. அடிவான் தொலைவிலிருந்து புறப்பட்டு, அவள் காலடியில் வந்துவிழுந்து கணீரிடுவதுபோல் கேட்கும் ஓர் துயர் இழையும் இராமரின் அழைப்பு.

அந்த அழைப்பு இலக்குவனையும் ஒரு கணம் உலுக்கிற்று.

அவன் அந்த அழைப்பு வந்த திசையை நோக்கி ஒரு கணம் தலையைச் சாய்த்து, செவிப்புலனை ஓடவிட்டவன் மீண்டும் ஏதும் நடக்காதவன்போல் தனது காவல் சேவையில் ஈடுபட்டவனாய் முன்னும் பின்னும் நடக்கத் தொடங்குகிறான்.

சீதைக்கு அவன் செயல் ஆத்திரத்தை ஏற்படுத்துகிறது.

"இலக்குமணா, என்ன பேசாமல் நிற்கிறாய்? அவருக்கு ஏதோ ஆபத்து போலிருக்கு. இல்லாவிட்டால் அவர் இப்படிக் கூப்பிடமாட்டார்."

"அப்படி அவருக்கு எந்த ஆபத்தும் வராது. என்னை அவர் ஒருநாளும் அப்படிக் கூப்பிட்டதில்லை. அந்தக் குரல் எனக்கு அவர் குரல்போல் படவில்லை."

"ஏன் அப்படிச் சொல்கிறாய்?"

"அந்தக் குரலில் பயம் தெரிகிறது. இராமர் ஒருகாலமும் அப்படிப் பயப்படுபவர் இல்லை. இது அரக்கர் திரியும் காடு, நாம் அவதானமாக இருக்க வேண்டும்."

"எல்லா நேரமும் ஒரேமாதிரி இருக்காது. எனக்கென்றால் பயமாக இருக்கு. நீ தாமதிக்கிற ஒவ்வொரு கணமும் அவர் உயிருக்கு ஆபத்தாகவே முடியலாம். சீக்கிரம் அவரைப் போய்ப் பார்."

"இந்த இடத்தை விட்டு நகரக்கூடாதென்பது அவரது கட்டளை. நான் அவர் கட்டளையை மீறிப் போகமாட்டேன்."

இப்படிக் கூறி, உறுதியோடு காவலுக்கு நின்ற இலக்குவனை அவள் எவ்வளவுதூரம் சொற்களால் குத்திக்குதறி, அங்கிருந்து அகல வைத்தாள்.

அவன் அந்த நேரத்திலும் பயந்து பயந்து வேதனையோடு திரும்பித் திரும்பிப் பார்த்தவாறு சென்றது அவள் கண்முன்

மீண்டும் தோன்றுகிறது. பெண்புத்தி பின்புத்தியா? அப்படித்தான் இருக்க வேண்டும். மீண்டும் அவள் கண்களில் நீர்த்தளும்பல்.

"அம்மா இப்படி அழுதழுது பசியோடு கிடக்கக்கூடாது. கொஞ்சம் சாப்பிடுங்கள்." திரிசடை சீதையைத் தேற்றியவாறு தான் கொண்டுவந்திருந்த அமுதில் சிறிதெடுத்து, திரணையாக்கி சீதைமுன் நீட்டுகிறாள்.

சீதை விரக்தியோடு சிரிக்கிறாள்.

"எனக்கு உணவூட்ட நீ இருக்கிறாய்..."

"அதற்கென்னம்மா, இது என் கடமையென்று நான் செய்ய வில்லை. எனக்குக் கிடைத்த பாக்கியம் என்று செய்கிறேன்." திரிசடை அமைதியாகக் கூறுகிறாள்.

"ஆனால்..." சீதை இழுக்கிறாள்.

"ஆனால் என்னம்மா?" திரிசடையின் குரலில் ஓர் ஆவல்.

"நான் இங்கே உன்னிடம் சாப்பிடுகிறேன். ஆனால், அவருக்கு அங்கே மெல்லடகு அருந்திட ஆர் கொடுப்பார்? அவர் இருப்பி டத்திற்கு ரிஷிகள் விருந்துண்ண வந்தால் என்ன செய்வார்?"

"நீங்கள் வீணாகக் கவலைப்படுகிறீர்கள். அவருக்கு, அவரை இமைபோல் காக்கும் தம்பியுண்டு. அதுமட்டுமல்ல, எல்லா வற்றையும் சமாளித்துக்கொள்ளும் தெய்வசக்தியும் அவருக்குண்டு. ஆனால், நீங்கள்தான் உங்களை ஆரோக்கியமாக வைத்திருக்க வேணும்."

"எனக்கென்ன ஆரோக்கியம் வேண்டிக்கிடக்கு; அவரில்லா மல்?"

"அப்படிச் சொல்லக்கூடாதம்மா. அவர், உங்களையும் எங்க ளையும் விடுவிக்க விரைவில் வருவார். அப்போது நாம் ஆரோக்கிய மாக இருக்கவேணும்."

"ஏன்?"

"அப்போதுதான் அந்த விடுதலை இன்பத்தை நம்மால் பூரணமாக அனுபவிக்கமுடியும் அம்மா."

"பைத்தியம், எனக்கு அவர் நினைவே விடுதலைதான். என்றாலும் அவர் பிரிவை என்னால் தாங்கமுடியவில்லையே! ஐயோ, என்னை வாட்டும் இந்த நோய்க்கு மருந்துண்டா சொல்? திரிசடை, மருந்துண்டு கொல் யான் கொண்ட நோய்க்கு?" என்று கூறி சீதை திடீரென்று மூர்ச்சித்து, துடால் என திரிசடையின் தோளில் சாய்கிறாள்.

மங்கிவரும் மாலைப்பொழுது.

வேங்கைமர நிழலின் கீழ் முகத்தை முழங்கால்களில் ஏந்திய வாறு கைகளால் கால்களைக் கோர்த்துக்கட்டியபடி, தூர எறிந்த பார்வையோடு ஓர் இளமங்கை குந்தியிருக்கிறாள்.

தனித்திருந்த அவள்பின்னே அவளையொத்த வயதுடைய இன்னொருத்தி வந்து அவள் கண்களைப் பொத்துகிறாள்.

பொத்தியவளின் கைகளைத் தடுக்கவோ, கையை எடு என்று சொல்லவோகூட முனைப்பற்றவளாய் முன்னவள் இருக்க, பொத்தி யவளே அலுப்புத்தட்டிய நிலையில் பொத்திய கையைத் தானே விடுவித்துக்கொண்டு முன்னால் வருகிறாள்.

"மைவிழி, என்ன அசோகவனத்தில் சீதை இருந்தமாதிரி... நான் உனக்கு எத்தனை தடவை சொல்லிவிட்டேன், இப்படி இருக்காதே என்று." கண்களைப் பொத்தியவள் மற்றவள் நிலையை பொருட்படுத்தாதவள்போல் கூறினாள்.

மற்றவள் இன்னும் பேசாது அப்படியே இருந்தாள்.

"மைவிழி, நீ இந்தக் கோலத்தில் இருந்து விடுபடமாட்டாயா?" தொடர்ந்து கண்களைப் பொத்தியவளே கேட்டாள்.

"என்னால் முடியவில்லையே, குழலி." மைவிழி தொண்டைக் குள் ஏதோ அடைத்துக்கொண்டதுபோன்ற மெல்லிய குரலில் பதில் கூறினாள்.

"ஏன் அப்படிச் சொல்கிறாய்? நான் உனக்குப் பலமுறை சொல்லிவிட்டேன். போர்வயிற் பிரிந்த உன்னவர் விரைவில் திரும்புவார் என்று. நீ கேட்கிறாய் இல்லை."

"நீ மிக எளிதாய்ச் சொல்லிவிடுகிறாய், குழலி. ஆனால், என் மனம் ஆயிரம் எண்ணி அலை பாயுதே!"

"தேவையில்லாத எண்ணங்களுக்கேன் இடம் கொடுக்கிறாய்? அவற்றை ஒதுக்கிவிடு. உன்னவர் விரைவில் உன்னிடம் வருவார்."

"என்னவர் பொருள்வயிற் பிரிந்து சென்றிருந்தால், நான் பொறுத்திருப்பேன். ஆனால், அவர் சென்றதோ போர்க்களம். என்னால் எப்படிப் பொறுக்கமுடியும், குழலி?"

"போர்க்களம் உன்னவருக்குப் புதிசா? எத்தனை களம் கண்டவர் அவர்? வெள்ளாற்றுப் போருக்கு அவர் சென்றிருந்த போதும் நீ இப்படித்தான் கலங்கினாய். பின்னால், அவர் வெற்றி வாகை சூடி வரவில்லையா?"

"எப்போதும் ஒன்றுபோல் இருக்குமா? எங்கள் ஆநிரை கவர்ந்து சென்ற ஏதிலர், சீதையைக் கவர்ந்துசென்ற இராவணர் போன்றவர். நெறியற்றுப் போர் புரிவோர்..."

"நெறியற்று எம் நிலங்கவர வந்த பகைவர்க்கு நல்ல நெறிபுகட்டி நம் மறவர் வீடு திரும்புவர். கவலை விடு, மைவிழி."

குழலி அப்படிக் கூறியபோது, மைவிழியின் முன்னே கானல் தகிக்கும் போர்க்களம் விரிகிறது. அங்கே கொலையுண்டும் காயமுற்றும் கிடக்கும் மறவர்கள். ஒரே குருதி வாடை. அவள் காதலன் விழுப்புண்ணோடு, போர்க்களத்தில் உயிருக்காகப் போராடும் நிலையில்... அவன் நா வரண்டு, தாகத்தால் சுருள்கிறது. கொளுத்தும் வெயிலில் கிடந்த அவன், "தண்ணீர், தண்ணீர்" என அரற்றுகிறான்.

"ஐயோ என்னால் தாங்கமுடியவில்லையே, குழலி" என்று வாய்விட்டுக் கூறித் தேம்புகிறாள் மைவிழி.

"ஏன் மைவிழி இப்படி அழுகிறாய்? என்ன நடந்துவிட்டது இப்போ?"

"ஐயோ, போர்க்களத்தில் அவருக்கு என்ன நடந்ததோ, என்னென்ன கொடுமைகளை எதிரிகள் அவருக்கு இழைத்தாரோ...!" என்று கூறியவாறு மைவிழி மீண்டும் தன் முகத்தை முழங்கால் களில் புதைக்கிறாள்.

அவள் மூடிய விழிகளுக்குள்ளே நெடிய ஒளிக்கீற்றென அவன் அழகிய தோற்றம் நிற்கிறது. ஒருமுறை இப்படிக் கோடை காய்ந்த காலத்தில்தான் தண்ணீர் கேட்டு அவன் அவள் வீட்டுக்கு வந்தான். தண்ணீர் மொண்டுவந்து அவள் செம்பை அவனிடம் நீட்டியபோது அவன் செம்பைப் பற்றுவதுபோல், அவள் கையைப் பற்றுகிறான். திடுக்கிட்டுப்போன அவள், "இங்கே பார், அம்மா" என்று தன் தாயைக் கூப்பிடுகிறாள். "என்ன? என்ன?" என்றவளாய் அவளின் தாயார் அங்கே விரைந்து வந்தபோது, "இவருக்குத் தண்ணீர் விக்கிற்று" என்று கதையை மாற்றி அவனைக் காப்பாற்று கிறாள்.

அப்படித்தான் அவர்கள் காதல் ஆரம்பமாயிற்று.

அற்றை வெயிற்பொழுதில் தண்ணீர்த் தாகத்தோடு ஆரம்பித்த அவர்கள் காதல், இன்று பிரிவு என்னும் நீளும் பாலையால் தாக்குண்டது. அவள் துடித்தாள்.

"முட்டுவேன் கொல்? மோதுவேன் கொல்?" என்று அரற்றத் தொடங்கிய மைவிழி, குழலியை அணைத்தவாறு தேம்பித்தேம்பி அழுகிறாள்.

"கலங்காதே மைவிழி. பகைவரிடம் இருந்து எம் நிலத்தை விடுவிக்கச் சென்ற உன்னவர் உன்னை, உன் பிரிவுத் துயரில் இருந்து விடுவிக்க விரைவில் வருவார்." குழலி மைவிழியைத் தேற்றுகிறாள்.

"வராவிட்டால்...?" என்று தனக்குத் தானே கேள்வி எழுப்பிய மைவிழி தொடர்ந்து, "அவர் வராவிட்டால் வடக்கிருந்து உயிர் துறப்பேன்" என்றாள் அழுத்தமாக.

அதைக் கேட்ட குழலி, "நானும் உன்கூட வருவேன். அயலாரின் கீழ் அடிமையாய் இருப்பதைவிட, உயிர்விடுவது மேலானது" என்றாள் இன்னும் அழுத்தமாக.

○

தமிழினி யோசனையில் ஆழ்ந்திருக்கிறாள்.

அவளைச் சுற்றிக் கும்மாளமிடும் சிறுவர் சிறுமியரின் இரைச்சல்கூட அவள் நிலையைக் கலைக்கவில்லை.

"ரீச்சர், ரீச்சர், எனக்கு ரஞ்சன் அடிக்கிறேர் ரீச்சர்."

"குமார் என்னை மூதேவியாம், ரீச்சர்."

"கமலினிக்கு வயித்து வலியாம், ரீச்சர்."

இப்படி நிமிஷத்துக்கு ஒருதரம் அந்தச் சிறுசுகளிடம் இருந்து வந்த முறைப்பாடுகள்கூட அவளை உசுப்பிவிடுவதாய் இல்லை.

குட்டிச்சுவர்களால் அமைந்திருந்தது அந்தச் சிறு கட்டடம். அது தென்னங்கிடுகுகளால்தான் வேயப்பட்டிருந்தது. அது நகர்ப்புற வாசனையில்லாத காட்டுப் பகுதி. மரங்கள் அடர்ந்திருந்தன. அப்பகுதியின் மாட்டு 'வண்டில்' பிரதான பாதையோரமாக அந்தப் பாடசாலை அமைந்திருந்தது. பிரதான பாதையிலிருந்து வேறுபல ஒற்றையடிப் பாதைகள் மரங்கள் அடர்ந்த உட்பகுதியை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன.

தமிழினியைச் சுற்றிச் சிறுசுகள் அளவுக்குமீறிக் கும்மாளமிடுவதைப் பார்த்துக்கொண்டிருந்த, அடுத்த எதிர்த்தொங்கலில் இன்னொரு சிறுவர் பட்டாளத்தோடு நின்றிருந்த பொன்மதி, தமிழினி அருகே வந்து, அவள் தோளை உலுக்குகிறாள்.

"நான் உனக்கு எத்தனை முறை சொல்லிறது, இப்படி யோசிச்சுக்கொண்டு இருக்காதேயெண்டு! அசோகவனத்தில் சீதைகூட இப்படி இருந்திருப்பாளோ, தெரியாது."

பொன்மதியின் வார்த்தைகள் சிறு சினங்கலந்து வெளிவந்தன.

"நான் என்ன செய்யப் பொன்மதி, என்னால் என்னைக் கட்டுப்படுத்த முடியேல்லையே?" தமிழினி மன்னிப்புக் கோரும் பாவனையில் கதைத்தாள்.

"கட்டுப்பாடு இல்லாத வாழ்க்கை ஒரு வாழ்க்கையா? கட்டுப்பாடில்லாமல் விடுதலை வராது. பெரிய இலட்சியங்களை

அடையச் சிறிய ஆசைகளைக் கட்டுப்படுத்தத்தானே வேணும்." பொன்மதி பதிலிறுத்தாள்.

அவளை அடிக்கடி யோசனையில் மூழ்கவைக்கும் அந்தக் காதலுணர்வு சிறிய ஆசையா? அல்லது தேவையான இலட்சிய உணர்வா? அது எத்தகையது? அவள் கொண்ட விடுதலை இலட்சியத்தில் அதன் முக்கியத்துவம் என்ன?

மீண்டும் அவளை யோசனைகள் மூழ்கடிக்கின்றன.

அன்று அவன் அந்தச் சிறுவர் பள்ளிக்கூடத்தின் குட்டிச் சுவர் ஓரமாக வந்து சைக்கிளில் இருந்தபடியே அவளோடு கதைத்தது அவளுக்கு ஞாபகம் வந்தது. அவன் தோள்களுக்கு மேலாக ஏ.கே. 47 துப்பாக்கி துருத்திக்கொண்டு நின்றது. கழுத்தில் தொங்கிய சயனைட் குப்பியின் ஒரு பகுதி நெஞ்சுச்சட்டைக்கு மேலால் எட்டிப் பார்த்தது. அப்பகுதி மக்களின் விடுதலை உணர்வாய் வெண்முறுவல் பூத்தது.

அங்கே அவன் அதிக நேரம் நிற்கவில்லை.

என்றாலும் அவன் அவளுக்குக் கூறிச்சென்ற இரண்டு விடயங்கள், அவள் மனதைவிட்டு ஏனோ அகல மறுத்தன. அடிக்கடி அவள் நெஞ்சில் மோதிக் குருதிவழியச்செய்யும் வேதனை.

"நான் மணலாற்றுக்குப் போறன். திரும்பி வந்தால் உன்னைப் பார்க்க வருவன்."

அவன் கூறிச்சென்ற விடயங்கள் அவைதான்.

மணலாறுபற்றிய நினைவு சோற்றுக்குள் மணல் கரகரப்பது போல் ஒரு அசௌகரியத்தையும் அந்தரத்தையும் அவளுக்கு ஏற்படுத்திற்று.

மணலாறு, 'வெலி ஓயா' என்று பெயர் மாற்றப்பட்டு ஈழத் தமிழர் பிரதேசங்களான வடக்கையும் கிழக்கையும் பிரிக்கும் நோக்கோடு சிங்கள ராணுவப் பிரதேசமாகத் திணிக்கப்பட்ட தமிழர் நிலம்.

அது எத்தனை போராளிகளைக் காவுகொண்ட களமாயிற்று!

தமிழினியோடு ஒன்றாய்ப் படித்த தமயந்தி, ஒன்றாய்ப் பயிற்சிபெற்ற ஊர்மிளா, ஒன்றுவிட்ட சகோதரர்களான அழகு, இளங்குமரன் என, மணலாறு பலியெடுத்த முகங்கள் அவள் முன் மிதந்துவந்தன.

அவள் நெஞ்சைக் குடைந்துகொண்டிருந்த இந்தத் துயர் தூர்ந்துபோவதற்குள் அவள் நெஞ்சோடு கலந்துவிட்ட சுபாஷ் போனவாரம்தான் அங்கே போயிருக்கிறான்!

சுபாஷ் திரும்பி வருவானா?

காதலும் விடுதலையும் இடைவெளியற்று ஒன்றாய்ச் சங்கமிக்கின்ற ஒரு புதுத் தரிசனத்துள் அவள் திடீரென மூழ்கிக் கொண்டிருந்தபோது, "என்ன பிறகும் அசோகவனச் சீதை மாதிரி" என்றவளாய்ப் பொன்மதி அவளை உலுக்கிவிட்டுச் சிரித்தாள்.

இப்போ தமிழினி பொன்மதியின் உலுக்கலால் பாதிக்கப்படாதவளாய்த் திடீரென, புதுவித மாற்றத்துக்குள்ளான ஒருவித உறுதியோடு சிரித்தாள்.

"ஏன் சிரிக்கிற, தமிழினி?" பொன்மதி கேட்டாள்.

"நான் சீதையுமல்ல, சுபாஷ் ராமருமல்ல."

"அப்போ புறநானூற்றுக் காதலர் எண்டு சொல்லவா?"

"அதுவும் இல்லை."

"ஏன்?"

"அக்காலக் காதலிகள் எல்லோரும் காதலனைக் களத்திற்கு அனுப்பிப்போட்டு, வீட்டில் வேதனையோடு காத்திருந்தார்கள். இப்போ அப்படி இல்லையெண்டு உனக்குத் தெரியும். இது விடுதலைக் காலம். விடுதலைக்குப் பால்நிலைப் பிரிவு கிடையாது, இல்லையா?"

"யார் இல்லையெண்டது?" பொன்மதியின் பதிலிலும் அதே உறுதி தெரிந்தது.

"சுபாஷ் திரும்பி வராட்டி" தமிழினி தொடர்ந்தாள்.

"இன்னொரு சுபாஷாக மாறத் தமிழினி இருக்கிறாள், பொன்மதி இருக்கிறாள், இல்லையா?" என்று கேட்டுவிட்டுத் தமிழினி மீண்டும் லேசாகச் சிரித்தாள்.

"உண்மைதான் தமிழினி. இந்த உணர்வு எங்களுக்கு இப்ப எங்க வாழ்கையோடு கலந்துபோச்சு, இல்லையா? தெரியாமலா சொன்னார்கள், காதலையும் சரி, எந்தச் சுகத்தையும் சரி விடுதலையிருந்தால்தான் உண்மையாக அனுபவிக்கமுடியுமெண்டு"? என்று கூறி முடிப்பதற்குள் தூரத்தே ஒரு போராளி வேகமாக சைக்கிளில் வந்துகொண்டிருந்தான்.

வந்தவன் பாடசாலைக்குள் நுழைந்து, அவர்களை நெருங்கி, "மணலாற்றில் 53 போராளிகள் வீரச்சாவு அடைந்திருக்கிறார்கள். அவர்களுக்கு துக்கம் அனுஷ்டிக்கிறோம். எல்லா இடமும் கறுத்தக் கொடி பறக்கவிடுங்க" என்று சொல்லிவிட்டு வேகமாக அங்கிருந்து போகிறான்.

ஒரு கணம் சிலையாக ஸ்தம்பித்திருந்த தமிழினி, தன்னருகே தனக்குரிய முக்கிய சொத்தாக இதுகாலவரை பேணி வைத்திருந்த

அந்தச் சிறிய கறுத்தக் குடையை எடுத்துக் கிழிக்கிறாள். துணி கிழிக்கப்பட்ட குடையின் உட்பகுதி எலும்புக்கூடாய் தூரப்போய் விழுகிறது.

பள்ளிக்கூடத்தின் வாசலில் கறுப்புக் கொடிகள் பறக்கின்றன.

சுபாஷ் திரும்பி வரவேணுமா?

❖

# ஆந்தை

"என்ன, ஆந்தைமாதிரிப் பார்க்கிறீர், எனக்குப் பயமாய் இருக்கு" என்று சொல்லிவிட்டு, அவன் அவளைப் பார்த்துச் சிரித்தான்.

அவளுக்கு, அவன் தன்னை ஆந்தை என்று சொல்லியது பிடிக்கவில்லை.

"என்ன, நான் ஆந்தைமாதிரியா இருக்கிறன்? வரவர உங்கட பகிடி கூடித்தான் போச்சு" என்று கூறிய அவன் சகவகுப்புத் தோழி சுகுணா, அவனோடு ஏதோ ஆவலோடு கதைக்க வந்ததையும் சொல்லாது, விரிவுரை வகுப்பை நோக்கி நடந்தாள்.

"இல்ல சுகுணா, நான் சும்மா விளையாட்டாத்தான் சொன்னேன்" என்று அவன் சமாளிக்க முயன்றாலும் அவள் அங்கே நிற்காது கோபித்துக்கொண்டு போய்விட்டாள்.

அவன் அதை எதிர்பார்க்கவில்லை.

என்றாலும் பின்னர் கன்ரீனில் மதிய போசனத்தின்போது பார்க்கலாம் என்று இருந்துவிட்டான்.

அவன், அவளைப் பார்த்து அப்படிக் கூறியதில் ஓர் உண்மை இருந்தது என்று அவனுக்குத் தெரியும். அவள் அழகானவள் தான். இருந்தாலும் சிலவேளைகளில் அவளைப் பார்க்கும் போது எங்கோ ஓர் ஆந்தை பதுங்கியிருந்து நிழலாடி மறைவதை அவன் கண்டிருக்கிறான்.

ஆனால், அதை அவன் அவளிடம் சொன்னதில்லை. இன்று ஏதோ வாய்தடுமாறி வந்துவிட்டது. இப்படிப் பலரிடம் அவன் தனது அவதானிப்பைக் கூர்மைப்படுத்தும் சில கணங்களில், அவர்களிடம் ஏதோ ஒரு மிருகமோ பறவையோ அல்லது ஏதாவது ஒரு பிராணியோ அல்லது வேறொரு ஜீவனோ, தாவரமோ, ஜடப்பொருளோ பதுங்கியிருந்து கண்சிமிட்டி மறைவதைக் கண்டிருக்கிறான். அது அவனுக்கு ஒரு திகில்தரும் கணங்கள்.

சிலரின் வாயமைப்பு, மட்டைபோன்று நீண்டு தடித்த சொண்டு, நீருக்குள்ளிருந்து வெளியே மேலெழும் முதலையை

நினைவூட்டி அவனைப் பயமுறுத்தியிருக்கிறது. சிலரின் கிளிச் சொண்டுபோன்ற வளைந்த சிறிய மூக்கு, பறவையும் மிருகமுமில் லாத ஏதோ ஒரு பிராணியைப் பிரதிபண்ணுவதைக் கண்டிருக் கிறான். சிலரின் தட்டையான மூக்கு, தவளை ஒன்றின் முழு உருவத்தையே காட்டுவதுபோலிருக்கும். இன்னும் சிலரின் விழிக ளில் ஏறிய பச்சிலை நீலம் அல்லது நரைவிழுந்த கோடுகள் அவர்களுக்குள் பாம்பு பதுங்கியிருப்பதுபோல் ஓர் அருவருப்பு அல்லது நச்சுத்தன்மை வெளிவருவதுபோல்... இது முற்பிறப்பின் எச்சங்களா அல்லது பரிணாமப் பிறழ்வுகளா?

ஒருவரைப் பார்த்ததும் இத்தகைய பார்வைப் பிறழ்வு ஏன் அவனுக்கு ஏற்படுகிறது? அது, அவனது மனவிகாரமா அல்லது பலரின் பார்வைக்குட்படாதவை அவனது பார்வை வீச்சில் சிக்கி விடுகின்றனவா?

எது எப்படியாய் இருந்தாலும் அவனது மனச்சாய்வும் அதன் வழிவரும் அனுபவச் சிதறல்களும் வித்தியாசமானவைதான். சின்ன வயதிலிருந்தே அவனுக்குப் பேய், பிசாசுக் கதைகளைப் பற்றிக் கேட்பதென்றால் தனி ஆர்வம். அமானுஷ்யமான விஷயங் களை யாராவது விபரிக்கும்போது, வாயைத் திறந்தபடி கேட்டுக் கொண்டிருப்பான்.

திடீரென அவனுக்கு அவனது சின்னக்கால நினைவுகள் ஓடிவந்தன.

அவனது அம்மா 'நேரங்கெட்ட நேரத்தில்' அவனைத் தனி யான இடங்களுக்குப் போகவேண்டாம் என்பாள். மதிய வேளை களில், மம்மல்பொழுதுகளில் ஆலடி அரசடிகளின் கீழ் நிற்க வேண்டாம் என்பாள். ஆனால், இவனோ வேண்டுமென்றே அவ்வாறான நேரங்களில் அவற்றின் கீழ் நின்று, ஏதாவது தனக்கு நடக்குதா என்று பார்ப்பதில் அவனுக்குத் தனியான ஆர்வம்.

ஒருமுறை அவனது வீட்டுக்குப் பின்னாலுள்ள ஆலடி வைரவருக்கு விளக்கேற்றிவிட்டுவரும் வேலையை அவன் அம்மா இவனிடம் ஒப்படைத்தபோது, வேண்டுமென்றே விளக்கேற்றாது விட்டுவந்தான்; 'வைரவர் என்ன செய்கிறார் என்று பார்ப்பமே' என்பதுபோல்.

வீட்டுக்கு வந்ததும் அம்மா கேட்டாள், "என்னடா விளக்கேத் தினாயா?"

"ஓம் அம்மா" என்று பொய் சொன்னவன், "விளக்கேத்தா விட்டால் வைரவர் என்னம்மா செய்வார்?" என்று கேட்டான்.

"டேய், வயிரவர் பொல்லாத கடவுளடா. அவரோட சேட்டை விட்டால், அவருக்குக் கோவம் வரும்." அம்மா சொன்னாள்.

"கோவம் வந்தால்?"

"கோவம் வந்தால், அவற்றை நாயை விட்டுக் கடிக்கவைப்பார்."

"ஏன் நாயை விட்டு...?"

"நாய்தான் அவற்ற வாகனம் எண்டு உனக்குத் தெரியாதே? இப்பதான் பால்குடிமாதிரி விடுத்துவிடுத்துக் கேக்கிற..."

அது அவனுக்கும் தெரியுந்தான். ஆனால், அம்மா சொன்னதைக் கேட்க அவனுக்குச் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது.

'நான் வயிரவராக இருந்திருந்தால் நல்ல குதிரையை வாகனமாகத் தெரிந்திருப்பன். வயிரவர் ஒரு விடுபேயர்' என்று தனக்குள் நினைத்தவன், மீண்டும் சிரித்தான்.

அன்று இரவு அவன் வீட்டு நாய் முற்றத்தில் நின்று ஊளையிட்டபோது அவனுக்கு உள்ளூரச் சிறிது பயமாகத்தான் இருந்தது. ஆனால், அதற்குமேல் அது அவனோடு சேட்டைவிட வரவில்லை – அவன் வயிரவரோடு விளக்கேற்றாது சேட்டை விட்டதற்குப் பின்னரும் என்பதில் அவனுக்கு வெற்றியே. என்றாலும் நாய்க் குணத்தைப் பற்றி அவனுக்கென்ன தெரியும்? ஊளையிட்டுக் கொண்டிருந்த நாய் திடீரென வீட்டைச் சுற்றிச்சுற்றிவந்து குரைக்கத் தொடங்கியபோது மீண்டும் அவனுக்கு விட்டிருந்த பயம் மேலாடிக் கொண்டுவருவதுபோலிருந்தாலும் அதையும் மீறிச் சிரிப்புத்தான் வந்தது. இம்முறை அவனது சிரிப்புக்குக் காரணம் வயிரவர் அல்ல; அவனது வகுப்பு வாத்தியார் செல்லத்துரையர்தான். மனிசன் வகுப்புக்குள் அடியெடுத்துவைத்த நேரத்திலிருந்து 'வாள் வாள்' என்று வாய் ஓயாது கத்திக்கொண்டிருப்பதும், கடைவாய்ப் பல் தெரிகிற அளவுக்கு விகாரமாகச் சிரிப்பதும் அவனுக்கு அவரை அந்த நேரத்திலும் அவன் வீட்டு நாயோடு சம்பந்தப் படுத்திப் பார்க்கவைத்துக்கொண்டிருந்தது. அவன் மீண்டும் சிரித்தான்.

இன்னொரு நினைவு அவனுக்கு ஓடிவந்தது.

அன்று, அவன் பள்ளிக்கூடம் விட்டு வந்ததும்வராததுமாக, "தம்பி, உனக்குத் தெரியுமா உன்ர வல்லிக்கிழவன் தூக்குப்போட்டெல்லோ செத்துப்போச்சு" என்று, அவன் அம்மா தழுதழுத்த குரலில் சொல்லியபோது, இனந்தெரியாத துக்கம் அவன் நெஞ்சை அழுத்திக்கொண்டு மேலெழுந்தது.

வல்லிக்கிழவன் அவன் வீட்டின் தெற்குப்புறமாக பரந்திருக்கும் தென்னந்தோப்பிலுள்ள கொட்டிலில் தட்டத்தனியாக வாழ்ந்தவர். மனைவியாலும் பிள்ளைகளாலும் கைவிடப்பட்ட நிலையில் அவ்வப்போது அவருக்குக் கிடைத்த கூப்பன் சாமான்களைக்கொண்டு இயலுமானபோது சமைத்துச் சாப்பிடுவார். அனேகமான நேரங்களில் அவன் அம்மா தருவதை, அவன்

கொண்டுபோய்க் கொடுத்தால் அவர் பொழுது போய்விடும். அவருக்குச் சாப்பாடு கொண்டுபோகும் சாட்டில், அவர் இருக்கும் இருள்மண்டிய கொட்டிலுக்குப் போவதென்றால் இவனுக்குத் திகில் கலந்த பிரியம்.

"அப்பு" என்று அழைத்துக்கொண்டு அவர் கொட்டிலுக்குள் நுழையும்போதே அவனது கண்கள் இருண்டுபோய்க் கிடக்கும் கொட்டிலின் முகட்டைப் பார்த்த வண்ணமே இருக்கும். அங்கே அவன் கண்களுக்கு விருந்தாக அடுக்கடுக்காக வௌவால்கள் முகட்டில் தொங்கிக்கொண்டிருக்கும். அவன் அவற்றை ஒவ்வொன்றாக எண்ணுவான். எண்ணி முடிந்ததும் சிலவேளைகளில், "அப்பு, இண்டைக்கு ஒரு வௌவால் குறையுதே?" என்று அவரிடமே காரணத்தைக் கேட்பதுபோல் கேட்பான்.

அவரிடமிருந்து மிக ஆறுதலாகவே பதில் வரும்.

"எங்க போச்சுதோ, ஆருக்குத் தெரியும். பூனைகீனை புடிச்சும் இருக்கும்" என்று அவர் கூறும்போது, அவர் கொட்டிலின் இருண்மைபோலவே பதிலும் இருண்மைபூசி வரும்.

அவன் கிழவரின் பதிலில் அக்கறைப்படாது, இருளில் முகட்டு வளைப் பிரதேசத்தில் தொங்கியவாறு ஒருவித கிசுகிசுப்போடு மினுக்கங்காட்டும் வௌவால்களையும் இருளில் கண்கள் மட்டும் மினுங்கக் குந்திக்கொண்டிருக்கும் வல்லி அப்புவையும் மாறிமாறிப் பார்ப்பான்.

அவருக்கும் வௌவாலுக்கும் என்ன தொடர்பு?

ஏதோ தொடர்பு இருப்பதுபோல் கிழவரின் கண்கள் அவனுக்குப் புலப்படுத்துவதுபோல்...

இப்போ அந்த வல்லிக்கிழவன் தூக்குப்போட்டுச் செத்துப் போயிற்று.

அம்மா சொன்ன செய்தி அவனைச் சில்லிட வைத்தது.

இத்தனை நாளாய் அவர் கொட்டில் முகட்டில் தொங்கிக் கொண்டிருந்த வௌவால்கள் எல்லாம் ஒன்றுசேர்ந்து கிழவரையும் தம்மைப்போல் தொங்கவைத்துவிட்டனவே!

அவனுக்கு அங்கே 'சதி' செய்துவிட்டுத் தொங்கிக்கொண்டிருக்கும் அத்தனை வௌவால்களிலும் பற்றிக்கொண்டு வந்தது. வௌவால்களின் தொங்கும் ஈர்ப்புக்குக் கிழவர் பலியாகிப் போனாரா?

○

பழைய நினைவுகளில் மூழ்கியிருந்த அவன் அதிலிருந்து விடுபட்டான்.

மத்தியானம் சாப்பிடுவதற்குக் கன்ரீனுக்குப் போனபோது சுகுணாவைச் சந்திக்கலாம் என்று நினைத்தான்.

அவன் நினைத்ததுபோலவே அவள் அங்கே நின்றிருந்தாள். ஆனால், தனியாகவல்ல. அவளோடு நடேசன் நின்று கதைத்துக் கொண்டிருந்தான். அவர்களிடையே நல்ல சுவாரஸ்யமான கதை போய்க்கொண்டிருப்பதுபோல் தெரிந்தது.

நடேசன் நல்ல உயரமும் வாட்டசாட்டமான உடல்வாகும் உடையவன். நடேசனைப் பார்த்தவுடனேயே இவனுக்கு, சடைத்து வளர்ந்து, கிளைகள் பரப்பிய நெடிய மரந்தான் நினைவுக்கு வரும்.

அவனைப் பார்த்ததும் ஏன் அப்படி மரத்தை நினைத்துக் கொள்கிறான் என்பது அவனுக்கே தெரியாது. அதுமட்டுமல்ல, நடேசனைப் பார்த்ததும் பெரிய சடைத்து வளர்ந்த மரத்தின் நினைவுவர, அது அவனைத் தவிர்க்கமுடியாத வகையில் அவனது சிறுபராய ஊர் நினைவுகளுக்குக் கொண்டுசெல்வது அடிக்கடி நேர்வதுண்டு. அவனது வீட்டின் கொல்லைப்புறத்தில், இவ்வாறு சடைத்து வளர்ந்து, கிளைகள் பரப்பிய மஞ்சவண்ணா. அதன் இருள் மண்டிய கிளைகளுக்குள் சதா ஒரு சோடி ஆந்தை 'திருதிரு' வென முழித்துக்கொண்டிருக்க, இவன் அடிமேல் அடிவைத்து அதன்கீழ் போய், ஒளிந்துநின்று பார்ப்பதில் ஏற்படும் திகில்...

நடேசன் அங்கே மரம்போல் நின்றிருந்தான்.

ஆனால், அந்த மரத்தின் கிளைகளில் ஆந்தை ஒன்றும் இருக்கவில்லை. மரத்தின் கீழே சுகுணாதான் நின்று கதைத்துக் கொண்டிருந்தாள். அவர்கள் ஏதோ அன்னியோன்யமான கதையில் மூழ்கியிருந்தனர். அவன், அவர்களைக் குழப்பாது ஒரு மூலையில் போய் இருந்து சாப்பிட்டுவிட்டு, தான் வந்த சுவடு தெரியாமலேயே வெளியேறினான்.

சிறிது காலத்திற்குப் பின்னர் சுகுணா நடேசனைக் கலியாணம் செய்துகொண்டாள். அவர்கள் மணவாழ்க்கை சந்தோஷமாகவே நகர்ந்தது. இரண்டு குழந்தைகள் வேறு. ஆனால், மணம் முடித்து ஐந்தாண்டுகளுக்குப் பின்னர் நடேசன் திடீரென இறந்துபோனான்.

அவனால் அதைத் தாங்கிக்கொள்ள முடியவில்லை. நடேசன் அவனது நண்பன் மட்டுமல்ல; சொந்த ஊரவன், உறவினன். சுகுணாவும் அப்படியே.

நடேசன் ஏன் இறந்துபோனான்?

அவன் இருந்தாற்போல மூக்காலும் வாயாலும் இரத்தம் கக்கி இறந்துபோனான். ஊர்ச் சண்டையில், யாரோ நடேசனிடம் அடிவாங்கிய பகுதி, மட்டக்களப்பிலிருந்து மந்திரவாதியைக்

கொண்டுவந்து 'உடன்பலி'விட்டு அவனைக் கொன்றுபோட்டதாகச் சிலர் கூறினர். வேறுசிலர் அவன் முதல்நாள், தாய்வீட்டுக்குப் போய்விட்டு, இரவு நேரமாகச் சுடலைப்பக்கத்தால் தனியாக வந்தபோது 'பேய் அடித்ததாக'ச் சொன்னார்கள்.

'பேய் அடித்த' கதையைக் கேட்டபோது அவன் ஒருமுறை சுடலைப்பக்கத்தால் இரவு நேரத்தில் தான் வந்த அனுபவத்தை நினைத்துக்கொண்டான். அந்த நேரத்திலும் அந்நினைவு அவன் முன் நிழலாடியது.

இரவு சூரன் போர் பார்த்துவிட்டு வீடு திரும்பியபோது, வேண்டுமென்றே குறுக்கு வழியைத் தவிர்த்து, அவனும் அவனது நண்பனும் கடற்கரை அருகே இருக்கும் சுடலையை ஒட்டிய வழியில் வந்தனர். இவனின் தூண்டுதலால் நண்பனும் இழுபட்டான். 'நடுநிசி நேரங்களில் கொள்ளிவாய்ப் பேய்கள் நின்றாடும்' என்று அவன் பாட்டி சொன்னது அவனுக்கு ஞாபகம். அப்படி எதையாவது காணலாம் என்ற ஆவல் அவனுக்கு. ஆனால், வீடு போய்ச் சேருமட்டும் அப்படி எதையும் அவர்கள் சந்தித்ததாய் இல்லை. வீட்டுக்குப் போனதும் நடந்துவந்த அலுப்பின் காரணமாக வெளிவிறாந்தையிலேயே பாயைப் போட்டு, படுத்துவிட்டான்.

தூக்கம் கண்களை மெல்லச் சுழற்றியபோது, யாரோ மெதுவாக அவனை, "சிவா, சிவா" என்று பெயர் சொல்லி அழைப்பது கேட்டது. உடனே அவன் "ஆரது?" என்று கேட்டவனாய் 'அவக்'கென எழுந்தபோது, முற்றத்தில் பெரிய வடலிபோல் கரிய நெடிய உருவம் அவனை அழைப்பதுபோல் நின்றது. அதைச் சுற்றி, பலபேர் விகாரமாகச் சிரிப்பது கேட்டது. அவ்வளவுதான், அவன் "அம்மா" என்று அலறவும், அவன் அருகே படுத்திருந்த நாய் பெருஞ்சத்தத்தோடு முற்றத்துக்குப் பாய்ந்துபோகவும், அவன் அம்மா, "என்ன அது?" என்றவாறு வெளியே ஓடிவரவும், வீடு ஒருசில கணங்கள் அல்லோலகல்லோலப்பட்டு அதிர்ந்து நின்றது. வெளியே வீட்டு வேலியனைத்தையும் முறித்துக்கொண்டு குழு மாடுகள் பாய்ந்துபோவதுபோலவும் பெருஞ்சத்தம் ஏற்பட்டுப் பேரமைதி நிலவியது. அதற்குப் பின் அவன் அத்தகைய 'விஷப் பரிட்சை'களில் ஈடுபட்டதே இல்லை. நடேசனும் பேய் அடித்துத் தான் செத்துப்போனானா?

எது எப்படி இருந்தாலும் நடேசன் இறந்துபோனதற்குக் காரணம் அவனுக்கு 'பிறஷர்' இருந்திருக்க வேண்டும் என்றும் அதனால், இரத்த நாளம் வெடித்து இரத்தம் கசிந்ததென்றும் உள்ளூர் வைத்திய பரிசோதனை கூறியதையே அவனும் சரியென்று நினைத்தான். இருந்தாலும் அவன் மனதின் மூலையில், ஏதும் வித்தியாசமானதைப் பார்க்கும் அதிர்ச்சியிலும் அது நேரலாம் அல்லவா என்ற கேள்வியும் எழுந்துகொண்டே இருந்தது.

நடேசனின் பிரேதத்திற்குச் செய்ய வேண்டிய கிருத்தியங்கள் முடிந்தன. பிரேதத்தைப் பாடையில் தூக்கிவைத்து, சுடலைக்குக் கொண்டுபோக வேண்டிய நேரம் நெருங்கியது. அப்போது, அங்கிருந்தோர் அனைவரையும் அதிர்ச்சிக்குள்ளாக்குவதுபோல் ஒரு நிகழ்ச்சி நடந்தது. அவ்வேளை எங்கிருந்தோ ஓர் ஆந்தை பறந்துவந்து நடேசனின் பிரேதத்தின் தலைமாட்டில் அமர்ந்தவாறு ஒரு சோகமான பார்வையை எறிந்தது.

"இஞ்ச பார் ஆந்தையை, பிரேதத்துக்கு அருகில் வந்திருக்கு, இது கூடாது" – ஒருவர் கத்தினார்.

"நான் சொன்னன், 'உடன்பலி'விட்டுத்தான் அவனைக் கொண்டவை எண்டு. அந்தப் பேய்தான் ஆந்தைமாதிரி வந்திருக்கு" என்று இன்னொருவர் குசுகுசுத்தார்.

அவனுக்கும் ஆச்சரியமாகவே இருந்தது.

அப்போது சோகமே உருவாக இருந்த சுகுணாவைப் பார்க்க அவனுக்குப் பரிதாபமாகவே இருந்தது.

"ஆந்தை வரக்கூடாது; அதை அடிச்சுக் கொல்லுங்க" என்று இன்னொரு பெரியவர் சொன்னதுதான் தாமதம், அங்கிருந்த விளக்குமாற்றுத் தடியால் ஆந்தைக்கு ஒரே அடி. அது செத்து விழுந்தது.

ஆந்தை ஏனைய பறவைகள்போல் வேகமாக அசையாது. வெகுநேரம் ஒரே இடத்தில் இருந்தவாறு 'பார்த்துக்'கொண்டே இருக்கும். இதற்குக் காரணம் அதன் பகல் குருட்டுத்தன்மையோ? அப்படியென்றால் சரியாகப் பிரேதம் கிடந்த இடத்தை நோக்கி எவ்வாறு பறந்து வந்தது? பிரேதம் இருந்த இடத்தை நோக்கி வருவதுதான் அதன் இலக்கென்று நினைப்பது எவ்வளவு சரி? ஆந்தையைப் பார்க்கும்போது அவனுக்குப் புலிமுகச் சிலந்தியும் நினைவுக்கு வரும். விஷத்தின் மொத்த உருவான புலிமுகச் சிலந்தியும் இவ்வாறுதான் ஒரே இடத்தில் வெகுநேரம் இருந்து 'திருதிரு'வென முழித்துக்கொண்டே இருக்கும், அடிவாங்கிக் கீழே விழும்வரை! சிலந்திக்கும் ஆந்தைக்கும் என்ன உறவு? பரிணாம வீதியில் ஆந்தையின் பாதையைவிட்டு, சிலந்தி குறுக்குத் தெருவால் ஓடியிருக்க வேண்டும், அப்படியா?

செத்துவிழுந்த ஆந்தையும் நடேசனின் பிரேதத்தோடு போட்டு எரிக்கப்பட்டது. அதனால், ஆந்தை உருவில் வந்த 'பேயும்' 'எரிக்கப்'பட்டுவிட்டதாக அவர்கள் நினைத்தார்களா? சூக்கும உருவில் வாழும் பேய்பிசாசுகளை ஸ்தூலப் பொருட்கள் பாதிக்குமா?

அவனுக்கு அந்த நேரத்திலும் ஒரு வினோதமான நினைவு வந்தது. தூக்குப்போட்டு இறந்த வல்லிக்கிழவன் சுடலையில்

எரிக்கப்பட்டபோது, அவர் கொட்டில் முகட்டில் தொங்கிக்கொண்டிருந்த ஐந்தாறு வெளவால்களையாவது அடித்துக்கொன்று, அவரோடு ஏன்தான் போட்டு எரிக்கவில்லை என்று அவனுக்கு தன்மேல் ஆத்திரம் பொங்கிக்கொண்டு வந்தது. அட, சீ! வெளவால்கள் இப்போதும் அங்கே தொங்கிக்கொண்டிருக்கும், தம்மோடு தொங்கவைக்க வேறு யாராவது கிடைக்கமாட்டார்களா என்பது போல.

நடேசன் இறந்துபோய் முப்பத்தியோராம் நாள் வந்தது. நடேசனின் சாம்பல் கடலில் கரைக்கப்பட்ட பின்னர் வீட்டில் 'காய்ச்சிப் படைப்பு' ஒழுங்குகள் நடைபெற்றன.

நடேசனின் பிரேதம் கிடந்த இடத்தில் குத்துவிளக்கு எரிந்து கொண்டிருந்தது.

அதற்கருகே சமைக்கப்பட்ட உணவு வகைகள் படைக்கப் பட்டிருந்தன. அந்த நேரத்தில் திடீரென ஒருவர், "அங்க பார், ஆந்தையை!" என்று கத்தினார்.

எல்லோர் பார்வையும் அங்கே திரும்பிற்று.

எரிந்துகொண்டிருந்த விளக்கின் அருகே, சாகடித்துப் பிணத் தோடு போட்டு எரிக்கப்பட்ட ஆந்தையின் குஞ்சுபோல், ஒரு சிறிய ஆந்தை அங்கே குந்திக்கொண்டிருந்தது!

அதைப் பார்த்த அவனுக்கு உடம்பு சில்லிட்டு வந்தது.

பாழடைந்த கட்டடத்துள் பறக்கும் வெளவால்கள்போல், பீதியின் நிழல் எறிதல் அங்கிருந்தோர் அனைவரிலும் விழுந்தது. அது யாரைத் தேடி அங்கே வந்தது?

❖

# அண்டமும் அற்பமும்

கண்ணுக்குத் தெரியாத வரிசை கட்டிச்செல்லும் சிற்றெறும்புக் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தபோது, எங்கிருந்தோ பேரிசை ஒன்று எழுந்து விரிகின்ற பரவச உணர்வு எனக்குள்! எனக்குள்ளிருந்தா இது எழுகிறது? அல்லது வெளியிலா? அல்லது அந்தச் சிற்றெறும்பின் வரிசையிலிருந்தா?

இக்கேள்வி என்னை நோக்கிக் கவிந்தபோது, 'நான்' என்ற ஒன்று அக்கணப்பொழுதில் நழுவிச்சென்று அப்பேரிசையில் மிதப்பதுபோல் தெரிந்தது. அடுத்த நொடிப்பொழுதில் அப்பேரிசை யாகவே நான் மிதப்பது தெரிந்தது.

இப்போ நான் மிதந்துகொண்டிருக்கிறேன். அண்டத்தின் இசைவிரிவில் அள்ளுப்பட்டுச் செல்கிறேன். ஏகாந்தமான பிரபஞ்ச விரிவில் எங்கோ இன்மையாய்ப் போய்க்கொண்டிருக்கிறேன்.

> இந்நேரம் எங்கேயோ அண்டத்தின் ஒரு மூலையில் பிர மாண்ட நட்சத்திரக் கோளம் ஒன்று வெடித்துச் சிதறி ஆயிரம் சூரியன்களின் ஒளிபரப்பிக்கொண்டிருக்கும். அந்த ஒளிப் பிரமாண்டம் பூமியை வந்தடைய எத்த னையோ ஆயிரம் ஒளியாண்டுகள் எடுக்கலாம். இதற்கிடை யில் பிறிதோர் வேற்றுலகாளரின் கலாசாரம் பிரபஞ்சத்தின் வேறோர் எல்லைப்படுகையில் விரிந்துகொண்டிருக்கலாம். பல்லினக் கலாசாரம், பல்வகை உலகங்களில்.

ஓர் அற்ப நேரந்தான் இந்த உணர்வு. மறுகணம் திடீரென எதனாலோ துண்டிக்கப்பட்டவனாய்க் கீழே வீழ்கிறேன் – மேனகை யின் யதார்த்த ஈர்ப்பில் சிக்குண்ட விஸ்வாமித்திரன்போல. இத்தனைக்கும் என் வீட்டு வாசல்படியில் இருந்தவாறு சிறுதொலை வில் வரிசையிட்டுச் செல்லும் சிற்றெறும்புக் கூட்டத்தைப் பார்த்துக் கொண்டிருந்த நான், எதனாலோ உந்தப்பட்டவனாய் அதனருகே சென்று, அக்கூட்டத்தில் ஊர்ந்துகொண்டிருந்த ஓர் எறும்பைத் தனித்தெடுத்து என் விரலில் ஏற்றுகிறேன், விஸ்வாமித்திரன் தூக்கிய திரிசங்குபோல்.

என்முன் விரியும் பிரமாண்டமான பிரபஞ்சத்தின் முன் இந்த எறும்பின் பாத்திரம் என்ன? இது என்ன செய்தியை இப் பிரபஞ்ச வெளியில் காவித்திரிகிறது? இந்த அற்பத்தின் இன்மையும் இருப்பும் எழுப்பும் பிரச்சினையின் மையம் எது? எனக்குள் ஆச்சரியம் இசைபோல் குடைவிரிக்கிறது.

இதிலிருந்து நான் என்ன உயர்த்தி?

என் இருப்பும் இன்மையும் இப்பிரபஞ்சத்தில் என்ன தாக்கத்தை ஏற்படுத்தப்போகிறது? இன்னும் மேலேபோனால், இந்த உலகம் இப்பிரபஞ்ச வெளியில் இந்த எறும்பைவிட என்ன உயர்த்தி? ஊதிவிட்டால் பறந்துபோய்த் தொலைந்துபோகும் எறும்புபோல் ஓர் சின்னப் பூகம்பக் கிளர்வில் இது பாழ்! ஒரு சிறுநகையில் எரியும் திரிபுரம் என் கண்முன் தெரிகிறது. இந்தப் பூமியின் இன்மையால் என்ன கெட்டுவிடப்போகிறது? என்ன சுருதிபேதம் ஏற்படப்போகிறது?

என் கையில் ஊர்ந்துகொண்டிருக்கும், என் பார்வையின் ஈர்ப்புக்குள் புக மிகக் கஷ்டப்படும் இந்த 'சித்துருள்ளான்' என்ன செய்ய முயற்சிக்கிறது? என் புறங்கையின் ரோமங்களுக்கூடாக நெளிந்துநெளிந்து, தரித்துத் தரித்து நகர்கிறது. எனது கையின் மயிர்க்கால்கள் ஒவ்வொன்றும் அதற்குப் பேர் விருட்சங்களாகத் தெரியுமோ? பெருங்கானகத்திற்கூடாகப் பயணிக்கும் ஓர் அற்ப மனிதனாக அது பட்டது. அது படும் பேரிடரை உணர்ந்து மெதுவாக அதை என் மயிர்க்காட்டிலிருந்து விடுவித்து நிலத்தில் 'தூக்கி' விடுகிறேன். எனது இந்த ஜீவகாருண்யச் 'சேவை'யில் அதன் உயிர் போய்விடுமோ என்ற பயம் வேறு.

நிலத்தில் 'இறங்கிய' அது, சிறிது நேரம் தன் முன்கால்களைத் தூக்கி எழுந்துநின்று ஆறுதல் மூச்சுவிடுவதுபோல் செய்துவிட்டு விடுவிடுவென வேகமாகச் செல்கிறது. அப்போது, அதன் எதிரே அதையொத்த அதன் சகஎறும்பொன்று, எதையோ யோசித்து யோசித்து அங்குமிங்கும் பார்த்து மெல்லமெல்ல வந்துகொண்டிருக்கிறது. நேரெதிரே இரண்டும் சந்தித்துக்கொள்கின்றன. அவ்வளவுதான், ஒன்றையொன்று கட்டிப்பிடித்து, முத்தமிடுவனபோல் காலுயர்த்தி ஏதோ கதைத்தனவா?

> அந்தக் கணப்பொழுதில் வான்வெளியில் ஓர் பேரிடி அதிர்ந்து மின்னல் பெயர்ந்து பிரபஞ்சம் அனைத்தையுமே ஒளிவெள்ளத்தில் ஆழ்த்திச்செல்வதுபோல்பட, அது விட்டுச் சென்ற எச்சம் பேரிசைபோல் என்னைச் சூழ்ந்து அதிர்ந்தது. அந்தச் 'சித்துருள்ளான்'களிடையே நிகழ்ந்த 'உரையாடல்' எவ்வாறு இப்பேரண்டமாய் விரிந்து ஒளி பரப்பி என்னுள் அதிர்ந்தது? அல்லது நான்தான் உணர் வேற்றப்பட்டு அவ் அணு நிகழ்வினுள் இருந்து எழுந்து விரிகிறேனா?

அந்த இரண்டு சித்துருள்ளான்களும் 'செய்தி' பரிமாறிக் கொண்டபின் வெவ்வேறு திசையில் சென்றுகொண்டிருந்தன. இரண்டும் எங்கோ எங்கோ சென்று இன்மையாக மாறும்வரை பார்த்துக்கொண்டிருந்தபோது, அவை மறைந்த வெற்றுப்புள்ளியில் ஓர் பிரமாண்ட வெளி, வாய்பிளந்தெழுகிறது. அதற்குள் எண்ணிறந்த ராட்சத நட்சத்திரக் கோளங்களின் பேரசைவு, அவற்றைச் சுற்றிக் கும்மியடித்துவரும் கோள நிரைகளின் பேரிசை.

இவ்வேளை திடீரென என் இருப்புக் குறுகிக்குறுகி இன்மையாகிக் கரைந்துகொண்டிருந்த இன்மைப் புள்ளியில் ஓர் அணுவின் சுழற்சி. அந்த அணுவின் மையமாம் புறோட்டோன் நியூட்றோன்களை எலெக்ட்றோன் வலம்வரும் கோள நிரைகளின் செவிகடந்த இசை எங்கோ கிணுகிணுப்பதுபோல்… அதோ, அங்கே நிரையிட்டுச் செல்லும் அந்த சிற்றெறும்புக் கூட்டத்திலிருந்தா, அது எழுகிறது?

ஓர் அணுவுள் அண்டத்தின் பிரமாண்டம் அடக்கம். அண்டப்பிரமாண்டமே ஓர் எறும்பின் பிரசவிப்பாய் என்முன் விகசித்தெழுகிறது. இத்தகைய ஒவ்வொரு தரிசன விகசிப்பிலும் ஓர் இசை வடிவம் அதற்கு உறையிட்டு எனக்குள் அதிர்கிறது.

திடீரென ஏதோ என் நெற்றியில் கடிப்பதுபோல்பட்டது.

சுட்டுவிரலை எடுத்து அவ்விடத்தைச் சொறிந்துவிட்டு என் விரல் மீண்டபோது எனக்கு ஆச்சரியம் ஒன்று காத்திருந்தது. எனது சுட்டுவிரல் நகத்தின் விளம்பில், வரிசைகட்டி மண்ணில் ஊர்ந்துகொண்டிருந்த சிற்றெறும்பில் ஒன்று நசியாத குறையாகத் துடித்துக்கொண்டிருந்தது.

நல்ல காலம், அது நசிந்துசிதையாது உயிர்பிழைக்கும் நிலையில் இருந்தது.

என் முகத்திற்கு நேரே பிடித்து அதை ஆச்சரியத்தோடு பார்த்தேன். அந்த அற்பத்தின் துடிப்புக்கு இப்பிரமாண்டப் பின்னணி அழகேற்றுவதுபோல் பட்டது. இல்லை, இந்தப் பிரபஞ்சமே அதற்குள் இருந்து பிரசவிக்கப்படுகின்ற அழகின் பீறிடல் என் கண்களைக் கூசவைப்பதுபோல்…

என் சுட்டுவிரல் விளிம்பின் நக இடுக்கைவிட்டு ஒருவாறு வெளிவந்து, அது ஏதோ யோசிப்பதுபோல்பட்டது.

எவறெஸ்ற் மலையின் உச்ச சிகரத்தில் ஏறிய ஹிலறியும் டென்சிங்கும் இவ்வாறுதான் யோசித்திருப்பார்களோ?

என் விரல் நுனியில் நின்ற எறும்புக்கு, கீழே இருந்த தரை அதலபாதாளமாய்ப் பட்டிருக்குமோ?

அந்த எறும்பைப் பார்த்துக்கொண்டிருந்த நான், அதை அப்படியே ஒரு ஊது ஊதிவிட்டேன்.

அது, சூறாவளியில் அள்ளுப்பட்ட தூசாய் எங்கு பறந்ததோ! என்னுள் ஒரு பேரினவாதியின் அகங்காரமும் உதாசீனமும் குடி புகுந்தமாதிரி.

என்முன்னே எவறெஸ்ற் சிகரத்தில் இருந்து தள்ளப்பட்ட மனிதனொருவன், எத்தனையோ ஆயிரம் அடிகளுக்குக் கீழே விழுந்து துண்டுதுண்டாகச் சிதறிப்போவது தெரிந்தது.

ஆனால், எறும்பின் எடையின்மை அதை அந்த நிலைக்குத் தள்ளியிருக்காது. பரசூட்டில் போயிறங்கும் ஒருவனைப்போல் அது ஆடி அசைந்து நிலத்தில் போய்த் தரித்திருக்கும்.

ஆனால், எனது ஊதல் ஒரு வன்முறையாகவே பட்டது.

ஏன் அப்படிச் செய்தேன்?

வெறும் காரணமற்ற உந்துதல்?

இல்லை, நான் அப்போது, திரிசங்குவை ஏற்க மறுத்த தேவர்கள்போல் சிற்றுயிர்களை, சிற்றினங்களைத் துச்சமாக மதிக்கும் பேரின மனநிலைக்குள் வீழ்ந்திருந்தவன்போலவே பட்டது.

இன்னிசை மீட்டிய தந்திகள், திடீரென அறுபட்டு 'டண்' என்ற அவல இசை எழுப்பி ஒன்றோடொன்று மோதிச் சுருண்டன.

பிரபஞ்ச வெளியில் சுழன்றுகொண்டிருந்த கோடானுகோடி கோள நிரை அடுக்குகளிலும் அதிர்வுகள் ஏற்பட்டு, அவை தாம் ஓடிய அச்சிலிருந்து சற்று விலகிச் சுழன்றன.

அடுத்த நொடி எண்ணிறந்த எரிகற்கள் ஒவ்வோர் கோள மண்டலங்களிலும் உதிர்வுற்றுச் சொரிந்தன.

நான் ஊதிவிட்ட எறும்பு எங்கே அள்ளுப்பட்டுப் போனதோ! அதை நினைக்க எனக்குள் ஒருவகைத் துக்கம் கசிவதுபோல் தெரிந்தது.

நான், வரிசைகட்டிச் செல்லும் எறும்புக் கூட்டத்தைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

சிற்றெறும்பென்றால் அது அற்பமா? அல்ல; அது ஓர் அண்டம். அண்டமென்றால் சிற்றெறும்பைவிடப் பெரிதா? அல்ல; அதைவிடச் சிறிதே, அப்படியா?

அதோ எறும்புக் கூட்டம் பேர்மௌனமாய் ஊர்ந்துகொண்டிருக்கிறது.

ஒவ்வொரு எறும்புக்குள்ளும் ஒவ்வோர் அண்டம் உருண்டு கொண்டிருப்பதுபோல் பட்டது. அந்த உருளலில் எத்தனை

எத்தனையோ கோடி ஒளிவருடங்களுக்கப்பால் உள்ள பிரபஞ்சக் கோடியில் மாபெரும் நட்சத்திரத் தொகுதிகள் ஒன்றோடொன்று மோதிப் பால்வீதியாய் மாறிப் பளீரிட்டுக்கொண்டிருக்கிற காட்சி...

❖

## அவனுக்கு என்ன நேர்ந்தது?

காலையில் கண்விழித்தபோதிருந்து அவன் பின்னால் – அவன் பின்னாலா முன்னாலா அல்லது அவனுள்ளிருந்தா – ஏதோ நூலாய் இழுபடுகிறது.

எங்கிருந்தென்று தெளிவாகத் தெரியாவிட்டாலும் அது அவனைச் சூழ, ஒரு புகைத்திரளாய், புகைவளையங்களாய் இழுபட்டுக்கொண்டிருப்பதுபோல...

அது அவனோடு இழுபடுவது அவனுக்கு ஏதோ அசௌகரியத்தைத் தருவதாய், காலையில் ஆனந்தப் பள்ளிடும் பறவைகளின் கீதத்தோடு அவன் மிதப்பதைத் தடுத்துக் கீழ் இழுக்கும் ஓர் மர்ம விசையாய் நிற்கிறது.

அவனுக்கு அதில் நல்ல பரிச்சயம்.

அவனுக்கு வேலை ஆயிரம் இருந்தபோதிலும் அதை மறந்தவனாய் வீட்டு வாசலில் நின்றவாறே தூரத்தெரியும் வானத்தைப் பார்த்துக்கொண்டு நிற்கிறான். இடைக்கிடை கவியும் முகில் திட்டுக்களிடையே விரிந்துகொண்டிருக்கும் வான்பரப்பு.

அவன் நெஞ்சை அது அள்ளுகிறது,

அவன் எங்கெங்கோ காற்றுவெளியில் அள்ளுப்பட்டுச் செல்கிறான்.

அந்நிலையிலும், உயர உயரப் பறக்கும் பட்டத்தின் பின்னால் இழுபடும் கண்ணுக்குத் தெரியாத நூல் இழையாய் அவன் பின்னால் ஏதோ ஒன்றின் உணர்வு இடைக்கிடை தலைகாட்டவே செய்கிறது.

அது அவனுக்கு அவன் கால்களைக் கட்டிப்போடுவது போலவே பட்டது.

அவன் நெஞ்சின் அழுத்தங்கள் எதுவுமின்றி உயர உயரப் பறக்க முனையும் ஒவ்வொருசமயமும் அவன் இறக்கைகள் மேல் சுமை இறங்கிக் கீழ் இழுப்பதுபோல்... இது, அடிக்கடி அவனிடம் தலைக்காட்டத் தொடங்கியிருந்தது.

அன்று அவனுக்கு வேலையில்லை. ஆகவே, அவன் வீட்டிலிருந்தான். வழமையாக அவன் அமரும் மேசைக்கு முன்னால் போய் மிக ஆறுதலாக அமர்ந்தான்.

கொஞ்சநேரம் அவன் கையில் இருந்த விலங்குகள் நீக்கப்பட்டவனாய் உணர்ந்தான். வேலை என்பது ஒருவனுக்கு விலங்கா? அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால், அந்த விடுதலை உணர்வு கொஞ்சநேரந்தான். அதற்குமேல் அந்தச் சுகம் இருக்கவில்லை. காரணம், அவன் தோள்மேல் ஏதோ ஒரு பாரம் சொல்லிவைத்து இறங்குவதுபோல் அந்தரம். அது, அவன் வேலைப் பழுவைவிடப் பாரமாக இருந்தது. காலையில் அவன் விழித்தபோது நூலாய் இழுபடுவதுபோல்பட்ட அந்த உணர்வு, இப்போ தோளில் சுமையாய் இறங்குவதுபோல் பட்டது.

அவன் இருக்கையை விட்டெழுந்தான்.

அப்படித்தான் அவன் அந்த அழுத்தம் வரும்போதெல்லாம் நடந்துகொள்வான்.

அவன் தன் இருப்பிடத்தை விட்டெழுந்து அங்குமிங்கும் நடக்கத் தொடங்கினான்.

இப்படி அவன் நடந்துகொள்வதில் அவன் மனைவிக்கு நல்ல பரிச்சயம்.

"இப்ப என்னப்பா உயிர்போனமாதிரி யோசிச்செண்டு...?" அவள் எரிச்சலோடு கேட்டாள். அவன் அதற்கு பதில் அளிப்பதாய் இல்லை.

"நீங்க வீட்டில் இருந்தா இப்படித்தான். எதையோ பாரத்தைத் தூக்கித் தலையில் வைச்செண்டு இருக்கிறமாதிரி முழிச்செண்டு...?"

அதற்கும் அவன் எதுவும் சொல்வதாய் இல்லை.

திடீரென எதையோ நினைத்துக்கொண்டவன்போல் தன் மேசையில் அரைகுறையாக வாசித்துவிட்டு வைத்த நாவலை எடுத்துப் படிக்கத் தொடங்கினான். சிறிது நேரம் படித்திருக்கமாட்டான். அவன் கண்களுள் தூக்கம் சுழன்றது. மெல்ல எழுந்து தன் படுக்கையில் போய் விழுந்தான்.

அவன் தலையில் இருந்து பாறாங்கல்லாக அழுத்திய பாரம் அவனைவிட்டு மெல்லமெல்ல அகல, அவன் கண்களைத் தூக்கம் கௌவுகிறது.

ஆனால், ஆழ்துயில் அல்ல. அவன் கனவுலகில் மிதந்தான். அங்கும் அவனைத் தொடர்ந்து கயிறெறியும் அந்த உணர்வு... பாம்புகள்மாதிரி அவன்முன்னே நெளிந்து வளைந்தன.

அவனை வளைத்து, அவனைப் போகவிடாது வட்டமிட்டு நின்றன.

அவன் முதலில் பயப்பட்டான். பிறகு திடீரென வீரியம் கொண்டவனாய் அவனை வளைத்த பாம்புகளைக் காலால் மிதித்துக் கொல்ல முயன்றான்.

ஆனால், அவை அவன் கால்களுக்கு அகப்படாது நெளிந்தன.

பின்னர் அவற்றை இரண்டு கைகளாலும் பிடித்து நசிக்க முயன்றான்.

ஆனால், அவை கைக்குள் அகப்படாத இன்மைப் பொருளாய் மாறின. அப்போதுதான் அவனுக்குத் தெரிந்தது, அவை வெறும் தோற்றங்களென்று. அவன் உற்சாகம் கொண்டு மேலே நடந்தான். திடீரென அவன்முன் நெளிந்த பாம்புகள் இரும்பு வளையங்களாக மாறி அவனைச் சுற்றிவளைத்தன. அவன் இரும்புக்கூடொன்றுக்குள் அகப்பட்டவனாய்த் திகைத்தான். பயம் அவனைத் தாக்கியது. அவன் பயந்தவாறே தன்னைச் சூழ்ந்துநின்ற கம்பிக்கூண்டை உதைத்தான். என்ன ஆச்சரியம்! வெறும் காற்றுவெளியை உதைத்தவனாய் முன்னால் தள்ளப்பட்டான். அந்தக் கம்பிக்கூண்டு வெறுந்தோற்றமே என்பது மீண்டும் உணர்த்தப்பட, அவன் வியந்தான். ஆச்சரியம் கலந்த சந்தோஷத்தோடு முன்னேற முயன்றான்.

ஆனால், திடீரென அவன்முன்னே உருளை ஒன்று முளைத்தெழுந்தது!

நெடுஞ்சாலைகளைச் செப்பனிடும் உருளைபோல் அவன் பாதையை மறைத்தெழுந்தது. அதை உருட்டித்தள்ளி அவனால் முன்னேற முடியுமா?

அப்படி அவன் நினைத்தபோது அந்தப் பேருருளை அவனை இடித்துத்தள்ளுவதுபோல் அசைந்து வந்தது. அவன் என்ன செய்வதென்று அறியாது, எப்படி அதிலிருந்து தப்புவது என்று தெரியாது மலைத்து நிற்கையில், அது அவனைக் கீழே தள்ளி நசித்துவிடுவதுபோல் நெருங்கிவிட்டது... ஐயோ...

அவன் திடுக்கிட்டவனாய் விழித்தெழுந்தான்.

அவன் உடல் வேர்த்துக்கொட்டியது.

அவன் எதிலிருந்து தப்ப முயன்றானோ அது, அவன் கனவிலும் அவனைத் தொடர்வதுபோல் பட்டது.

○

அவனுக்கு இப்போ வரவர, தான் ஏதோ அந்தரத்தில் தொங்குவதுபோல் பட்டது. வேலையில்லாத லீவு நாட்களில் அவன் வீட்டில் இருக்கும்போது யாரோ அவனைக் கட்டித் தொங்கவிட்டதுபோலவும் அவன் அதிலிருந்து விடுபட முடியாமல் தவிப்பதுபோலவும் அவன் அவஸ்தைப்பட்டான்.

இவ்வேளைகளில் அவன் தனக்கு விருப்பமான இசைப்பாடல் களைக் கேட்டு மகிழ்வான். அல்லது நல்ல இலக்கிய நூல்களையோ, தத்துவ நூல்களையோ வாசித்துத் தன்னை மறப்பான்.

ஆனால், இது எல்லா நேரமும் சாத்தியப்படுவதில்லை.

அந்த நேரங்களில் அவன் ஏதோ பாரவண்டியொன்றைத் தள்ள முடியாமல் தள்ளிக்கொண்டிருப்பவன் போன்ற அவஸ்தை.

அதிலிருந்து மீள்வதற்கு அவன் படும் பாடு பரிதாபகரமானதா கவே இருக்கும். எப்பொழுது வேலைநாட்கள் வரும் என்பதுபோல் காத்திருப்பான்.

காலையில் அவன் கண்விழிக்கும் ஒவ்வொருசமயமும் அவன் மனம் எந்தவித விகாரங்களாலும் சூழப்படாது நிர்மலமாய் விரிய அவன் மனம் களிகொண்டு குதிக்கும். ஆனால், கொஞ்சநேரந்தான்.

அதன் பின்னர் அவன் பின்னால் நூலிழையாக இழுபடத் தொடங்கும் 'அது' அவனைச் சகஜ நிலையிலிருந்து தள்ளிவிட, அவன் அந்தரப்படத் தொடங்கிவிடுவான். வேலை அவனை அழைக்கும்.

முடுக்கிவிட்ட பொம்மைபோல் சாப்பிட்டது பாதி, சாப்பிடா தது பாதியாக விரைவான். பின்னர் வேலையில் மூழ்கிவிட்டால் எல்லாம் மறந்துபோய்விடும். சாப்பாட்டு இடைவேளை நண்பர் களோடு அரட்டை அடிப்பதில் கழிந்துவிடும். மீண்டும் வேலை யெல்லாம் முடிந்து வீட்டுக்குப் போகப்போகிறோம் என்கிற எண்ணம் வரும்போது, காலையில் எழும்போது ஏற்படும் எந்தவித மனவிகாரங்களாலும் பீடிக்கப்படாத ஆனந்தம். அந்த இனிமை யின் வியாபிப்பில் அவன் வீட்டுக்குப் போவதற்காக பஸ்ஸுக்காகக் காத்து நிற்கையில், சொல்லிவைத்தாற்போல் 'அது' அவன் பின்னால் இழுபடத் தொடங்கிவிடும். பின்னர் வீடும் நரகமாகிவிடும்.

○

ஒரு நாள் அவன் வீட்டில் தலையைப் பிய்த்துக்கொள்வது போல் யோசித்துக்கொண்டிருந்தான்.

அவன் மனைவி வழமைபோலவே, "என்னப்பா துவங்கியிற் றீங்களா?" என்று தொணதொணக்கத் தொடங்கினாள்.

அவனும் வழமைபோலவே அவளுக்குப் பதில் அளிக்கவில்லை. அன்று வழமைக்கு மாறான அந்தரம்.

தன்னைச் சூழ்ந்து இறுக்கிக்கொண்டு வருவது போலிருக்கும் இரும்புக்கூண்டை உடைத்தெறிய வேண்டும் போன்ற அந்தரம் அவனுக்குள். காலையில் படுக்கையை விட்டெழுந்தபோது வழமை

போலவே அவனோடு இழுபடத்தொடங்கிய 'அது' நேரம் செல்லச் செல்ல அவனைச் சூழ்ந்து பேயாட்டம் ஆடத் தொடங்கிற்று. அவனை எங்கும் செல்லவிடாது மறிப்பதுபோல் அதன் விஸ்வ ரூபம். "இதெல்லாம் வெறும் மனக் கற்பிதம்" என்று அவன் அதை உதறிவிட முனையும் ஒவ்வொரு கணமும் அது இன்னும் இன்னும் பூதாகரமாக விரிந்தது.

அவன் கைகள் இரண்டிலும் தலையைத் தொங்கவைத்த வனாய் இருந்த பாணி, நிச்சயமாக பைத்தியம் பிடித்தவன்மாதிரியே தோற்றம் அளித்தது.

அவன் மனைவி பயந்தேவிட்டாள்.

"என்னப்பா உங்களுக்குச் செய்யுது, என்னப்பா உங்களுக்கு?" என்று பதறியவாறு அவள், அவனை உலுக்கினாள்.

அவன் பதிலளிக்காது அவளை ஒருதரம் வெறித்துப் பார்த்து, "என்னைக் குழப்பாதே" என்று கூறிவிட்டு, தான் விட்டுவந்த வெளியில் பார்வையை ஓட்டினான்.

அங்கே அவன் கண்முன் ஒரு பிரமாண்டமான காட்சி விரிந்துகொண்டிருந்தது.

பென்னம் பெரிய கோளம்போல் ஒரு வலை உப்பி ஊதிச் சுழன்றுகொண்டிருந்தது. அதற்குள் எண்ணிறந்த பறவையினம் அடைபட்டுச் சத்தமிட்டவாறு பறந்து திரிகின்றன. ஒன்றை யொன்று புணர்வதும் விடுபடுவதும் தனித்திருப்பதும் ஏகாந்தமாய் இருந்து பாடிக் களிப்பனவாயும் இருந்தன. அவற்றுள் ஏதாவது ஒன்றிரண்டு இடைக்கிடை வலையை அறுத்துக்கொண்டு வெட்ட வெளியில் ஆனந்தமாய்ப் பறந்தன. அவனுள் பரவசம் எழுவது போல் இருந்தது.

அவன் தனக்குள் பெரிதாய்ச் சிரித்தான்.

அவன் மனைவிக்கு வயிற்றில் நெருப்பைக் கொட்டுவதுபோலி ருந்தது.

"இனிமேலும் தாமதிக்கக்கூடாது. ஆளை டொக்டரிட்டை கொண்டுபோய்க் காட்டவேணும்" என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். அயலவர்களும் அவளுக்கு அதையே கூறினர்.

○

கிளினிக் ஒன்றிற்கு அவன் கொண்டுபோகப்பட்டான்.

மனோவியல் மருத்துவ நிபுணரின் அறைக்கு முன்னால் அவனும் அவளும் காத்திருந்தார்கள். மேசை அழைப்புமணிச் சத்தம் கேட்டது. அவர்களை உள்ளே வருமாறு நேர்ஸ் அழைத்தாள்.

அவனும் அவளும் எழுந்து உள்ளே போனார்கள்.

'சைக்கியாற்றிஸ்ற்' முகத்தைச் சிறிது கடுமையாக வைத்துக் கொண்டு அவர்களை அமரவைத்தார்.

"உங்களுக்கு 'அப்பொயின்ற்மென்ற்' 9.30க்கு. ஆனால், நீங்கள் 10.30க்கு வந்திருக்கிறீர்கள். ஏன் இவ்வளவு லேற்?" டொக்டர் சிறிது கடுகடுப்பாகவே கேட்டார்.

டொக்டரின் கேள்விக்கு மனைவி பதிலளிக்க முன் அவன் தான் பதிலளித்தான்.

"இல்ல டொக்டர், நீங்கள் சொல்வதுபோல் எனக்கு நேரம் ஓடுவதாய் தெரியவில்லை."

டொக்டர் ஒருமுறை அவனை ஏற இறங்கப் பார்த்தார்.

அவன் மனநோயாளி என்பதைப் புரிந்துகொண்டவர்போல், அவன் மனநிலையை மேலும் அறிய விரும்புபவர்போல் அவனிடம் பின்வருமாறு கூறினார்.

"இல்லை உங்கள் நேரத்தைப் பாருங்கள், இப்போ சரியாக 10.40. நீங்கள் கிளினிக்கு வந்தது, 10.30க்கு. ஆகவே, நேரம் ஓடுது. இல்லையா?"

"கடிகாரத்தின் முள் சுற்றினால் நேரம் ஓடுவதாகக் கொள்கிறீர் களா, டொக்டர்?"

"டொக்டர், அவர் இப்படித்தான் கதைப்பேர். அவர் கொஞ்சம் குழம்பியிருக்கிறேர். அதுதான், அவரை நான் உங்களிட்டை கூட்டிக்கொண்டு வந்தேன்." அவன் மனைவி பதில் அளித்தாள். அதைக்கேட்டு அவன் சிரித்தான்.

"நீங்கள் குறுக்கிடாதீர்கள், அம்மா" என்று அவன் மனைவியை அமைதிப்படுத்திய டொக்டர் அவனைப் பார்த்துக் கேட்டார்:

"அது சரி, நேரம் ஓடுவதாய் தெரியவில்லை என்று ஏன் சொல்கிறீர்கள்?"

"எனக்கு சும்மா இருக்கும்போது நேரம் ஓடுவதாய் தெரிய வில்லை. என்மேல் சுமையாய் இறங்கி கழுத்தை நெரிக்குது." அவன் கூறினான்.

"நீங்கள் வேலை செய்கிறீர்களா?"

"ஓம்"

"என்ன வேலை?"

"ஆசிரியர் வேலை"

"அப்போ நீங்கள் வேலை செய்யும்போது, அதாவது நீங்கள் படிப்பிக்கும்போது, நேரம் ஓடுவதுபற்றித் தெரிவதில்லையா?" டொக்டர் ஆர்வமாகக் கேட்டார்.

"அப்போதும் அது ஓடுதோ நிற்கிதோ என்று எனக்குத் தெரியாது. ஆனால், அப்போது சும்மா இருக்கும்போது ஏற்படும் சுமையின் அழுத்தம் எனக்கு ஏற்படுவதில்லை." அவன் தெளிவாகப் பதில் கூறினான்.

டொக்டர் சிறிது யோசித்துவிட்டுக் கூறினார்.

"உங்கள் பிரச்சினை இதுதான். நீங்கள் நேரம்பற்றிய ஒருவித குற்ற உணர்வால் பாதிக்கப்பட்டுள்ளீர்கள்."

"நேரம் ஓடுவதுபற்றிய பிரக்ஞை உடையவர்களுக்கு நான் குற்றவாளியாக படலாம்." அவன் பதில் அளித்தான்.

"என்ன சொல்கிறீர்கள்?" அவன் பதிலின் விளக்கத்தை டொக்டரின் கேள்வி கோரியது.

"இல்லை டொக்டர், என்ர வியாதி இல்லை, எங்கட வியாதி என்றுகூடச் சொல்லலாம். எனக்கு நேரம் ஓட மறுத்து சுமையாய் இறங்குது. அதனால், நான் அந்தரப்படுகிறேன். உங்களைப் போன்ற வர்களுக்கு நேரம் வேகமாக ஓடுது. நீங்க அதன் பின்னால் ஓடுறீங்க. அப்படி ஓடுவது உங்களுக்கு அந்தரமாக, அவஸ்தையாக இருப்பதில்லையா?"

"ஏன்?" டொக்டர் அவனைக் கேட்டார்.

"அதனால்தான் நான் நீங்கள் குறித்த அப்பொயின்ற்மென்ற் நேரத்துக்கு வரேல்ல எண்டு கோபப்பட்டீர்கள், இல்லையா?"

டொக்டர் லேசாகச் சிரித்தார்.

"டொக்டர், இவர் இப்படித்தான் கதை சொல்லுவேர். ஆனால், எனக்கெண்டா அவருக்கு ஏதோ வியாதி பிடித்துவிட்டது மாதிரித்தான் தெரியுது." அவன் மனைவியின் குரலில் ஒருவித பயம் வெளிவந்தது.

"நீங்கள் கொஞ்சம் அமைதியாய் இருங்க" என்று அவன் மனைவியை சாந்தப்படுத்திய டொக்டர், அவன் பக்கம் திரும்பினார்.

"இங்கே பாருங்கள், நீங்கள் நேரத்தைப் பற்றி அதிகம் அலட்டிக்கொள்ள வேண்டாம். அதுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டாம். அதைப் பெரிதாக எடுக்க வேண்டாம்."

"நான் அதுக்கு முக்கியத்துவம் கொடுப்பது இருக்கட்டும். ஆனால், நான் இங்கே வந்ததும் அதை என்மேல் அழுத்தியது

நீங்கள்தான். அதனால்தான் என்னைக் கண்டித்தீர்கள்?" அவன் சிரித்துக்கொண்டே கூறினான்.

"ஓம், அது வேறானது, நான் நேரத்துக்கு கொடுக்கும் முக்கியத்துவம் என் வேலை தொடர்பானது." டொக்டர் விளக்கினார்.

"ஆனால், நான் நேரம்பற்றி பிரஸ்தாபிப்பது இன்னும் ஆழமானது. அது என் வாழ்க்கை தொடர்பானது" என்று கூறியவன் டொக்டரைப் பார்த்து லேசாகச் சிரித்துக்கொண்டே கூறினான். "நீங்கள் நேரத்துக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் நேரத்தைப் போற்றுகிறது. என்னுடையதோ நேரத்தைக் கடக்க முயல்கிறது. நேரம் இல்லாத இடத்தைத் தேடுகிறது."

"நேரமில்லாத இடமா?" என்று சிரித்துக்கொண்டு கேட்ட டொக்டர், அவன் மனைவியை ஒருவிதமாகப் பார்த்துவிட்டு, "கொஞ்சம் குழம்பியிருக்கிறார். இந்த மாத்திரைகளை வாங்கிக் கொடுங்கள், எல்லாம் சரியாகிவிடும்" என்று கூறி, பிறிஸ்கிறிப்ஷனை எழுதிக்கொடுத்தார்.

அதை எடுத்த அவன், மனைவியின் கையில் ஒப்படைத்தவாறே டொக்டரைப் பார்த்து, "டொக்டர் இந்த மாத்திரைகள் நேரத்தைப் போற்ற உதவுமா அல்லது நேரத்தைக் கடக்க உதவுமா?" என்று கேட்டுவிட்டு, சிறிது வாய்விட்டுச் சிரித்தான்.

டொக்டருக்கு தான் எழுதிக்கொடுத்த பிறிஸ்கிறிப்ஷன் மாத்திரைகள் தன் தொண்டைக்குள்ளேயே இறங்குவதுபோல் குமட்டல் எடுத்தது.

❖

# துச்சாதனர்கள்:
# புலம்பெயர் காட்சிகள் மூன்று

தமிழர் கலாசாரம்பற்றிய கலந்துரையாடல் அது. புலம்பெயர் நாடொன்றில் தமிழர் கலாசாரம்பற்றிய கலந்துரையாடல் காரசாரமாக நடைபெற்றது. புலம்பெயர் எழுத்தாளர்கள், அறிஞர்கள், ஆய்வாளர்கள் பலர் பங்குபற்றினர். தமிழர் அடையாளம் பேணப்பட வேண்டுமானால் அவர்கள் மொழி, கலாசாரம் பேணப்பட வேண்டும் என்பதில் எல்லோரும் உடன்பட்டனர். ஆனால், தமிழர் கலாசாரம் என்பது எது? அதுதான் அங்கு முக்கியமாக எழுந்துநின்ற கேள்வி. அதற்குப் பதில்காண, பலர் பலவித கலாசார அல்லது பண்பாட்டுக் கூறுகளின் வழி நுழைந்தனர்.

அது ஒரு *Strip* கிளப்.

அங்கே 'ஸ்ட்றிப்' டான்ஸ் நடந்துகொண்டிருந்தது.

அதாவது, பெண்கள் அரங்கில் தோன்றி, ஆடை களையும் நடனத்தில் ஈடுபட்டுக்கொண்டிருந்தனர்.

ஒவ்வொரு பெண்ணாக மேடையில் ஏறி, தன் உடலில் பெண்மை உறுப்புக்களை மறைத்திருந்த ஆடைகளை ஒவ்வொன்றாகக் கழற்றி எறிந்தனர்.

உடலில் மெல்லிதாகத் துவண்டுகொண்டிருந்த மெல்லாடை முதலில் நழுவிற்று.

மார்பை மறைத்த கச்சை கழன்றுபோயிற்று. பின்னர் குவிமுலைகளை ஒன்றுசேரக் குவித்தும் நெரித்தும் அபிநயம் நிகழ்ந்தது. ஈற்றில் யோனியை மறைத்த கச்சையும் கழன்றது. பின்னர் கால்களை அகல விரித்து இன்னோர் முத்திரை. சில பார்வையாளர்களிடமிருந்து ஆரவார வரவேற்பொலிகள் கிளம்பின.

தமிழர் கலாசாரம் பேணப்பட வேண்டும் என்று காரசாரமாக விவாதித்த அவனும் அங்கே இருந்தான். அவன் லேசாக, தனக்கு பக்கவாட்டிலிருந்து ஆரவார ஒலிகள் கிளம்பிய பக்கமாக நோட்டம்

விட்டான். 'தமிழ்க்களை' காட்டும் முகங்கள் பல அங்கே தெரிந்தன. காதில் வளையங்கள், ஒட்டவெட்டப்பட்ட தலைமயிர், சிலருக்கு சுற்றிவர மயிர்கள் மழிக்கப்பட்டு மேல்பகுதி மட்டும் பாத்திபோட்ட மேடுபோல் கருமை சிலிர்த்திருந்தது. அவர்களில் சிலரை எங்கோ கண்டதுபோல... எங்கே? எங்கே? ஞாபகம்வர சிறிது தாமதித்து பின்னர் திடீரெனப் பளிச்சிட்டது. அவ்வூர் ஆங்கிலப் பத்திரிகைகளில் அவர்கள் சிலரின் படங்கள் வெளியாகியிருந்தது, அவன் ஞாபகத்திற்கு வந்தது. ஒரு றெஸ்ற்றோறன்றுக்கு முன்னால் இடம்பெற்ற தெருச் சண்டையில் வாள்வெட்டு, எதிரியின் கைகளைத் துண்டாடியது என்ற குற்றச் செயல்களோடு சம்பந்தப்படுத்திய செய்திகளின் மத்தியில் அவர்கள் சிலரின் படங்கள் இருந்ததுபோல...

மீண்டும் அரங்கில் ஒருத்தி ஆடிக்கொண்டிருந்தாள்.

ஆடைகள் ஒவ்வொன்றாகக் கழன்றுகொண்டிருந்தன.

துரியோதனன் அவையில் திரௌபதையின் துகில் உரியத் துச்சாதனன் எடுத்த முயற்சி தோல்வியில் முடிகிறது.

இங்கே அரங்கில் திரௌபதைகள் தோன்றி, தங்கள் உடைகளைத் தாங்களே உரிந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் உடைகளைக் களைய ஊக்குவிக்கும் துச்சாதனர்கள் யார்?

அவன் பார்த்துக்கொண்டிருக்கிறான்.

இன்னொரு அழகி அரங்கில் தோன்றுகிறாள்.

அவள் நெளிந்து வளைந்து ஆடை களையும் அபிநயிப்பில் ஈடுபடும்போது, "இவள்தான் அவள்" என்று பலமாகவே தமிழில் ஒலியெழுப்பிய அந்த 'தமிழ்க்களை' சிந்தும் முகங்கள் மத்தியில் ஒருவகை அதிர்வலைகள் எழுந்துகொண்டிருப்பது தெரிந்தது.

அவன் மேடையில் ஆடும் அவளைப் பார்க்கிறான்.

அவள் வெள்ளைக்காரியல்ல. ஆபிரிக்க நீக்கிரோப் பெண்ணுமல்ல. தாய்லாந்து அல்லது சீன தேசத்தவளாயும் இருக்கவில்லை.

அவள் முகத்தில் யாழ்ப்பாண 'தமிழ்க்களை' தெரிந்தது. அதுதான் தமிழர் அடையாளமாய் அவனுக்குப்பட்டபோது, அவன் அவளை ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந்தான்.

அவள் ஆடைகள் கழன்றன.

அவள் நிர்வாணமாய் ஆடிக்கொண்டிருந்தாள். ஒருவித ஆரவார அதிர்வுகளுக்கிடையே தமிழில் கொச்சை வார்த்தைகள் கீழிருந்து கிளம்பின.

அவள் பிடித்த அபிநய முத்திரைகள் எதிலும் தமிழ் அடை யாளம் எதுவும் இருந்ததாய் இல்லை.

ஆனால், அவன் ஆச்சரியத்தோடு பார்த்துக்கொண்டிருந் தான்.

வெகு நேரத்திற்குப் பின் அவள் கிளப்பை விட்டு வெளியில் கிளம்பிச் சென்றாள். இவனும் வெளியே போக ஆயத்தமானான். திடீரென கிளப்புக்கு முன்னால் துவக்குச் சூடு கேட்டது. அவன் மனம் ஒரு கணம் அதிர்ந்தது.

அரங்கில் ஆடிய 'தமிழ்க்களை' தெரிந்த அந்தப் பெண் சுடப்பட்டு அங்கே துவண்டு கிடந்தாள்.

கூட்டம் கூடுகிறது.

தமிழ்க் கலாசாரம் பேணப்பட்டதான நினைவில் அவன் அங்கிருந்து அகன்றுகொண்டிருந்தான்.

2

ஒரு பாடசாலைச் சிறுமியை பாலுறவுக்குட்படுத்திய ஆசிரியர் ஒருவருக்கு எதிரான வழக்கு அது.

பாதிக்கப்பட்ட புலம்பெயர் தமிழ்ச் சிறுமியின் குடும்பத்தினர் தம் எதிரிக்கெதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்தனர்.

அவன் அந்த வழக்கின்போது, தமிழ்க் குடும்பத்தினர் சார்பில் மொழிபெயர்ப்பாளனாகச் சென்றிருந்ததான்.

பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளில் அவன் பாண்டித்தி யம் பெற்றிருந்தான். அதனால், அவன் இவ்வாறு புலம்பெயர் தமிழ்க் குடும்பங்களின் வழக்குகளுக்கு மொழிபெயர்ப்பாளனாகச் செல்வது வழக்கம். அறிஞர் பூகோ நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்ட பல குற்றவாளிகளின் வழக்குகளை ஆய்வுக்குட்படுத்தி, எவ்வாறு சமூகத்தின் ஒவ்வொரு விதிமுறையும் ஒழுக்கமும் வன்முறை மிக்கதாக, அதிகாரம் மிக்கதாக இருக்கிறது என்பதைப் புட்டுக் காட்டியதுபோல், இவன் புலம்பெயர் தமிழ்க் குடும்பங்களின் வழக்குகளுக்கு முகங்கொடுத்து தமிழ்க் கலாசாரம், அதன் அடையாளம் எவ்வாறு சிதைக்கப்படுகிறது என்பதை, தனக்குரிய அளவுக்கோல்களைக் கொண்டு கண்டறிந்திருக்கிறான். அதற்கான ஆய்வுகளையும் மேற்கொண்டிருக்கிறான்.

பஸ்ரிலியா பதினைந்து வயது நிரம்பிய அழகான தமிழ்ச் சிறுமி. பிரெஞ்சுப் புரட்சியின்போது உடைக்கப்பட்ட பஸ்ரில் சிறையிருந்த இடத்திற்கு அருகே அவர்கள் வசித்துவந்தபோது அவள் பிறந்ததால், அவளுக்குப் பெற்றோர் அந்தப் பெயரைச் சூட்டியிருந்தனர்.

அவள் படித்துக்கொண்டிருந்த பாடசாலையில் அவளுக்கும் பிரெஞ்சு படிப்பித்துக்கொண்டிருந்த ஆசிரியருக்கும் தொடர்பு ஏற்பட்டது. ஆசிரியர் மொறொக்கோவிலிருந்து வந்து குடியேறிய காப்பிரி இனத்தைச் சேர்ந்தவன். அவர்களுக்கிடையே ஏற்பட்ட தொடர்பு, காதலா அல்லது காமம் வயப்பட்டதா என்ற ஆராய்ச்சி அனாவசியமானது.

மேற்குலகக் கலாசாரத்தில் காதலாகிக் கண்ணீர் மல்கி என்பதைவிட, காதலாகிக் கட்டியணைத்து முத்தமிட்டு உடலுறவு கொள்வதே வழமையானதும் சர்வசாதாரணமானதும் என்பது பஸ்ரிலியாவுக்கு தெரிந்திருக்காது என்றில்லாவிட்டாலும், அவளைப் பொறுத்தவரை எங்கே பிழைத்ததென்றால், பிரெஞ்சு ஆசிரியரை அவள் காதலித்து உடலுறவு கொண்டதன் விளைவாய், அவள் கர்ப்பவதியாகிப்போய்விட்டதே.

உடலுறவு கொண்டதோடு மாத்திரம் நின்றிருந்தால் தமிழ்க் கலாசாரம் எப்படியாவது அதனை ஜீரணித்திருக்கும். ஆனால், இந்த விவகாரம் கனகாலமாக பஸ்ரிலியவால் தெரியாத்தனமாக மூடிமறைக்கப்பட்டு, எல்லாவித மாற்று நடவடிக்கைகளும் மேற் கொள்ளமுடியாதுபோன காலத்தில் அவளது பெற்றோர் இதுபற்றி அறியவந்தபோது, அவர்களுக்கு வேறு வழியொன்றும் இருக்க வில்லை; நீதிமன்றத்துக்குப் போவதைத் தவிர.

பஸ்ரிலியாவின் பெற்றோர் வழக்குத் தொடுத்ததற்கான காரணங்கள் பல இருந்தன.

பஸ்ரிலியா ஒரு சின்னப் பெண். அந்த அப்பாவிச் சின்னப் பெண்ணை அவளைவிடப் பத்து வயது கூடிய ஓர் ஆசிரியன் ஏமாற்றி அநியாயம் செய்துவிட்டான். அவனுக்குத் தகுந்த பாடம் படிப்பிக்க வேண்டும். பஸ்ரிலியாவை அவன் மனைவியாக ஏற்றுக்கொள்ளச் செய்ய வேண்டும். அவர்கள் தமக்குள் கறுவிக் கொண்டனர். பஸ்ரிலியாவின் பெற்றோருக்கே இவன் மொழி பெயர்ப்பாளனாக இயங்கினான். நீதிமன்றில் அவர்கள் வழக்கு எடுக்கப்பட்டது.

வழக்கை விசாரித்த நீதிபதிக்கு பஸ்ரிலியாவைக் கர்ப்பவதியாக் கிய ஆசிரியன் ஏதோ பெரிய தவறு செய்துவிட்டவனாகத் தெரிய வில்லை. இந்த நாட்டில் இது ஒரு சர்வசாதாரணமான விஷயம் என்பதுபோல் அவரது முகபாவனை இருந்தது.

வழக்கின்போது குறிப்பிட்ட, பிரெஞ்சு கற்பித்த ஆசிரியர்தான் தம் மகளைக் கெடுத்தான் என்பதற்கான நிரூபணங்களை அந்தத் தமிழ்க் குடும்பத்தினரால் காட்ட முடியவில்லை.

பிரெஞ்சு கற்பித்த ஆசிரியன் தனக்கு எதுவும் தெரியாதென அடித்துக் கூறினான். தீர்ப்பின் முடிவில் நீதிபதி பெற்றோரைப்

பார்த்து, "உங்கள் பிள்ளைக்கு நீங்கள் பாலியல் சம்பந்தமான விஷயங்களைச் சொல்லிக்கொடுக்கவில்லைப் போல் தெரிகிறது" என்று கூறிவிட்டு, மேலும் அவர், "பாடசாலைக்குப் போகும்போது, கர்ப்பத்தடைக்கு ஏதுவான உறைகளை ஏன் கொடுத்து அனுப்புவதில்லை?" என்றும் கேட்டார்.

இவர்களோ தமிழ்க் குடும்பப் பண்பாட்டுக்குரியவர்கள்.

இது என்ன வெட்கங்கெட்ட கதை?

அவர்கள் பேசாமல் நின்றனர்.

இனி அந்தப் பெண்ணை மனைவியாக ஏற்றுக்கொள்வதும் விடுவதும் அந்தப் பிரெஞ்சு ஆசிரியனின் மனதைப் பொறுத்தது என்பதுபோல் தீர்ப்பு இருந்தது.

வழக்கு முடிந்து வீட்டுக்குப் போகும்போது பஸ்ரிலியா, மொழிபெயர்ப்பாளனாகச் சென்ற இவனோடு பிரெஞ்சில் பேசி, கதைத்துச் சிரித்துக்கொண்டு வந்தாள். அவன் பெற்றோருக்கு அவர்கள் பேசும் பிரெஞ்சு புரியவில்லை.

அப்போது, அவனுக்குள் அந்தரங்கமாக ஒரு குணம் தலைகாட்டிற்று.

இவளோடு ரகசியமாகத் தொடர்பு வைத்துக்கொண்டால் என்ன? அந்த எண்ணமும் ஒரு தமிழ் அடையாளந்தான்.

மனைவி இருந்தால் என்ன?

அவளுக்குத் தெரியாமல் ஒரு வைப்பாட்டி.

வைப்பாட்டி முறை யாழ்ப்பாணக் கலாசாரத்தில் காலாகாலமாகப் பயின்றுவரும் ஒன்றுதானே?

தன் அந்தரங்க யோசனையை உரசிப்பார்க்க அவன் தயாரானான், தமிழ் அடையாளத்திற்குப் பிறழ்வு நிகழாத வகையில்.

*3*

தமிழர் கலாசாரத்தைப் பேணுவதுபற்றி அக்கறைப்பட்ட அவன், ஒருமுறை இலங்கைக்குப் போய் யாழ்ப்பாணத்தையும் தரிசித்துவிட வேண்டுமென்று ஆசைப்பட்டான்.

பன்னிரண்டு வருடகாலப் புலம்பெயர் வாழ்க்கைக்குப் பின்னர், அவன் விட்டுவந்த பிறந்த ஊரான யாழ்ப்பாணத்திலுள்ள உரும்பிராயைப் பார்க்கவேண்டுமென்ற ஆவல் கனகாலமாகவே கருக்கூட்டிக்கொண்டிருந்தது. அதைச் செயல்படுத்தக் காலம் இப்போதுதான் கனிந்திருந்தது.

அவன் வெளிநாடொன்றுக்குப் போய், தன் மனைவியையும் அங்கு அழைத்துக்கொண்டபோது, அவன் மூத்த மகளுக்கு

இரண்டு வயதே ஆகியிருந்தது. அதன் பின் இரண்டு வருடங்களுக் குப் பின்னர் ஒரு மகனும் பிறந்தான்.

கைக்கடங்கலான குடும்பம்.

அவன் ஒரு தொழிற்சாலையில் வேலைபார்த்தான். அவன் மனைவியும் இன்னோர் அலுவலகத்தில் சிறிது நேர கிளீனிங் வேலை பார்த்துவந்தாள். இருவரும் கழுவுதல் துடைத்தல் போன்ற வேலைகளையே செய்துவந்தனர். என்றாலும் கைக்குக் காசு கிடைத்தது. பிள்ளைகள் தமிழ்ச் சூழல் கலவாத அந்நியச் சூழலில் கல்வி பயின்றார்கள். அவர்களுக்கு தமிழ் எழுதவாசிக்கத் தெரியா விட்டாலும் தமிழ் பேசக்கூடியவர்களாய் இருந்தார்கள். அந்த அளவுக்கு அவன் வீட்டில் தமிழ் அடையாளம் பேணப்பட்டதில் அவனுக்குத் திருப்தியே.

அவன் பன்னிரண்டு வருடங்களுக்குப் பின்னர் யாழ்ப்பாணம் போய் இறங்கியபோது அவனுக்கு எல்லாமே 'ஒருமாதிரி'யாக இருப்பதுபோலவே பட்டது. அவன் எதிர்பார்த்ததுபோல் எல்லா ருமே ஏன், எல்லாப் பொருள்களுமே அவனையே வியப்புடன் உற்றுப்பார்த்த வண்ணம் நிற்கும் என்ற அவன் நினைவு, கறையான் பிடித்த நம்மூர் வேலிகள்மாதிரி கலகலத்துப் போயிற்று.

யாழ்ப்பாணம் போனதும் பிள்ளைகளுக்கு யாழ்ப்பாணத்தைச் சுற்றிக்காட்டினான். பண்ணைக்கருகே இருந்த கோட்டைபற்றியும் அது காணாமல்போனதன் காரணம்பற்றியும் வரலாற்று உணர் வோடு விளக்கினான். கறுத்தக் கொழும்பான் மாம்பழத்தின் மகத்துவம்பற்றிப் பேசினான். பனங்கள்ளு, கருப்பணி, பனாட்டு, புழுக்கொடியல், கூழ் என்பவைபற்றியெல்லாம் நிறையவே கூறி னான். இவையனைத்தும் தமிழ்க் கலாசாரத்தை ஏதோ வகையில் தக்கவைப்பவையாக அவன் விளக்கம் அமைந்தது.

அவனைப் பார்க்க அவன் வீட்டைச் சுற்றியுள்ளவர்களும் அவன் உறவினர் சிலரும் வந்துபோயினர், அவன் கையை எதிர் பார்த்தபடி. தானமும் தாராள மனப்பான்மையும் தமிழர் கலாசா ரத்தின் மிகப் பலம்வாய்ந்த கூறுகள் என்பதை ஏனோ, இன்றைய அனேக யாழ்ப்பாணத்தார்போல், அவன் வசதியாகவே மறந்து விட்டிருந்தான்.

அவன் குடும்பத்துக்குக் குடிமை வேலை பார்த்தவர்களில் எஞ்சியிருந்த சிலர் வந்துபோயினர்.

அவனுடைய வீடு பழைய கல் வீடு. அவனுடைய வயதுபோன அம்மாவும் அப்பாவும் அங்கேதான் வாழ்ந்துவந்தனர். அவர்களுக்கு உதவியாகக் கட்டாடி சின்னானின் பேத்தி அவ்வப்போது வந்து உதவிசெய்துகொண்டிருந்தாள். இப்போ அவன் வெளிநாட்டிலிருந்து வந்து தங்கிநின்றதன் பின், அவள் உதவி அதிகம் தேவைப்பட்ட

தால் அவள் அடிக்கடி அங்கு வந்துபோய்க்கொண்டிருந்தாள். சமையலுக்கு உதவி, சந்தைக்குப்போய் வருதல், சலவை செய்தல் என்று அவள் வந்துபோய்க்கொண்டிருந்தாள். அவளோடு அவர்களது இரண்டு பிள்ளைகளும் "அன்ரி, அன்ரி" என்று அவளை வாய்நிறைய அழைத்தவாறு அவளுக்குப் பின்னால் திரிந்தனர்.

யாழ்ப்பாணம் வந்து ஒரு கிழமைக்குப் பின்னர், ஒரு நாள் இரவு, அவர்களது பிள்ளைகள் இருவரும் படுக்கைக்குப் போகாது தமக்குள் விளையாடிச் சிரித்துக்கொண்டிருந்தபோது, "விளையாடினது போதும் போய்ப் படுங்க" என்று அவர்கள் அம்மா கட்டளைபோட்டாள்.

அப்போதுதான் அவர்கள் ஏதோ நினைத்துக்கொண்டவர்களாய் அம்மாவிடம் ஓடிவந்து, "அம்மா நாளைக்கு நானும் தம்பியும் அன்ரியோட மார்க்கட்டுக்கு போகப்போறோம்" என்று கூறிவிட்டு, ஆவலோடு அம்மாவின் முகத்தைப் பார்த்தனர்.

"ஆர் அன்ரி?" என்று தாயார் கேட்டார்.

அருகே கிடந்த கட்டிலில் கிடந்த அவன், பிள்ளைகளினதும் தாயாரதும் சம்பாஷணையை சுவாரஸ்யமாகக் கவனித்துக்கொண்டிருந்தான்.

"என்னம்மா தெரியாதா, எங்க வீட்டை வந்து வேலைசெய்யிறாவே அவதான் அன்ரி." மகள் பதில் சொன்னாள்.

"சீ, அவா அன்ரி இல்ல. அவாவை அப்படிக் கூப்பிடாதேங்க." தயார் எச்சரித்தாள்.

"ஏன் அம்மா?"

"அவா எங்கட சாதியில்ல. அவை குறைந்த சாதியாக்கள். அதுதான், அவை எங்களுக்கு வந்து கழுவித்துடைச்சு, துணியெல்லாம் தோய்ச்சு தருயினம்...?"

"நீங்களும் அங்க கழுவித்துடைக்கிற வேலைதானே செய்யிறேங்க...?"

"நாங்க அங்க செய்தாலும் உயர்ந்த சாதியாக்கள். இவை குறைந்த சாதியள்."

"சாதி எண்டா என்னம்மா?" மகள் விடாமல் கேட்டாள்.

"சாதியெண்டா சாதிதான். நான் சொல்லியபடி செய்யுங்க. அவளை அன்ரி எண்டு சொல்லாதேங்க" என்று கூறிய அவள் எழுந்து படுக்கைக்குப் போனாள்.

ஆனால், அவளின் பிள்ளைகள் அவளை விடுவதாய் இல்லை. "அப்படியெண்டா அண்டைக்கு அப்பா அவவை மளௌள

பண்ணினேர்தானே அம்மா?" என்று அவர்கள் கேட்டபோது, "என்ன?" என்று தாயார் பெருங்குரல் எடுத்துக் கத்தினாள்.

தமிழர் கலாசாரம் பேணப்படுவதுபற்றி மிகுந்த அக்கறை காட்டிய அவன், இந்த எதிர்பாராத தாக்குதலால் அப்படியே தலையணைக்குள் தலையைப் புதைத்தான்.

❖

# முடிந்துபோன தசையாடல் பற்றிய கதை

**நா**ன் எதை நினைக்கிறேன், என்ன நினைக்கிறேன் என்று எனக்கே தெரியாது. ஆயினும் நினைவுகள் என்னுள்ளிருந்து பன்னூற்றுக்கணக்கில் செட்டைகட்டிப் பறக்கின்றன.

பறவையின் உதிர்ந்த சிறகுகளாய் அவை எங்கெங்கோ முனைப் பற்று எல்லையில்லாப் பேர்வெளியில் அலைகின்றன. புகைத்திரளாய் நினைவுகள்; நினைவுகள் ஏன் அலைகின்றன? எதைத் தேடி அலைகின்றன? கப்பலின் புகைப்போக்கியைவிட்டு மேலெழுந்து சுருள்சுருளாய் அலைகின்றன. தேடலற்ற அலைதலா? இல்லை அலையும்போதே எதையோ மோப்பம் பிடிப்பனவாய் ஓர் புள்ளியில் தயங்கி, பின் அங்கு ஏதும் காணாது 'வீர்' என அதைவிட்டு மேலெழுந்து மீண்டும் இலக்கற்ற மிதப்பு.

நினைவுகள் என்பவை மொழிகாவிகள். ஆனால், இலக்கற்ற என் நினைவுகளில் மொழியின் கனதி இல்லை. அதனால்தான் அவை பேர்வெளியில் இசைபோல் மிதக்கின்றனவா? நினைவுகள் மொழியில் சூல்கொள்தலே எனின், என் நினைவுகள் மொழி மழுங்கிய ஓர் இனந்தெரியாத் துயர் உணர்வின் கட்டற்ற பிரவகிப்பே.

பேர்வெளியில் என் நினைவுகள் தங்கும் ஒவ்வோர் புள்ளியிலும் மொழித்துணிக்கைகளின் மெல்லிதான குமிழ் விடுதல். அதை நோக்கி நினைவு மோப்பம் பிடித்து பிரக்ஞை கொள்கையில் குமிழ் உடைந்து மொழியழிந்து துயர்வெளி பெருகுகிறது. இலவம் பஞ்சாய் இலக்கற்ற நினைவுகளின் மிதப்பு மீண்டும்.

கட்டற்ற வெட்டவெளி. வெட்டவெளியில் நான் திரிகிறேன். நான் திரிகிறேனா, என் நினைவுகள் திரிகின்றனவா? நினைவாலான என் இருப்புத் திரிகிறதா?

திடீரென்று எங்கிருந்தோ பறந்து வந்த ராட்சதக் கழுகு புகைப்போக்கியில் வந்தமர்கிறது. அடுத்த வினாடி என்னை ஓர் அலக்காகத் தூக்கிச் செல்கிறது.

தனக்கு வாய்ப்பான ஒரு மரத்தைக் கழுகு உருவாக்குகிறது. அதில் வைத்து என்னைக் கொத்திச் சுவைக்கிறது. பருந்தின் இறாஞ்சலில் அகப்பட்ட கோழிக்குஞ்சாய் என் நிலை மாறுகிறது. ஒவ்வோர் அங்கமாய் நான் சிதைக்கப்படுகிறேன். வெளியில் பறந் தெழவைத்த என் இறக்கைகள் கிழிக்கப்பட்டு, நான் அழிக்கப் படுகிறேன்.

கழுகு கொழுத்துக்கொண்டுபோகிறது. என் உடல் அழிந்து கொண்டுபோகிறது. கழுகின் கால்நகங்களில் என் இறக்கைகள் சில ஒட்டியிருந்து என் பல பிரதிகளாய்க் கிழிந்து பறக்கின்றன. கிழிந்து பறக்கும் என் இறக்கைகளை எங்கிருந்தோ வந்த வல்லூறு காவிச் செல்கிறது. கழுகின் சிறு பிரதி அது. வல்லூறு இன்னோர் மரத்தை உருவாக்குகிறது. அதில் அமர்ந்தவாறு என் இறக்கையின் எஞ்சிய தசைத் துணுக்குகளை அதன் சொண்டு குத்திக் கிழிக்கிறது.

வல்லூறின் கால்களில் இருந்தும் எஞ்சிய என் இறக்கைகள் மண்ணில் வீழ்கின்றன. கீழே நின்ற நாய்கள் சில அதை முகர்ந்து பார்க்கின்றன.

ஓர் தசைப்பருக்கையை ஒரு நாய் தன் கொடுப்பில் வைத்து நன்னுகிறது.

அதன் வாயிலிருந்து வீழ்வதாய்த் தெரிவதை (வீணியை)க் காகங்கள் கோலிச்செல்லப் பார்க்கின்றன. ஆனால், அங்கே காகங்களுக்கு ஏதும் இருப்பதாய் இல்லை. எறும்புகளுக்குத்தான் ஏதோ கிடப்பதாய்ப் படுகிறது.

என் மணத்தில் அள்ளுப்பட்டு எறும்புகள் மொய்க்கின்றன. எங்கிருந்தோ அவை நிரைநிரையாய் வந்து மொய்க்கின்றன. அவை என் இறக்கைகளின் அற்ப தசைத்துணுக்கை ஒன்றுகூடி இழுத்துச் செல்கின்றன.

தசையாடலின் ஊர்வலமா?

என் உருவத்தின் சிந்திச்சிதறுண்ட சிறகுக்குவியலாய் குவிந்து பரவிக்கிடக்கும் நான். எழுந்து வரும் சுழிக்காற்று, சிதறிக்கிடக்கும் என சிறகுகளையும் அதன் இறகுகளையும் ஓர் அள்ளு அள்ளிச் சுழற்றுகிறது. அதன் சுழற்றுதலில் அவை பாய்போல் சுருட்டப்படு கின்றன.

அதன்பின் ஒரு சுருளாய்க் கட்டி நிமிர்த்திக் குத்தவைக்கப் படுகிறது. இப்போ காற்று போய்வரும் போக்கிபோல் அது மாறுகிறது.

நான் நிமிர்ந்து உட்காருகிறேன்.

எனது இரண்டாவது பிரதியின் உருவாக்கம்.

என் நினைவுகள் மேலெழுகின்றன.

வெளி வெளி ஒன்றே. அதில் என் நினைவுபட்டு பரவசிக்கிறது. முன்னைய பிரதிவழி வந்த துயர் இல்லை. பரவசம் பூசிய வெளி.

என் நினைவுகள் நோக்கற்ற அப்பரவச வெளியில் மிதக்கின்றன.

நினைவுகள் பாம்புகள்மாதிரி நெளிகின்றன.

புற்றைவிட்டு வெளிவரும் பாம்புகள்போல் அவை ஒளிபெற்று நெளிகின்றன.

நான் நினைவுகளைத் தொடர்கிறேன். என் நாசித் துவாரங்களா, நினைவுகள் வெளிவரும் புற்று?

நான் அதன் வாசலில் காவல் நிற்கிறேன். அரவாய் நெளிந்த நினைவுகள் ஒவ்வொன்றாய் அறுபட்டு அழிந்துபோகின்றன.

அவற்றின் அழிவில் ஓர் ஒளிக்கோடு எழுகிறது.

எங்கோ கோடிழுத்து அழைக்கும் அவ்வொளியின் நெளிவில் என் சஞ்சாரம்; இன்வெளிச் சஞ்சாரம்.

மீண்டும் புகைப்போக்கியில் கழுகும் வல்லூறும் காகங்களும் வந்தமர்கின்றன. கீழே நாய்களும் நரிகளும் கரடிகளும் பன்றிகளும் பூனைகளும் நிற்கின்றன; வாய்பிளந்து.

வாய்பிளந்தபடி சிறிது நேரம் பார்த்து நின்ற கழுகும் காகங்களும் மிருகங்களும் எனது இரண்டாவது பிரதியைத் தாக்குகின்றன. காற்றள்ளி, வெளியில் கொஞ்சம் தொட்டெடுத்து உருட்டிக்கட்டி உருவாக்கப்பட்ட என் உருவம் குலைந்து சிதைந்துவிழுகிறது.

என் உடலிலிருந்து பிய்க்கப்பட்டவையெல்லாம் மொழித் துணிக்கைகளாய், சொற்பருக்கைகளாய் குவிந்துகிடக்கின்றன. உரிக்கப்பட்ட சேவலின் வெற்றுச் சிறகுகளின் குவியலாய் அவை அங்கே காற்றின் மென் தடவலில் கெம்பி எழுந்து தம் மூலத்தை இனங்காண்கின்றன.

நாய்களும் கரடிகளும் பன்றிகளும் அக்குவியலைக் கிளறுகின்றன. வெற்றுக் குவியலை முகர்ந்து முகர்ந்து, கால்களால் கிளறிக் கிளறி "எங்கே அவன்? எங்கே அவன்?" என்று தேடுகின்றன. ஈற்றில் என்னைக் காணாது வானைப் பார்த்து ஊளையிடுகின்றன.

புகைப்போக்கியுள் கழுகு புகுந்து புகுந்து வெளிவருகிறது. கழுகு கருநிறம் பெற்று காகம்போல் தெரிகிறது. அதன் விரக்திப் பார்வையிலும் "எங்கே அவன்?" என்ற கேள்வி கூறுறும்.

ஈற்றில் தேடுதலில் களைப்படைந்து கீழே கிடந்த இறகுக் குவியலின் ஒரு பகுதியைத் திரட்டி எடுத்து, "இதுதான், அவன் தலை" என்றது கழுகு, நவீன அகழ்வாராய்ச்சிக்காரனைப் போல்.

இன்னொரு பகுதியைத் திரட்டி எடுத்து, "இது அவன் உடல்" என்றது நாய்; ஒரு மருத்துவனின் தோரணையில்.

"இது அவன் கண்" என்றது, எப்பொழுதும் கண் தோண்டியே பழக்கப்பட்ட காகம்.

"இல்லை, இது அவன் வாய்" என்று மறுத்துக் குரைத்தது இன்னொரு நாய்.

"இல்லை இல்லை, இது அவன் உழைக்கும் கரங்கள்" என்று பெரிதாகக் கோஷம் எழுப்பிற்று கரடி.

"இல்லை, இதுதான் அவன்ர சாமான்!" என்று ஒருவித ஆத்திரம் மேலிடக் கத்தியது பன்றி.

"அமைதி, அமைதி, இதற்குள் அவன் இல்லைப் போல் தெரிகிறது" என்று மேலே வட்டமிட்ட புறாக்களைப் பார்த்து, "போங்கடி பூனாக்களே" என்று சீறிப் பாய்ந்தது, பூனை.

இதற்கிடையில் அங்கே கிடந்த இறக்கைகளைச் சுற்றி மொய்த்து அதன் விளிம்புகளில் ஊர்ந்தன சிற்றெறும்புகள்.

அங்கு நிகழும் தசையாடலாய் என் இறகுகளை இழுத்துச் செல்லும் சிற்றெறும்பின் ஊர்வலம் மீண்டும். இத்தனை அமர்க் களத்திலிருந்து தப்பி, புகைப்போக்கியை விட்டெழும் புகைத்திரளாய் 'நான்' இன்வெளியில் மிதந்துகொண்டிருந்தது.

மீண்டும் எனது பிரதி உருவாக்கம் நிகழ்கிறது. ஆனால், அதை இப்போ அங்கு நின்றவை கண்டுகொள்வதாய் இல்லை. தசைப்பிரதி உருவாக்கம் நின்றுபோன செய்தி, ஒளியாண்டுகளாய் பூமியை நோக்கி வந்துகொண்டிருந்தும் அதை உள்வாங்கும் இணையத்தளத்தை உருவாக்கும் ஆற்றல் கீழே நின்றவைக்கு இன்னும் புரிவதாய் இல்லை.

ஊளையிடுகின்றன.

❖

# மரணம்

அந்தப் பறவையின் கூவல் இப்போதும் அவன் நெஞ்சுக்குள் ஒலித்துக்கொண்டுதான் இருக்கிறது. மரணத்தை அவன் அனுபவித்ததில்லை. ஆனால், அதை, அதன் நகர்வை, அதன் இயங்குதலை, அது திடீர் என நிகழ்த்தும் தாக்குதலைக் கண்டிருக்கிறான். எறும்புபோல் நெஞ்சுக்குள் 'சுள்' என்ற சின்னக் கடி, மெல்லிய ஊர்தல், சிலவேளைகளில் மின்னலாய்க் கீழிறங்கி ஒரே அள்ளலில் விழி பறித்துச் செல்லுதல் போன்ற வக்கிரம். பதுங்கிப் பதுங்கி மரங்களிடையே ஒளிந்தொளிந்து பூனைபோல் தலையை உயர்த்துவதும் தாழ்த்துவதுமான வேட்டைக்கான எத்தனம். முகட்டில் தொங்கும் வௌவாலாய் நாட்கணக்கில், ஆண்டுக்கணக்கில் அதன் மௌனித்த அசைந்தாடல். மரணம் என்பது இருந்த ஒன்றின் இன்மையாதல்? அயலில் இருந்தவன் அங்கிருந்து கிளம்பி வேற்றூர் சென்றுவிட்டால், அவனோடு இருந்தவர்களுக்கு அது அவனின் மரணமா? இல்லை, மரணத்தின் ஒத்திகை. வேற்றூர் சென்றவன் வேற்றூரிலேயே இறந்துவிட்டால், அது தெரியாத அவனோடிருந்த அயலவர்களுக்கு, அவன் இருப்பின் போலி, வாழ்க்கையாய் விரிகிறது. ரோட்டில் வேகமாக வந்த லொறியால் மோதுண்டு சிதறிப்போன எட்டு வயதுப் பாடசாலைச் சிறுமியின் உடல் அப்புறப்படுத்தப்பட்ட பின், அங்கே கிடந்த அவள் தலையில் சூடிய றிபன்சுருள் காற்றில் அள்ளுப்பட்டு மெல்லமெல்லப் புரண்டது. அதில் அந்தச் சிறுமியின் உடல் துடித்துக்கொண்டிருந்தது. பஸ்வண்டியினால் துவைத்தெறியப்பட்ட தெருநாய் ஒன்று குடலெல்லாம் வெளியே பிதுங்கி வழிய ரோட்டின் நடுவே கிடந்து கால்மணிநேரமாக அனுங்கிவிட்டு அடங்கிப்போக அதன் வெறித்து நின்ற விழிகளிலே உலகின் வேதனையெல்லாம் குடியேறிற்று. அவ்வேளை, அவ்விழிகளிலிருந்து வியாபித்த பேர்மௌனம் அங்கெழுந்த அத்தனை சந்தடிகளையும் விழுங்கி மேலெழுந்ததை யார் அனுபவித்தார்? அந்தப் பறவையின் கூவல் அப்போதும் அவன் நெஞ்சுள் ஒலித்துக்கொண்டுதான் இருந்தது. எம்மை அறியாமலே, எம் காலின் கீழ் மிதிபட்டு இறந்துபோகும் அற்ப எறும்பு அனுபவிக்கும் மரண வேதனைக்கும், பெரும் பூகம்பத்தில்

சிக்குண்டு ஆயிரக்கணக்கானோர் அழிந்துபோகும்போது ஏற்படும் மரண வேதனைக்குமிடையே என்ன வித்தியாசம் இருக்கிறது?

பல்கலைக்கழக வாழ்க்கை முடிந்து பயணமாவதற்கு மூட்டை முடிச்சுகள் எல்லாம் கட்டியாயிற்று. அடுத்த நாள் காலை புறப்படல். எஞ்சியிருக்கும் ஒரே ஒரு பின்னேரம். அந்தப் பின்னேரமே அவனோடு பழகித்திரிந்த அந்தப் பெண் புறப்படுகிறாள். ஓடோடிப் போய் அவளை அவன் சந்திக்கிறான். அவளைச் சந்திப்பதில் ஏன் அவ்வளவு வேகம்? காதலா? அவனுக்குத் தெரியாது. அவளும் அவனை எதிர்பார்த்தே அந்த மஞ்சள்நிறப் பூச்சொரியும் மரத்தின் கீழ் நின்றுகொண்டிருக்கிறாள். ஏன் நிற்கிறாள்? இவனை எதிர்பார்த்தவளாய் ஏன் நிற்க வேண்டும்? அவளுக்கும் தெரியாது. அவளை ஏற்றிக்கொண்டு போகக் கார் வரும். அந்தக் கார் வரும் வரைக்கும் அவள் மூட்டை முடிச்சுகளோடு அந்த மரத்தின் கீழ் நிற்கிறாள், பிரிந்துபோகும் தோழியருக்குக் கை காட்டியவாறே. இவனைக் கண்டதும் அவள் கண்கள் அகல விரிகின்றன. விரிந்து கருவிழிகள் உருளும் அந்தக் கண்களுக்குள் குமுறும் உள்ளத்தின் பேரிரைச்சல் அவன் செவிகளில் விழுகிறது. கதைப்பதற்கு எதுவும் இருப்பதாய் இல்லை. அவர்கள் இதயங்கள் மட்டுமே கதைத்தன. அதற்குள் அவளை ஏற்றிச்செல்ல கார் வந்துவிட்டது. அவள் இவனுக்குக் கை காட்டிவிட்டு, காரை நோக்கி நடக்கிறாள். அவள் பெயர்க்கும் ஒவ்வொரு அடியிலும் மரணம் மணக்கிறது. இப்படி எத்தனை ஊமை உணர்வுகள் காலங்காலமாய் மரணித்துக்கொண்டிருக்கின்றனவோ! அன்று காரில் ஏறிப் போனவள்தான், அதன் பின் அவளை அவன் சந்தித்ததே இல்லை. ஆனால், அவள் நினைவு, சாவில் தோய்ந்துவரும் ஒருவகைத் துயராய் மணக்கிறது. எத்தனையோ ஒளியாண்டுகளுக்கு முன்னர் வெடித்துச் சிதறி மரணித்துவிட்ட ஓர் நட்சத்திரத்தின் ஒளி, இன்னும் பூமியை நோக்கி வந்துகொண்டிருப்பதுபோல், அவள் நினைவு இவனை நோக்கி இன்னும் வந்துகொண்டுதான் இருக்கிறது.

சிறுவயதில் மரக்கிளையொன்றில் ஜோடியாய் அமர்ந்திருந்த பறவைகளில் ஒன்றை கவண்கல்லால் அடித்தபோது அவன் இலக்குத் தவறவில்லை. பறவை கீழே விழுந்தது. அதன் சிறகடிப்பில் மரணத்தின் சிதறல்கள் தெரிந்தன. எவ்வளவு முயன்றும் அதைச் சுகப்படுத்தி பறக்கவிட முடியவில்லை. அது இறந்துபோகின்றது. தன் துணையை இழந்த அதன் ஜோடி அவனைத் தொடர்ந்தது. தாழப்பறந்து அவனைத் தாக்க வந்தது. அது அவன் எதிர்பார்த்ததே. ஆனால், அவனால் தாங்கமுடியாமல்போனது, அன்றிரவு அவன் எதிர்வீட்டுக் கோடியில் எங்கோ ஒரு மரக்கிளையில் அந்த துணையிழந்த பறவையிருந்து விட்டுவிட்டுக் குரலெடுத்துக் கூவியதையே. அது அப்பறவையின் அழுகையா அல்லது மரணத்தினால் தொடர்பறுந்து அமிழ்ந்துபோகும் அத்தனை உயிர்களின் உணர்வு

களையெல்லாம் பிழிந்தெடுத்துக்கொண்டு வரும் மரண கீதமா? இன்றுவரை அந்த மரண இசை, அவன் நரம்பின் ஏதோ ஓர் ஒற்றை இழையில் மீட்டப்பட்டுக்கொண்டிருப்பது அவனுக்கே தெரியும். அன்றிரவு ஏனோ அவனால் தூங்க முடியவில்லை. அவனோடு கிடந்த அம்மாவை, அவன் அரிபுழுவாக அரித்துக் கொண்டே இருந்தான். "ஏனம்மா அந்தக் குருவி கத்திக்கொண்டே இருக்கு?" என்று இவன் கேட்க, "கத்தாமல் என்னடா செய்யும், அதின்ர சோடியை நீ சாக்கொண்டுபோட்டடா, சும்மா இருக்குமா?" என்று அம்மா பதில் சொன்னாள். அவன் நெஞ்சு கனத்தது. திடீரென, சாவின் ஒருதுளியை அவன் நாவில் யாரோ தடவி விட்டதுபோல் இருந்தது. அவன், தான் செய்த தவறுக்குச் சோடி சேர்த்துக்கொள்வதுபோல், "நீ அண்டைக்கு இறைச்சிக்கறி காய்ச்ச எங்கட கோழியைத்தானே சாக்கொண்டனீ? அதுக்கு சோடி இல்லையாம்மா?" என்று அவன் கேட்டதற்கு, "சும்மா அலட்டாமல் கிடவடா" என்று கூறிவிட்டு, வேறொன்றும் கூறாமல் அவள் திரும்பிப் படுத்தாள். அன்று அம்மா கொலை செய்த கோழி அவன் கண்முன்னே வந்தது. கழுத்தில் சுருக்கிடப்பட்டு, கோடி வேலிக் கதியாலில் தொங்கியபோது அது துடித்துத் துடித்து மார்பிலே சிறகுகளை அடித்தடித்து அதுபட்ட வேதனை... அக்காட்சி அவன் கண்முன் திரும்பத்திரும்ப வந்தது. அப்போது மீண்டும் அந்த துணையிழந்த பறவையின் கூவல் உள்ளொலித்தது. அவன் நெஞ்சுக்குள் ஏதோ புல்லரித்தோடியது. கட்டுநாயக்கா விமானத்தாக்குதல் முடிந்தபோது, அதன் சமிக்ஞைக் கோபுரத்தருகே நீட்டி நிமிர்ந்து வானத்தைப் பார்த்தவனாய், கைகளை விசிறி எறிந்து கிடந்த புலிப் போராளியின் நினைவு அவனுள் ஓடிற்று. வீரத்தின் சிகரத் தொடுகையென அவன் அங்கே கிடந்தான். அவன் தன் இறுதி மூச்சை விட்டபோது, அந்த மூச்சு மரணத்தில் எதைப் பெரித்துவிட்டுச் சென்றதோ! அவன் தாய் எங்கிருந்தாளோ அப்போது! புறநானூற்றுக் காலமாயின், அவள் அங்கே ஓடோடி வந்து அவனைப் புல்லியணைத்து சாவை வாழ்வினால் குளிப் பாட்டியிருப்பாள். அவன் கிடந்தான்; கைகளை வீசி எறிந்து கிடந்தான். அப்போது அங்கே பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தை வருகிறார். அவரைப் பத்திரிகையாளர் தொடர்கின்றனர். "இது ஒரு கோழைத்தனமான தாக்குதல்" – அவர் பேட்டியளிக்கிறார். காகங்கள் அவர் தலையில் எச்சமிடாக் குறையாகப் பறக்கின்றன. எங்கு ஓர் உன்னதமான ஆற்றல் மேலெழுந்து சிகரம் அமைக் கிறதோ, அப்போதெல்லாம் அதைச் சந்தித்து, எதிர்கொள்ள முடியாத, சம ஆற்றல் அற்ற கோழைகளும் அற்பர்களும் இப்படித் தான் தம் மறுபக்கத்தைக் காட்டிக்கொள்கின்றனர். இவர்களைச் சந்திக்க மரணம் வெட்கப்பட்டுப் பின்வாங்குகிறது. தொடர்பறுதலே மரணம்? ஒருவன் மரணிப்பதன் மூலம் அவனோடு எமக்கிருந்த தொடர்பு அறுந்துபோகிறது. எம்மோடு அவனுக்கிருந்த தொடர்பும்

அறுந்துபோகிறது. எம் உணர்வையெல்லாம் அவனுக்குள் கொட்டி அவனை அன்பால் விரிய வைத்து அதைப் பார்த்து நாமும் விரிய முடியாமல் போய்விடுகிறது. அவ்வாறே, மரணித்தவனுக்கும் அவனிடம் சேகரம் கட்டியிருந்த உணர்வுகளெல்லாம் செல்வழி யற்று ஸ்தம்பிக்க, திடீரென மின்னொழுக்கு நேர்ந்த மின்கம்பியாய், பின்னோக்கி எரிந்துபோக அவனும் உயிர் அவிந்துகிடக்கிறான். ஒருநாள் அதுதான் அவனுக்கு நடந்தது. அவன் நெஞ்சுக்கினிய நண்பன் நோய்வாய்ப்பட்டு வைத்தியசாலையில் கிடக்கிறான் என்பதைக் கேட்டு அவன் பிற ஊரிலிருந்து ஓடோடி வருகிறான். அதிகாலை ஐந்தரை மணியிருக்கும் நண்பன் படுத்திருந்த கட்டிலை நோக்கி உயிரைக் கையில் பிடித்தவன்போல் ஓடுகிறான். அவன் தன் நண்பனருகே செல்வதற்குச் சற்று நேரத்திற்கு முன்னர்தான் அவன் உயிர் பிரிந்துபோயிற்று; ஓடோடிப் போய் விமானத்தில் ஏறுவதற்குச் சற்று முன்னர்தான் அது *take off* ஆகிவிட்டதுபோல். உயிர்பிரிந்துபோன நண்பனின் முகத்தில் வேதனையோடான இன்முறுவல். நண்பன் கிடந்த கட்டிலின் அருகிருந்த ஜன்னலூடாக, கீழ்வானில் தேய்நிலா விழுந்துகொண்டிருப்பது தெரிந்தது. என்னென்ன உணர்வுகளெல்லாம் அவனுள் புதைந்துபோயினவோ! நண்பனின் கைகளை எடுத்து வருடி, வருடிக் கொட்டுதற்காய் அவனுக்குள் குமுறி எழுந்த ஆயிரம் உணர்வுப் பெரிகள் போக வழியறியாது அவனுக்குள்ளேயே கவிழ்ந்து, அவன் மூச்சோடு வெளியேறின. இந்த உலகின் எண்ணிறந்த கோடி ஜீவராசிகளின் மூச்சோடு சதா உள்ளும் வெளியும் இழுபட்டுக்கொண்டுவரும் உணர்வுகளுக்கும் நினைவுகளுக்கும் என்ன நடக்கிறது? அவை எங்கே போய்ச் சேருகின்றன? அது ஊற்றெடுக்கும் மையம் எது? ஏது? அந்தப் பறவையின் கூவல் அப்போதும் அவன் நெஞ்சில் ஒலித்துக்கொண்டுதான் இருந்தது.

❖

## அன்பு

**கா**லையில் கண்ட கனவோடு அவன் மனம் மல்லுக்கட்டிக் கொண்டிருந்தது. ஆயினும் அவன் வேகமாக நடந்துகொண்டிருந் தான்.

அதிகாலையில் அதிர்ந்தெழவைத்த அந்தக் கனவு!

வானவெளியில் பெரும் நட்சத்திரக்கோளமொன்று வெடித்துச் சிதறுகிறது.

அவன் எதனாலோ உலுக்குப்பட்டவனாய்ப் படுக்கையை விட்டெழுகிறான்.

சிறிது நேரம் அப்படியே அதிர்ந்துபோய் இருந்தவன், அவனை அறியாமலே மீண்டும் கண்கள் மூடுபட்ட அரைத்தூக்கத்துள் வீழ்கிறான்.

மூடிய கண்களுள் வெடித்த நட்சத்திரக்கோளத்திலிருந்து சிறுசிறு கோள்கள் உருவாகிச் சுழல்வதுபோல்...

எப்பவோ வாசித்த ஒரு தகவலின் அருட்டலாக இருக்க வேண்டும் இது என்ற நினைவுப்பருக்கை அடிமனதில் சுழித்தபோது, மீண்டும் காது செவிடுபடும் அதே கரை அதிர்வு.

ஆனால், முன்னர் கண்டதுபோல் இம்முறை நட்சத்திரக் கோளம் ஒன்று வெடித்துச் சிதறவில்லை. மாறாக, அது தற்கொலைக் குண்டுத்தாக்குதலின் அதிர்வாக இருந்தது. அத்தாக்குதலை நடத்தியவனின் தலை அவன்முன்னே வெறித்துப் பார்த்தபடி...

இப்போ அவனிடம் நித்திரைச் சோம்பல் கிஞ்சித்தும் இல்லை. அவன் உண்மையில் அதிர்ந்துபோய் எழுந்து உட்காருகிறான்.

அவன்முன்னே யாரோ ஒருவனின் தலைப்பகுதி, இரத்தம் சொட்டச்சொட்ட அவனை வெறித்துப் பார்ப்பதுபோல் கிடந்தது.

யாரோ ஒருவனின் தலையா?

இல்லை, 'அன்பு'வின் தலைதான் வழமைபோலவே கிடந்து வெறித்தது.

இப்போ அவசர பணியொன்றுக்காக அவன் வெளியே போய்க் கொண்டிருந்த இந்த நேரத்திலும் காலையில் கண்ட கனவின் தொடர்ச்சியாய் அவன்முன்னே அந்தத் தலை மிதந்துவந்தது.

அதன் வெறித்த பார்வை. ஆனால், குரூரமில்லை.

இது அவனுக்குப் புதிதல்ல. இதேமாதிரியான கனவு பல தடவை அவன் நித்திரையைக் குழப்பியுள்ளது. பத்திரிகைகளில் கண்ட காட்சிகள், வாசித்த விஷயங்கள் அவன் மனதுக்குப் பழக்கப்பட்டவற்றோடு ரசவாதமுற்று வெளிக்காட்டப்படுகின்றனவா?

எதையும் அவன் மறுப்பதற்கில்லை.

திடீரெனக் காதை அதிரவைத்த அந்தச் சத்தம் –

அதைத் தொடர்ந்து வெறித்த பார்வையோடு கிடக்கும் அந்தத் தலை –

சிறிது நேரத்தில் அந்தத் தலை 'அன்பு'வின் தலையாக மாறுதல் –

இந்த வகையான ஒவ்வொரு கனவும் அவனுக்கு 'அன்பு' வையே முன்னிறுத்திவிட்டுச் சென்றது.

தற்கொலைத் தாக்குதல்!

அவர்களால் அது எப்படி முடிகிறது?

மூளைச்சலவை செய்யப்பட்டு முடுக்கிவிடப்படும் யந்திரங்களா இவர்கள்?

இயக்கப் போராளியாக மாறுவதற்கு முன்னர் இந்த விமர்சனங்கள் அவனுக்குள்ளும் ஒலித்தவைதான். இத்தகைய தற்கொலை அர்ப்பணிப்புகள் அவனுக்கு ஆச்சரியம் தருபவையாகவேதான் இருந்தன.

பசுபிக் சமுத்திரத்தில் 'குயின் மேரி' என்ற பேரில் அசையும் தீவுபோல் நின்ற மாபெரும் ஆங்கிலக் கப்பலின் புகைப்போக்கிக்குள் யப்பானிய விமானத்திலிருந்து விழுகிறான், குண்டுப் பொதியைத் தன் உடலோடு கட்டியவாறு யப்பானிய நாட்டு யுத்த வீரன்.

அடுத்த வினாடி, அசையும் தீவென நின்ற கப்பல், இரண்டாகப் பிளந்து சமுத்திரத்தில் மூழ்கிறது.

இது, அவன் படித்த வரலாற்றுச் செய்தி.

இவர்கள் எல்லாம் மூளைச்சலவை செய்யப்பட்ட யந்திரங் களா? அந்தக் கேள்விக்கு ஒருகாலத்தில் அவனிடம் இடமிருந்தது.

○

ஆகாயத்தில் அற்பமாகத் தெரிந்த அந்த விமானம் திடீரெனக் கீழ்நோக்கிக் குத்திவந்தது.

"அந்தா பொம்பர் வருகுது, பொம்பர் வருகுது, ஓடி ஒளியுங்க..."

"அந்தா குத்திறான், குத்திறான்..."

சனங்கள் பிள்ளைகுட்டிகளோடு அந்தத் தேவாலயத்தை நோக்கி விழுந்தடித்தவாறு ஓடுகின்றனர்.

"யேசுவே, யேசுவே" என்று வாய் பிதற்ற, கையும் காலும் பதறியடிக்க, சனங்கள் தேவாலயத்திற்குள் அடைக்கலம் என்று புகுந்தபோது குண்டுகளைப் பொழிந்துவிட்டு விமானம் மேலெழு கிறது.

அந்தக் காட்சியை அவன் நேரடியாகவே கண்டான். நவாலி சென். பீற்றர்ஸ் தேவாலயம் இடிந்துபோய்க் கிடக்கிறது. அதன் இடிபாடுகளுக்கிடையே ஆண்களும் பெண்களும் பிள்ளைகளுமாய் சிதறுண்டுபோய்க் கைவேறு கால்வேறான நிலையில்... யாருக்கு உதவுவது, எவரைக் காப்பாற்றுவது என்று தெரியாது அவன் தடுமாறிக்கொண்டிருந்தபோது, அவன் முன்னே ஒரு காட்சி அவனை அசையாது ஸ்தம்பிக்கவைக்கிறது. இறந்துபோன தாயின் இறுகிய அணைப்பில், உயிர் தப்பிய இரண்டு வயதுக் குழந்தை திமிறிக்கொண்டு கிடந்தது.

இறந்துபோன தாயின் அன்புமேலிட்ட அணைப்பில் கிடந்து திமிறும் இக்குழந்தை ஒருநாள்...

அவன் அந்த நேரம் தன்னை நினைத்துப்பார்த்துக்கொண் டான்.

அவன் எத்தனை தடவை அவர்கள் வீட்டுப் பின்புறத்தில் இருந்த பதுங்கு குழிக்குள் ஓடிப் பதுங்கியிருக்கிறான். வானத்தில் பொம்பர் விமானங்கள் இரையத் தொடங்கியதும்...

"அந்தா சகடையடா, சகடையடா" என்ற கூக்குரல்கள் எழும்.

"அந்தா குத்தப்போறான், ஓடுங்கடா" என்று மேலும் பல குரல்கள்.

அவன் அந்த நேரங்களிலெல்லாம் பற்கள் கிடுகிடுவென நடுங்க, நெஞ்சுதற பதுங்கு குழிக்குள் கண்களை மூடிக்கொண்டு கிடந்திருக்கிறான்.

அதைத் தொடர்ந்து பல நினைவுகள் ஓடிவந்தன.

ஆனால், அவற்றில் அவனால் மறக்க முடியாதது, அவன் பக்கத்து வீட்டு, அவன் வயதையொத்த 'சிவலை' இறந்ததுதான். திடீரெனக் குண்டு விமானம் இரையத் தொடங்கிற்று. அன்று, அவர்கள் வீடுகளுக்கு மேலாக வட்டமிடுவதுபோல் தெரிந்தது. அவர்கள் அண்ணாந்து பார்ப்பதற்குள் கீழ்நோக்கிக் குத்திவந்தது.

எல்லோரும் தத்தம் வீடுகளில் வெட்டப்பட்டிருந்த பதுங்கு குழிகளை நோக்கி ஓடினர்.

அதே கணம் அவர்கள் வீடுகளே சிதறிப்போவதுபோல் குண்டுகள் வீழ்ந்து வெடித்தன.

ஒரு பத்து நிமிடம் காற்றின் செவியுதறல்கூடக் கேட்காத பேரமைதி கவிந்து மறைகிறது.

விமானம் அகன்றுவிட்டதென்ற நிச்சயப்படுத்தலுக்குப் பின் அவன் 'சிவலை,' 'சிவலை' என்று கத்தியவனாய், சிவலையின் வீட்டை நோக்கி ஓடுகிறான்.

சிவலையின் வீட்டுப் பதுங்கு குழியருகேதான் குண்டு விழுந்து இன்னொரு பெருங்குழியை ஏற்படுத்தியிருந்ததோடு, அவர்கள் பதுங்கியிருந்த இடமே தெரியாதவாறு மண்ணை வாரி இறைத் திருந்தது.

அந்த மண் குவியலை அப்புறப்படுத்தி, சிவலையையும் அவனது தாத்தாவையும் வெளியே எடுத்தபோது, அவர்கள் பிணமாகவே எடுக்கப்பட்டனர்.

மூச்சுத்திணறிப் பிணமாகியிருந்தனர்.

அவர்களைப் பார்த்தபோது, அவன் நெஞ்சு ஏனோ உதறத் தொடங்கியது.

"இப்பிடி எத்தனை நாள் ஓடி ஒளியப்போற, வா என்னோட, இப்பிடி எங்களை ஓடச்செய்யிறவங்களை நாங்கள் ஓடச்செய் வோம்" என்று ஒருநாள் அவனை அழைத்தான் அவனது பாடசா லைத் தோழன் அன்பு.

அன்பு ஏற்கனவே இயக்கத்தில் சேர்ந்து போராளியாக இயங்கி வந்தான்.

அவன் வழிகாட்டலில் இவனும் அவனோடு போய்ச் சேர்ந்து கொண்டான்.

என்றாலும் அடிக்கடி அவனது அம்மாவின் முகம், அவனை வீட்டை நோக்கி அழைத்தபடிதான் இருந்தது. அனாதரவாக விடப்பட்ட அம்மா; அப்பா ஒரு நோயாளி. உதவுவதற்கு வேறு

பிள்ளைகளும் அவர்களுக்கில்லை. அவன் இரவில் தூங்க முடியாமல் துயரச் சுமையோடு உருண்டு புரண்டுகொண்டிருந்தான். இயக்கத்தில் சேர்ந்த ஆரம்பகாலம் அவனை ஈவிரக்கமற்றுத் தாக்கிற்று. அப்போதெல்லாம் அவனுக்கு அன்புதான் ஆறுதல்.

அன்பு நல்ல உயரமும் வாட்டசாட்டமான தோற்றமும் உடையவன். பெயருக்கேற்ப எந்தவித களங்கமும் இல்லாத குழந்தை முகம். அவனிடம் இருந்து வரும் சொற்கள் ஒவ்வொன்றும் அன்பில் தோய்ந்ததாகவும் அவனது தோற்றத்தைப் போலவே கனதியுடையதாகவும் இருந்தது. காரணம், அவன், தான் நம்பிய கொள்கைக்கேற்பவே வாழ்ந்துவந்ததால் அவனிடம் எந்தவித செயற்கைத்தனமும் இல்லாத உண்மையே குடிகொண்டிருந்தது.

இவன் அன்புவின் அழைப்பில் இயக்கத்தில் போய்ச் சேர்ந்த புதிதில் எதையோ பறிகொடுத்தவன்போல் யோசித்துக்கொண்டிருக்கும் சந்தர்ப்பங்களில்...

"டேய் விக்கி, என்னடா, யோசனை? திரும்பவும் அம்மாவைப் பற்றி நினைப்போ?" அன்பு கேட்பான்.

இவன் வாய் திறக்காது, தலையை 'ஓம்' என்னும் பாவனையில் ஆட்டுவான்.

"டேய் விக்கி, எங்களுக்கெல்லாம் அம்மா எங்கட இந்த மண்தான்ரா. இந்த மண் சுதந்திரம் அடையாவிட்டால், எங்கட அம்மா அப்பாமாரும் தம்பி, தங்கச்சி, அக்கா, அண்ணாமாரும் அடிமைகளாகச் சாக வேண்டியதுதான், தெரியுதா?"

அன்பு சொல்லிக்கொண்டுபோவான். அது எவ்வளவு உண்மையானது. ஆனாலும் ஏதோ ஒன்று நெருடுவதுபோல அவன் தொண்டைக்குள் சிக்கிக்கொண்டு நின்றது.

"என்ன யோசிக்கிற, சொல்லு" என்று அன்பு உற்சாகப்படுத்தவே விக்கி கேட்டான்.

"அப்ப, எங்களை நம்பி வளர்த்து ஆளாக்கிய அம்மா, அப்பாவை இப்பிடி போராட்டம் என்று சொல்லிக் கைவிட்டால், அது பெரும் பாவமல்லவா, அது எங்கட போராட்டத்தையே பின்னடைய வைக்காதா?"

"இங்கேதான் நீ பிழை விடுகிறாய்." – அன்பு சொல்லத் தொடங்கினான். "நீ உன்ர அம்மா அப்பாவை உன் தனிப்பட்ட சுயநலத்துக்காக கைவிட்டால் அது பாவம். அது தியாகம் அல்ல. ஆனால், நீ இப்போ உன்னைத் தந்திருப்பது முழுத் தமிழினத்தின் சகல அம்மா, அப்பா சகோதரங்கள் எல்லாரினதும் விடுதலைக்காக. அது பெரும் தியாகம். எந்தவொரு இனம் தன் தேசத்தின் விடுதலைக்காக தேசியரீதியான தியாகத்துக்கு தயாராகிறதோ, அது

தன் எதிர்காலத்தை உறுதிப்படுத்திக்கொள்கிறது என்பது ஒரு பெரியாரின் வாக்கு." அன்பு கூறி முடித்தான்.

கொஞ்சக் காலம் விக்கிக்கு இதை விளங்கிக்கொள்வது சற்றுக் கஷ்டமாகவே இருந்தது.

ஆனால், சிறிது காலம் போகப்போக அன்புவின் வழிகாட்டலில் பல நூல்களைப் படித்தான். நாட்டுக்காகத் தம்மை அர்ப்பணித்த வீரர்களின் வரலாற்றை அறிந்தான். கூடவே, அன்புவின் அறிவூட்டல் அடிக்கடி தொடர்ந்தது.

இப்போ விக்கிக்கு, தன் கொள்கையில் புதிய ஆரோக்கியமான பற்று ஏற்படத் தொடங்கிற்று. தான் சரியான வழியிலேயே செல்கிறேன் என்பதை அவன் உள்ளுணர்வு உணர்த்தியபோது, அவன் ஆயிரம் யானைப் பலம் மிக்கவனாய் ஏறுநடை போட்டான்.

இப்போ விக்கிக்கு, அன்புவின் பெயருக்கேற்ப அவனிடமிருந்து கட்டற்றுப் பெருகும் அன்புக்கும் வீரத்துக்கும் தியாகத்திற்கும் காரணம் புரிந்தது. "ஓர் பெரிய உன்னத லட்சியத்தை அடைய வேண்டுமானால் ஒருவன் தன் சுயநலத்தையெல்லாம் ஒதுக்கும் பெருந்தியாகத்தினாலேயே முடியலாம். அதற்கெல்லாம் ஊற்றுக் கண் அன்புதான் – தன் நாட்டிலும் மக்களிலும் கொண்ட அன்பு." ஒருமுறை அன்பு கூறியது நினைவுக்கு வந்தது.

"தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற

தாயென்று கும்பிடடி பாப்பா"

விக்கி தனக்குள்ளேயே முணுமுணுத்துக்கொண்டான். அது கூட அன்புவிடமிருந்து அவனைத் தொற்றிக்கொண்ட பாடல் வரிகளே.

ஒருநாள் அன்புவோடு பேசிய விஷயங்கள் விக்கிக்கு நினைவுக்கு வந்தன.

"முந்தியெல்லாம் தற்கொலை செய்கிறவர்களையும், அந்த மாதிரி தாக்குதல் செய்கிறவர்களையும் பார்த்து நான் வியந்திருக்கிறேன்" என்று விக்கி சொன்னபோது, "ஏன்?" என்று கேட்டான் அன்பு.

"அதையெல்லாம் அவர்களால் எப்படிச் செய்ய முடிகிறது என்று எனக்கு வியப்பு, ஆனால் இப்போ..." அவன் இழுத்தான்.

"ஆனால், இப்போ என்ன?" அன்பு கேட்டான்.

"இப்போ உன்னோட பழகிய பிறகு, அது ஒரு சின்ன விஷயமாகவே போயிற்று. இதெல்லாம் அர்ப்பணிப்புத் தொடர்பானது இல்லையா?" என விக்கி முடித்தபோது, "ஏன், இதெல்லாம்

மூளைச்சலவை செய்யப்பட்டவர்கள் செய்யிற வேலை எண்டு சொல்லிறவையை நீ கேட்டதில்லையா?" என்று அன்பு கிண்டினான்.

"கேட்டிருக்கிறன், கேட்டிருக்கிறன்" என்று உடன் பதில் அளித்த விக்கி, "அதைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று அவனையே திருப்பிக் கேட்டான்.

"இதில் நான் என்ன சொல்ல இருக்கு, நீ ஏற்கனவே சொன்னது போல ஓர் உன்னத லட்சியத்துக்கான அர்ப்பணிப்பிலேயே அவையெல்லாம் தங்கியிருக்கு... சிலர் இந்த அர்ப்பணம் உள்ளோடியிருக்கவே பிறக்கிறார்கள் என்றுகூடச் சொல்லலாம்..."

"என்ன, இந்த அர்ப்பணம் உள்ளோடியிருக்கவே சிலர் பிறக்கின்றார்களா?" விக்கி ஆச்சரியத்தோடு கேட்டான்.

"ஓம், மகாபாரதத்தில் வரும் கர்ணன் இதற்கு நல்ல உதாரணம். கர்ணன் பிறவிக் கொடையாளி. அவனது கொடைபற்றி எல்லாருமே புகழக்கேட்ட துரியோதனனுக்குச் சிறிது பொறாமை. தான் கொடுத்த ராஜ்ஜியத்தை வைத்தே தன்னைவிடக் கொடை செய்து புகழடைகிறானே, இவனைவிடக் கொடை கொடுத்துக் காட்டுகிறேன் என்று தனக்குள் தீர்மானிக்கிறான். ஆனால், அவனால் அது முடியாதென்பதைக் காட்டக் கிருஷ்ணன், ஓர் ஏழைபோல் வடிவம் தாங்கித் துரியோதனனிடமும் கர்ணனிடமும் அவரவர் மாளிகைக்கு யாசகம் கேட்கச் செல்கிறான். அவர்கள் என்ன வேண்டும் என்று கேட்க, அவன், தான் தேவைப்படும்போது தனக்குத் தேவையானதைக் கேட்க, அதை அவர்கள் தரவேண்டும் என்று வாக்குப் பெற்றுச் செல்கிறான். ஒரு நாள் நல்ல அடைமழை. அப்போது, அந்த ஏழை துரியோதனிடம் செல்கிறான். அவன், "என்ன வேண்டும்?" என்று கேட்க, ஏழை, "விறகு வேண்டும்" என்று சொல்கிறான். இதைக் கேட்டு துரியோதனன் யாசித்தவனைக் கேலி பண்ணி, "இந்த நேரத்தில் விறகுக்கு எங்கே போவது? பிறகு வா" என்று சொல்லி அனுப்ப, அவன் கர்ணனிடம் நேராகச் சென்று, விறகு கேட்கிறான். கர்ணன், உடனே எதுவும் பேசாது, தனது மாளிகையில் உள்ள தளபாடங்களை உடைத்து அவனுக்கு விறகு தானம் செய்கிறான். பார்த்தாயா?" என்று சொன்ன அன்பு, "இது ஏன் துரியோதனனுக்குத் தோன்றவில்லை?" என்று விக்கியைப் பார்த்துக் கேட்டான்.

"அதுபற்றித்தான் நானும் யோசிக்கிறேன்." விக்கி சொன்னான்.

"அதுதான் நான் சொன்னேன், அந்த அர்ப்பணம் இருந்தால் தான் அது தோன்றும். அந்த அர்ப்பணத்தோடு சிலர் பிறக்கிறார்கள் என்று நான் சொன்னதும் இதுதான்."

அன்பு கூறிவிட்டு, விக்கியைப் பார்த்தான்.

விக்கி பேசாது, அவன் பேசுவதை ரசித்தவாறு கேட்டுக் கொண்டிருந்தான். அன்பு அன்புதான்...!

○

திடீரென்று காலையில் கண்ட பெரும் நட்சத்திரக்கோளம் வெடித்துச் சிதறுவது அவன்முன் மீண்டும் விரிகிறது.

அதன் பின்னர் உடம்பைவிட்டுத் தனியாகக் கிடக்கும் தலை.

அந்தத் தலை அன்புவினுடையதாக மாறுகிறது.

உடனே விக்கிக்குப் பழைய நினைவு வருகிறது.

அன்று, அன்புவின் முகாமில் ஏதோ ஓர் ஆலோசனைக் கூட்டம்.

முக்கியமான அரசியல், ராணுவப் பொறுப்பாளர்கள் அங்கு வந்திருந்தனர். அவர்களையெல்லாம் அன்புதான் ஓடி ஓடிக் கவனித்துக்கொண்டிருந்தான்.

கலந்துரையாடல் முடிந்து தேநீர், சிற்றுண்டிகள் பரிமாறப் பட்டுக்கொண்டிருந்த வேளை.

பகிடிகளும் கேலிகளும் கிண்டல்களும் போராளிகளிடையே எழுந்துகொண்டிருந்தன. அன்பு தன் சகாக்களுக்கு ஒவ்வொன்றை யும் கவனிக்கும்படி கட்டளையிட்டுக்கொண்டு தானும் பகிடி, கேளிக்கைகளில் பங்கெடுத்துக்கொண்டிருந்தான்.

வெடிச் சிரிப்புகள் மேலெழுந்தன.

ஒருவன் சிரிப்பை அடக்க முடியாமல் துள்ளிக் குதித்தான்.

அப்போது, திடீரென அவன் இடுப்பிலிருந்த கிறனேட் ஒன்று, கிளிப் கழன்ற நிலையில் கீழே விழுந்தது.

அங்கிருந்த அத்தனை பொறுப்பாளர்களும் உடல் சிதறுண்டு போகின்ற ஒரு கணப்பொழுது. விக்கி உட்பட அங்கிருந்த எல் லோரும் என்ன செய்வது என்று தோன்றாது ஸ்தம்பித்து நின்ற கணப்பொழுதில்... அன்பு அந்தக் கிறனேட்டை தன் மார்போடு அணைத்தவாறே அதன்மேல் குப்புற விழுந்தான்.

அடுத்த வினாடி, அன்பின் வாட்டசாட்டமான உடல் சிதற, அதன் சதைத் துணிக்கைகள் அங்கிருந்த நான்கு சுவரிலும் எழுந்து படிகின்றன. அங்கிருந்த அத்தனை பேரையும் காப்பாற்றிய அன்புவின் இரத்தம் அங்கிருந்த எல்லோரிலும், எல்லாவற்றிலும் தெறித்துச் சிந்துகின்றது.

பழைய நினைவின் அள்ளலில், இப்போ தன் பணிக்காக விரைந்துகொண்டிருந்த விக்கியின் கண்களில் கசிவு.

விக்கிக்கு ஏன் அன்பு செய்த அந்தச் செயல் அப்போது தோன்றவில்லை? அதுதான் அன்பு கூறிய பிறப்போடு ஒட்டி வரும் ஒன்று?

பரவாயில்லை. தன்னைத் தேற்றிக்கொண்டு விக்கி வேகமாக நடக்கிறான்.

மாபெரும் கப்பலின் புகைப்போக்கிக்குள் யப்பானிய வீரன் குண்டு கட்டிக்கொண்டு விழுகிறான்.

❖

# விடுதலை மூலம்

பொதிகை மலையிலிருந்து தவழ்ந்து வந்த காற்று, தொன்மனின் மென்முகத்தைத் தழுவி, கலகலத்துச் சென்றது.

ஆயினும் அவன் தீர்மானம் தணிவதாய் இல்லை.

அவன் தன் குருவான குறுமுனியிடம் அதைக் கேட்பதென்றே முடிவுக்கு வந்திருந்தான்.

அவன், அவரிடம் சீடனாகச் சேர்ந்த நாளிலிருந்தே அதைக் கவனித்துக்கொண்டுதான் வருகிறான்.

எத்தனை நாள் அதைப் பற்றிக் கேட்க வேண்டும் என்று அவன் மனந்துணிந்தபோதும் ஏனோ, அவனால் அதை அவரிடம் கேட்க முடியாமல் போய்விடுகிறது.

இதற்குக் காரணம் என்ன?

சப்தரிஷிகளில் ஒருவரான அவரிடம் அதைக் கேட்பதென்பது அவரது அறியாமையைச் சுட்டுவதென்பதுபோல் ஆகிவிடும் அல்லவா? முக்காலம் உணர்ந்த சப்தரிஷிகளுக்கும் – பிறக்கும் போதே ஞான உருவாய் பிறக்கும் அவர்களுக்கும் – அறியாமை இருக்குமா? அவர்களது அறியாமை, அறிவுபற்றி ஏன் நீ கவலைப் படுகிறாய்? உன் அறியாமையால்தான் அதைக் கேட்கிறாய் என்று அவர் நினைக்கட்டுமே? அதனால், உனக்கென்ன வந்துவிடப் போகிறது?

எனக்கென்ன வந்துவிடப்போகிறதா?

அவன் மனம் அலை பாய்ந்தது. எனக்கென்ன வந்துவிடப் போகிறதா? என்னையே தலைமைச் சீடனாய் ஏற்றுக்கொண்ட அவரிடம், நானே இக்கேள்வியைக் கேட்பதா? இது குருத்துரோகம் ஆகாதா?

அப்படியேன் நான் நினைக்க வேண்டும்?

கொஞ்ச நாட்களாக இந்த எதிர்ப்புக்குரல் மேலாடிக்கொண்டு வரச்செய்வதே அவரின் வேலைதான் என்று ஏன் அவன் எடுக்கக்

கூடாது? குருபக்தி இருக்கவேண்டும். அவரிடம் பயபக்தி இருக்க வேண்டும் என்பதெல்லாம் உண்மை. ஆனால், அந்தக் குருபக்தியும் பயபக்தியும் தன் ஆணவத்தைக் காப்பாற்றுவதற்காக, அதாவது, தன் நலன்களைக் காப்பாற்றி, 'நல்ல சீடன்' பட்டம் எடுப்பதற்காக என்றால், அதுவே குருத்துரோகம் ஆகிறது, இல்லையா? அப்படியான நிலையில்தான், அவனோடு ரிஷியின் ஆச்சிரமத்துக்கு வந்த சகசீடர்கள் இருந்தார்கள்.

அவன் அவர்கள்பற்றிக் கவலைப்படவில்லை.

இன்று அவன் அதிகாலையிலேயே ஆச்சிரமத்துக்கு வந்துவிட்டிருந்தான். அவன் வரும்போது தனது வீட்டுத் தோட்டத்திலிருந்து கொண்டுவந்திருந்த மாங்கனியும் பலாவும் அந்தச் சிறு ஆச்சிரமக் குடிலை நறுமணத்தால் நிரப்பின.

இவனைக் கண்டதும் குறுமுனி, ஆச்சிரமத்தில் தன் மனைவிக்குத் துணையாக விட்டுவிட்டு ஆற்றங்கரை செல்கிறார். அவர் ஆற்றங்கரையிலிருந்து திரும்பிவர நாழிகை பலவாகும். கதிரவன் கதிர்களில் இளஞ்சூடு பிடிக்கும்போதே அவர் திரும்பி வருவார். அப்போது, அவருக்கேற்படும் இளம் பசியாற்ற அவரது பத்தினி தினைக்கஞ்சி ஆக்கிக்கொண்டிருந்தாள்.

ஆனால், அவள் முகம் சோகமாய் இருந்தது.

இன்று மட்டுமா அவள் முகத்தில் சோகம்? தொன்மன் அந்த ஆச்சிரமத்திற்கு அவரது சீடனாக வந்தநாளிருந்தே அவள் முகத்தில் சோகம், கடற்காற்றில் உப்புக்கசிவதுபோல் கசிந்துகொண்டே இருந்தது. முதலில் அவனுக்கு அதன் காரணம் புரியவில்லை. பின்னர், தானாகவே அது உள்வெளித்தது. காரணம் என்ன? ஒருநாளாவது ரிஷி தன் மனைவியிடம் கனிவாக இருந்ததை அவன் கண்டதில்லை. ஆரம்பத்தில், ரிஷிக்கும் ரிஷிபத்தினிக்குமிடையே இருந்த வயது வித்தியாசம் அவனை அசௌகரியப்படுத்திற்று. அவள் வயதை இருபதுக்குமேல் கணிப்பிட முடியாது. ஆனால், அவர் வயதோ அறுபதையும் தாண்டியிருந்தது. இதுதான், அவர்கள் வாழ்க்கையின் இடைவெளிக்குக் காரணமோ? அவரின் பற்றற்ற வாழ்க்கை அவளின் வாழ்க்கையில் பாலைவனமாகத் தகிப்பதுபோல் அவன் நினைத்தான்.

இது, அவனது ஆரம்பக் கணிப்பு.

ஆனால், அது பிழையென்பதை அவன் உணரக் காலம் எடுக்கவில்லை.

தன் கணவனான குறுமுனியைக் காணும்போதெல்லாம் அவள் கண்களில் ஆனந்தம் கூத்தாடுவதை அவன் காணத் தவறுவதில்லை. அவர் வெளியே போய் ஆச்சிரமம் திரும்பச் சுணங்கிவிட்டால், அவள் கண்களில் பதற்றம், ஏக்கம். அவர்

திரும்பியதும் அவை ஆனந்தத்தை உள்வாங்கிய கருமணித் திணி வுகளாக மின்ன அவள் அமைதியாக வேலையில் ஈடுபடுவாள். அவளது ஒவ்வொரு வேலையும், அவரது அன்பைத் தன்பால் கவரும் நோக்குடனேயே நடைபெறுவதை அவன் படிப்படியாக அறிந்துகொண்டான்.

சாணம் போட்டு வீடு மெழுகுதல்போல், அவள் தன் கணவ னுக்கான ஒவ்வொரு செயலையும் அன்பினால் வார்த்து அர்ப் பணித்தாள். ஆனால், அவை ரிஷிபுங்கவரிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. அவரைப் பொறுத்தவரை அவர் கருங்கல்லாகவே இருந்தார். கருங்கல்லில் உணர்வுகள் விழுதுவிடுவதில்லை.

அன்று காலையும், அவர் ஆற்றங்கரைக்குப் போவதற்கு முன்னரும் அதையே அவன் கண்டான்.

அதிகாலையிலேயே நீராடிய அவள், தன் கணவனுக்குரிய பணிகளைச் செய்வதற்குமுன் அவர் காலடியில் விழுந்து வணங்க முற்பட்டபோது, அவரது குரல் கர்ணகடூரமாகமாக ஒலித்தது.

“ஏய், லோபமுத்ரா, இனிமேல் என் கால்களைத் தொட்டு வணங்குவதை நிறுத்திவிடு.”

“ஏன் அப்பா, அப்படிச் சொல்கிறீர்கள்? இதுநாள்வரை உங்கள் கால்களைத்தொட்டு வணங்கிவிட்டுதானே மற்றக் கடமை களைச் செய்தேன்?”

“இதுகாலவரை இருக்கட்டும், இனிமேல் வேண்டாம்.”

“மனைவிக்குக் கணவன்தானே கண்கண்ட தெய்வம்?”

“இனிமேல் இந்தப் புராண ஒப்புவிப்புகள் வேண்டாம். உன் இஷ்டதெய்வத்தை வணங்கு.”

“என் இஷ்டதெய்வம் நீங்கள்தான்.”

“ஏய் லோபமுத்ரா, அடிமையாய் இருக்காதே, உன் விடுத லைக்கு வழி பார்.”

அதற்குமேல் குறுமுனி அங்கு நிற்கவில்லை.

விறுவிறுவென வைகையை நோக்கிப் புறப்பட்டுவிட்டார்.

அவன் பேசாமல் இருந்தான்.

உள்ளே லோபமுத்ராவின் விசும்பல் கேட்டது.

அவள் முகத்தின் பொலிவு, கீழ்வானில் இருந்து கிளம்பி வரும் முகில் திரளால் மறைக்கப்படும் நிலாப் போல் சோகக் கவிப்பால் இருண்டது.

என் குருதேவரான குறுமுனிக்கு இரக்கம் என்பதே இல்லையா?

ஏன் இப்படி நடந்துகொள்கிறார்? அவன் யோசித்தான்.

வழமையாக இளவயதினரை மணந்துகொள்ளும் முதியவர் களிடம் காணப்படும் சிடுசிடுப்புக்கும், குரோத உணர்வுக்கும் இவரும் விதிவிலக்கில்லையா? ஆனால், இங்கே ஒரு வித்தியாசம். வழமையாக முதியவரை மணந்துகொள்ளும் இளம் பெண்கள், தமக்குக் கணவனாக வாய்த்த முதியவர்களில் அடியோடிய வெறுப்பை உமிழ்பவராகவே இருப்பர். ஆனால், லோபமுத்ராவோ தன் கணவன்மேல் ஆறாக் காதல் கொண்டிருந்தாள் என்பதற்கு அவள் கண்களே சாட்சி. குறுமுனியின் வருகையைத் தூரக் காணும்போதே, அது, ஆனந்தக் கூத்தாடுவதை அவன் இந்த ஓராண்டு ஆச்சிரம வாழ்க்கையில் எத்தனைமுறை கண்டிருக்கிறான்.

ஆனால், அவளின் கட்டற்ற காதலை ஏன் குருதேவர் கௌரவிப்பதில்லை? கௌரவிக்கத்தான் வேண்டாம், ஓர் சிறு கனிவின் துளியையாவது அவள்மேல் தெளிக்க வேண்டாமா?

○

வைகை ஆற்றங்கரையை நோக்கி நடந்துகொண்டிருந்த சப்தரிஷிகளில் ஒருவரான குறுமுனிக்கு, பழைய நினைவுகள் ஓடி வந்தன.

ஒருமுறை வைகை நீரைத் தன் கமண்டலத்தில் ஏந்தியவாறு அந்த அரச சபைக்கு அவர் சென்றார். அவர் எல்லாம் தெரிந்தே சென்றார். நீண்ட காலமாகப் பிள்ளைப்பலன் இன்றி வருந்தும் அரசனுக்கும் அரசிக்கும் ஆறுதல் அளிக்கவே அங்கு சென்றார். குறுமுனிக்கு அங்கே ராஜமரியாதை. அரசனும் அரசியும் ரிஷியின் கால்களில் வீழ்ந்து வணங்கினர். தம் பிள்ளையில்லாக் குறையை நீக்கும்படி இரந்துநின்றனர்.

"கவலையை விடுங்கள். உங்கள் குறையைத் தீர்க்கவே வந்தேன்" என்று கூறிய குறுமுனி, நிலத்தில் ஒரு தர்ப்பையைப் போட்டு, தான் கமண்டலத்தில் ஏந்திவந்த வைகை நீரைத் தெளித்தார்.

அடுத்த வினாடி அங்கே, தங்கச்சிலை போன்ற அழகிய பெண் குழந்தை கிடந்து சிரித்தது. பேருவகை அரண்மனையை நிறைத்தது.

அதைத் தூக்கி, அரசனும் அரசியும் ஒருசேரக் கைநீட்ட அவர்களிடம் ஒப்படைத்த குறுமுனி, அங்கிருந்து கிளம்பினார்.

நீண்ட இருபது வருடங்கள் ஓடி மறைந்தன.

அதற்காகவே காத்திருந்த குறுமுனி மீண்டும் அதே அரச சபைக்குச் செல்கிறார்.

அரசனும் அரசியும் ஓடோடி வந்து அவரை வரவேற்கின்றனர்.

ஆனால், அடுத்த வினாடி குறுமுனி விடுத்த கோரிக்கை யினால் நிலை தடுமாறிப்போயினர்.

"உங்கள் மகளை எனக்கு மனைவியாகத் தாரைவார்த்துத் தாருங்கள்."

குறுமுனி போட்ட கோரிக்கையோ நடுவானில் பெயர்ந்த இடியோசையாக, அங்கு ஏந்துவாரற்று நின்றது.

"என்ன சொல்கிறீர்கள்?" குறுமுனியின் அதட்டலான கேள்வி மீண்டும் ஒலித்தது.

கொடுத்தவனே பெண் கேட்கிறான்.

மறுத்தால் அவர்கள் அரச வாழ்க்கையே கேள்விக்குள்ளாகி விடும்.

"தருகிறோம் குருதேவரே" என்று ஒப்புக்கொண்ட அரசனும் அரசியும், தாம் இத்தனை காலம் வளர்த்த தம் பெண்ணைத் தாரைவார்த்துக் கொடுத்தனர்.

குறுமுனி அடுத்த கணமே, அங்கிருந்து தன் மனைவியுடன் ஆச்சிரமத்தை நோக்கிப் புறப்படுகிறார். மகளைப் போகவிட்டு 'கன்றுபிரிகாராவின்' துயரோடு அரசனும் அரசியும் நிற்கின்றனர். மகளோ விட்டுவிடுதலையாகிவிட்ட மான்குட்டிபோல் ரிஷியின் கைகளைப் பிடித்தவாறு துள்ளிக் குதித்தபடி செல்கிறாள்.

○

ஆற்றங்கரைக்குப் போன முனிவர், இளவெயில் உடலில் மினுக்கங்காட்ட ஆச்சிரமத்துள் நுழைகிறார். உடலில் வேர்வைத் துளிகளின் சிதறல். அதை ஒத்தி எடுப்பதற்கான துணியோடு நிற்கிறாள் ரிஷிபத்தினி.

"என்னைத் தொடத் தேவையில்லை. துணியை அப்படி வைத்துவிட்டுப் போ." ஒருவித கடுகடுப்போடு முனிவரின் வார்த் தைகள் வெளிவருகின்றன.

முகத்தில் பொங்கிய ஆனந்தம் வற்றிப்போக, அவள் உள்ளே போகிறாள்.

சிறிது நேரத்தில் தினைக்கஞ்சிக் குடுவையோடு வருகிறாள். கையில் பலா இலைகள் கஞ்சி பருகுவதற்காகக் குவளைகளாக மடிக்கப்பட்டுள்ளன.

"அதை வாங்கிக் கொள். எனக்கு ஊற்றித் தந்து, நீயும் குடி." சீடனுக்குக் கட்டளையிடுகிறார் ரிஷி. அவள் துக்கத்தோடு கஞ்சிக் குடுவையை சீடன் முன்னே வைத்துவிட்டு, உள்ளே சென்று விம்முகிறாள்.

"இது பெரிய அநியாயம்!" தொன்மன் திடீரெனக் கத்தினான்.

கஞ்சியைப் பருகிக்கொண்டிருந்த ரிஷி, ஒரு கணம் விழிகளை உயர்த்தி, "எது அநியாயம்?" என்கிறார்.

"நீங்கள் செய்வதுதான்" என்று கத்திய சீடன், "கட்டிய மனைவியிடம் ஒரு துளி அன்புகூடக் காட்ட முடியாதவர் முக்காலம் உணர்ந்த ரிஷியாக இருந்தும் என்ன பயன்? நான் உங்களின் சீடனாய் இருப்பதையிட்டு வெட்கப்படுகின்றேன்" என்று சீறினான்.

ரிஷி மெதுவாகச் சிரித்தார். சிரித்துவிட்டு, "நீ என்னிடம் எதற்காக வந்தாய்; அன்பு தேடியா அல்லது விடுதலை தேடியா?" என்று கேட்டார்.

"அதிலென்ன சந்தேகம், விடுதலை வேண்டியே வந்தேன்."

"அப்படியானால், விடுதலை அன்பினால் ஆகுமென்று நினைக்கிறாயா?"

"அன்பினால் ஏன் ஆகக்கூடாது?"

"அப்படியானால், நீ உன் அம்மா அப்பாவோடேயே இருந்திருக்கலாமே, உலகில் அவர்கள் தரும் அன்புக்கிணையேது?"

"அப்படியானால், நீங்கள் பாவிக்கும் வன்முறைதான் விடுதலைக்கு வழி என்கிறீர்களா?" சீடன் திருப்பிச் சாடினான்.

"நான் வன்முறை பாவிக்கிறேனா?" முனிவர் சிரித்தார். "உண்மையைச் சுட்டாத, விடுதலைக்கு எதிரான எல்லாச் செயலுமே வன்முறைதான்; அன்பு உட்பட. அதைத்தான் நீ செய்கிறாய்; நானல்ல."

மீண்டும் குறுமுனி சிரித்தார். சிரித்துவிட்டு மீண்டும் கூறினார்.

"விடுதலைக்கு வன்முறை மென்முறை என்ற ஒன்றில்லை. அது எல்லாவித முறைகளையும் கடப்பது. ஒரு நாடும் சரி, வீடும் சரி, நீயும் நானும் சரி ஒளிபெறுவது விடுதலையால்தான், தெரியுதா?"

அவன் கேட்டுக்கொண்டிருந்தான்.

ஆனால், ஆயிரமாயிரம் கேள்விகள் பாம்புமாதிரி படமெடுத்துப் படமெடுத்துத் தலைகவிழ்ந்தன.

○

அன்று காலையில் ரிஷி வைகையில் நீராட, தொன்மனையும் ஏனைய சீடர்களையும் ரிஷிபத்தினியையும் அழைத்துச் செல்கிறார்.

ரிஷி உட்பட எல்லோரும் ஆற்றில் இறங்கி நீராடுகின்றனர். சீடர்கள் ஒருவர்மேல் ஒருவர் நீரை எற்றி, தம்மை மறந்து நீராடுகின்றனர். ரிஷியருகே நீராடிக்கொண்டிருந்த ரிஷிபத்தினி திடீரென

ஆழநீருக்குள் அள்ளுப்பட்டுச் செல்கிறார். ரிஷி கவனிக்காதது போல் நிற்கிறார். அவள் அந்தரப்பட்டுத் திக்குமுக்காடுவதை அவரது பிரதம சீடன் கவனித்துவிட்டான்.

"குருதேவா! உங்கள் பத்தினி ஆற்றிலே அள்ளுப்பட்டுப் போகிறாள்! அவரைக் காப்பாற்றுங்கள், காப்பாற்றுங்கள்" என்று பெரிதாகக் கத்துகிறான். ஏனைய சீடர்களும் சேர்ந்து கூக்குரல் வைக்கின்றனர்.

இத்தனைக்கும் குறுமுனி ஏதும் நடக்காததுபோல் நின்று கொண்டிருந்தார். இவர்களின் கூக்குரலைக்கூட அவர் பொருட் படுத்தியதாக இல்லை.

அவள் நீரில் அள்ளுப்பட்டுப் போய்க்கொண்டிருந்தாள். இடைக்கிடை தத்தளிப்பு. ஈற்றில் எல்லாம் அடங்கி ஆற்றோடேயே கலந்துவிட்டாள்.

நீராடி முடிந்த ரிஷி, ஆச்சிரமத்தை நோக்கி நடந்தார். சீடர் களும் அவர் பின்னால் சென்றனர்.

ஆச்சிரமத்தை அடைந்ததும் தலைமைச் சீடன் தொன்மன் பெருங்குரல் எடுத்துக் கத்தினான்.

"நீ ஒரு கொலைகாரன். இன்றோடு எங்கள் குரு–சீட உறவு முடிந்தது. ஒரு கொலைகாரனுக்குச் சீடனாய் இருப்பதைவிடச் சாவது மேல். நீ நாசமாய்ப்போக!" என்று திட்டிவிட்டு அங்கிருந்து புறப்படத் திரும்பினான்.

"நில்!" குருவின் குரல் மிகுந்த அழுத்தத்தோடு வந்தது.

"என்ன ?" என்பதுபோல் சீடனின் பார்வை.

"நான் என் மனைவியைக் கொலை செய்யவில்லை; அவளுக்கு விடுதலை அளித்தேன்."

"கொலைக்கு நீ வைக்கும் பேர் விடுதலையா?" சீடன் மீண்டும் சாடினான்.

"அவளை யாரென்று அறியாமல் பேசுகிறாய்." குரு விளக்க முயன்றார்.

"யாராய் இருந்தால் என்ன, கொலைச்செயல் மாறிவிடுமா..?" சீடன் குறுக்கிட்டான்.

"ஆத்திரப்படாதே, கேள், அவள் யார் தெரியுமா ?"

"யார் அவள்?" சீடனின் சினம், யார் அவள் என்று அறிய ஆவல் கொண்டது.

"அவள்தான் இந்த வைகையம்மை. நான் அவளை இந்நீரி லிருந்தே உருவாக்கினேன். எனக்காக மானிட உருத்தரித்த அவள்,

தான் யாரென்பதை மறந்து என்னில் பற்று வைத்தாள். அதை ஊக்குவிக்காது, அவளை யாரென்று உணரவைத்து அவளுக்கு இன்று விடுதலை அளித்தேன். இல்லையெனில் வைகை வற்றிப் போம், நாடு பாழடைந்துவிடும்..." என்று ரிஷி சொல்லிவிட்டு, "இது மனிதர்களால் புரிந்துகொள்ள முடியாதது" என்றார்.

பிரளயம் முடிந்த பேரமைதி தொன்மனை விழுங்கிக்கொண் டிருந்தது.

"என்ன!" என்று தொன்மனின் நெஞ்சதிர, அவன் எங்கோ வீசப்பட்டுக்கொண்டிருந்தான். அவன் கண்களில் கண்ணீர் கசிந்தது.

"ஏன் அழுகிறாய்?" ரிஷியின் குரல் அசரீரிபோல் கேட்டது.

"இன்றுதான் நான் ரிஷிமூலம் நதிமூலம் என்பவற்றின் விளக்க மாக ஒருவர் இருப்பதைக் காண்கிறேன்" என்றான்.

"இல்லை, நான் விடுதலைமூலமாக இருக்கிறேன்" என்று கூறிய ரிஷி, இப்பேரண்டத்தின் தனிமையையே தன்னில் தாங்கி, சீடர்களுக்குத் தினைக்கஞ்சி ஆக்க, ஆச்சிரமக் குடிலினுள் புகுந்தார்.

அப்போது வைகை கலகலத்து ஓடுவது தொன்மனின் காது களில் கேட்டுக்கொண்டேயிருந்தது.

❖

## மஹாநாம தேரர் மான்மியம்

**சா**து சாது...
புத்தர் நிற்கிறார் பிட்சா பாத்திரத்தோடு
பிட்சா பாத்திரமாய் பூரணை கையில்!
அரசை ஒதுக்கி
அரசமர நிழல் அண்டிய ஆளுமை
பூரணையாய் அவரது கையில்!
சண்டாளர் இட்ட மாமிச உணவும்
சத்திரியர் தந்த அறுசுவை உண்டியும்
பிட்சா பாத்திரத்தில் பற்றற்றுக் கிடந்தன.
நிர்வாணம் என்கிற ஓர் தனிப்பாதை
நிலத்தில் ஒட்டாது, பூ நடுரேகையாய் அவர்முன் நீண்டது.
எவரையும் ஈர்க்கும் அன்பின் உயிர்ப்பே அதனில் ஒளிர்ந்தது.
அசோகச் சக்கரம் மிகுந்தலை மலையில்! தேவ நம்பிய
தீஸன் சிரந் தாழ்த்தி நிற்கிறான்.
சங்கமித்தை – மகிந்தன் இருவரின் வரவால்
புத்தர் அமர்ந்த அரசமரக் கிளை
அநுராதபுரத்தில் வேர்விடுகிறது.
பௌத்தம் ஈழவள நாட்டின் வாழ்க்கை முறையாய், எல்லோர்
நெஞ்சிலும் இழைக்கிறது. அற்ப சிறு உயிரையும் அன்பில்
தோய்க்கும் புத்தனின் விழிகள் வழியாய் அமைய,
நாடும் வீடும் மேலெழுகின்றன.

காலம் மாறுகிறது. அரச படையெடுப்புக்கள், ஆட்சியதிகாரப் போட்டியின் விளைவாய் குரோதம் மலிகிறது. இனம், மொழி என்ற பிரிவு வேறு. புத்தனில் பெருகிய அன்புக்குப் பதிலாய் இரத்தம் பெருகுகிறது. மஹாநாம தேரர் அதன் மொத்த உருவாய் வரலாற்றைத் தனது கையில் எடுக்கிறார். எல்லாளன்–கைமுனு யுத்தம் என்பதை அரச, ஆட்சியதிகாரப் போட்டியிலிருந்து இன, மத வாதப் போட்டியாய் மாற்றும் வேட்கையில் மஹாநாம வெற்றி பெறுகிறார். அன்று தொடங்கிய அந்த இனவாத யுத்தம் இன்றுவரை:

"மகனே, ஏன் கூனிக் குறுகிப் படுத்திருக்கிறாய்?" – விகாரமா தேவி துட்ட கைமுனுவைப் பார்த்து வினவினாள்.

"கூனிக் குறுகாமல் எப்படிக் கிடப்பது?"

"ஏன் அப்படிச் சொல்கிறாய், மகனே?"

"ஏனா, வடக்கே கொடுந்தமிழரும் தெற்கே கடலும் நெரிக்கையில், எப்படி நிமிர்ந்து கிடப்பது?"

மஹாநாம உருவாக்கிய பாத்திரங்கள் கதைத்தன.

மஹாநாம தேரர் அரசியல்வாதியாய் மாறாதபோதும் அரசினைத் தீர்மானிக்கும் சக்தியாய் மாறுகிறார்.

எவருக்கும் அன்பையும் கருணையையும் போதித்த பௌத்தம், இன, மொழிக் குரோதத்தை வளர்க்கும் வார்ப்பாய் மாறிற்று. எவரையும் அன்பால் இணைத்த பௌத்தம், 'சிங்கள பௌத்தமாய்' மாறத் தொடங்குது.

சிங்கள மாணவன் சிறுவயதிலிருந்தே எல்லாள – கைமுனு யுத்தமே வரலாறாய்க் கற்று வருகிறான்.

*2*

சாது சாது...
பெரஹரா வருகுது, பெரஹரா வருகுது
கசை அடி, கசை அடி – பெரஹரா வருவதை
கசையடி முழங்கி அறிவித்துச் செல்லும்
முன்னனி ஆட்கள் சடார் சடார்...
தீப்பந்தம் சுழற்றி வருகுது இன்னோர் கூட்டம்.
அதற்குப் பின்னால் 'கொட்டி செல்லங்' என்றொரு
புலியாட்டம் நிகழ்த்தி வருகுது மற்றொரு கூட்டம்.
யானையில் பௌத்த சின்னங்கள் ஏந்திய
ஊர்வலம், பின்னால்
வெள்ளையணிந்த 'சில்' நோன்பெடுக்கும்
மக்கள் கூட்டம்
சாது சாது...

மஹாநாமவின் சீடனாய் 1956இல் பண்டாரநாயக்க அவதாரம். தியசேன குமாரயா! இருபத்திநாலு மணித்தியாலத்தில் 'சிங்களம் மட்டும்' சட்டம். எதிர்த்த தமிழ்த் தலைவர்கள் காலிமுகத் திடலில் கல்லெறிபட்டனர்; இரத்தம் சிந்தினர். மீண்டும் எல்லாள – கைமுனு யுத்தம் புதிய வடிவில்! பௌத்த குருமார் ஆதரவு வழங்கினர். சாது! சாது! 58இல் இனக்கலவரம் பெரிதாய் வெடித்தது. தமிழரின் உயிர்கள் காலுக்குக் கீழ் போட்டுக் கசக்கப்படும் சிற்றெறும்பாயிற்று.

58இல் பாணந்துறையில் கோயில் பூச்கர் வெளியே இழுத்து வரப்பட்டு, பெற்றோல் ஊற்றிக் கொளுத்தப்படுகிறார். இன்னும் கோயிலில் தஞ்சம் அடைந்த தமிழர் பலருக்கும் அதே கதிதான். கொதிக்கும் தாருக்குள் போட்டு மூழ்கடிக்கப்படுகிறார்கள். தென்னிலங்கையில் தமிழர் போட்ட அவலக்குரலும் வேதனை அலறலும் கேட்டு, கொலைகாரக் கும்பல் இன்னும் வெறிகொண்டு ஆட்டம் போட்டது.

மஹாநாம தேரரின் சன்னதம் அவர்களில் தெரிந்தது. பண்டாரநாயக்கா தமிழர்கள் பட்ட அவலம் கண்டு பெருமிதம் அடைகிறார். அப்போது ஆளுநராக இருந்த ஒலிவர் குணத்திலகா, "இது மிக மோசமான நிலை. தமிழர்கள் கொல்லப்படுகிறார்கள். அவசரகாலநிலையைப் பிரகடனப்படுத்தவும்" என்று பண்டாரநாயக்காவிடம் முறையிட, அவர், சுங்கானை வாயின் மறுபக்கம் திருப்பியவாறே, "என்ன அவசரம், அவர்கள் இதைக் கொஞ்சம் சுவைத்துப் பார்க்கட்டும். *Let them taste*" என்கிறார். அக்கூற்றில் 'இனிமேல் சமஷ்டி கேட்க மாட்டார்கள்' என்ற கருத்துப் பொதிந்திருந்தது.

சாதி பார்க்கும் தமிழா, உனக்கு சமஷ்டி ஒரு கேடா!

கோழையாய் இருக்கும் தமிழா, உனக்கு, கொள்கை ஒரு கேடா!

அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்படாத, நொண்டி நொண்டி ஊர்வதுபோல் தமிழர்களுக்கு தெரிந்த அந்த இருபத்திநாலு மணித்தியாலங்கள் வன்முறையின் உச்சத்தைத் தொட்டது. தமிழர்கள் வெட்டப்பட்டனர். தீயில் போடப்பட்டனர். பெண்கள் நிர்வாணமாக்கப்பட்டு, அவர்கள் பெண்ணுறுப்புகள் கோரமான முறையில் குதறப்பட்டன.

இலங்கையில் சிங்கள பௌத்தம் காட்டும் 'நிர்வாணம்' எதுவெனத் தெரிந்தது.

ஆனால், அடுத்த ஆண்டு பௌத்த மதத்திற்கும், சிங்கள இனத்துக்கும் அத்தனை தொண்டாற்றிய பண்டாரநாயக்காவுக்கு நன்றிக்கடன் செலுத்துவதுபோல், சோமராம தேரர் என்னும் பிக்குவானவர், அவர் இல்லம் சென்றார். பண்டாரநாயக்கா எழுந்து வணங்கிவிட்டு இருந்தபோது சோமராமவின் துப்பாக்கி வேட்டு அவர் நெஞ்சைப் பிளந்து ஆசீர்வதித்தது. நான் தரும் நிர்வாணம் இதுதான், சுவைத்துபாரும் என்பதுபோல் தமிழரின் சாபம் எதிர்வினையாயிற்று.

மண்ணில் சரிந்தார் பிரதமர் பண்டா.
சாது சாது சாது...
பெரஹரா வருகுது

சடார் சடார் கசையடி முழங்குதா?
துப்பாக்கி வேட்டா?
அதற்குப் பின்னால் 'கொட்டி செல்லங்' என்னும்
புலியாட்டம் நிகழ்த்தி வருவோர் கூட்டம்
கண்டி நடனக்காரர் கவிழ்ந்து நிமிர்கிறார்.
யானையில் பௌத்த சின்னங்கள் ஏற்றி
ஊர்வலம் ஊர்வலம்
மஞ்சள் அங்கியில் பௌத்த குருமார்
சடார் சடார் கசையடி முழங்குதா?
துப்பாக்கி வேட்டா?
சாது சாது...

3

1977இல் மஹாநாம தேரரின் இன்னொரு சீடர், ஜெயவர்த்தன புரக் கோட்டையின் ராஜாவாகத் தன்னைப் பிரகடனப்படுத்துகிறார். அவர் ஆட்சியில் ஏறியதுமே, தமிழர் சிங்களவர் இனக்கலவரம் வெடிக்கிறது. தமிழரின் உடைமைகள் சூறையாடப்படுகின்றன. பலர் கொல்லப்படுகின்றனர்.

தமிழ்த் தலைவர்கள் தமக்கென ஒரு தனிநாடு என்ற பிரகடனத்தை முன்வைக்கின்றனர். இதற்குப் பதிலளிப்பதுபோல், "சண்டையா, சமாதானமா உமக்குத் தேவை?" என்கிறார் ஜெயவர்த்தனபுர ராஜா. சுயநலமிக்க தமிழா, உனக்கு சுயாட்சி ஒரு கேடா! அடிமையாய் வாழும் தமிழா, உனக்கு அறப்போர் ஒரு கேடா!

தமிழ்த் தலைவர்கள் தம் பாராளுமன்றப் பதவியையும் இழந்து செய்வதறியாது திகைத்து நிற்கையில், தமிழ் இளைஞர்கள் புதிய முறையில் விடுதலைப் பெரஹரா நடத்த வருகிறார்கள்.

சாது சாது...
விடுதலைப் பெரஹரா! விடுதலைப் பெரஹரா!
விடுதலை ஊர்வலம் வருகுது வருகுது
அணி அணியாக இளைஞர் நிற்கிறார்.
ஏ.கே. துவக்கோடு அணி நடை, வெடி இசை
'புலியாட்டம்' என்கிற போலி அபிநயம் முடிந்து இப்போ
புலிகளின் நர்த்தனம் உண்மையாய் எழுந்தது.
அது முதன்முதல் வேட்ட வேள்விப் பொருளாய்
யாழ்நகர் அருகே
12 இராணுவம் பலியிடப்பட்டது.
புலிகள் நர்த்தனத்தின் எதிரொலி
தெற்கிலே கொடூரமாய் தெறித்தது.
சாது சாது...
மஹாநாம வழிவந்த பௌத்த பிக்குமார்
ஆசி வழங்கலில் பெரஹரா நிகழுது.

முதல்நாள் பௌர்ணமி போயா தினத்திலே
'சில்' நோன்பிருந்த சிங்கள பௌத்தர்கள்
அடுத்த நாள் ஆயிரம் கொலைவாள்கள் ஏந்தியே
ஊர்வலம் வந்தனர்.
சாது! சாது! கொல்லடா தமிழனை!
கொல்லடா தமிழனை!
*Sunday sil, Monday kill!*
என்ற வாசகம் பிரசித்தமாயிற்று.
பிக்குமார் தலைமையில் பெரஹரா நிகழ்ந்தது.
சாது சாது...
சிங்க நர்த்தனம், சிங்க நர்த்தனம்!
புதியதோர் 'சிங்கபாகு' அரங்கேற்றப்பட்டது.

தமிழருக்கெதிரான இனவாதத் தீ கொழும்பெங்கும் கொழுந்து விட்டெரிந்தது. ஆயிரக்கணக்கான தமிழர்கள் அதற்குள் வெந்து அழிந்தனர். எஞ்சியோர் அகதிகளாக வடகிழக்கை நோக்கிக் கப்பலில் அனுப்பப்பட்டனர்.

சிங்க நர்த்தனம் இத்துடன் முடிந்தது.

ஆனால், புலிகள் நர்த்தனம் இதன் பின்னர்தான் உக்கிரம் கொண்டது. சிங்கபாகுவுக்கு மேலும் மேலும் சவால்கள் விடப் பட்டதால், தாள தம்பட்டம் சங்கொலி முழங்கியே வெற்றி நிச்சயம் கண்டிடப் போர்கள் நிகழ்ந்தன. சமாதானத்திற்கான ஓர் யுத்தம் நிகழ்ந்தது. ஆயினும், இவை அனைத்தையும் உதறி எறிந்து, புலிகள் நர்த்தனம் முன்னேறி வந்தது.

அநுராதபுர அரசமரக் கிளையிலும் அதிர்வுகள் கேட்டன. தலதா மாளிகையிலும் சத்தங்கள் அதிர்ந்தன.

4

இனி என்ன செய்வது?

நவீன மஹாநாம தேரர்கள் கூடித் தீர்வெடுத்தனர்.

ஆதிகாலந்தொட்டு அரசின் கொள்கைகளைத் தீர்மானிப்ப வராய் இருந்த மஹாநாம வழிவந்த புத்த பிக்குமார், இனிச் சிங்கள பௌத்த தர்மராஜ்ஜியம் ஒன்றை உருவாக்குவது ஒன்றே தாம் நாட்டுக்குச் செய்யும் கடமையெனக் கண்டனர். அதனால், அவர்கள் நேரடியாகவே அரசியலில் இறங்கத் தீர்வெடுத்தனர். அத்தீர்விற்கிணங்க சங்கைச் சின்னமாகக்கொண்ட 'சிஹல உருமய'க் கட்சியின் பேரில் தேர்தலில் போட்டியிட்டு ஒன்பது ஆசனங்களை வென்றெடுத்தனர்.

சாது சாது...
சங்கு ஊதி, பிக்குமார் பெரஹரா நிகழ்த்திறார்.

வலம்புரி, இடம்புரி, நத்தைகள், ஊரிகள்
சின்னதும் பெரியதும் பிஞ்சுகள் பழுத்தவை
மஞ்சள் அங்கியில் ஊர்வலம் வருகிறார்.
புலிகளை விரட்டியே நாட்டைக் காப்பாற்றுவோம்.
சாது சாது...
கண்டி நடனக்காரர் ஆடியவாறு
பாட்டுப் பாடுகிறார்கள்.
சாதி பார்க்கும் தமிழா
உனக்கு சமஷ்டி ஒரு கேடா?
பிரதேசவாதம் பேசும் தமிழா
உனக்குத் தனிநாடொரு கேடா?

பிக்குமார் அணி திரள்கின்றனர். பிக்குமார் பஸ்ஸில் ஏறினால் எழுந்து நின்று ஆசனம் வழங்கும் மக்களுள்ள நாடு இது. இப்போ ஒன்பது ஆசனங்களைப் பெற்று அவர்கள் தர்மராஜ்ஜியம் ஒன்றை அமைக்கப் புறப்பட்டனர். 'தர்மராஜ்ஜியத்துக்கு எதிராக நிற்கும் எவரோடும் நாம் கூட்டுச்சேரப் போவதில்லை' என்று அவர்கள் கர்ஜித்தனர். சாது சாது...

2002இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தது. ஆனால், மீண்டும் 2004இல் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியைப் பின்தள்ளி அதைவிடப் பெரும்பான்மையோடு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சிக்கு வருகிறது. எனினும், ஆட்சியில் நிலைக்கக்கூடிய பலம் இல்லாததால், அது ஏனைய வெற்றிபெற்ற சிறுசிறு குழுக் களின் தயவில் தங்கிநிற்க வேண்டிய நிலைமை. அத்தகையவற்றில் ஒன்றாகவே ஒன்பது ஆசனங்களைப் பெற்ற புத்த பிக்குமார் அணி இருக்கிறது. ஆட்சிக்கு வந்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு எதிராக நம்பிக்கை இல்லாப் பிரேரணைக்கான வாக்களிப்பு நாடாளுமன்றத்தில் வந்தபோது, எந்தப் பக்கமும் சேர்வதில்லை என்று சொல்லிய தர்மராஜ்ஜியம் உருவாக்கும் பிக்குமார் குழுவி லிருந்து ஒருவர் அரசாங்கத்துக்கு எதிராக வாக்களிக்கத் தன்னிச் சையாக எழுந்துசெல்கிறார்.

சாது சாது... சாது
'பன்சல'வில் இருந்தவர் இப்போ பாராளுமன்றத்தில் இருக்கிறார்.
அரசை எதிர்த்து வாக்களிக்க முன்னெழுந்து செல்கிறார்.
தாள தம்பட்டம் எதுவுமில்லை.
கசையடியும் கேட்கவில்லை.
புத்தபிக்கு எழுந்து செல்ல
அவரைச் சுற்றிவளைக்கின்றனர்,
அரச எம்.பி.மாரெல்லாம்!
ஏன் எதற்கு வளைக்கிறார்?

காலில் விழுந்து ஆசி பெறவா?
பஸ்ஸில் ஏறின் எழுந்து நின்று இருக்கை தருவோர்
பாராளுமன்றம் வந்த அவரைச் சும்மா விட்டுவைப்பாரோ...?

புத்த பிக்குவைச் சுற்றிவளைத்த அரசாங்க எம்.பி.மார் நெருங்கி, நெருங்கி வருகிறார்கள். "ஏய் ஹக்கடியோ (ஏய் சங்கே) 'பன்சல'வில் 'பிரித்' ஓதாமல், பாராளுமன்றத்தில் உனக்கென்னடா வேலை?" ஒரு எம்.பி. கத்துகிறான். "பச்சைக் கட்சிக்காரரோடு உனக்கென்னடா கூட்டு?" இன்னொரு எம்.பி. கத்துகிறான்.

"தர்மராஜ்ஜியம் காணப் போறாயோ? இந்தா வாங்கிக்கொள்" என்றொருவன் கத்தியவாறே, பிக்குவின் வயிற்றில் ஓங்கிக் குத்துகிறான்.

"அம்மே" என்று பிக்கு மெல்ல, வேதனை தாங்காது அலற "டேய் சங்கு, புலியோடயா கூட்டுச்சேரப்போற?" என்று கேட்டவாறே இன்னொருவன் பிக்குவின் ஆண்குறியையும் விதையையும் சேர்த்து ஒரே நசி.

"அம்மே... மஹே அம்மே..."

புத்த பிக்குவின் கண்முன்னே தர்மராஜ்ஜியம் கீழே இறங்கி வந்தது.

சிங்கள பௌத்த நிர்வாணம் பிக்குவுக்குச் சித்தித்தது.

சாது, சாது, சாது...

மஹாநாம தேரரின் ஆசி வழங்கல் அங்கே நிகழ்ந்தது.

❖

## அகாலிகள்

கைக்கடிகாரத்தைப் பார்ப்பதும் நடப்பதுமாய் அவன் எட்டி மிதித்துப் போய்க்கொண்டிருந்தான்.

"ஏய் ரவி, எங்கே விழுந்தடித்துக்கொண்டு ஓடுகிறாய்?" என்றவனாய் அவன் முன்னே, அவனை இடைமறிப்பவனாய், அவன் நண்பன் வந்துகொண்டிருந்தான்.

"சிவா, மன்னிக்கவேணும். எட்டரைக்கு எனக்கு லெக்சர், மிஸ்பண்ண முடியாது. இப்போ அனேகமா எட்டரை ஆச்சு. நான் போகோணும்."

"ஒரு முக்கியமான விஷயம். ஒரு நிமிடம் ஒதுக்கடா" மற்றவன்.

"எக்ஸ்றீம்லி சொறி. லெக்சர் முடிந்து வந்து சந்திக்கிறேன்."

அவன் ஓடுகிறான்.

எட்டரைக்கு லெக்சர் என்று ரவி சொன்னது, சிவாவுக்கு வேறொன்றை நினைவுபடுத்திற்று.

கடிகாரத்தைப் பார்க்கிறான். 8½க்கு இன்னும் இரண்டு நிமிடங்களே இருந்தன.

அவனுக்கு அது சட்டென நினைவுக்கு வந்தது.

காலகி அவனை 8½ மணிக்குத்தானே வரச்சொல்லியிருந்தாள். ஏன் மறந்துபோச்சு? அவன் தலையில் அடித்தவாறு ஓடாக்குறையாக, அவள் வரச்சொன்ன பூங்காவுக்கு விரைகிறான்.

காலகி நேரத்தைப் பார்ப்பதும் அவன் வரும் வழியைப் பார்ப்பதுமாய் நிற்கிறாள். 8½ ஆயிற்று. மேலும் பத்து நிமிடம் பொறுத்தாள். அவன் வருவதாய் இல்லை. அவன் வந்தால், அலுவலகத்துக்கு லீவுபோடுவதாக நினைத்திருந்தவள், இப்போ ஓட்டோவைப் பிடித்துக்கொண்டு அலுவலகத்துக்கு ஓடுகிறாள். பதிவேட்டில் சிவப்புக் கோடு இழுபட்டுவிட்டதோ என்று நெஞ்சில் ஓர் அந்தரம்.

விரிவுரையாளர் கணேஷ் அவசர அவசரமாக வாய்க்குள் காலைச் சாப்பாட்டைத் திணித்தவராய் விரிவுரை நோட்ஸ் தாள்களை வாரிச்சுருட்டிக்கொண்டு விரிவுரை வகுப்புக்கு ஓடுவதற்கான அவசரம். அந்த நேரமாகப் பார்த்து வீட்டுத் தொலைபேசி கிணுகிணுத்தது. நேரத்தைப் பார்க்கிறார். 8.35. றிசீவரை எடுத்து, "ஹலோ" என்கிறார்.

"நான் காலகி, இங்கே"

"என்ன விஷயம்?"

"சரியாக ஒன்பது மணிக்குக் காரை ஸ்ரேசனுக்கு கொண்டு வாருங்க..."

"என்ன..." என்று ஆரம்பித்தவர் பதில் சொல்ல முன்னரே அவள் கைத்தொலைபேசியை நிறுத்திவிட்டாள்.

'யாரை ஸ்ரேஷனுக்கு அனுப்பலாம், இந்த நேரமாகப்பார்த்து யாரும் வீட்டில் இல்லையே' என்று யோசித்தவாறு விரிவுரை வகுப்புக்குள் நுழைகிறார்.

அமைச்சரின் அறைக்குள் நுழைந்த சேவகன், ஒரு கடிதத்தை அவரிடம் நீட்டுகிறான். அதை அவர் அவசரஅவசரமாக உடைத்துப் படிக்கிறார்.

"இன்று காலை பத்து மணிக்குக் கூட்டம். எல்லா விஷயங்களும் ஏற்பாடாகியுள்ளன. கூட்டம் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகும். தலைமையுரை 10.10, வரவேற்புரை 10.20, அமைச்சரின் சேவைபற்றிய உரை 10.30, அமைச்சருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பு 11.00, அமைச்சரின் உரை 11.10, கால ஒழுங்கு பேணுதல் கூட்டத்தின் முக்கிய அம்சம். அறியத்தருவது காலகி."

கடிதத்தைப் படித்த அமைச்சர் அசாதாரண அவசரத்தோடு புறப்படுகிறார். சரியான நேரத்திற்குக் கூட்டத்திற்குச் சமூகமளிக்க வேண்டுமென்ற அந்தரம்.

பத்திரிகை அலுவலகத்திற்குப் பின்வரும் செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன.

இன்று லண்டன் நேரப்படி காலை ஒன்பது மணிக்குக் காலத்தைச் சீர்குலைக்கும் அகாலிகளின் பயங்கரவாத நடவடிக்கைகளுக்கு எதிரான மகாநாட்டில் ஜனாதிபதி பங்கேற்பு.

மாலை 4 மணிக்கு அகாலிகளுக்கு எதிரான தொழிற்சங்கங்களின் எழுச்சிக் கூட்டம்.

'காலை 10 மணிக்கு அகாலிகளின் நடவடிக்கைகளுக்கு எதிராகப் போராடி மறைந்த பாதுகாப்பு அமைச்சரின் பூதவுட

லுக்குச் சுதந்திர சதுக்கத்தில் அஞ்சலி.' ஒவ்வொரு நிகழ்ச்சிக்குப் பின்னாலும் காலகியின் உந்துதல் இருந்தது.

காலகி ரயிலை விட்டு ஸ்ரேஷனில் இறங்கி அங்குமிங்குமாகப் பார்க்கிறாள். அவன் வருவதாய் இல்லைப் போல் தெரிகிறது. கைக்கடிகாரத்தைப் பார்ப்பதும் சுற்றுமுற்றும் விழிகளை ஓட்டுவதுமாய் நிற்கிறாள். அவன் தலைக்கறுப்பே இல்லை. அவள் அந்தரம் மேலிட ஸ்ரேஷனை விட்டு வெளியே வந்து ரோட்டில் ஏறுகிறாள்.

காலகி நடந்துகொண்டிருந்தாள், தன் கையில் கட்டியிருந்த கடிகாரத்தை அடிக்கடி பார்த்தவளாய். அப்போது –

நகர மையத்தில் எல்லோர் கண்களையும் உறுத்துவதுபோல் நிற்கிறது, பெரிய மணிக்கூண்டுக் கோபுரம்.

அதன் ராட்சத காலங்காட்டும் கம்பிகள் அசைந்துகொண்டிருக்கின்றன. அக்கோபுரத்தின் மேலே 'காலகி மாளிகை' என எழுதப்பட்டுள்ளது. அதனடியில் காவலர்கள் நின்றுகொண்டிருக்கின்றனர். அக்கோபுரத்திலிருந்து மக்களை அச்சுறுத்துவதுபோல் சீரான இடைவெளிக்கொருதரம் ஒலிபெருக்கியில் எச்சரிக்கைக் குரல் ஒலிக்கிறது.

"தலைநகருக்குள் அகாலிகள் ஊடுருவியுள்ளதாக எமது புலனாய்வு கூறுகிறது. சந்தேகத்திற்கிடமான முறையில் யாரும் நடமாடுவதைக் கண்டால், உடனே எமது பாதுகாப்புப் பிரிவுக்கு அறியத்தருமாறு பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர்."

அடிக்கொருதரம் இவ்வறிவித்தல் ஒலிக்கிறது.

அம்மணிக்கூண்டுக் கோபுரத்திலிருந்து சற்றுத் தூரத்திற்கப்பால் ஓர் ஒதுக்குப்புறத்தில் யாரோ ஒருவரை எதிர்பார்த்துக் காத்திருப்பதுபோல் ஓர் இளைஞன் நின்றுகொண்டிருக்கிறான்.

அவன் கண்கள் அம்மணிக்கூண்டுக் கோபுரத்தைப் பார்க்கின்றன.

அக்கோபுரத்தருகே வந்த காலகி, இப்பேரண்டத்தின் அசைவு முதல் ஓர் அற்ப அணுவின் சுழற்சிவரையுள்ள கால அட்டவணைத் தொகுப்பே தான் என்பவளாய், அதை மாலையாக அணிந்தவள்போல் சற்று நின்று, பின் அக்கோபுரத்தினுள் சென்று மறைகிறாள்.

திடீரென அந்த மணிக்கூண்டுக் கோபுரம் பெரும் காளி கோயிலாக மாறுவது அவன் கண்களுக்குத் தெரிகிறது.

மூலஸ்தானத்தில் வீற்றிருக்கும் காளியம்மனுக்குத் தீபாராதனை காட்டப்படுகின்றது.

பக்தர்கள் கூட்டமாக நின்று, "தாயே காளியம்மா, அம்மா தாயே காளியாத்தா, அரோகரா அரோகரா!" என்று பக்தி மேலிட்டுக் கோஷமிடுகின்றனர்.

பின்னர் காளியம்மன் தேரேறி ஊர்வலம் வருகிறாள். ஆயிரக் கணக்கான பெண்களின் கைகளில் தேர்வடம் புரள்கிறது. அத் தேர்வடத்தினூடாக அத்தனை பெண்களுள்ளும் காளி நுழைகி றாள். காளியை விழுங்கியவர்களாகப் பெண்கள் 'கலை' ஏறிச் சன்னதம் கொள்கிறார்கள். ஹூக்கும்... ஹூக்கும்... சன்னதம் வேகம் கொள்கிறது.

பல ஆண்கள் செடில்பூறி, காலக்கயிற்றில் தொங்கி ஆடுபவர் களாய், பறவைக்காவடி ஆடி வருகின்றனர்.

அவன் பார்த்துக்கொண்டு நிற்கிறான்.

பவனிவந்த காளியம்மன் திடீரெனப் பத்திரகாளியாக மாறு கிறாள்.

புலிவாகனத்தில் ஏறிவரும் அவள், மனித மண்டை ஓடுகளை மாலையாக அணிந்தவளாய், நாக்கை வெளியே நீட்டிக் கோர ரூபத்துடன் வருகிறாள்.

சனங்கள் பயந்து நடுங்குகின்றனர்.

பெண்கள் சிலர் உக்கிரம் கொண்டு, உருவேறிக் கலையாடத் தொடங்குகின்றனர்.

ஏன் மகாகாளி, பத்திரகாளியாக மாறுகிறாள்?

ஹூக்கும்... ஹூக்கும்... பெண்கள் கலையாட்டம் வேகம் கொண்டது.

அம்மாள் பலி எடுக்கப் போறாள்! அம்மாள் பலி எடுக்கப் போறாள்! ஹூக்கும்... ஹூக்கும்... உலகம் அழியப் போகுது! உலகம் அழியப் போகுது!

காளியின் ஊழிக்கூத்து.

காலரூபியின் கையில் உலக கோளங்கள் நெல்லிக்காயெனச் சிதறி ஓடுகின்றன.

காலனின் கடை விரிப்பு!

சனங்களின் அவலக் குரல் உலகை நிறைக்கிறது.

அந்த இளைஞனின் முகத்தில் ஓர் சிரிப்பு மின்னல்போல் வெட்டி மறைகிறது.

காலகி எப்போது காலனாக மாறுகிறாள்? ஏன் மாறுகிறாள்? என்று தனக்குள்ளேயே கேட்டுக்கொண்ட அவன், மீண்டும் மணிக்கூண்டுக் கோபுரத்தைப் பார்க்கிறான்.

மணி ஐந்தடித்து ஓய்கிறது.

பரபரப்பான மாலை நேரம். நாலாபக்கமிருந்தும் வாகனங்களும் ஆட்களுமாகப் பெருகிக்கொண்டிருந்தது சந்தி.

சனங்கள் வேகமாகப் போவதும் வருவதுமாய் நகர்ந்துகொண்டிருக்கின்றனர். கைக்கடிகாரங்களைப் பார்த்தவராய் ரயில் நிலையத்தை நோக்கி ஓடும் பலர். இன்னும் பலர் பஸ் நிலையத்தை நோக்கி ஓடுகின்றனர். ஓட்டோவை நிறுத்தி, அதற்குள் நுழையும் சிலர். சைக்கிள், மோட்டார் சைக்கிள், வான், கார் என்று பல்வகை வாகனங்களின் காதடைக்கும் இரைச்சலின் மத்தியில் விரைந்துகொண்டிருக்கும் சனம். ஒரு கட்டத்தில் எல்லோரும் காலகியின் தோற்றத்தின் மறுவார்ப்புகளாக மாறிக்கொண்டிருப்பது போல்...

மீண்டும் அவன் கண்கள் மணிக்கூண்டுக் கோபுரத்தைப் பார்க்கின்றன. மணி ஐந்தரை என, அதன் கைகள் சுட்டின.

அவன் சிரித்தான்.

காலம் எங்கே இருக்கிறது?

இந்த மணிக்கூண்டுக் கைகளின் அசைவில் காலம் சிக்கிக் கொள்கிறதா? அவன் திரும்பவும் சிரித்தான்.

காலத்தைக் கைக்கடிகாரத்திலும் கோபுரத்திலும் பார்த்தவாறு ஓடும் மனிதரில் தெறிக்கும் அந்தரமும் அவஸ்தையும்! பாவம், தாமே காலத்தின் ஊற்றுக்கண்ணாய் இருந்து பெருக்கெடுப்பதை உணராது ஓடும் இந்த மனிதர்!

ஒவ்வொருவரின் மனநிலைக்கேற்ப காலம் பெருக்கெடுக்கிறது. புரண்டு வெள்ளமாய் ஓடுகிறது. வரண்டு, வற்றித் தேங்கிச் சிறுக்கிறது. பேரலைகளாய் கரைபுரண்டெழுந்து அவர்களைத் தூக்கி எறிகிறது.

ஒவ்வொருவருள்ளும் காலம் ஒவ்வொருவகையாகப் பெருக்கெடுக்கிறது.

அந்த இளைஞனின் கண்கள் சற்றுத் தூரத்தில், ரோட்டோரத்தில் குந்தியிருக்கும் பிச்சைக்காரனிடம் செல்கிறது.

அந்தப் பிச்சைகாரனிடம் காலத்தின் ஊற்றுக்கண் அடைபட்டதாய் லேசான கசிவு மட்டுமே தெரிகிறது. அவனுக்குச் சற்று அப்பால், இன்னொரு பிச்சைக்காரன் தூங்கிக்கொண்டிருக்கிறான். மாலை வெயில் அவன் தாடியில் பட்டுத் தங்கமுலாம் பூசுகிறது. அவனில் காலப்பெருக்கின் பிரக்ஞையே இல்லை. ஆனால், முன்னர் பெரிதாகப் பெருக்கெடுத்து உறைந்துபோன அதன் தடங்கள் வெயிலில் வெடித்து ரேகைவிட்டுத் தெரியும் சேற்றுப் படிவுகளாய்க் கிடக்கின்றன.

இன்னும் சற்றுத்தள்ளி, ஓர் ஒதுக்குப்புறமாக, ஒருவர் உடலை ஒருவர் தழுவியவர்களாய் நின்றுகொண்டிருக்கும் காதலர்கள், அவர்களைக் காலம் ஒளிவேகத்தில் எங்கெல்லாமோ அள்ளிச் செல்கிறது. மெய்மறந்த நிலை. திடீரென அவர்கள் மணிகூண்டுக் கோபுரத்தின் மேலிருந்து விழுந்தவர்கள் போன்ற அதிர்ச்சியிலிருந்து எழுகின்றனர். நீருக்குள் அமுங்கிப்போனவர்கள் மேலெழ, மேலெழ நீர் வந்து அமுக்குவதுபோன்ற கால அவிழலில் சிக்குண்ட அவர்கள், சுயவிழிப்புற்று வீடு நோக்கி விரைகின்றனர்.

அவசர காரியமாகப் பல்வகை வாகனங்களில் விரைந்து கொண்டிருக்கும் ஒவ்வொருவருள்ளும் காலம் அவர் முன்னெழுந்து பெருஞ்சூறையாய்ப் போகவிடாது பின்தள்ளுகிறது.

அங்கு விரைந்துகொண்டிருக்கும் வாகனங்களும் மக்களும் திடீரென எறும்புகளாகி ஊர்வன போன்ற தோற்றம்.

அவன் பார்த்துக்கொண்டு நிற்கிறான். காலகியின் பலதள நிலைக் கோலங்களைக் கண்டுகொண்டிருந்தவன் முன்னே, அவன் எதிர்பார்த்துக் காத்திருந்த இளைஞன் வந்து நிற்கிறான். வந்ததும் வராததுமாக அவன் தன்னை எதிர்பார்த்துக் காத்திருந்த பெரியவ னிடம் மிக ரகசியமாக, "மன்னிக்க வேணும், நான் வரச் சுணங்கி விட்டது. கனநேரமா காத்து நிற்கிறாயா?" என்றான்.

"என்ன, நீ காலகியின் ஆட்கள்மாதிரி கதைக்கிறாய்? நீ சுணங்கவும் இல்லை. நான் காத்திருக்கவும் இல்லை. நாங்கள் அகாலப் போராளிகள் என்பதை மறந்துவிட்டாயா?" பெரியவனின் கேள்வி.

"நான் இப்போதானே உங்களோடு வந்து சேர்ந்தேன். இன்னும் என் பழைய பழக்கதோஷம் விடவில்லை." – சின்னவனின் விளக்கம்.

"மீண்டும் 'இப்போ' 'அப்போ' என்று காலத்தை இழுக்காதே. நீ எப்போதும் எம்மோடுதான். எல்லாவற்றினது இருப்பும் அகாலமா னது. அதுதான் உண்மை வாழ்க்கை. அதை அறிவதுதான் விடுதலை.

"எனக்கு நீங்கள் சொல்வது ஒன்றும் விளங்கவில்லை. என்ன தான் சொன்னாலும் நாங்கள் காலத்திற்குள்ளேதானே வாழ்கி றோம்?"

"இது பிழையான கருத்து. செக்கு இழுக்கும் மாடு பழக்க தோஷத்தில் சுற்றிச்சுற்றி வருவதுபோல் காலம் என்ற இல்லாத ஒன்றை, சுற்றிவரும் பழக்கதோஷம்."

"காலம் இல்லாத ஒன்றா?"

"ஆம், இல்லாத ஒன்றே இருப்பதாக அதிகாரம் செலுத்துகிறது. பகல் விடிவதும் இரவு வருவதும், இரவில் நித்திரை கொள்வதும்

பகலில் விழித்தெழுவதும் காலம்பற்றிய பொய்மையை அறியாத வனுக்கு உண்மையாய் உள்ளன. தூக்கத்தையும் விழிப்பையும் ஒன்றாகக் காண்பவனுக்குக் காலம் இல்லை."

"நாம் எப்போதாவது காலகியின் கட்டுக்குள் இல்லாது வாழ்ந் திருக்கிறோமா?"

"உங்கள் மனநிலை மாறாதவரைக்கும் இந்தக் கேள்வி வந்து கொண்டுதான் இருக்கும். உங்களைப் போன்றவர்கள் காலகியின் அதிகாரத்தை மறப்பது தூங்கும்போதுதான். விழித்ததும் அவள் தான் உங்கள் எஜமான். அவள் ஆட்டிப்படைக்கும் அடிமைகள் நீங்கள். அதோ பார், ரயிலைப் பிடிக்கக் கைக்கடிகாரத்தைப் பார்த்தவாறு எத்தனைபேர் ஓடிக்கொண்டிருக்கின்றனர். அதோ பார், இன்னும் பலர் முண்டியடித்துக்கொண்டு பஸ்ஸுக்குள் தொற்றுவதை... ஏன் இந்த அந்தரம், ரென்ஷன், பயம் எல்லாம்? இவற்றை வைத்துக்கொண்டுதான் காலகியின் ஆட்சி நடக்குது...!"

"காலம் இல்லாது நீங்கள் காண விழையும் உலகிலும் வேலை, உழைப்பு, இயக்கம் எல்லாம் இருக்கத்தானே செய்யும், அதை நெறிப்படுத்தக் காலம் தேவைதானே?" சின்னவனின் கேள்வி.

"அது பிழையான கற்பிதம். காலம் வேலையை நெறிப்படுத்துவ தில்லை. மாறாக, சீரழிக்கிறது. ஆனால், காலம் இல்லாத இயக் கத்தில் பூரண விழிப்பே ஒவ்வொரு செயலையும் சிறப்புறச் செய்விக்கிறது. தெரியுமா?" என்று பெரியவன் விளக்கிக்கொண்டி ருக்கையில்...

"அண்ணே, அதோ பார், எங்களை நோக்கிக் காலகியின் காவலர்கள் வந்துகொண்டிருக்கிறார்கள். என்ன செய்யலாம்?" என்ற கேள்வியில், சின்னவனின் அந்தரம் தெரிந்தது.

"பயப்படாதே, என்னால் அவர்கள், எங்களை அண்டாமல் செய்ய முடியும்" என்று சொன்னவனாய், தன் இடது கையை உயர்த்தித் தன் கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்க்கிறான்.

இதைக் கண்டதும் அவர்களை நோக்கி வந்த காலகியின் காவலர் திரும்பி வேறு பக்கமாகச் செல்கின்றனர்.

பெரியவன் சிறியவனைப் பார்த்துச் சிரிக்கிறான்.

"ஏன் சிரிக்கிறாய்?" சின்னவனின் கேள்வி.

"நான் கையில் கட்டியிருப்பதைக் கடிகாரம் என்று நினைத்து எங்களையும் தங்களைப் போல் காலத்தைச் சேவிக்கும் காலகியின் ஆட்கள் என்று நினைத்துக்கொண்டார்கள்." – பெரியவனின் விளக்கம்.

"அப்போ, நீ கையில் கட்டியிருப்பது கடிகாரம் இல்லையா?" மற்றவனின் கேள்வி.

"இல்லை, இது எமது அகால இலச்சினை" என்று அவன் விளக்குகையில், "எனக்கொரு சந்தேகம். இப்போ வந்த காலகியின் காவலர்கள் எதையும் பொருட்படுத்தாது எங்களைச் சந்தேகத்தில் கைது செய்ய வந்திருந்தால்...?" என்று சின்னவனின் குறுக்கீடு.

"அந்த நிலையில் நான் எப்போதும் எவரையும் அகால வெளிக்குள் தள்ளிவிட வல்லவனாகவே இருக்கின்றேன். அச் சந்தர்ப்பத்தில் எம்மை அணுகும் எவரும், பழக்கமில்லாத இப்புது அனுபவ நுழைவினால் தடுமாறித் தாம் வந்த நோக்கையே மறந்து விடுவர்."

"அகாலவெளிக்குள் தள்ளுவதா? அது என்ன?"

"அது, உனக்கு இப்போ விளங்காது. பின்னர் விளங்கும். இனிமேல் ஆயுதங்களின் பாவிப்பே அர்த்தமில்லாததாகிவிடும். அதுக்கு இன்னும் கொஞ்சகாலம் இருக்கு. இப்போ வா போவோம் எங்கள் பாசறைக்கு. அங்கே காலம் காட்டாத வாழ்க்கை, காலம் காட்டாத இருப்பு, காலம் காட்டாத மொழி, காலம் காட்டாத வேலை, இயக்கம் என்ற புதிய ஒழுங்கைக் காண்பாய்" என்றவன் கூறுகையில் மற்றவன் ஒருவிதமாகப் பார்த்தான்.

"என்ன சந்தேகமா?" – பெரியவன்.

"என்னதான் காலம் காட்டாத வாழ்க்கை வாழ்ந்தாலும், காலன் வந்தால் சாக வேண்டியதுதானே?"

"இன்னும் உனக்குப் புரியவில்லை. காலம் இருந்தால்தானே காலன் வருவதற்கு?"

"அப்போ சாவில்லையா...?"

"புதுப்புதுத்தள இருப்புத்தான் இருக்கும், புதுவழிச் சித்தர்கள் எழுவர், புரிகிறதா?" என்று கூறியவாறே சின்னவனை இழுத்துக் கொண்டு நடக்கிறான்.

இருவரும் அகாலவெளிக்குள் சென்று மறைகின்றனர்.

❖

# கைதுசெய்யப்பட்ட கிராமம்

வெண் குதிரைகளாய்க் கடல் அலைகள்.

ஒன்றின் மேலேறி ஒன்று; ஒன்றை விழுங்கி மற்றொன்று. அவை சிரிக்கின்றனவா அல்லது கோபாவேசங்கொண்டு அவனைப் பார்த்துக் கர்ச்சிக்கின்றனவா?

கப்பலின் 'கடையால்' பகுதியில் நின்று, பரந்துகிடக்கும் கடலைப் பார்த்துக்கொண்டு நின்றான்.

அலைகளின் தாலாட்டுக்கேற்ப ஆடி, ஆடிச் செல்லும் சிறு படகுகளில் அவன் சின்னக் காலங்களில் பயணம் செய்திருக்கின்றான். நகர்கின்றதா தரித்து நிற்கின்றதா என்பதையே அறியமுடியாத பூதாகரமான ராட்சதக் கப்பல்களிலும் பயணித்திருக்கின்றான். இப்போ அவன் பயணம் செய்துகொண்டிருப்பது அப்படிப்பட்டதல்ல. இடைப்பட்ட முந்நூறுபேர் வரை சௌகரியமாகப் பயணம் செய்யக்கூடிய பயணக் கப்பல்.

அலைகளைக் கிழித்துக்கொண்டு கப்பல் போய்க்கொண்டிருந்தது. கப்பல் விட்டுவரும் ஊரின் கரைகள் தூரத்தூரப் போய்க்கொண்டிருக்க, அவன் அடிவயிற்றில் இருந்து கிளம்பி வரும் துயர் அவன் தொண்டையை அடைப்பதுபோல் மேலேறி வந்தது. நான்கு வருடகாலமாக அடைபட்டுக்கிடந்த வாழ்க்கையில் இருந்து விடுபட்டுச்செல்வது துக்கமான ஒன்றா? விடுதலை என்பது துக்கத்தைத் தருமா? இல்லை; அப்படியானால், ஏன் அவன் நெஞ்சில் துயர் திரள வேண்டும்?

அவன் பிறந்த ஊரை விட்டுப் பிரிகிறோம் என்ற துயர். இதுகாலவரை பழகிய அப்பாவிச் சனங்களை விட்டுப் பிரிகிறோம் என்ற துயர். அதுமட்டுமா? எண்ணிறந்த துயருக்கான காரணங்கள், காகம் குளித்துவிட்டுச் சிறகடிக்கும்போது பறக்கும் நீர்த்திவலைகளாய், அவன் கண்முன் சிதறுகின்றன.

நிற்பதற்கு வசதியாகக் கட்டப்பட்டிருந்த கைப்பிடியில் கையைக் கோர்த்தவாறு மாலை வெயிலில் கடலின் நுரை நகைப்பில்

அள்ளுண்டு அவன் நிற்கின்றான். கைதுசெய்யப்பட்டு, அவன் கிடந்த நான்கு வருடகால நிகழ்வுகள் ஒன்றோடொன்று மோதி முன்னும்பின்னுமாக அவனில் அவிழ்ந்துகொண்டிருந்தன.

கடந்தகால நிகழ்வுகளில் அவன் நீச்சல்.

○

'ஹோ'வெனச் சோளகம் வீசிக்கொண்டிருந்தது.

அதன் வெறித்தனமான ஒப்பாரிக்கு அர்த்தம் ஏற்படுத்துவது போல் புங்குடுதீவு மக்கள் இடம்பெயர்ந்துகொண்டிருந்தனர்.

சைக்கிள்களிலும் 'வான்'களிலும் லொறிகளிலும் மினிபஸ்களிலும் என்று வகைவகையான கோலங்களில் மக்களின் இடப்பெயர்வு. சைக்கிளின் முன்னால் பிள்ளைகளையும், பின்னால் மூட்டைமுடிச்சுகளையும் கட்டிக்கொண்டு சிலர். முன்னால் மனைவியையும் பின்னால் பிள்ளைகளையும் என்று வேறு சிலர். இன்னும் சிலர் முன்னால் பிள்ளைகளை இருத்தி, பின்னால் நாய்க்குட்டி, கோழிக் குஞ்சுகள் என்று பெட்டிகளில் திணித்தபடி. அவற்றின் ஊளையிடல், கொக்கரிப்புக்கள் என்பவை இடப்பெயர்வின் அவலத்தின் ஒப்பாரிபோல் மிதந்தன.

காற்றின் கதறல் நின்றபாடில்லை. ஐப்பசி பிறந்தும் தெற்கிருந்தெழும் சோளகம் நின்றபாடில்லை. வடக்கிருந்தெழும் 'வாடை'யை அடக்கிச் சோளகமே இன்னும் இன்னும் சீறிக்கொண்டெழுந்து வந்தது. மக்கள் சாரிசாரியாக இடம்பெயர்ந்து போய்க்கொண்டிருந்தனர்.

வடக்கிலிருந்த யாழ்ப்பாணத்தை நோக்கி வேகமாகப் போய்க் கொண்டிருந்தனர். தெற்கிலிருந்தெழுந்த சோளகம் அவர்களைப் பின்னின்று தள்ள அவர்கள் பயணம் வேகங்கொண்டது. வான்களினதும் மினிபஸ்களினதும் முகடுகளில் மூட்டைமுடிச்சுக்கள் சிறுசிறு குன்றுகளாய்ச் சிகரம்கட்டி நிற்க, வாகனங்களுள் ஆட்கள் அடசப்பட, இடம் கிடைக்காதவர்கள், தமக்களவான பைகளில் தமக்குரிய அத்தியாவசியப் பொருட்களைக் காவியவர்களாய் நடந்துகொண்டிருந்தனர்.

அவர்கள் ஒவ்வொருவரது முகத்திலும் பீதியும் அந்தரமும் நிழலாடின. ஏதோ பெரும் அனர்த்தத்திலிருந்து தப்பிவிட வேண்டும் என்பதற்கான அந்தரம். உண்மைதான்; அவர்கள் இன்று இரவுக்குள் யாழ்ப்பாணம் சென்றுவிட வேண்டும்.

அப்படித்தான் போராளிகள் அறிவித்திருந்தனர்.

இன்றிரவோ அல்லது நாளை அதிகாலைக்குள்ளோ புங்குடு தீவுக்குள் ஆமி நுழைந்துவிடும். அதை அவர்களால் நினைத்தே பார்க்க முடியவில்லை. அவர்கள் கைகளில் சிக்கி, சித்திரவதைக்

குள்ளாகிச் சாவதைவிட, எங்காவது உயிர்தப்பி வாழ்வது மேல். இடம்பெயர்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவரது நெஞ்சையும் அழுத்திக்கொண்டிருக்கும் இந்தப் பீதி, அவர்களை முன்தள்ளிக் கொண்டிருந்தது.

நேரம் ஆக, ஆகக் காற்றின் கொக்கரிப்பு பேய்க்கூச்சலாக மாறிக்கொண்டிருந்தது.

மனதை ஆக்கிரமித்துக்கொண்டிருந்த பீதியும் அவசரமும் எதை எடுத்து மூட்டைகட்டுவது, எதை விட்டுப்போவது என்று தெரியாதவாறு சனங்களை ஆட்டிப்படைத்தன. கொஞ்சம் சுணங்கி விட்டால் வாகனங்களைத் தவறவிட்டுவிட நேரலாம். பின்னர் எஞ்சியிருப்பது நடைதான். பிள்ளைகுட்டிகளோடு நெடுந்தூரம் நடக்க முடியுமா? இது என்ன முன்னைய கதிர்காம யாத்திரையா; ஆடிப்பாடி, சமைத்துச் சாப்பிட்டுச் சல்லாபித்துச் செல்ல? ஒவ்வொருகணத் தாமதமும் உமது உயிரோடு விலைபேசுவதாக முடியும்.

அப்படித்தான் போராளிகளின் அறிவுறுத்தல் தோரணை இருந்தது.

"எனக்கெண்டா மோனை, யாழ்ப்பாணத்தில் ஆருமில்லை. நான் அங்க போய் ஆரோட இருக்கிறது?" தனிக்கட்டையாக ஒரு கொட்டிலில் வசித்துவந்த ஒரு கிழவி, போராளி ஒருவனின் நாடியைத் தடவியவாறு கேட்டாள்.

"நீங்க என்னவாலும் செய்யுங்க, ஆச்சி. நாங்க சொல்லிறதைச் சொல்லிப்போட்டம். அது எங்கட கடமை" – இவ்வாறு கூறிக் கொண்டே அவன் வேகமாகச் சைக்கிளில் போய்க்கொண்டிருந் தான். அவனது நிலையில்கூட ஏதோ சுற்றிவளைப்புக்குள் மாட்டிக் கொண்ட அந்தரம் தெரிந்தது.

காற்று, பேய்மாதிரி ஊளையிட்டுக் கொண்டிருந்தது. அதன் ஊளையின் உக்கிரம், கூட்டமாய் நின்ற பனங்கூடல்களில் பட்டுத் தெறித்து, சடைத்து நின்ற வேம்புகளை உலுக்கி, பரிகலங்கள் மாதிரி கீழிறிங்கி, கூட்டுவாரற்று முற்றங்களில் கிடந்த குப்பைகளை வாரி அள்ளி எடுத்துச் சிதறிச் சென்றது.

மாலை ஆகிக்கொண்டிருந்தது.

ஆனால், காற்று ஓய்வதாய் இல்லை. மாறாக, யாழ்ப்பாணம் நோக்கிப் போவோரும், அவர்களை ஏற்றிக்கொண்டு போகும் வாகனங்களுமாய் நீண்டிருந்த புங்குடுதீவின் பிரதான பாதை ஓய்ந்துபோய்க்கொண்டிருந்தது.

இரண்டொருவர் சைக்கிளில் வேகமாகப் போய்க்கொண்டிருந் தனர். மேற்கின் தொலைவில் வாகனம் ஒன்று உறுமுவது லேசாக

விட்டுவிட்டுக் கேட்டது. எஞ்சிக்கிடந்த கிழடுகட்டைகளையெல்லாம் ஒன்றுவிடாது வழித்துத் துடைத்துக்கொண்டு வரும் கடைசி வாகனமாகவும் அது இருக்கலாம். உண்மைதான்; அந்த வாகனம் ஆலடிச் சந்திக்கு வந்தபோது, அதில் கிழடுகட்டைகளே நிரம்பியிருந்தது தெரிந்தது. அதில், இரண்டொரு பிராமணரின் முகங்களும் தெரிந்தன.

ஆலடிச் சந்தியில் அது சிறிது தரித்து, யாராவது இன்னும் ஏறிக்கொள்வதற்கு இருக்கிறார்களா என்று பார்ப்பதுபோல் நின்று, அவ்விடத்தைவிட்டு மெல்ல நகர்ந்தது. அது சிறிது தூரம் நகர்ந்திருக்காது, சொல்லிவைத்தாற்போல் தெற்குக் கடலோரத்தில் இருந்த கண்ணகி அம்மன் கோவில் மணி அடிப்பது காற்றின் இரைச்சலுக்கும்மேலாகக் கேட்டது.

யார் மணியை அடிப்பது? எல்லாரும் ஓடிவிட்ட நிலையில் இன்னும் அங்கே மணி அடிக்க யார் இருக்கிறார்கள்? அப்படிச் சொல்லமுடியாது. இன்னும் அங்கே சிலர் இருக்கத்தான் செய்கிறார்கள். இவர்கள், கிராமத்தில் என்ன நடக்கிறதென்றே தெரியாத அளவுக்குச் சமூகத்தோடு தொடர்பு கெட்டுப்போன தனித்த தீவுகள் – ஒருவகை றொபின்சன் குருசோக்கள். வழமையாகத் தாம் செய்யும் காரியத்தை முடுக்கிவிட்ட பொம்மைபோல் செய்யுமிவர்களின் கையில் அகப்பட்ட கோயில் மணி, குறித்த நேரத்தில் அடிக்கிறது.

டாண், டாண், டாண்...

"ன்ண்" என்று இரையும் மணி ஓசையின் இறுதி எச்சம், "எங்கே ஓடுகிறீர்கள்? என்னை விட்டு எங்கே ஓடுகிறீர்கள்?" என்று கடவுள் கேட்பதுபோல், கண்ணகி அம்மன் கேட்பதுபோல் அங்கெழுந்துகொண்டிருந்தது.

கடவுளுக்கு எத்தனையோ நேர்த்தியும் அர்ச்சனையும் அபிஷேகமும் செய்து பூஜித்த மக்கள், கடவுளைத் தனியேவிட்டு ஓடுகிறார்கள். இதையும்விட வேடிக்கையானது, கடவுளின் அருளை மக்களுக்கு எடுத்துக்காட்டி, கடவுளையே நம்பி வாழ்ந்த பிராமணர்கள் எல்லோருக்கும் முந்தி ஓடுவது.

தனித்துவிடப்பட்ட கடவுளும் கோயிலும்.

'ஹோ ஹோ'வென வீசிய சோளகம் கடவுளின் ஊழிச்சிரிப்பாய் அதிர்ந்தது. மெல்லிதான மஞ்சள் வெயில், மறையப்போகும் கதிரவனின் சோகத்தையா அல்லது எமது கிராமத்தின் சோகத்தையா எழுதிக்கொண்டிருக்கிறது?

மேலே பொம்பர் விமானங்கள் வட்டமிடத் தொடங்கின. இடைக்கிடை கோடையிடியாய்க் குண்டுகள் வந்து விழுந்தன. யமகிங்கரராய் ஆமிக்காரர்கள் நம் கிராமத்துள் நுழையப் போகிறார்

கள் என்பதைக் கட்டியம் கூறுவனவாய் அவை வீழ்ந்துகொண்டிருந்தன.

2

நூற்றுக்கணக்கான கைகள் தேர்வடத்தை இறுக்கிப் பிடித்தன. கலட்டிப் பிள்ளையார் கோவில் முன்றலில் நிலைத்துநின்ற தேர், வீதிவலம் வருவதற்கு ஆயத்தமாயிற்று.

'அரோகரா, அரோகரா' என்று எல்லோர் வாயும் அவர்களை அறியாமலே பெருங்குரல் எடுத்துக் கத்தத்தொடங்கின.

'அரோகரா' கூச்சல் உச்ச ஸ்தாயியை அடைந்தபோது, மெல்லத் தேர் அசையத் தொடங்கிற்று.

தேர் அசைந்தபோது, குழந்தைகளோடு தாய்மார் குனிந்து அவற்றின் கைகளைத் தேர்வடத்தைத் தொடவைத்துத் தாமும் தொட்டுக்கொண்டனர். தேருக்குப் பின்னால் ஆண்கள் பிரதட்சணை செய்துகொண்டு வந்தனர். பெண்கள் தேரடி அழித்து வந்தனர். பெண்கள் சிலர் கண்ணகிபோலத் தம் கூந்தலை அவிழவிட்டு, "ஊஹூம் ஊஹூம்" என்று மூச்செறிந்தவர்களாய் 'கலை' ஆடிக்கொண்டு வந்தனர். அவர்கள் போட்ட ஆட்டத்தின் வேகத்தில் உயர்ந்த கைகளில், பிள்ளையார் அகப்பட்டுத் திக்குமுக்காடுவது போல் பட்டது.

தேருக்குப் பின்னால் வந்த கிழங்கள் தேவாரம் பாடி வந்தனர். முன்னால் காவடியாட்டம் நடந்துகொண்டிருந்தது. கட்டாடி ஆறுமுகத்தின் வழிவந்த ஒருவன், பெருங்காவடியைத் தோளில் சுமந்து செடில் பூறி நன்றாகவே ஆடிக்கொண்டு நின்றான். அவன் பின்னால் கயிறெறிந்து நின்றவன், தவில்காரனின் கம்பு விழுத்திய தாளத்திற்கு ஏற்ப காவடிக்காரனை ஆட்டுவித்துக் கொண்டு வந்தான். சிறுவர்களும் விடலைகளும் காவடியாட்டத்திற்குப் பின்னால் இழுபட்டனர்.

தேர், 'அரோகரா' சத்தத்தின் பொழிவின் மத்தியில் தெற்கு வீதிப் பவனி முடித்து, மேற்கு வீதிக்குத் திரும்பியது. தேருக்குப் பின்னால் உருண்டுகொண்டு வந்த ஆண்கள், தேரடியழித்து வந்த பெண்கள், தேருக்குப் பின்னால் தேவாரம் பாடி நெக்குருகிக் கண்ணீர் சொரிந்தவர்களாய் நின்றவர்கள், கலையாடி வந்த பெண்கள் ஆகிய அத்தனை பேரும் தம் உடல் பொருள் ஆவி அனைத்தையும் அந்த கலட்டி விநாயகனுக்கே அர்ப்பணித்துவிட்ட கோலத்திலேயே காட்சி தந்தனர்.

தேர் அசைந்தது.

மேற்கு வீதி முடித்து, வடக்கு வீதி வலம்வரத் தேர் திரும்பியது. 'அரோகரா' சத்தங்கள் வானத்தைப் பிளப்பதுபோல் எழுந்தன.

தேரில் நின்ற பிராமணர் விண்ணுறையும் இறைவனைத் தானே மண்ணுக்கு இறக்கி அருள் பாலிக்கப்போகும் தோரணையில் நின்றுகொண்டிருந்தார். அவர், தேர்ச் சாரதிபோல் இடுப்பில் கைவைத்துக்கொண்டு நிற்க, நூற்றுக்கணக்கான அடிமைகள் தேர் வடத்தைப் பற்றி இழுப்பதுபோல் பட்டது.

அங்கு வெறும் மேலோடு நின்று இழுத்தவர்கள் பிள்ளையாரின் அடியார்களா அல்லது காலங்காலமாக வந்த பிராமணீயத்தின் அடிமைகளா?

தேரில் நடுநாயகமாகத் திருவாசியில் சோடிக்கப்பட்டிருந்த பிள்ளையார் சிரிப்பதுபோல் பட்டது. யாரைப் பார்த்துச் சிரிக்கிறார்?

தேர், வடக்கு வீதியில் கிழக்கு நோக்கி வேகமாக வந்துகொண்டிருந்தது. கிழக்கு வீதி, தெருவோரமாக அமைந்திருந்தது. தெருவோரத்தில் பெருவிருட்சங்களாக வில்வமும் மருத மரங்களும் நின்றன. அவற்றின் கிளைகள் நாலாபக்கமும் பரவி விண்வெளியைக் குடைந்தவண்ணம் இருந்தன.

தேர், மிக வேகமாக வந்துகொண்டிருந்தது. மரத்தாலான பெரிய சில்லுகளைக் கொண்ட பழையகாலத் தேர். 'அரோகரா' 'அரோகரா' என்று மக்கள் கொடுத்த உற்சாகத்தில் தேரை இழுத்தவர்கள், கொஞ்சம் வழமைக்கு மாறாகவே இழுவையில் வேகத்தை கொடுத்திருக்க வெண்டும். அதனால், கிழக்கு நோக்கி வேகமாக வந்த தேரை, மீண்டும் கோயில் வாசலுக்குக் கொண்டுசெல்லச் சற்று உள்விழுத்தியே தெற்கு நோக்கித் திருப்பியிருக்க வேண்டும். ஆனால், வந்த வேகத்தில் அது, அவர்களால் முடியவில்லை. வேகமாக வந்த தேர், நெடிது வளர்ந்து நாலாபுறமும் கிளைகள் பரப்பியிருந்த மரங்களருகே வந்துதான் திரும்பக்கூடியதாக இருந்தது.

அதனால், அந்தக் கணப்பொழுதில் அது நடந்து முடிந்துவிட்டது!

தேர் மரங்களருகே வந்து, தனது வேகத்தை உள் விழுங்கித் திரும்பியபோது, இதற்கெனவே காத்திருந்தவைபோல் நீண்டிருந்த மரக் கிளைகள் தேர்முடியைத் தட்டிவிட்டன. அவ்வளவுதான் அடுத்த கணம் –

"தேர்முடி சாய்ஞ்சு போச்சு! தேர்முடி சாய்ஞ்சு போச்சு!" என்று ஏககாலத்தில் கூக்குரல்கள் எழுந்தன.

"ஐயோ, தேர்முடி சரிஞ்சு போச்சே. ஐயோ, தேர்முடி சரிஞ்சு போச்சே" என்று பெண்கள் பலர் ஒப்பாரிவைக்க, ஏற்கனவே 'கலை' ஆடிக்கொண்டிருந்த பெண்கள், மின்சாரம் பாய்ச்சப்பட்டவர்கள்போல் துள்ளி எழுந்து ருத்ர கோலம் கொண்டனர். "ஐயோ, என்னவோ அழிவு வரப்போகுது" என்று ஒருத்தி குதிக்க, "ஏதோ துக்குறி காட்டுது" என்று இன்னொருத்தி கீச்சிட, 'கலை'க்காரி

களுக்கெல்லாம் தலையாளியாகக் கருதப்பட்ட ஒல்லியான ஒருத்தி, "உஹாம் உஹாம்" என்று மூச்செறிந்து அவிழ்ந்த கூந்தலை நாலாபக்கமும் சுழற்றி, "அம்மாள் ஆச்சி பலி கேக்கிறாள். பலி கேக்கிறாள்" என்று கூச்சலிட, அவளைச் சுற்றிப் பல வயதுபோனவர் கள் "ஆச்சி தாயே, என்னம்மா சொல்லிற, என்னம்மா சொல்லிற?" என்று ஆருடம் கேட்கத் தொடங்கினர்.

பெருவிழாக் கோலம் பூண்டிருந்த அவ்விடம் ஓர் அவல நிலைக்குள் தள்ளப்பட்டு, அல்லோகல்லோலப்பட்டது. விழா அப்படியே முடிவுக்கு வந்தது.

○

இது நடந்து சிறிது காலத்திற்குள் புங்குடுதீவு மக்கள் இடம் பெயர்வுக்குள்ளாயினர். இடம்பெயர்ந்து யாழ்ப்பாணத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்த சிலரின் பேச்சில், தேர்முடி சாய்ந்ததும் பேசப்பட்டது. ஆனால், தம் உடல், பொருள் ஆவி அனைத்தையும் பிள்ளையாருக்கே அர்ப்பணித்துவிட்டோம் என்பதுபோல் நடந்து கொண்ட அவர்களில் எவரும், இப்படிப் பிள்ளையாரைத் தனியே விட்டு ஓடுகிறோமே என்று நினைக்கவே இல்லை.

பிள்ளையார் சிரித்திருப்பாரா? ஆனால், அவனுக்கு உண் மையாகவே சிரிப்பு வந்தது. அந்தச் சிரிப்பில் மெல்லிதான ஒரு விரக்தியின் வாடை. ஆலடிச் சந்தியில் தெருவோரமாக இருந்த அவனது வீட்டில் நின்றவாறு இடம்பெயர்ந்து செல்லும் மக்களைப் பார்த்துக்கொண்டு நின்ற அவனுக்கு ஆழமான துயரம் அடிவயிற்றி லிருந்து கிளம்பி மெல்லமெல்ல மேலெழுந்து வந்தது.

இவ்வளவு காலமும் தாம் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்திருந்த ஊரை ஒரு நொடிப் பொழுதில் தூக்கியெறிந்தவர்களாய், தமக்கும் இந்த ஊருக்கும் எந்தவித பந்தமும் இல்லை என்பதுபோல், தமது ஆடையில் ஒட்டியிருக்கும் அற்ப தூசைத் தட்டிவிடுவதுபோல் தட்டிவிட்டு ஓடுகிறார்களே, இது எவ்வாறு முடிந்தது?

உயிர்வாழ வேண்டும் என்ற வேட்கை? இந்த வேட்கையின் முன்னே இவர்கள் போற்றிய பண்பாடு, நம்பிக்கைகள் விழுமியங்கள் எல்லாம் அற்பமாய்ப் போய்விடுகின்றனவா?

உயிர் வாழ்ந்தால்தானே இவற்றைப் பாதுகாக்க முடியும்? அப்படியா? அல்லது நம்மைக் கொல்ல வரும் பகையை, எதிர்த்து நின்று போராடு என்று நம்மைப் பணிக்க வைப்பதுதான் உயர்ந்த பண்பாடு, உயர்ந்த விழுமியங்கள் என்று சொன்னால் தவறாகுமா? அப்படியானால், இங்கே ஓடிக்கொண்டிருப்பவர்கள் எல்லாம் உயர்ந்த பண்பாடும் விழுமியங்களும் அற்றவர்களா? அல்லது அப்படியானவற்றைக் கொண்டிருந்தும் ஆழமான விளக்கமற்றதால் ஓடுகிறார்களா?

இல்லை, அப்படியும் சொல்ல முடியாது.

எதிரி பலமாய் இருக்கும்போது அவனை எதிர்கொள்வதென்பது அறிவீனம். எம்மைப் பலமுற வைத்தபின் எதிர்கொள்வதே விவேகம். அங்கே ஓடிக்கொண்டிருப்பவர்கள் இந்த அறிவோடுதான் ஓடுகிறார்களா? இல்லாமல் இருக்கலாம். ஆனால், உள்ளுணர்வின் உந்தலில் இந்த வெளிச்சம் இருக்கவே செய்யும்.

அவன் தனது விசாரணையில் மூழ்கியிருந்தபோது, கடைசியாக யாழ்ப்பாணம் நோக்கிச் சைக்கிளில் போன இருவர் திரும்பி வந்துகொண்டிருந்தனர். அவன் தலைக்கறுப்பைக் கண்டதும், "மாஸ்ரர், ஆமிக்காறன் வேலணைப் பாலத்தடிக்கு வந்திற்றான்" என்று ஒருவர் உரத்துக் கூறிக்கொண்டே சைக்கிளை வேகமாக மிதித்தார்.

பொங்கிவரும் முன்னிரவுபோல் அவன் மனதிலும் ஒருவகைப் பீதி கருக்கொண்டு கவியத் தொடங்கியது.

அவர்களைப் போல் இவனும் யாழ்நோக்கி ஓடாமல் இங்கேன் தங்கியிருக்க வேண்டும்? அதுவும் தன் குடும்பத்தோடு?

அப்போது, அவனுக்குத் தீட்சையளித்த அவனது குருவின் அமைதியான முகம் முன்னெழுந்தது.

முப்பது வருடங்களுக்கு முன் அவர், அவனுக்கும் அவன் அண்ணாவுக்கும், அவன் நண்பன் துரைக்கும் தீட்சையளித்த நிகழ்வுகள் முன்னெழுந்தன. அதற்குப்பின் அவர்களுக்குக் கிடைத்த ஆத்மீக அனுபவங்கள், அதன்மூலம் அவர் தன்னை யாரென்று வெளிப்படுத்திய நிகழ்வுகள் இன்று நடந்ததுபோல் அவன் நெஞ்சில் விரிந்துகொண்டிருந்தது. இன்று அவர் இல்லை. அவர் மகாசமாதியடைந்து முப்பது வருடங்கள் ஆகிவிட்டன. ஆனால், அவரது அஸ்தி புங்குடுதீவிலிருக்கும் ஆச்சிரமத்தில் பேணிப் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

இந்த அஸ்தியை, அவரது சமிக்ஞை கிடைக்காது அங்கிருந்து வேறெங்கும் கொண்டுபோக முடியாது.

ஆகவே, அவன் அங்கேயுள்ள அவரது அஸ்தியை விட்டுவிட்டு மற்றவர்களோடு சேர்ந்து இடம்பெயர முடியாது. அது, குருத்துரோகமாக முடியும் என்று நினைத்தான்.

அவனுக்குத் துணையாக, அவனது நண்பன் துரையும் அந்த ஆச்சிரமத்தில்தான் நேற்றுவரை இருந்தான்.

ஆனால், இன்று அதிகாலைதான் அவன், இவனுக்குக்கூடச் சொல்லிக்கொள்ளாது, தனது தனிப்பட்ட காரியத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக யாழ்ப்பாணம் போய்விட்டான்.

ஆச்சிரமத்துக்குப் பொறுப்பான அவனுக்குச் சொல்லிக்கொள் ளாது, அவன் ஏன் யாழ். போனான்?

ஆச்சிரமத்தில் நடைபெறும் பூஜைக்குரிய பொருட்கள் வாங்கிவரப் போனதாக அவன் மனைவி கூறினாள்.

அது பொய்யென அவனுக்குத் தெரியும். அப்படி பூஜைக்குரிய சாமான்கள் தேவைப்படும் பட்சத்தில் அது இவனுக்குத் தெரியாமல் போகாது.

அவன் குருவை நினைத்துக்கொண்டான். இத்தகைய பொய் மைகளை அவர் தண்டிக்காது விடுவதில்லை. அவன் துக்கப்பட் டான். நண்பன் பெருஞ்சிக்கலுக்குள் மாட்டிக்கொள்ளப் போகிறான் என்பது இவனுக்குத் தெரிந்தது. அவ்வாறே அவனுக்கு நடந்தது.

அன்று அதிகாலை அவனுக்குச் சொல்லிக்கொள்ளாது யாழ். போன அவனது நண்பன், அங்கேயே அடைபட்டுக்கொண்டான். காரணம், அவன் போன அன்று மாலையே ராணுவம் தீவுப்பகு திக்குள் நுழைந்துவிட்டது. இனி, ராணுவத்தால் ஆக்கிரமிக்கப் பட்ட தீவுப்பகுதிக்கும், புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்த யாழ்ப் பாணத்துக்கும் எந்தவித தொடர்பும் இருக்கப்போவதில்லை. அங்கி ருந்தவர்களுக்கு இங்கு வரவோ, இங்கிருந்தவர்களுக்கு அங்கு போகவோ இனிமேல் முடியாது.

அவனுக்கு நெஞ்சு திக்கொன்றது. இந்த நேரத்தில் அவனது நண்பன், அவனைக் கைவிட்டுவிட்டுச் சென்றுவிட்டான். போதா தற்கு அவனது மனைவி பிள்ளைகளையும் இவன் பார்க்கவேண்டிய பொறுப்புக்குள்ளும் தள்ளிவிட்டிருந்தான்.

சாதாரண காலம் என்றால் இது ஒரு பிரச்சினையே இல்லை. ஆனால், இப்போது அவன் முகங்கொடுத்துக்கொண்டிருக்கும் சூழல் வித்தியாசமானது.

கொலை வெறியோடு உள்நுழையும் ராணுவம்.

பொதுவாகவே தாம் செல்லும் இடமெல்லாம் தமிழ்ச்சனங் களைப் பலவித நொண்டிச் சாட்டுகளை முன்வைத்துக் கொன்று குவிக்கும் ராணுவம், புலிகள் இருந்துவிட்டுச் சென்ற இடத்துக்குள் நுழையும்போது அதன் வெறி பன்மடங்கு மூர்க்கங்கொள்ளலாம்.

அவன் நெஞ்சு அச்சத்தால் கனத்தது.

ஆனால், அது சிறிது நேரந்தான். அடுத்த வினாடி, அது அமைதியில் திளைத்தது.

அவன் யாருக்காக அங்கே தங்கியிருக்கிறான்? தனது விருப்புக் காகவா? இல்லை; சுவாமிக்காக. அதாவது, அவனது குருவுக்காக. ஆகவே, அவனைக் காப்பாற்றுவதும் விடுவதும் அவரது பொறுப்பு.

இப்படி நெருக்கடிகள் வரும் ஒவ்வொரு கணமும் அவனும் அவனது சகோதரனும் தாம் நம்பிய குருவை உரைத்துப்பார்க்கும் பரீட்சை யாகவே எடுத்துக்கொள்வர்.

இவ்வாறு பார்க்கத் தொடங்கும்போது அவன் முன்னெழும் பிரச்சினையின் பரிமாணமே மாறத் தொடங்கும். உயர்ந்த தொகை யைப் பந்தயத்தில் வைத்து ஆடும் சூதாடிகளின் திகில் அவனைக் கௌவிக்கொள்ளும்.

அவனுக்கும் வெளிப் பொருட்களுக்கும் தரகுவேலை பார்த் துக்கொண்டிருந்த 'நான்' அழிய, இருப்பின் தரிசனத்தில் மூழ்கும் நிலை.

அவன் சிரித்துக்கொண்டான்.

*3*

வானம் கறுத்து, மெல்லக் குளிர்காற்று கீழ் இறங்கி, இலை தழைகளைத் தடவிவரத் தொடங்கியதும் மழை வரப்போகுதென் பதை அறிந்து ஆடு, மாடுகள் வீட்டை நோக்கி வரிசை, வரிசையாகக் கிளம்புவதையே மக்களின் இடப்பெயர்வு அவனுக்கு நினைவூட் டிற்று. மனிதர்களை மட்டுமல்ல மிருகங்கள், பறவைகள், பூச்சிகள் எல்லாவற்றையுமே இப்படித்தான் ஆபத்திலிருந்து தப்பவைக்கும் இடப்பெயர்வு. வானத்தில் கூட்டமாய்ப் பறந்துபோகும் பறவைகள், வரிசை, வரிசையாய் ஊர்ந்துசெல்லும் அற்ப எறும்புகள்.

புங்குடுதீவு மக்கள் இடம்பெயர்ந்து போகின்றார்கள். எறும்பு கள் இடம்பெயர்ந்து செல்லுகின்றன. இந்த உலகில் புங்குடுதீவு மக்களின் இடப்பெயர்வு, இந்த எறும்புகளின் இடப்பெயர்வைவிட என்ன வகையில் உயர்வான தாக்கத்தை ஏற்படுத்திவிடப்போகிறது?

அப்படி அவன் யோசித்தபோது, அவனுக்குத் தன்மேலும் அந்த மக்கள்மேலும் இனம்புரியாத பச்சாத்தாபம் ஏற்படுவதுபோல் பட்டது.

முன்னரும் இரண்டு தடவைகள் புங்குடுதீவு மக்கள் இடம் பெயர்ந்து யாழ்ப்பாணம் போனதுண்டு. ஆனால், ஆமிக்காரன் வரமாட்டான் என்பது ஊர்ஜிதம் ஆனதும், இரண்டு நாட்களில் ஊர் திரும்பிவிட்டார்கள்.

ஆயினும், ஊர்காவற்றுறை ஊடாக வந்து ஆமி புங்குடுதீவுக் குள் நுழைந்துவிடும் என்ற அச்சம் புங்குடுதீவு மக்களுக்கு எப்பவும் அடியோடி இருந்தது. 90இல் கஜபாகு படையணி அவ்வாறுதான் கிளம்பி வந்து, வேலணை பங்களாவடியாலும், அராலி வடக்கு ரோட்டாலும் சுற்றி வந்து, ஈற்றில் மண்டைதீவுக்குச் சென்றபோது நிகழ்ந்த அழிவுகள் அவன் மனக்கண்முன் ஆடிற்று.

தெருவோரமாக இருந்த ஒவ்வொரு வீட்டுப் படலையிலும் ரயர் போட்டு எரித்தும் எரியாததுமாகக் கிடந்த பிணங்கள்: அவற்றில் கால் கருகியவை, கை கருகியவை என்று பல ரகம். அராலிச் சந்தியிலிருந்து பங்களாவடிச் சந்தி வரை நீண்டிருந்த அப்பகுதி ஒருவகைச் சுடுகாடாய் மாறியிருந்தது. இந்தக் கோரத் தனத்தின் உச்சத்தை மண்டைதீவு சந்தித்தது.

ஆனால், நல்ல காலம் கஜபாகு படையணி அவ்வேளை புங்குடுதீவுக்குள் நுழையத் துணியவில்லை. காரணம், வேலணையை யும் புங்குடுதீவையும் இணைக்கும் அம்பலவாணர் பாலத்தைக் கடந்து, புங்குடுதீவுக்குள் நுழைந்து, பின்னர் புலிகளின் சுற்றிவளைப் புக்குள் சிக்கிக்கொள்ள வேண்டிய 'றிஸ்க்'கை அவர்கள் எடுக்க விரும்பாததே. அதனால், அப்போது புங்குடுதீவு தப்பியிருந்தது. அதன் தெருவோரங்களில் பிணங்கள் எரியவில்லை.

ஆனால், தொடர்ந்து அந்த நிலை நீடிக்கப்படமாட்டாது என்பதைச் சுட்டுவதுபோலவே, 91இன் பிற்பகுதியில் ஆமி புங்குடு தீவுக்குள் புகுந்தது. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதற்கு முன் தீவுப் பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துவிட வேண்டும் என்று ஜெனரல் டென்ஸில் கொப்பேகடுவ போட்ட திட்டத்தின் விளைவே இது.

○

இருள் கவிந்துகொண்டு வந்தது. அதன் குவிப்பில் தடிப் பேறிற்று. சதா சுற்றாடலில் உள்ள பிள்ளைகளின் சத்தம் என்றும், வந்து போகும் வாகனங்களின் இரைச்சல் என்றும் கலகலத்துக் கொண்டிருக்கும் ஆலடிச் சந்தி, அன்றிரவு ஏழு மணிக்குள்ளேயே அடங்கிப்போயிற்று. ஓர் அசாதாரண பேரமைதி!

இனிமேலும் அங்கே அவனும், அவனது குடும்பமும் தனித்தி ருப்பது புத்திசாலித்தனமல்ல. ஆலடிச் சந்தியில் அவனுடையதே முதல் வீடு. ஆமி வரும்போது எதுவும் நேரலாம். அதனால், கிழக்கே அவன் பிறந்து வளர்ந்த தாய் வீட்டுக்குப் போக ஆயத்த மானான். இதுவும் ஓர் இடப்பெயர்வுதான்! அந்த இடத்தை ஓர் ஆச்சிரமம் என்று இவனும், இவனைச் சார்ந்தவர்களும் அழைத்தார்கள். காரணம், அங்குதான் இவனது ஆத்மீக வழிகாட்டி யின் அஸ்தி இருந்தது. அந்த அஸ்தி பேணப்பட்ட இடத்தை விட்டெறிந்துவிட்டு இவன் இடம்பெயர்ந்து யாழ்ப்பாணம் போக விரும்பவில்லை. அவன் யாழ்ப்பாணம் போகாததற்குக் காரணம் இதுவே என்று அந்த ஆச்சிரமத்தில் இருந்த, இவனைச் சார்ந்த இரண்டொருவரைத் தவிர வேறெவருக்கும் தெரியாது. இரவோடிர வாக இவனும் தனது குடும்பத்தோடு அந்த ஆச்சிரமத்துக்கு வந்து சேர்ந்துவிட்டான்.

இரவு நித்திரையின்றிக் கழிந்தது.

நித்திரையின்றித் தவித்த அவன்முன் கனவாக ஒரு பயங்கரக் காட்சி விரிகிறது. யாரோ அவனது கைகளிரண்டையும் பின்னால் கட்டி ரோட்டில் தூக்கிப்போடுகின்றனர். அவன் ரோட்டில் அனாதரவாகக் கிடந்தபோது, முகத்தைக் கரித்துணியால் கட்டிய பயங்கர உருவம் தோன்றிச் சுட்டுத்தள்ளுகிறது. அவன் பயங்கரமாக அலறியவாறு விழித்துக்கொள்கிறான்...

ஏன் இந்தக் கனவு? வரப்போகும் ராணுவம்பற்றிய பீதியா?

இடம்பெயர்ந்து போனவர்களைத் தவிர புங்குடுதீவில் பல்வேறு காரணங்களுக்காக – பஸ்ஸைத் தவறவிட்டவர்கள், யாழ்ப்பாணத் தில், போய்த் தங்க இடமற்றவர்கள், இடையில் ஆமியைக் கண்டு திரும்பி ஓடிவந்தவர்கள், எழுந்து நடமாட முடியாதவர்கள், அங்க வீனர்கள் என்று தங்கிவிட்டவர்கள் எல்லாருக்கும் இரவு நித்திரை யின்றிக் கழிந்திருக்கும்.

வீடுகளில் எஜமான்கள் இன்றி, தனித்துவிடப்பட்ட நாய்கள் ஊளையிட்டன. இடையிடையே பயங்கரக் கனவுகள் வேறு. வெறும் பீதியில் சூல்கொண்டெழும் கனவுகள்.

ஆயினும், எல்லா நினைவுகளும் கனவுகளும் நிகழ்வுகளும் 'ராணுவம் வரப்போகிறது' என்பதை மையமிட்டுச் சுழன்றன. அதற்கேற்றவாறே, அங்கே இடம்பெயராது தங்கியிருந்த அனைவரை யும் அதிகாலையிலேயே வடக்குப் பக்கமிருந்து கிளம்பிவந்த பல்வகையான பேரிரைச்சல்கள் திடுக்கிட்டெழவைத்தன.

வித்தியாசம் வித்தியாசமாக ஒலிக்கும் வேட்டுச் சத்தங்கள், கிறனேட் அதிர்வுகள், விட்டுவிட்டுக் கேட்கும் ஜீப், ட்றக் போன்ற ராணுவ வாகனங்களின் உறுமல்கள், இவற்றுக்கு மத்தியில் வெறி பிடித்த வன்முறை மனிதக்கூட்டம் திரண்டு வருவதுபோன்று பேரிரைச்சல்.

'ஆமிக்காறங்கள் வாறாங்கள்!'

எல்லோர் மனங்களுள்ளும் இச்சொற்களே திரும்பத்திரும்ப மீட்கப்பட்டுக்கொண்டிருந்திருக்கலாம். அவனும் அதையே சொல் லிக்கொண்டான். அவன் தஞ்சம் புகுந்திருந்த 'ஆச்சிரமம்' புங்குடு தீவு கிழக்கின் பிரதான வீதியோரமாகவே இருந்தது. அவன் துரிதமாக இயங்கினான். அவன், ஆச்சிரமத்திலிருந்த அவனது உறவினர்கள், அவனது மனைவி, பிள்ளைகள் எல்லோரும் ஆச்சிர மத்தின் கோயில் அறைக்குள் புகுந்துகொண்டார்கள். இனி அவர்கள் விதி, அவர்கள் நம்பும் அந்த ஆத்மீகப் பேராற்றலின் கையில்தான் உள்ளதா அல்லது அவர்கள் ஆமிக்காரர்களின் கையில் சிக்கிச் சீரழியப் போகிறார்களா?

ஆச்சிரமக் கோயில் அறையில் இருந்தபோது சாவைப்பற்றி, அதன் பரிமாணங்கள்பற்றி அவன் அதிகமாகச் சிந்தித்துக் கொண்டிருந்தான்.

அந்த எண்ண ஓட்டங்கள் மீண்டும் அவன் மனதில் பேரலை போல் எழுந்துவந்தன.

அராலிச் சந்தியிலிருந்து வேலணை மணியகாரன் வளவுவரை எரிந்துகொண்டிருந்த பிணங்கள் அவன் மனக்கண்முன் வந்தன. அரைகுறையாய் எரிந்தும் எரியாததுமாய், தகனம்கூடப் பூரணமாய் வாய்க்கப் பெறாதவையாய்க் கிடந்த சடலங்களின் குறைநிலைகள் சாவின் அவலத்தை மேலெழுப்புவனவாய் அவன்முன் புகைந்தன.

சாவின் அவலம்!

கஜபாகு ராணுவக்காரர்கள் ஒவ்வொரு வீடாகப் புகுந்து வெளிவருகிறார்கள். வீடுகள் சிலவற்றுள் நடுங்கிக்கொண்டிருந்த மக்களை வெளியே இழுத்துவந்து சும்மா சுட்டிருக்கமாட்டார்கள். அதற்கு முன் பல சித்திரவதைகள் நடந்திருக்கும். கோடரியால் கொத்தியிருப்பார்கள். அல்லது கூரிய கத்தியால் அவர்கள் கண் களைத் தோண்டியிருப்பார்கள். அவர்கள் மர்ம உறுப்புக்களை வெட்டி எறிந்து அவர்கள் சககாக்களோடு சேர்ந்து 'ஹோ ஹோ' வென வெறிச்சிரிப்பு சிரித்திருப்பார்கள். இந்நிலையில் அவர்கள் கையில் யாராவது பெண்கள் சிக்கியிருந்தால், அவர்கள் நிலையை அவனால் நினைத்தே பார்க்க முடியவில்லை.

கோயில் அறையில் இருந்த அவனுக்கு ஆத்திரத்தாலும் ஆற்றாமையாலும் உடம்பு நடுங்குவதுபோல் இருந்தது.

அவன் தனக்குப் பக்கத்தில் இருந்த உறவினரையும் பிள்ளைக ளையும் மனைவியையும் பார்த்தான்.

அவர்கள் விடும் மூச்சு அவன் முதுகில் சுடுவதுபோல் ஓர் உணர்வு. ஆமிக்காரர்களின் வெடிச்சத்தமும் ஆரவாரமும் வாகன உறுமல்களும் வெளியே தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்தன.

ஆமிக்காரர்கள் வந்தால், அவனுக்கும் அவனைச் சூழ இருப் போருக்கும் நடக்கபோகும் சித்திரவதைகளை, அவன் மனம் பல கோணங்களில் எண்ணியெண்ணிப் பார்த்தது.

திடீரென அவன் கண்முன்னே குமுதினிப் படகில் கொலை பட்டும் குற்றுயிராயும் மிதந்துவந்த குழந்தைகள், பெண்கள், ஆண்கள், வயோதிபர் நினைவுக்கு வந்தனர். நெடுந்தீவிலிருந்து குமுதினிப் படகில் வந்த மக்கள் நயினாதீவிலிருந்து இடையில்

புகுந்த நேவிக்காரரால் கூரிய ஆயுதங்கள் கொண்டு குத்தப்பட்டும் வெட்டப்பட்டும் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டும்... கடலில் மிதந்த படகு இரத்த வெள்ளத்தில் மிதக்கவிடப்பட்டது. இறுதியில் செத்தவர்களோடும் குற்றுயிரானவர்களோடும் மயக்கமுற்றவர்களோடும் படகு மிதந்து வந்து புங்குடுதீவுக் கரையை அடைந்தபோது, மாலை இருட்டுக் கவிந்துகொண்டிருந்தது.

அவனும், அவன் நண்பர்களும் அந்தச் சனங்களுக்கு எவ்வளவு வேகமாக உதவினர்.

அப்படி உதவும் வகையில் எந்த ராணுவக் குறுக்கீடும் இன்றி, புங்குடுதீவு சுதந்திரமாக இருந்தது.

இனி, அந்தச் சுதந்திரம் பறிபோகப் போகிறது.

உயிர் தின்னிக் கழுகுகளாக ராணுவம் உள்ளே நுழைந்து கொண்டிருக்கிறது. உயிரைக் காப்பாற்றிக்கொள்ளும் எத்தனத்தில் மனங்கள் அலைபாய்கின்றன. செய்வதறியாது நடுங்கி, நடுங்கி மயங்கிப்போகின்றன. சுதந்திரத்தை இழந்து உயிர் வாழ்தல் மேலானதா? மிருகங்களும் ஏனைய உயிரினங்களும்கூட, தம் சுதந்திரத்தைப் பேணிக்கொள்ளத்தானே, இயல்பூக்கத்தின் உந்துதலில் போராடுகின்றன?

திடீரென, அவன்முன்னே சாவைத் துச்சமாக மதித்த அவன் அறிந்த சிலரின் முகங்கள் ஓடிவந்தன.

இரத்தினம்!

இந்திய ராணுவம் புங்குடுதீவுக்குள் நுழைந்தது. புலிகளை வேட்டையாடும் நோக்கோடு சல்லடையிடுகிறது. தலைமறைந்திருந்த இரத்தினமும் அவன் சகாக்களும் பல வீடுகளின் மதில்களின் மேலால் பாய்ந்து பாய்ந்து செல்கின்றனர். ஆனால், ஒரு கட்டத்தில் அவன் கால் தவறி விழுந்துவிடுகிறான். இந்திய ராணுவத்தின் கையில் சிக்கப்போகும் தருணத்தில் அவன் சைனைட்டைக் கடித்துத் தன்னை விடுவித்துக்கொள்கிறான். அந்த வீரனின் முகம் அவன்முன் மிதந்து வந்தது. அன்பு என்னும் பெயருடைய இன்னொரு போராளிபற்றி அவனுடைய நண்பன் சொன்ன கதை, அவன் நினைவில் எழுந்தது. இன்னும் தொடர்ந்து சிலர் வந்தனர். கடைசியாக வந்தது, திக்குவாய் ஞானத்தின் முகம். வீரனாகவே வாழ்ந்து, இறுதிவரை வீரனாகவே இறந்துபோன அந்த வீரனின் முகம்! தத்தாரி போன்ற அச்சிறுதோற்றத்துள் எத்தகைய மாவீரம் உள்நுழைந்திருந்தது!

அவனுக்குள் இனந்தெரியாத துயர் எழுகிறது.

அதை அதிகரிப்பதுபோல், அவனைச் சுற்றியிருந்த சிறுபிள்ளைகளின் அப்பாவி முகங்கள் தெரிந்தன.

அவனை லேசாகப் பயம் கௌவிக்கொள்கிறது. ஏன் பயம்? அவன் இன்னும் ஆழமாக உள்ளிறங்கினான். பயம் மரணத்தில் போய் தொட்டுக்கொண்டு நிற்கிறது. அவன் சாகப் பயந்தானா? இல்லை. அவன் அருகே இருந்த பிள்ளைகளின் நிலைபற்றிப் பயந்தான். எவ்வாறு பார்த்தாலும் பற்றுத்தான் பயத்தின் காரண மாக நிற்கிறது. ஒவ்வொரு பயத்தையும் தொட்டுக்கொண்டு போனால், அது எத்தனையோ பற்றுக்களில் கிளைவிட்டு விழுதெறி வதைக் காணலாம். இந்தக் கிளைகளை ஒவ்வொன்றாக வெட்டிக் கொண்டு போகும்போது மரணமும் வாழ்வும் ஒன்றாகி நிற்கின்றன. அவன், இதைக் கருத்துரீதியாக வெட்டி, வெட்டி ஆய்வுக்குட்படுத் தியபோதே, அவன் வெறும் பிரக்ஞை வெளியில் கரைவதுபோன்ற உணர்வெழ, மெய்சிலிர்த்தது. அந்நிலையில் மரணம் நெருங்க, நெருங்க ஓர் இன்விடுதலை அவனோடு உரசிக்கொண்டு நிற்பது போல்– அவனுக்குள் எதையும் சந்திக்கும் திராணி ஒன்று திரள்வது போல்...

தன்னைச் செத்தவனாகக் கிடத்திப் பார்த்த ரமண மகரிஷியின் பாவனை, அந்நேரத்தில் அவன் நினைவுக்கு வந்தபோது, அதன் அர்த்தம் பெரியதாய் விரிந்தது.

ஆனால், அப்போதும் அவன் முதல்நாள் இரவு ஆச்சிரமத்தில் கண்ட கனவு வேறொரு பரிமாணத்தில் தோன்றிப் பயமுறுத்தியது.

கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில் யாரோ ஒருவன் ரோட்டில் கிடந்தபோது, இவன் முகத்தை ஒரு கறுத்தத்துணியால் மறைத்துக் கட்டியவாறு, அவனைச் சுட்டுத்தள்ளுகிறான். பின்னர் இவனே செத்தவன் அருகே ரோட்டில் குந்தியிருந்து, அழுகிறான்.

அப்போதுதான், வெளியே கேட்ட வேட்டுச் சத்தங்களும் ஆரவாரமும் அடங்கிப்போயிருந்தன.

ஆமிக்காரர்கள் அவனது ஆச்சிரமம் இருந்த முச்சந்திக்கு வந்துவிட்டார்கள் என்பதை வாகனங்களின் உறுமல் அறிவித்தது. ஆனால், சிறிது நேரத்தில் அந்த இடம் எதனாலோ அள்ளுப்பட்டது போல், திடுதிப்பென்று அமைதியாயிற்று. உளவியல்ரீதியான அச் சுறுத்தலை ஏற்படுத்திய வேட்டுச் சத்தங்கள், கிறனேட் அதிர்வுகள், வந்தவர்களின் ஆரவாரங்கள் எல்லாம் அடங்கிப்போனமாதிரியான நிலை. அவர்கள் என்ன செய்கிறார்கள்? இளைப்பாறுகிறார்களா? அல்லது ஆச்சிரமத்தை நோக்கி வந்துகொண்டிருக்கிறார்களா?

எந்த நேரமும் ஆச்சிரமத்தின் பெரிய கேற் தட்டப்படலாம்.

கோயில் அறைக்குள் இருந்தவர்கள் அதை எதிர்பார்த்து ஒவ்வொரு வினாடியையும் எண்ணியவர்களாய் இருந்தனர். ஒவ் வொருவர் இதயமும் உலக்கை போட்டு இடிப்பதுபோல் அவர் களுக்கு கேட்டுக்கொண்டிருந்தது.

ஆனால், ஆமிக்காரர்களின் அரவம் எதையும் காணவில்லை.

வெளியே அழுகுரல் கேட்டது.

அவன் வெளியே வந்து பார்த்தான்.

தெற்குப் பக்கமாக இரண்டு வேலிகளுக்கப்பால், ஒரு 'சப் பாணி'ப் பெண்ணின் கொட்டிலின் வெளியே சில ஆமிக்காரர்கள்; பெரிதாகச் சத்தமிட்டு வெருட்டிக்கொண்டு நின்றார்கள். அந்தப் பெண் இருந்த இருப்பிலேயே, கையெடுத்துக் கும்பிட்டவாறு எதையோ அழுது ஒப்புவித்துக்கொண்டிருந்தாள். அவர்களின் வெருட்டலும் போலி, அவள் அழுதுகும்பிடுவதும் போலி என்பது தூரத்துப் பார்வையிலேயே தெரிந்தது.

இவ்வேளை, அப்பகுதியிலிருந்த முதியவரான சரவணமுத்தர் தெருவில் போய்க்கொண்டிருப்பது தெரிந்தது. அவன், அவரைப் போய் விசாரித்தான். அப்போதுதான், அவனுக்கு நடந்தது தெரிந்தது. ஆமிக்காரர்கள் ஆச்சிரமம் இருந்த சந்திக்கு வந்ததும், ஏதோ நினைத்துக்கொண்டவர்களாய், ஆச்சிரமத்தின் பின்னால் இருந்த ஒழுங்கைவழியே திரும்பி, அந்தச் சப்பாணி இருந்த கொட்டில் பக்கம் வந்து, மீண்டும் பிரதான வீதியிலேயே போயிருந்தார்கள்.

ஏன், அப்படி அவர்கள் வந்த வழியைச் சிறிது மாற்றிக்கொண் டார்கள் என்பது, அவனதும் சரவணமுத்தரதும் புரிதலுக்கு அப்பாற் பட்டதாக இருந்தது.

அவன்முன்னே அவனது குருவின் முகம் மிதந்துவந்தது.

அன்று பின்னேரம், ராணுவ வாகனம் புங்குடுதீவின் மூலை முடுக்கெல்லாம் சென்று எஞ்சியிருக்கும் மக்கள் அனைவரையும் மாரியம்மன் கோவில் முன்றலில் கூடுமாறு அறிவித்துச் சென்றது. அதற்கிணங்க யாழ்ப்பாணம் செல்லமுடியாமல்போன அனைவரும் அங்கே திரண்டனர். அறுநூறுபேர் வரை அங்கே திரண்டிருந்தது, பெரிய கூட்டமாகவே தெரிந்தது. அவர்கள் அனைவரின் பெயர்க ளும் பதியப்பட்டன.

வாகனத்திலிருந்து தேவகுமாரன் இறங்கிவந்து ரட்சிப்பது போல் அந்த விடுவிக்கப்பட்ட மக்களுக்கு டென்ஸில் கொப்பேகடுவ உரையாற்றினார்.

## 5

'புதிய சப்பாத்தின் கீழ்' மக்கள் இயக்கப்பட்டனர்.

அசாதாரண அமைதிக்குள் புங்குடுதீவு வீழ்கிறது.

புங்குடுதீவுக்குள் ராணுவம் நுழைந்த சில நாட்களாக ஏதோ ஓர் ஆபத்தை எதிர்பார்த்திருப்பதுபோன்ற உணர்வால் பீடிக்கப் பட்ட நிலை. ராணுவம் நுழையும் பூமியெங்கும் இந்த வாடையின்

களதி. சந்திகள், சோதனைச் சாவடிகள், குச்சொழுங்கைகள் அனைத்திலும் மண்டிக்கிடப்பது இது ஒன்றே என்பது எவரும் உணரக் கூடியதே.

இதற்கு இன்னொரு காரணம், முன்னர் செறிவாக அருகருகே இருந்த மக்கள், இப்போ இங்கொருவராய் அங்கொருவராய்ச் சிதறி இருந்தனர். ஒருவருக்கு ஏதும் நடந்தால் அதுபற்றி அடுத்தவருக்கு தெரியவரலாம் அல்லது தெரியவராமலும் போய்விடலாம். ஒரு வட்டாரத்தில் மட்டும் ஆயிரத்துக்குமேல் இருந்த இடத்தில் இப்போ முதலாம் வட்டாரத்தில் ஐந்துபேர், இரண்டாம் வட்டாரத்தில் பத்துப்பேர், ஐந்தாம் வட்டாரத்தில் ஆறுபேர் என்று செறிவின்றி தூரத்தூர இருந்தனர். இந்தப் பின்னணியில் வெறுமையின் வெறிச்சோடலும், காற்றின் அனாதரவான சோகக் குழைவும் ஒருவித அச்சத்தை ஊட்டுவதாய் இருந்தது.

தெருவில் செல்லும் பெண்கள் நிலம் நோக்கிய தம் பார்வையிலிருந்து மீளாதவராய் வேகமாகச் சென்றனர். தப்பித்தவறி நிமிர்ந்து பார்த்துவிட்டால், எங்காவது ஆமிக்காரன் நின்று தம்மைக் கைகாட்டி அழைக்கலாம் என்ற ஒருவகையான பீதிக்குள் அவர்கள் விழுந்தவர்போல் தெரிந்தனர். அவர்களைத் தொட்டுக்கொண்டு சென்ற பிள்ளைகள், தாய்மாரிடமிருந்து தம் கேள்விகளுக்குப் பதில் வராதபோதும், சும்மா தொணதொணத்துக்கொண்டே சென்றனர்.

"குஞ்சியம்மாவும் யாழ்ப்பாணம் போயிற்றாவா, அம்மா?"

"யாழ்ப்பாணம் போனவை, எப்பம்மா வருவினம்?"

...

பதில் வராவிட்டாலும் அவர்களது கேள்விகள் தொடர்ந்துகொண்டே இருந்தன.

தெருவில் நின்ற நாய்களின் முகங்களில் உற்சாகம் மங்கி பசிக் களை தெரிந்தது. தேடுவாரற்றுக் கதியால் வேலிகள்மேல் கால்போட்டு மேய்ந்துகொண்டு நிற்கும் ஆடுகளை, அவை ஒருவித வெறியோடு பார்த்தன. கன்றுகளோடு சென்ற பசுக்களருகே நாய்கள் சென்றபோது, அவை மூசிக்கொண்டு நாய்களின் சள்ளையில் இடித்துத் தூக்கி எறிந்தன. ஏற்கனவே பசியோடு கிடந்த நாய்கள், இந்த எதிர்பாராத தாக்குதலைத் தாங்கமுடியாது வெகு நேரம் ஊளையிட்டன. எங்கு திரும்பினாலும் ஒருவித தனிமையும் பீதியுமே கைகோர்த்து, வெளவால்கள்போல் கண்கள் முன்னால் தொங்குவதுபோல்...

பசிக் களை மக்கள்மேலும் தொற்றியிருந்தது. கையிலிருந்த உணவுப் பொருட்கள் தீர்ந்த நிலையில் மக்களுக்குக் கைகொடுக்க எந்தக் கடைகண்ணியும் அங்கே இருக்கவில்லை. கடைகளைப்

பூட்டிவிட்டு எல்லாக் கடைக்காரர்களும் யாழ்ப்பாணம் போய் விட்டார்கள். மக்கள் இலைக்கஞ்சி, புழுக்கொடியல், கிழங்கு, பனாட்டு என்ற நிலைக்குத் தள்ளப்பட்டுக்கொண்டிருக்கையில் புங்குடுதீவு கூட்டுறவுச் சங்கக் களஞ்சிய அறை உடைக்கப்பட்டு உணவுப் பொருட்கள் வழங்கப்படுகின்ற செய்தி எங்கும் பரவிற்று. மக்கள் முதலாம் வட்டாரத்திலுள்ள கூட்டுறவுச் சங்கத்தின் முன்னால் கூடினர். இளம் பெண்கள் அங்கே அதிகம் தலைக்காட் டவில்லை. வயதுபோனவர்களும் நடுத்தரவயதினரும் சிறுவர்களுமே அங்கே கூடினர். ஒவ்வொருவருடைய கைகளிலும் பலவகையான பைகள் இருந்தன. இராணுவத்துக்கும் மக்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தும் இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் உணவுப் பொருட்களை வழங்கிக்கொண்டிருந்தனர்.

வேலை மும்முரமாக நடந்துகொண்டிருந்தபோது சற்றும் எதிர்பாராத நேரத்தில் பேரிடிமாதிரி ஒரு சத்தம் அங்கெழுந்தது. அங்கு நின்ற சிறுவர்களும் பெரியவர்களும் பயத்தினால் நெஞ்சுதற, என்ன நடந்தது என்று தெரியாமல் விழிபிதுங்க நின்றனர். சிறிது நேரத்துக்குப் பின் தகவல் கசிந்தது.

கூட்டுறவுக் களஞ்சிய அறை இருந்த இடத்திற்கு இரண்டொரு வீடு தள்ளியிருந்த வீடொன்று ராணுவத்தினால் குண்டுவைத்துத் தகர்க்கப்பட்டுத் தரைமட்டமாக்கப்பட்டது. ஏன் அப்படி அந்த வீடு தரைமட்டமாக்கப்பட்டது?

அதற்கான பதிலும் அங்கே கசிந்தது.

புங்குடுதீவில், அந்த வீட்டில்தான் விடுதலைப் புலிகள் முகாம் ஒன்றை அமைத்திருந்தார்களாம்.

இதை யார் ராணுவத்துக்குச் சொல்லிக்கொடுத்தது?

சாமியாராக வந்ததும் நாங்களே, சம்சாரியாக இருப்பதும் நாங்களே என்று தங்கவேலு ஒரு சினிமாப் படத்தில் கூறியதுதான் அவன் நினைவில் ஓடிற்று. எல்லாவற்றுக்கும் நாங்கள்தான் காரண மாக இருக்கிறோம். புலிகளின் முன்னால் நாங்களே விடுதலை வீரர்கள். அவர்கள் இல்லாத இடங்களில் நாங்களே காட்டிக் கொடுக்கும் முன்னணி வீரர்கள். இந்த விலாங்குத்தனம் எக்காலத்தி லும் எங்கும் எப்போதும் இருந்துகொண்டேதான் இருக்குமா?

உணவுப் பொருட்களை வாங்கிய மக்கள் அங்கிருந்து மெல்ல மெல்ல அகன்றுகொண்டிருந்தனர். அவர்கள் முன்னால் வீடொன் றைக் குண்டுவைத்து, தரைமட்டமாக்கிய ராணுவத்தினர் ஏதோ பெரிய சாதனையைச் செய்துவிட்டவர்கள்போல் பெரிதாக எக்காளமிட்டுச் சிரித்துக் கதைத்துக்கொண்டு நின்றனர். அவர்கள் முகங்களில் வெளிப்பட்ட சிரிப்புக்குமேலாக ஒருவித குரூரம் எரிந்துகொண்டிருந்தது.

அவர்கள் வாடையே தமக்கு ஆகாதென்பதுபோல் அங்கு வந்திருந்த இரண்டொரு பெண்கள் வேகமாக நடந்துசென்றனர். அவர்களைத் தொடர்ந்து, "அறுவாற்றை மூஞ்சியையும் மோறக் கட்டையையும் பார்" என்று அவர்களைப் பார்த்துத் தமக்குள் கறுவிக்கொண்டு சில கிழங்கள் சென்றனர்.

புங்குடுதீவில் தங்கிய மக்களில் 7ஆம் வட்டாரமான ஊரதீவி லேயே மக்கள் ஒப்பீட்டளவில் கூடுதலாக வாழ்ந்துவந்தனர். மிகவும் கஷ்டப்பட்டவர்களும் அங்கேதான் இருந்தனர். அவர்கள் உணவு வழங்கப்பட்ட முதலாம் வட்டாரமான சந்தையடிக்கு வருவதென்பது ஒரு நெடுந்தூரப் பயணமாகும். வல்லைவெளி போன்ற சில குறுநிலங்களைக் கடந்தே இவர்கள் வரவேண்டியிருந் தது. ஊரதீவுக்கு அருகே இருந்த மடத்துவெளியில்தான் ராணுவ முகாம் இருந்தது.

ஊரதீவு மக்கள் தமக்கருகே ராணுவத்தின் முகாம் இருந்ததை ஆபத்தாகவே கருதினர்.

எங்குமே ராணுவம் மக்களின் பாதுகாப்புக்காக இருந்தது இல்லை. அப்படி இருந்தது என்று நினைப்பது ஒரு மாயையே.

ஊரதீவு மக்களின் குடிமனைப் பக்கம் ராணுவத்தினர் தனித் தனியாகவும் சோடியாகவும் சைக்கிளிலும் திரியத்தொடங்கியது மக்களை அச்சுறுத்துவதாகவே இருந்தது.

ஒருநாள் அவர்கள் பயந்ததுபோலவே நடந்துவிட்டது. அன்று, நள்ளிரவிருக்கும் ஐந்தாறு ராணுவத்தினர் பெண்கள் தனியே இருந்த வீடொன்றுக்குள் புகுந்தபோது அவர்கள் போட்ட கூக்குர லில் அப்பகுதியில் இருந்த மக்கள் அனைவரும் அங்கு திரண்டு விட்டனர்.

எதுவும் செய்வதறியாது ராணுவத்தினர் பின்வாங்கி ஓடுவ தைத் தவிர வேறொன்றும் செய்ய முடியவில்லை.

"என்ன பாலன், ராத்திரி உங்கட பக்கம் ஒரே அல்லோலகல் லோலமாமே, என்ன நடந்தது?" அவன் ஊரதீவில் இருந்து வரும் பாலனைக் கேட்டான்.

"நல்ல காலம், இதை நாங்க எதிர்பார்த்திருந்ததால், அநியாயம் நேராமல் தடுத்துப் போட்டம்." பாலன் கூறினான்.

"அப்பிடியெண்டா?"

"இதுக்கு முந்தியும் பல தடவை ஆண்துணையில்லாமல் இருந்த அந்தப் பெண்களின் வீட்டை ஆமிக்காரர் சுறறிவந்தது எங்களுக்குத் தெரியும். நேற்று மத்தியானம் தாங்க இரவு வருவம் எண்டு அந்தப் பெண்களிட்ட சொல்லிப் போயிருக்கினம். நாங்களும் அந்த வட்டாரத்துச் சனங்களுக்குச் சொல்லி, எல்லோரையும்

கூட்டிவைச்சிருந்தம். இது தெரியாமல் அவை வீட்டுக்க நுழைந்த போது கூடியிருந்த சனம் சொல்லிவைத்தால்போல் கூக்குரலிட்டது."

"பயந்துபோயிருப்பாங்களே?"

"பயமா, ஒரே ஓட்டம் தலைதெறிக்க..."

"இவங்கட அநியாயங்களை நாங்க ஒன்றுபட்டா தடுக்கலாம். ஆனால், கொஞ்சம் தியாகம் செய்யவும் தயாராக இருக்கவேண்டும். அப்பத்தான் நம்ம விடுதலைப் போராட்டம் வெற்றி பெறும்."

"இது நம்மட சனங்களுக்கு புரிஞ்சாத்தானே!" என்று கூறிக் கொண்டே பாலன் போனான்.

*6*

யாழ்ப்பாணத்தோடு தம்மைப் பிணைத்திருந்த தொப்புள் கொடி அறுபட்டதான நிலையில் தீவுப்பகுதி கிடந்தது.

விடுதலைப் புலிகள் தீவுப்பகுதியிலிருந்து தமது நிர்வாகத்தை வாபஸ்பெற்றுக்கொண்டு யாழ்ப்பாணத்திற்குச் சென்ற பின்னர் மாற்றான் கைக்குள் சிக்குண்ட அனாதைகளின் நிலையில் தீவுப் பகுதி மக்கள்.

யாழ்ப்பாணத்திற்குள் இனிமேல் அவர்களால் செல்லமுடி யாதா?

அவர்களது உற்றார், உறவினரைக் காணமுடியாதா?

இனி எப்போது அவர்களைக் காண்பது?

தீவுக்குள் அடைப்பட்டுக்கிடந்த சனங்களின் மனங்களில் இக்கேள்விகள் அடிக்கடி எழுந்தன. அதேநேரத்தில் ராணுவம் வரப்போகிறது என்பதுபற்றித் தெரியாது, ஏற்கனவே யாழ்ப்பாணம் சென்றிருந்த சிலர் தமது மனைவி மக்கள் புங்குடுதீவிலும், தாம் யாழ்ப்பாணத்திலுமாகப் பிரிந்துபோன நிலை இன்னும் பரிதாபகர மானது. யாழ்ப்பாணத்திலிருந்து இருபது மைல்கள் தொலைவி லிருந்த புங்குடுதீவிற்குப் போய், தமது மனைவி மக்களைக் காணமுடியாத நிலையில் வெறிபிடித்தவர்களாய் அவர்கள் திரிந்திருக்கலாம். அந்த நிலையில் அவர்களுக்கு யாழ்ப்பாணம் ஒரு சிறையாகவே மாறியிருந்திருக்கலாம்.

இதற்கெல்லாம் காரணம், பற்றுத்தான். யாழ்ப்பாணத்தில் சிக்கிக்கொண்டவர்கள் புங்குடுதீவில் தம்மை விட்டுப் பிரிந்துபோய் இருக்கும் மனைவி மக்கள்மேல் இருந்த பற்றின் காரணமாகச் சிறைக்குள் அகப்பட்டவராய்த் தவித்தனர். அவ்வாறே, யாழ்ப்பாணத் தில் தமது உற்றார் உறவினர் பிள்ளைகுட்டிகளை விட்டுவிட்டுப் புங்குடுதீவில் சிக்கிக்கொண்டவர்கள், தாம் கொடிய சிறைக்குள் தள்ளப்பட்டவர்களாகவே தவித்தனர்.

எல்லாம் பற்றின் காரணமாக ஏற்பட்ட துன்பமும் துக்கமும். எந்தவித பற்றும் பந்தமுமில்லாமல் கிடந்த கிழடுகட்டைகள் தாம் கைதுசெய்யப்பட்ட தீவுப்பகுதியில் சந்தோஷ சித்தர்களாக இருந்திருக்க வேண்டும். "தம்பி, நான் செத்தா என்னைக் கொண்டு போய் எரிச்சுப்போடு" என்று அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டு சொன்ன ஒரு வயோதிபரின் முகம் அவன்முன் நிழலாடிற்று.

பற்றோ பற்றின்மையோ, கைது செய்யப்பட்ட கிராமத்தில் மக்கள், நெருஞ்சிமுள் காட்டில் நடப்பதுபோலவே நடமாடினர். ராணுவத்தின் தலையீடே இதற்குக் காரணம் என்பது சிறுபிள்ளையும் அறிந்த விஷயம். நள்ளிரவில் ஊரதீவில் நடந்த அசம்பாவிதத்தின் பின்னர் மக்கள் இன்னும் சுதந்திரமாக நடமாட அஞ்சினர். ஆனால், இதைச் சாட்டாக வைத்து இயக்கத்தினர் ராணுவத்தைப் புங்குடுதீவில் இருந்து அகற்றி, நிர்வாகத்தைத் தமது கைக்குள் எடுப்பதற்கு முயன்றனர். அதில் பின்னர் வெற்றியும் பெற்றனர்.

ராணுவம் புங்குடுதீவில் இருந்து அகன்றதில் மக்களுக்கு ஒருவகையில் நிம்மதியே.

இப்பொழுது ராணுவம் வேலணைப் பகுதியிலும் ஊர்காவற்துறையிலுமே நடமாடியது. நேவிக்காரர்கள், நயினாதீவுக்குப் போகும் புங்குடுதீவிலுள்ள குறிகாட்டுவான் துறையிலும் நயினாதீவிலும் இருந்தனர். காரைநகர், நேவிக்காரரின் மத்திய இயங்குதளமாக இருந்தது.

புங்குடுதீவுக்குள் ராணுவம் புகுந்து இரண்டு மாதங்களுக்கு மேலாகிவிட்டது. ஆயினும் இன்னும் மக்கள் தமது பசியிலிருந்தும் தேவைகளில் இருந்தும் விடுவிக்கப்படவில்லை என்பது அவர்கள் முகங்களிலும், வீடுகளிலும் இருந்து கொட்டாவி விட்டதில் தெரிந்தது.

'விடுவிக்கப்பட்ட' தீவுப்பகுதி மக்களின் குறைகளைக் கேட்டறிந்து அவற்றைக் களைவதற்காக மந்திரிமார்களும், அவர்களோடு சேர்ந்து உயர் அதிகாரிகளும் வரப்போவதாகக் கதைகள் அடிபட்டன. அப்படி ஒருசிலர், ஹெலிகள் வட்டமிட, பாதுகாப்புகள் உஷார்படுத்தப்பட்டு ராணுவக்காரர்கள் விறைத்து நிற்க, வந்து போயினர்.

ஹெலிகள் வட்டமிடுவது எஞ்சியிருந்த சிறுவர்களின் கண்களுக்கு விருந்தளிப்பதாய் இருந்தது. வேலணை மகாவித்தியாலயத்தில் மந்திரிமார்களின் வருகையும் கூட்டங்களும் நிகழ்ந்தன.

இவ்வேளைகளில் தீவுப்பகுதியில் இருந்த அனைத்துச் சனங்களும் ஏற்றி இறக்கப்பட்டனர். ஆட்களைத் திரட்டும் பொறுப்பு ஒவ்வொரு தீவிலும் உள்ள பிரஜைகள் குழுத் தலைவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

அவர்களின் தலைமையில், ஆடு மாடுகள் போல் அனைத்து தீவுச் சனங்களும் கொண்டுவந்து இறக்கப்பட்டனர். தீவுப்பகுதி மக்களின் பற்றாக்குறைகளை மந்திரிமாருக்கு எடுத்துச்சொல்லும் சந்தர்ப்பங்கள் அவனுக்கும் கொடுக்கப்பட்டது.

மந்திரிமார்கள் ஏதேதோவெல்லாம் செய்து தருவதாக கயிறு கள் திரித்தனர்.

ஆயினும் என்ன, நோயால் பீடிக்கப்பட்ட, மருந்துகள் எதுவும் இல்லாதிருந்த மக்களுக்கு வைத்தியம் செய்யக்கூடிய ஒழுங்கான வைத்தியர் ஒருவரைக்கூட அவர்களால் நியமிக்கமுடியவில்லை.

மந்திரிமார் வந்துபோயினர். ஆனால், நிலமைகள் சீர்பெற வில்லை. இயக்கத்தினால் நடத்தப்பட்ட மக்கள் கடையோ தனி நபர் கடைகளோ இன்னும் முளைக்கவில்லை.

ஒருநாள் அவன் குளிக்கும்போது மேலுக்குப் போட சோப் இல்லாமல் இருந்தான். ஒரு மைல் தூரத்திற்கப்பால் இருந்த அவன் நண்பர் ஒருவரிடம் சோப் இருப்பதாகக் கேள்விப்பட்டு அவரிடம் சென்றான். அவரோ மிகுந்த மனவருத்தத்திற்கு மத்தியில் அவர் தேய்த்து எஞ்சியிருந்த மீன்செதில்போன்ற சோப்புத் துண் டைக் கொடுத்தார், திருப்பித்தர வேண்டுமென்ற வேண்டுதலுடன்.

அவன் அந்த சோப்பைக் கொண்டுவந்து கிணற்றுக்கட்டில் வைத்துவிட்டுத் தண்ணீரை அள்ளக் குனிந்தபோது, எங்கிருந்தோ பறந்து வந்த காகம், அவனது சோப் துண்டைக் காவிச் சென்றது. அவன், 'ஆய், ஆய்' என்று கத்தியவாறே அதன் பின்னால் ஓடினான். காகமோ சோப்பைக் காலால் மிதித்தபடி தென்னைமர ஓலையில் இருந்து ஊஞ்சலாடியவாறு, அதைக் கொத்தியபடி அவனைப் பார்த்து நகைப்பதுபோல் பட்டது.

காகத்திடமிருந்து வடையை வீழ்த்திய முற்கால நரியின் உபாயம் எதுவும் அவனுக்கு கைகொடுப்பதாய் இல்லை.

அன்றைய நாளும் வழமைபோல் சோப்பில்லாத குளிப்பாக முடிந்தது.

குளிப்பதற்குச் சோப்பில்லாமல் போனது பெரிய விஷயமல்ல. அவன் வாழ்வதற்கு உயிர்நாடியாகவிருந்த இன்சுலின் மருந்தின் கையிருப்பே தீர்ந்துபோய் இரண்டு மாதத்திற்கு மேலாகிவிட்டது.

அவனோ இன்சுலின் இன்றி வாழ்க்கையை நடத்த முடியாத வன். அவனொரு *Insulin Dependent Patient*.

இன்றோடு அவன் இரண்டு மாதத்திற்கு இன்சுலின் இல்லா மல் இருக்கின்றான். இப்போ அவனுக்கு *sugar* நன்றாக ஏறியிருக்கும். 300க்குமேல் உயர்ந்திருக்கும். அதனால், சாப்பாட்டில் கவனம் செலுத்த வேண்டும் என்பது தெரியும்.

ஆனால், தீவுப்பகுதியில் மக்களோ சாப்பாட்டுப் பொருட்கள் போதியளவு இல்லாமல்தானே தவித்துக்கொண்டிருக்கின்றனர். அந்நிலையில் அவன் ஏற்கனவே டயற்றிங்தான். இருந்தாலும் அவனுக்கு *Sugar* அதிகரித்ததுவிட்டதற்கான அறிகுறிகள் தெரியத் தொடங்கியிருந்தன. அடிக்கடி சிறுநீர் கழித்துக்கொண்டிருந்தான். தாகம் அதிகரித்திருந்தது. பலவீனம் அவனைத் தள்ளாட வைத்தது. வழமையாகக் காலையில் உற்சாகமாக எழுந்து, குளித்துவிட்டு ஆச்சிரமக் கோயில் அறைக்குச் சென்று குருவழிபாடு செய்பவன், இப்போ காலையில் எழுந்து காலைக்கடன்களை முடிப்பதற்கே பலமில்லாமல் இருந்தான். அவன் மனைவியின் ஒத்தாசை இல்லாதிருந்தால் அவன் எப்பவோ செத்திருப்பான்.

இருந்தாலும் அவன் மனத்தளவு பலமானவன்போலும், முன்னர் இப்படித்தான் அவனுக்கு டயபெற்றிக் வியாதி இருப்பதைக் கண்டுபிடித்த டொக்டர் 'சுகர்' 360க்கு ஏறியிருப்பதைக் கண்டு அவனை மேலும்கீழும் ஆச்சரியத்தோடு பார்த்தார்.

"என்ன உங்களுக்கு மயக்கம், தலைசுற்றல் எதுவும் ஏற்படவில்லையா?" என்று கேட்டார்.

"இல்லை" என்றான் அவன்.

அவர் தனக்குள் சிரித்துக்கொண்டு "எல்லாம் மனந்தான்" என்று கூறிக்கொண்டே, அவனை 'வார்ட்'டில் நிற்பாட்டி இன்சுலின் போட்டு, சுகரை குறைத்தது, இப்போ நினைவுக்கு வந்தது.

அவன் ஒருவாறு தன்னைச் சமாளித்துக்கொண்டு ஆச்சிரமத்துக்குப் போனான். ராணுவம் வந்து நிலைமை சிறிது வழமைக்குத் திரும்பியபின், அவனும் அவனது குடும்பமும் ஆலடிச் சந்தியிலுள்ள அவனது வீட்டுக்குத் திரும்பியிருந்தனர். அங்கே, ஆச்சிரமத்தில் அவன் நண்பன் துரையின் மனைவி மக்களும் அக்காவும் இருந்தனர்.

அவன் ஆச்சிரமத்திலுள்ள கோயில் அறைக்குள் போனான். அங்கே, அவன் குருவின் படமும் அஸ்தியும் இருந்தன. விளக்கு எரிந்துகொண்டிருந்தது.

அவன், நின்று பிரார்த்திக்கவே பலமற்றவனாக, "இறைவா, என்னால் இயங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. நாளைக்கு நான் உன்னிடம் வருவேன் என்று சொல்ல முடியாது. நான் வருவதும் வராததும் உன்னிடந்தான் உள்ளது" என்று பிரார்த்தனையை முடித்துவிட்டு, அவன் விரைவாக வீட்டுக்குத் திரும்பினான்.

வீட்டில், அவன் மனைவி பயந்துகொண்டிருப்பாள் என்பதும் தெரியும். வீட்டுக்குப் போனவனுக்கு ஆச்சரியம் காத்திருந்தது. ஆலடிச் சந்தியிலிருந்த அவன் வீட்டுக்கு முன்னால், ஒரு 'வான்' நின்றுகொண்டிருந்தது. அவன் அதைக் கடந்து வீட்டுக்குள்

நுழைந்தபோது, அவன் சற்றும் எதிர்பார்த்திராத வகையில் அவனது பல்கலைக்கழக நண்பன் நற்குணன் அங்கே நின்றுகொண்டிருந்தான். அவனோடு, அந்தக் கிராமத்துக்குப் பொறுப்பாயிருந்த இயக்கத்தைச் சேர்ந்தவனும் நின்றுகொண்டிருந்தான்.

அவனைக் கண்டதும், நற்குணன் அவனைக் கட்டியணைத்துக் கொண்டான்.

"டேய் சிவா, எப்படி இருக்கிறாய், இதோ உனக்கு, உனது உயிரைப் பிடித்துவைத்திருக்க உதவும் இன்சுலின்" என்று கூறிக் கொண்டே 10 *vial* இன்சுலினை ஒரு பெட்டியோடு கொடுத்தான். "இது உன் குருவின் துணைவியார் கொழும்பிலிருந்து உன்னிடம் உடனே சேர்ப்பிக்கும்படி ஓர் அதிகாரிமூலம் இங்கு வரும் என்னிடம் கொடுத்தனுப்பினார்."

அவன் அதிர்ச்சியால் ஓங்கி அறையப்பட்டு ஒருகணம் நின்றான். அவன்முன்னே அவன் சுவாமியின் முகம் மிதந்துவந்தது. அவன் பிரார்த்தனைக்கு, உடனே பதில் அளிக்கப்படுகிறதா?

நற்குணன் பெரிய வேலையில் இருந்தான். வடக்கு-கிழக்கு மாகாணத்தின் உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி. தீவுப்பகுதி மக்களின் துயர்துடைக்க அன்றைய அரசாங்கம் அவனை அனுப்பியிருந்தது. அவனைப் பற்றிய நினைவுகள் மேலேழுந்தன.

1983 இனக்கலவரத்தின்போது தமிழ்மக்கள்மீது சிங்கள இனவெறியர் பாய்ந்து குதறித்தள்ளிக்கொண்டிருந்தபோது, நற்குணனும் கொழும்பில்தான் வேலை பார்த்துக்கொண்டிருந்தான். அவன் வீட்டையும், அவனையும், அவன் குடும்பத்தையும் குதறித் தள்ள, சிங்களக் குண்டர்கள் வந்துகொண்டிருந்தார்கள்.

அவன் அஞ்சவில்லை.

அவனிடம் அவன் லைஸென்ஸ் எடுத்து வைத்திருந்த துவக்கு இருந்தது. கத்தி பொல்லுகளோடு ஓடிவந்தவர்களில் சிலரை அவன் துவக்கு பதம்பார்த்தது. வந்தவர்கள் எல்லோரும் திரும்பி ஓடினர். அவனும், அவன் குடும்பமும் அகதி முகாமில் தஞ்சம் அடைந்து, கப்பலில் யாழ். சென்றனர்.

நற்குணன் தனக்குரிய வீரம் தோய்ந்த சிரிப்புடன் நின்றுகொண்டிருந்தான்.

"சிவா, நான் உனக்கு நல்லது செய்யத்தான் வந்துள்ளேன். மறுக்காமல் ஏற்றுக்கொள்" என்றான் நற்குணம்.

"என்னத்தைச் செய்யச் சொல்கிறாய்?"

"நான் உன்னைத் தீவுப்பகுதி உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றும்படி கேட்கின்றேன். என்ன சொல்கிறாய்?" என்றான்.

"மன்னிக்கவும். எனக்கு அந்த பெரிய உத்தியோகமெல்லாம் வேண்டாம்." இவன் மறுப்புத் தெரிவித்தான்.

"பெரிய உத்தியோகத்தில் இருந்தால், மக்களுக்குப் பெரிதாய் உதவலாம் இல்லையா?" மற்றவன் திருப்பிக் கேட்டான்.

"இருக்கலாம். ஆனால், எனக்கு விருப்பமில்லை."

"அப்படியானால், நீங்கள் ஆரம்பிக்க ஆர்வங்காட்டும் புங்குடு தீவு மகாவித்தியாலயத்திற்கு அதிபராக இருக்கிறாயா?"

"இல்லை. அதற்குத் தகுதியானவர்கள் நயினாதீவில் இருக் கிறார்கள். அவர்களைப் போடுங்கள்."

"சரி, இதையாவது ஏற்றுக்கொள்."

"எதை?"

"இயக்கம் ஆரம்பிக்கப்போகும் மக்கள் கடையை, நீ பொறுப் பேற்று நடத்துகிறாயா?"

"அதற்கு ஏற்கனவே வியாபாரம் செய்து பழக்கமானவர்கள் இங்கே இருக்கிறார்கள். அவர்களை உங்களுக்கு பிடித்து தாறன். எனக்கு அதில் அனுபவமில்லை." அவன் அதையும் மறுத்துவிட் டான்.

"என்னடா சிவா, எல்லாத்தையும் வேண்டாம் எண்டு சொல்கிறாய், அப்ப என்ன செய்யப் போற?" நண்பன் சிறிது கவலையோடுதான் கேட்டான்.

"நான் முன்போலவே சாதாரண ஆசிரியராக இருக்கவே விரும்புறன். மக்களுக்கு நிவாரணப் பொருட்களை வழங்குவதையும் செய்கிறேன். இன்னும் மந்திரிமார் வந்தால் மக்களுக்குத் தேவை யானவற்றை எடுத்துச் சொல்கிறேன். அதற்காக என்னை பிரஜைகள் குழுவில் இருக்கும்படி கேட்கவேணாம்" என்று சொல்லிவிட்டுச் சிரித்தான்.

நற்குணமும் சிரித்தான்.

"நான் எப்பவும்போல் அடிமட்ட ஊழியனாக இருந்து மக்களுக்கு உதவுவதில்தான் எனக்கு ஆறுதல்."

இவனும் நற்குணமும் கதைத்ததை கவனித்துக்கொண்டு நின்ற இயக்கத்தைச் சேர்ந்தவன் இவனை ஆச்சரியத்தோடு கவனித்துக்கொண்டு நின்றான். எல்லோரும் "நான் முந்தி, நீ முந்தி" என்று எதையாவது பெற்றுக்கொள்ளப் போட்டிபோடும் இந்நேரத்தில் இவன் மட்டுமேன் இப்படி?

அதன் பின்னர் அவனுக்கு ஓர் தனி மரியாதை.

அங்கே, புங்குடுதீவை அவன் கண்காணிப்பதுபோலவே நிலைமை இருந்தது. சுவாமி அவன்முன் சிரித்துக்கொண்டு நிற்பதுபோல்.

*7*

ரோட்டில் மாடொன்று நைலக்ஸ் சேலை ஒன்றை முகத்திலும் கழுத்திலும் எடுத்துப்போட்டவாறு, ஒரு பெண் ஒய்யாரமாக நடந்துவருவதுபோல், வந்துகொண்டிருந்த காட்சி அவனை வியக்க வைத்தது.

மாட்டுக்கு யார் சேலை அணிவித்தது? அல்லது மாடு எவ்வாறு சேலை அணிந்துகொண்டது?

அதை விளங்கிக்கொள்ள அவனுக்கு அதிக நேரம் எடுக்கவில்லை.

பூட்டிவிட்டு யாழ்ப்பாணம் ஓடியவர்களின் வீடுகளெல்லாம் உடைக்கப்பட்டுவிட்டன. யார் வீடுகளை உடைத்தார்கள் என்பது தான் இன்னும் ரசனைக்குரியது. புங்குடுதீவில் எஞ்சியிருந்தவர்களும் உடைத்தார்கள். ஆனால், இதையும்விட நயினாதீவிலிருந்து புங்குடுதீவிலுள்ள தமது உறவினரைச் சந்திக்க வந்ததாகச் சொல்லிக் கொண்டவர்கள், தமது உறவினரோடு சேர்ந்து இரவு இரவாக ஒவ்வொரு வீடாகப் பேய்கள்மாதிரிப் புகுந்து வந்தார்கள் என்பது தான் இன்னும் வேடிக்கையானது. அப்படிப் புகுந்தவர்கள் ஒவ்வொரு வீட்டுக்குள் இருந்தும் விலைமதிப்புள்ள சேலைகள் என்றும் சில்வர்கள் என்றும் மூட்டை கட்டிக்கொண்டுதான் வெளிவந்தார்கள்!

மூட்டை கட்டப்பட்ட பொருட்கள் இரவோடு இரவாகக் கடத்தப்பட்டன. இந்தக் களவும் கடத்தலும் உச்சநிலை அடைந்த போது அதைக் கண்காணிப்பதற்காக முக்கியமான இடங்களில் இயக்கத்தினர் 'சென்றி' போட்டுக் காவல் செய்தும், அதைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

இப்படியாக உள்ளூர், வெளியூர்க் கள்ளர்களால் திறந்துவிடப்பட்ட வீடுகள், போவோர் வருவோரை 'வா வா' என அழைத்தன. ஒருவரின் மனப்பக்குவத்தைச் சோதிக்கின்ற சந்தர்ப்பமாகவே இவை இருந்தன. புங்குடுதீவில் அதிக சனங்கள் இல்லாததால், வெளியூர்க்காரரின் ஆக்கிரமிப்புக்கள் நிகழ்ந்தன. மக்கள் இடம் பெயர்ந்துவிட்ட ஊரில், ரோட்டில் போவோர் வருவோராய் இருந்தவர்கள் மக்களல்ல, ஆடுகளும் மாடுகளும் நாய்களுமே! வழமைக்கு மாறாக என்றைக்குமில்லாத மாதிரி திறந்துவிட்டு 'ஹோ'வெனக் கிடந்த வீடுகளைப் பார்த்தபோது மிருகங்களே ஏதோவொன்றால் தூண்டப்பட்டவைபோல் உள்ளே நுழைந்து பார்க்க விரும்பின.

நாய்கள் உள்ளே புகுவதற்கு முன், எப்பவுமே தாம் செய்வது போல் சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு நேரடியாகவே சமையல் அறைக்குள் நுழைந்தன. ஏற்கனவே ஜன்னல்கள் ஊடாக நுழைந்து அவ்விடங்களைத் தமதாக்கிவிட்டிருந்த பூனைகள் இவற்றைக் கண்டதும் சீறிக்கொண்டு வெளியே பாய்ந்தன.

ஆடு மாடுகளுக்கு முன்பின் பார்க்கிற, கபடம் நிறைந்த எந்தவித யோசனைகளும் இல்லாததால், அவை நேராகவே தமக்குப் பிடித்த வீட்டறைக்குள் புகுந்தன. அங்கே இருந்த பெட்டகங்கள், அலுமாரி கள் என்பவற்றிலிருந்து உடுப்புகள் திருடர்களால் வெளியே எடுத்து உதறப்பட்டும் சிதறப்பட்டும் கிடந்தன. உள்ளே சென்ற மாடுகளும் ஆடுகளும் அவற்றின் மேல் சாணமிட்டன. புளுக்கை போட்டன. சலம் வடித்தன. ஈற்றில் சிந்திக்கிடந்த உடுப்புகள் சிலவற்றை வைக்கோலை இழுத்தெடுத்து உண்பதுபோல் உண்டவாறு வெளியே வந்தன. அலுமாரிக்குள் இருந்து வெளியே இழுத்தபோது, உடுப்புகள் அவற்றின் மேல் விழுந்து சாமிக்குப் பட்டுச்சாத்துவதுபோல் அவற்றை அலங்கரிக்க, வெளியே அவை ஆடி அசைந்து வந்த காட்சி கண்கொள்ளாததாகவே இருந்தது.

பார்க்கும் இடமெல்லாம் திறந்த வீடுகள்.

அப்படித் திறக்கப்படாத வீடுகள் இருக்குமானால், அங்கே, இடம்பெயராது எஞ்சிப்போன கிழடுகட்டைகள் காவலுக்குக் கிடக்கின்றன என்பதுதான் அர்த்தம். பெரிய வெற்றுச் சங்குக் கோதுக்குள் உள்நுழைந்துவிட்ட சிறுபூச்சிகள்போல் அவர்கள் அந்த வீடுகளுக்குள் நடமாடினர். தங்களால் சமைக்க முடியாத நிலையில், அடிக்கடி 'வெறுந்தேத்தண்ணி' மட்டுமே குடித்துவிட்டு ஊசலாடினர். சிலர் 'சீலம் பாயை' விரித்து அதன்மேல் அழுக்குத் 'தலகணி'யைத் தலைக்குப் போட்டுப் படுத்திருந்தனர்.

○

பூனையொன்று அப்படிக் கிடந்த ஒருவரோடு ஒட்டிக் கொண்டு கிடந்தது. வீட்டு நாய் அடிவளவில் நின்று ஊளையிட்டுக் கொண்டு நின்றது. அது, அடிக்கடி ஊளையிடுவதும், திடீரென விசர்பிடித்ததுபோல் முற்றத்திற்கு ஓடி வருவதுமாய் இருந்தது.

அப்போது அந்தப் பக்கத்தால் ஊரதீவிலிருந்து சைக்கிளில் வந்த நடுத்தரவயது மதிக்கத்தக்க வேலுப்பிள்ளை, சைக்கிளை ரோட்டுக்கரையோரமாகச் சாத்திவிட்டு, "தம்பிராசண்ணை, தம்பிராசண்ணை" என்று கூப்பிட்டவராய் உள்ளே நுழைந்தார். தம்பிராசண்ணை நீட்டிநிமிர்ந்து சீலம் பாயில் கிடந்தார். அவரிட மிருந்து எதையோ காவிக்கொண்டு ஓடுவதுபோல், அவரோடு கிடந்த பூனை பாய்ந்துபோயிற்று.

வேலுப்பிள்ளை இன்னும் நெருங்கித் தம்பிராசண்ணையைப்

பார்த்தார். வாய் அவிழ்ந்த நிலையிலும் கண் வெறித்த நிலையிலும் அவர் கிடந்தார். "ஆள் செத்துப்போச்சு" என்று வேலுப்பிள்ளை தனக்குள் சொல்லியவாறு விறுவிறுவென வெளியேவந்து சைக்கிளை எடுத்துக்கொண்டு கிளம்பினார். தூரத்தூர இருந்த ஒவ்வோர் ஆட்களின் வீட்டுப் படலையையும் திறந்து, தம்பிராசண்ணை செத்துப்போனதை அறிவித்துப் போனார்.

அன்றிரவு தம்பிராசண்ணையின் பூதவுடலின் தலைமாட்டில் ஒரு சிறு குத்துவிளக்கு எரிந்துகொண்டிருந்தது. அவரைச் சுற்றி வேலுப்பிள்ளையின் தலைமையில் இரண்டொருவர் தேவாரம் பாடிக்கொண்டிருந்தனர். இடைக்கிடை நாலைந்து வயதுபோன பெண்கள் உயிரற்ற குரலில் நித்திரையிலிருந்து விழித்துக்கொண்டவர்கள்போல் ஒப்புச்சொல்லி அழுவதும், மூக்கைச் சீறி, சேலைத் தலைப்பால் துடைப்பதுமாய் இருந்தனர்.

அடுத்த நாள் காலை பத்து மணிபோல் தம்பிராசண்ணையின் பாடை சுடலையை நோக்கி நகர்ந்தது.

நான்கு முனைகளிலும் வாழைக்குட்டிகள்வைத்துக் கட்டப் பட்ட பாடை; சோடனைக் கடதாசிகள் எதுவும் இல்லை. சவப் பெட்டி இல்லாது பன்னாங்கில் தம்பிராசண்ணையின் பூதவுடல் கிடத்தப்பட்டிருந்தது. பாடையைக் காவிய நான்கு பேருக்கும் பின்னால் ஐந்தாறு பேர் தேவாரம் பாடிக்கொண்டு செல்ல, வேலுப்பிள்ளையர் சங்கூதிக்கொண்டும், தில்லையர் சேமக்கலம் தட்டிக்கொண்டும் சென்றார்கள்.

மேளம் அடிக்கும் குடிமக்கள் இல்லை. கொள்ளி வைக்கும், கருமாதிகளைச் செய்யும் நாவிதரும் இல்லை. நாவிதர் நேவிக்காரருக்குச் 'சேவகம்' செய்யப் போய்விட்டதாகக் கேள்வி. சடங்குகளை நீத்த தம்பிராசண்ணையின் தகனம், மணல்காட்டுச் சுடலையில் 'சிறப்பாக' நடைபெற்றது.

வேலுப்பிள்ளையரின் கையாள் ஒருவர் சுற்றிவந்து கொள்ளிக் குடத்தை உடைத்துவிட்டு, கொள்ளி வைத்தார். காவோலைகளில் பட்ட தீ, 'திகுதிகு'வென எரிய ஆரம்பித்தது.

## 8

"நான் ஏன் இந்த வெயிலில் காய வேண்டும்? இது என்னுடைய ஊரா? என்னுடைய பிள்ளைகளும் பெண்டாட்டியும் இங்கேயா இருக்கிறார்கள்? இங்கேயா வாழப்போகிறார்கள்? இல்லையே, அப்ப நான் ஏன் இங்க வந்து வெயிலில் காயவேணும்?"

நயினாதீவைப் பார்த்துக்கொண்டிருந்த குறிகாட்டுவான் துறையில் மிதந்துகொண்டிருந்த வள்ளத்தருகே வெயிலில் குளித்தவனாய், தனியனாய் நின்றிருந்த நேவிக்காரன் கத்தினான்.

அப்பொழுதுதான் நயினாதீவுக்கு நண்பர் ஒருவரைக் காணப் போய்விட்டு குறிகாட்டுவான் துறையில் வந்திறங்கிய அவனைப் பார்த்து, நேவிக்காரன் கதைப்பதுபோல் இருந்தது.

நேவிக்காரன் சிங்களத்தில் கத்தினான்.

நேவிக்காரன் சொன்னதை விளங்கிக்கொண்ட அவன், "இது அரசாங்கத்துக்கு விளங்கினால்தானே" என்று, அவனுக்குச் சிங்களத்தில் கூறிவிட்டு மேலே சென்றான்.

நேவிக்காரன் அவன் கூறியதற்கு சாதகமாகத் தலையசைத்துச் சிரித்துவிட்டு, பாடத் தொடங்கினான்.

"தனியாய் உப்பண்னே தனியாய் மரிண்னே"

"தனியாகவே பிறக்கிறோம். தனியாகவே சாகிறோம்" என்ற அர்த்தந்தரும் அப்பாடல், அவன் பின்னால், உலகின் சோகம் அனைத்தையும் திரட்டிக்கொண்டுவருவதுபோல் பட்டது.

எங்கும் வெறுமையின் – விரக்தியின் அடையாளம் மிதந்து கொண்டிருப்பதுபோல் அவன் உணர்ந்தான்.

நயினாதீவுக்குப் போயும் அவன் தேவைக்குரிய காசு கிடைக்க வில்லை. புங்குடுதீவில் எந்தவித வசதியுமில்லாததால் அவன் நிலையும் பரிதாபகரமானதாகவே இருந்தது.

எங்கும் விரக்தியின் வியாபிப்பு

அவன் குறிகாட்டுவானிலிருந்து வீட்டை நோக்கிச் சைக்கிளை மிதித்தான். குறிகாட்டுவானையும் நடுவுத்துருத்தியையும் பிரிக்கும் இடத்தில் இயக்க முகாம் குறுக்கிட்டது. அதில் காவலில் நின்றவர் களின் முகத்தில் எந்தவித ஜீவசுரணையையும் காணவில்லை. ஒருவன் கொட்டாவிவிட்டுக்கொண்டு நின்றான். எந்த வேலையு மில்லை. அதனால், எதுவும் செய்யத் தோன்றாத ஸ்தம்பிதமும் விரக்தியும் அவர்கள் முகங்களில் ஒட்டியிருந்தது.

○

அவன் காரைநகர்த் துறைமுகத்தில் நின்றுகொண்டிருக்கிறான்.

தம் குடும்பங்களை தீவுப்பகுதியில் விட்டுவிட்டு யாழ்ப்பாணத் தில் அடைபட்டுப்போன சிலர் மீண்டும் தீவுப்பகுதிக்குச் செஞ் சிலுவைச் சங்கம் மூலம் அனுப்பிவைக்கப்படுவதாகக் கேள்விப்பட்டு, அவன் காரைநகர்த் துறைமுகத்தில் செஞ்சிலுவைச் சங்கக் கப்பலின் வருகைக்காகக் காத்துக்கொண்டு நின்றான்.

யாழ்ப்பாணத்தில் அடைபட்டுப்போன அவனது நண்பனும் அக்கப்பலில் வரலாம் என்று அவன் எதிர்பார்த்து அங்கு வந்திருந் தான். அவன் வருவானா?

இன்னும் செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் வரவில்லை.

அவனோடு இன்னும் சிலர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள், தம் விதியையும் தாம் படும் துன்பத்தையும் அவனோடு தொண தொணத்துக்கொண்டிருந்தனர். அவனோ, தான் படும் துன்பங்களை யாருக்குச் சொல்லியழுவது என்று தெரியாமல், தனக்குள்ளேயே புழுங்கிக்கொண்டு நின்றான்.

தூரத்தே ஊர்காவற்றுறைக் கடற்கோட்டை தெரிந்தது.

பெரியம்மை நோய் பீடித்தவர்களை முன்னர் அந்தக் கோட் டையில்தான் கொண்டுபோய்ப் போடுவார்களாம். 1971இல் தென்னிலங்கையில் கிளர்ச்சியில் ஈடுபட்ட சேகுவேரா (ஜனதா விமுக்தி) இளைஞர்கள் சிலரும், அவர்கள் தலைவனான ரோகண விஜயவீரவும் சிறிது காலம் இக்கோட்டைக்குள்தான் அடைக்கப்பட் டிருந்தனர்.

இப்போ, அங்கே யாரை அடைத்து வைத்திருப்பார்கள்? இவ்வளவு அருகில் இருந்தும் இன்னும் இந்தக் கோட்டையைப் போய்த் தான் பார்க்கவில்லையே என்ற ஆதங்கம் வேறு, அவனுக்கு அப்போது ஏற்பட்டது.

இன்னும் செஞ்சிலுவைச் சங்கக் கப்பல் வரவில்லை.

வந்தாலும் அவன் நண்பன் வருவானா?

முதல்நாள் இரவு அவன் நண்பன் வரப்போவதுபற்றி ஊருக்குப் பொறுப்பாய் இருந்தவனோடு அவன் கதைத்தது நினை வுக்கு வந்தது. யாழ்ப்பாணத்திலிருந்து இதுவரை யாரும் திரும்பி வந்ததில்லை. ஏன் இவர் மட்டும் இங்கு வருகிறார்? பொறுப்பாய் இருந்தவன் கேள்வி எழுப்பினான். இவனது பதில், அவனைத் திருப்திப்படுத்தவில்லை என்பதும் தெரிந்தது. "நான் நினைக் கின்றேன் அவர் 'றெக்கி' எடுக்க வருகிறார் என்று." பொறுப்பாளன் தொடர்ந்து கூறினான்.

"இல்லை தம்பி, அவருடைய குடும்பம் இங்கதானே இருக்கு, அதுதான் அவர் அங்குள்ளவர்களிடம் அனுமதி பெற்று இங்க வாறேர்."

"இதில் எனக்கு நம்பிக்கை இல்லை. எங்களுக்குச் சந்தேகம் ஏற்பட்டால், அவரைச் சுட்டுத்தள்ளுவோம் அல்லது எங்களோ டேயே காம்பில இருக்க வைப்போம்."

பொறுப்பாளன் இப்படிச் சொன்னபோது, இவன் நண்பனைக் காப்பாற்றுவதற்காக, தன்னையும் தன் குடும்பத்தையும் பணயம் வைத்தது நினைவுக்கு வந்தது.

அன்றிரவு அவனுக்குத் தூக்கம் வரவில்லை.

அவன் ராணுவம் தீவுக்குள் நுழைந்த அன்று கண்ட கனவுதான் மீண்டும் மீண்டும் நினைவில் நுழைந்தது. கைகள் இரண்டும் பின்னால் கட்டப்பட்ட நிலையில், ரோட்டில் வீசப்பட்ட அவனை யாரோ பயங்கர உருவம் சுட்டுத்தள்ளுவதாக.

ஒருவேளை இது நண்பனுக்கு நடக்கப்போவதைத்தான் சுட்டுவதாக இருக்குமோ? அவன் இதை நினைத்து நினைத்துப் பெரிதும் பயந்தான்.

ஆனால், அவன் நண்பன் அதில் வரவில்லை.

வேறு தீவுகளைச் சேர்ந்த இரண்டொரு வயோதிபர் வந்திருந் தனர். அவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வெற்றிலை பாக்கு கொண்டுவந்திருந்தனர். தீவுப்பகுதி மக்கள் வெற்றிலை பாக்கைக் கண்டு கனகாலம் ஆயிற்று. கரையில் நின்றவர்களுக்குக் கப்பலில் வந்தவர்கள் வெற்றிலை பாக்கை அன்பளிப்பாக வழங்கி மகிழ்ந்தனர்.

அவனைப் பொறுத்தவரை, அவை எதிலும் மனம் நாட்டம் கொள்ளவில்லை. நண்பன் வராதது பூதாகரமான இருண்மையாக அவன்முன் கவிழ்ந்தது.

அவன்முன் விரக்தியும் வெறுமையும் படர்ந்தன.

அவன் வெறுங்கையோடு வீட்டுக்குத் திரும்பினான்.

○

அன்று புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் சனங்கள் கூடியிருந் தனர். புங்குடுதீவில் வாழ்ந்த அறுநூறு சனங்களில், எழுந்து நட மாட முடியாதவர்களைத் தவிர, ஏனையோர் அனைவரும் அங்கே காணப்பட்டனர்.

அவர்களோடுகூடவே வந்திருந்த சிறுவர்களும் சிறுமிகளும் ஓடிப்பிடித்து விளையாடிக்கொண்டு நின்றனர்.

அங்கே திரண்டிருந்த கூட்டத்தின் மத்தியில் அவனும் நின்றி ருந்தான்.

அப்படி என்ன விசேஷம், அங்கே?

அங்கே நின்றிருந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள், "இன்னும் கொஞ்சநேரத்தில் செஞ்சிலுவைச் சங்கத்தவர்கள் வந்துவிடுவார்கள்" என்று அறிவித்தனர்.

அவர்கள் சொன்னதுபோலவே, சற்று நேரத்தில் பத்துப் பன்னிரண்டு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த ஆண்களும் பெண்களும் அங்கே வந்திறங்கினர். இரண்டு வாகனங்கள் அவர் களைக் கொண்டுவந்து இறக்கிற்று. இவர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்தனர். இங்கே தீவுப்பகுதியில் அடைபட்டுக்கிடந்தவர்

களுக்கு யாழ்ப்பாணத்திலிருந்த உறவினர்கள் அனுப்பிய தூதாய் அவர்கள் வந்திருந்தனர். வெள்ளைக்காரர், சிங்களவர், தமிழர் என்று அதற்குள் அடங்கியிருந்தனர்.

அவர்கள் வந்ததும்வராததுமாய்த் தம்மோடு கொண்டு வந்திருந்த கடிதங்களை விநியோகித்தனர். யாழ்ப்பாணத்தில் இருந்தவர்கள் தீவுகளில் சிக்குண்டவர்களுக்கு அனுப்பிவைத்த கடிதங்கள்.

மக்கள் முண்டியடித்துக்கொண்டு தமக்கு வந்த கடிதங்களைப் பெறுவதற்கு பாய்ந்தனர்.

அவனும் ஆவலோடு காத்திருந்தான்.

அவனுக்கும் பல கடிதங்கள் வந்திருந்தன. ஆனால், அவை யெல்லாம் தமது வீடுவாசல்களை நன்றாகக் கவனிக்கும்படி எழுதியிருந்த, தூரத்து உறவினர்களின் கடிதங்கள்.

ஆனால், அவனுடைய நண்பனிடம் இருந்து மட்டும் எந்தவித கடிதமும் வரவில்லை. அவனுக்கு அது பலத்த ஏமாற்றத்தைத் தந்தது.

அவன் அங்கிருந்து விரக்தியுற்ற நிலையில் புறப்பட்டான். அவன் போகும்போது, சில வயோதிபர்களும், சில இளவயது மட்டத்தினரும் தம்மை யாழ்ப்பாணம் கொண்டுபோய் விடுமாறு செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்தவர்களைக் கேட்டுக்கொண்டு நிற்பது அவனுக்குத் தெரிந்தது.

அந்த நிலையிலும் அவனுக்கு ஏனோ சிரிக்க வேண்டும்போல் இருந்தது. இது நடக்கிற காரியமா?

## 9

பார்க்கும் இடமெல்லாம் வெறுமையும் விரக்தியும் புரை யோடியிருப்பதுபோல்பட்டது. பார்த்து வந்த வேலையெல்லாம் திடீரென்று ஸ்தம்பித்துவிட்ட நிலையில் மக்கள் என்ன செய்வது என்று தெரியாத நிலையில் கிடந்தனர். உழைப்புக்கு எந்தவழியும் இருப்பதாகத் தெரியவில்லை. கூட்டுறவுச் சங்கக் கடையை உடைத்ததால் கொஞ்சக்காலம் மாவும் அரிசியும் நிவாரணமாகக் கிடைத்தன.

மந்திரிமார் வந்துபோயினர்.

அதன் பின்னர் 'தாரா' என்ற சரக்குக் கப்பல் திருகோணமலை யில் இருந்து ஊர்காவற்றுறைக்குப் போக்குவரத்துச் செய்தது. அதில் வந்திறங்கிய உணவுப் பொருட்கள், தீவுப்பகுதி மக்களின் பசியைத் தாக்காட்டிற்று.

ஆனால், அடைபட்ட நிலையில் சந்தோஷம் என்பது எவருக்கும் அந்நியமான ஒன்றாகவே இருந்தது.

சாதாரண மக்களுக்கு, 'மேலதிக' சந்தோஷத்தை வழங்கிய கள்ளுக் கொட்டில்கள் எல்லாம் காற்றால் அள்ளுபட்டுச் சிதைந்து போய்க் கிடந்தன. அவற்றுள் இரண்டொரு சொறி நாய்கள் முனுமுனுத்தபடி கிடந்தன. அவைக்கும் அடைபட்டுக்கிடந்த மக்களுக்கும் அதிக வித்தியாசம் இருந்ததாகத் தெரியவில்லை.

பள்ளிக்கூடங்கள் எதுவும் இயங்காததால், தம்மோடு பிள்ளைகளும் சோம்பிக்கிடப்பதைக் கண்டு பொறுக்கமுடியாத பெற்றோர்கள் பள்ளிக்கூடம் ஒன்றை ஆரம்பிக்குமாறு கேட்டுத் திரிந்தனர்.

அவன், அவர்களுக்கு ஆதரவாகக் குரல் கொடுத்தான்.

அதன் பயன் ஆறுமாத இடைவெளிக்குப் பின்னர், புங்குடுதீவு மகாவித்தியாலயம் இயங்கத்தொடங்கிற்று. ஓய்வுபெற்ற ஆசிரியர்கள் சிலரும், ஏ.எல். பாஸ் பண்ணிய இளைஞர்கள் இரண்டொருவரும் அங்கே படிப்பித்தனர். வேலணை, ஊர்காவற்றுறை, புங்குடுதீவு ஆகிய இடங்களில் எஞ்சிக்கிடந்த 140 சிறுவர்கள் அங்கே கல்வி பயின்றனர்.

புங்குடுதீவு மத்தியிலிருந்த மகாவித்தியாலயத்திற்கு, புங்குடு தீவின் நான்கு திசைகளின் தொலைவிடங்களிலிருந்தும் பிள்ளைகள் வந்திருந்தனர். பிள்ளைகளின் போக்குவரத்து, செத்துப்போய்க் களையிழந்து கிடந்த கிராமத்தை உயிர்ப்பிப்பதுபோல் இருந்தது.

இவ்வாறு, அவ்வப்போது ஏதோ ஒரு நிகழ்ச்சி நடப்பது, விரக்தியிலும் வெறுமையிலும் உறைந்துபோகும் கிராமத்தை உயிர்ப்பிப்பதுபோல் இருக்கும்.

ஒரு நாள் ராணுவத் தளபதி டென்ஸில் கொப்பேகடுவ அராலிப் பகுதியில் கண்ணிவெடித் தாக்குதலுக்கு இலக்காகி இறந்துபோன திடுக்கிடும் செய்தி தீவுப்பகுதி மக்களைத் திகிலடைய வைத்தது.

டென்ஸில் தனது சகாக்களோடு பயணம் செய்த வாகனம், புலிகளால் புதைக்கப்பட்டிருந்த கண்ணிவெடிக்கு இலக்காகிச் சிதறியதாக ஒரு செய்தி. கொப்பேகடுவ ஸ்தலத்திலேயே மரணம்.

இச்செய்தி தீவுப்பகுதி மக்களை உறைநிலையிலிருந்து விடுவித்து நடுங்க வைத்தது. இதைச் சாட்டாகவைத்து ராணுவம் மக்கள்மேல் தாக்குதல் நடத்தலாம் என்று சிலர் கதை பரப்பினர். இக்கதைகளுக்கு எந்தவித ஆதாரம் இல்லாவிட்டாலும் இலங்கை ராணுவம் பற்றிய நிச்சயமின்மை அவர்களை நடுங்கவைத்தது.

பின்னர், கொல்லப்பட்டது புலிகளால் அல்ல. பிரேமதாஸாவின் சதியே இதற்குப் பின்னணி எனச் சொல்லப்பட்டது.

பாடசாலைச் சிறு இடைவேளையின்போது, செல்லத்துரை ஆசிரியர், "டென்ஸில் கொப்பேகடுவய புலிகள் கொல்லேல்ல" என்று பெரிய குரலெடுத்துக் கூறினார்.

அங்கே ஸ்ராவ் றூமில் கூடியிருந்த ஆசிரியர்களில் ஒருவரான சிவசாமி, "அப்ப ஆரு கொப்பேகடுவய கொன்றதாம்?" என்றார்.

"இது பிரேமதாஸாவின் வேலை?" செல்லத்துரை தொடர்ந்தார்.

"பிரேமதாஸாவேன் அவனைக் கொல்லவேணும்?" இன்னொருவர் கேட்டார், தெரிந்தும் தெரியாதவர்போல்.

"டென்ஸில், சிறிமாவோவின் சுதந்திரக் கட்சி ஆதரவாளன். அவன் ராணுவப் புரட்சிமூலம், தன் ஆட்சியைக் கவிழ்த்துவிடுவான் என்று பிரேமதாஸாவுக்கு எப்பவும் ஒரு பயம். அதனால், தன்ர ஆக்களைக்கொண்டு போட்டுத்தள்ளிப்போட்டு, புலிகளைச் சாட்டியிருக்கிறான்."

"ஓ, அப்பிடியும் ஒரு கதை உலாவுதா?" என்றார் சுப்பிரமணியம்.

"எல்லாற்ற ஆசைகளுக்கும் போடுதடியாக புலிகள் இருப்பதுதான் வேடிக்கை" என்று சிவசாமி கூறியபோது எல்லோர் முகத்திலும் ஒருவித புன்னகை மெல்லத் தவழ்ந்தது.

அதைத் தொடர்ந்து அனுமான் வால் மாதிரி வேறு கதைகள் நீண்டுகொண்டேபோயின. அப்படியே அந்த விவகாரம் அடங்கியது.

மீண்டும் மக்கள் உறைநிலைக்குத் தள்ளப்பட்டனர்.

இன்னொருநாள் வந்த செய்தி, தீவுப்பகுதி மக்களை, புதுவித உணர்ச்சிக்குள் ஆழ்த்திச் சந்தோஷப்படுத்திற்று.

ஒருவித விடுதலை உணர்வால் தொங்கிப்போய்க் கிடந்த உள்ளங்கள் நிமிர்ந்தெழுவனவாய்த் தெரிந்தன.

அந்தச் செய்திதான் என்ன?

மூன்று கிழமைக்கொருக்கால் ஊர்காவற்றுறைக்கு வந்துபோன 'தாரா' என்ற சரக்குக் கப்பலில் தீவுப்பகுதி மக்களும் பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டனர். 'தாரா' கப்பலில் போனால், திருகோணமலைக்குப் போகலாம். அங்கிருந்து கொழும்புக்குப் போகலாம்; ஏன், வன்னி, யாழ்ப்பாணம் என்றுகூடப் போகலாம்!

அடைபட்டுக் கிடந்த மக்களுக்கு இந்தச் செய்தி ஒருவித விடுதலைப் பிரகடனமாகவே பட்டிருக்க வேண்டும்.

எல்லாரும் போவதற்கு முந்தியடித்துக் கொண்டு நின்றனர். ஆனால், எல்லாருக்கும் அனுமதி கிடைக்கவில்லை.

அவனும் ஒருமுறை அந்த தாரா கப்பலில் திருகோண மலையை நோக்கிப் பிரயாணம் செய்திருக்கிறான். இரண்டு இரவுகளும், மூன்று நாட்களுமாக நீண்ட அந்தப் பிரயாணம், அவன் வாழ்க்கையில் மறக்கமுடியாத தடத்தைப் பதித்திருந்தது.

இந்தியாவை நோக்கிப் பிரயாணம் செய்த வாஸ்கொ ட காமா, அமெரிக்காவைச் சென்றடைந்த கொலம்பஸ் ஆகியோர்கூட அத்தகைய அனுபவங்களைப் பெற்றிருப்பார்களோ தெரியாது! பேரலைகளால் குளிப்பாட்டப்பட்டும், மழையில் நனைந்தும், பொதிகள் நிறைக்கப்படும் கிடங்கில் கிடந்து 'தாலாட்டப்பட' வாந்தி எடுத்தும், மலசலம் கழிக்கக்கூட எழுந்து நடமாடமுடியாத நிலையில் திருகோணமலை சென்றடைந்தபோது, உயிர் அகன்று போன ஆவிகளாய்ச் சிலர் தோற்றந்தந்தனர்.

என்றாலும் வெளியுலக விடுதலை என்பது இனிக்கத்தான் செய்தது. அதுதான் ஆவிகளாய்த் தோற்றந்தந்தவர்களுக்கு நிலத்தில் கால்பதித்து நடக்கவைத்த உயிர் ஊட்டியாய் அமைந்தது.

காலம் செல்லச்செல்ல, அடைப்பட்டுக் கிடந்த மக்களின் நிலைமை சீர் அடைந்துவந்தது. 'தாரா' என்ற சரக்குக் கப்பலில் ஆடுமாடுகள்போல் ஏற்றி இறக்கப்பட்ட மக்களுக்குச் சந்தோஷம் ஊட்டுவதுபோல் நவீன வசதிகள் கொண்ட, மக்கள் பயணத்துக் கென நிர்மாணிக்கப்பட்ட கப்பல்கள், தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கு வந்துசேர்ந்தன. இப்போ மக்கள், அடிக்கடி வெளியே போய்வந்தனர்.

இப்போ அங்கே இருந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் என்ப வர்களின் நிலைமைகளிலும் மாற்றங்கள் தெரிய ஆரம்பித்தன. இயக்க வேலைகள் என்று எதுவுமில்லாததால், 'சென்றி'களில் காவலில் ஈடுபட்டிருந்தவர்கள். அங்கொன்றாய் இங்கொன்றாய் எஞ்சிக்கிடந்த வீடுகளில் இருந்தவர்களோடு பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டு அரட்டை அடிக்கத் தொடங்கினர். அடிக்கடி அவ்வீடு களுக்குச் சென்றுவந்தனர். அனேகமாக, இளம் பெண்கள் இருந்த வீடுகளுக்கு அழையா விருந்தாளிகளாகச் சென்றுவந்தனர்.

சிலரின் இத்தொடர்புகள் கலியாணத்திலும் முடிந்தன.

இவற்றின் மூலம் தாம் வீழ்ந்திருந்த வெறுமையில் இருந்து மீள்வதற்கான உபாயங்களை அவர்கள் பரீட்சித்தனர்போலும்.

பாடசாலைப் பிள்ளைகள் செல்லும்போதும் வரும்போதும், இவர்கள் சைக்கிள்களில் வந்து குறுக்கிட்டனர். அவர்களோடு இவர்கள் அனாவசிய பேச்சுவார்த்தைகளை ஏற்படுத்திக்கொள்ள முயறன்றனர்.

இப்படியான சந்தர்ப்பத்தில்தான் ஒருநாள் மிகுந்த அதிர்ச்சிக் கும் துன்பத்திற்கும் காரணமான ஒரு நிகழ்வு நடந்தேறியது.

அந்த நிகழ்ச்சி ஏன் நடந்தது என்ற கேள்வியில் அவன் இறங்கிய போது, அது பெரும் சுயவிசாரணையாவே முடிந்தது. ஏன் அந்த துர்ச்சம்பவம் நிகழ்ந்தது? அதுவும் பலர் முன்னிலையில். எல்லோரும் பார்த்திருக்க, அவர்கள்மேல் அதற்குரிய கர்மத்தை தள்ளிவிடுவது போல் அல்லது அவர்களையும் அதில் தோய்ந்தெடுப்பதுபோல் ஏன் அது நிகழ்ந்தது?

எதன் சமிக்ஞை அது?

புங்குடுதீவுக்குள் ராணுவம் புகுந்த நாளிலிருந்து இதுகால வரை அவன் அனுஷ்டித்துவந்த தபஸ் வாழ்க்கையில், ஒரு கீறல் விழுந்தமாதிரி இருந்தது.

ஏன் இப்படி நிகழ்ந்தது?

அவன், ஏதாவது தவறான செயற்பாடுகளில் ஈடுபட்டானா? எதற்காவது ஆசைப்பட்டானா? அந்த ஆசையின் நிமித்தம், சுமுக மான தெய்வீக நிகழ்வோட்டத்தில், பாறைபோல் குறுக்கே நின்றானா? பாறைபோல் என்று பெரிதுபடுத்தாது, சிறு பருக்கையளவாவது குறுக்கிட்டானா?

இல்லை, அவன் அறிந்தளவு அப்படி ஒன்றுமில்லை.

அப்போ ஏன் அந்தக் கொலை நிகழ்ந்தது? ஒருவேளை அந்தக் கொலையுண்டவன் புரிந்த பலாத்காரத்தை இவன்தான் முதலில் முறைப்பாடு செய்தான் என்ற ரீதியில்...?

ஆனால், அது பிழையாகாது. பொதுமக்கள் இவ்வாறான நடத்தைகளினால் பாதிக்கப்படாமல் இருக்க வேண்டுமானால், அது முறைப்பாடு கொடுக்கப்பட வேண்டியதே.

மேலும், அவன் நேரடியாகத் தலையிடுவதற்குக் காரணம், கொலையுண்டவனால் பாதிக்கப்பட்டவர்கள் அவன் நண்பன் துரையின் உறவினர்களாக இருந்ததே. அதனால், இவனுக்கு மதிப்பளிப்பதுபோல் அவர்கள் இந்தத் தண்டனையை நிறைவேற் றினரா? திடீரென இன்னோர் நினைவு வந்தது. தான் தூய வாழ்க்கையை மேற்கொண்டிருந்தாலும், அவனுடைய நண்பன் யாழ்ப்பாணத்தில் என்ன கோலத்தில் இருக்கிறானோ? அவன் நடத்தையை நம்பமுடியாது. அவன் உணர்ச்சி மேலீட்டில் கீழ் நிலைகளுக்கு வீழ்ந்துவிடவும் கூடியவன்.

இவனிடம் எதுவும் சொல்லாது தன் சுயகாரியத்துக்காக யாழ்ப்பாணம் ஓடிப்போய் மாட்டிக்கொண்டதுமாதிரி. அவனைத் தண்டிப்பதற்காகத்தான், சுவாமி அவனது உறவினர்களைத் தாக்கி னாரா?

அப்போது, அவன் வீட்டுக்கு வெளியே வாகனச் சத்தம் கேட்டது. இவன் வாசலுக்கு வந்து பார்த்தான். அங்கே ட்றாக்ரரில்

தீவுக்குப் பொறுப்பான இயக்கத்தைச் சேர்ந்தவன் இருந்து கொண்டிருந்தான்.

"மாஸ்ரர், நீங்கள் கூறிய அசம்பாவிதக்காரனைப் பிடித்து விட்டோம். அந்தா ட்றாக்ரரில் அவனைக் கட்டிப்போட்டுக் கொண்டு வந்திருக்கிறோம்." பொறுப்பாய் இருந்தவன் வந்து கூறிவிட்டு, "நாங்கள் அவனைப் பகிரங்கமாக, பாடசாலைக்கு முன்னால் வைத்துச் சுடப்போகிறோம். இது மற்றவர்களுக்கும் ஒரு பாடமாய் இருக்கும்" என்று அவன் சொல்லி முடிப்பதற்குள், இவன் குறுக்கிட்டான்.

"தம்பி அந்தமாதிரி எதையும் செய்து விடாதீர்கள். திருந்தி வாழ அவனுக்குச் சந்தர்ப்பம் கொடுங்கள். அவனை எச்சரித்து இங்கிருந்து வேறிடத்துக்கு மாற்றிவிடுங்கள். அவன் திருந்திவிடுவான். அதுதான், நீங்கள் எங்களுக்குச் செய்யும் பெரும் உதவியாய் இருக்கும்" என்று கூறிமுடிப்பதற்குள், பொறுப்பாளன் தலையைக் குனிந்து லேசாகச் சிரித்தவாறு போய், ட்றாக்ரரில் ஏறிக்கொண்டான். அது, இரைச்சலுடன் பாடசாலைப் பக்கமாகவே சென்றது.

## 10

அவன் நினைவு மீண்டும் நிகழ்வில் மிதக்கிறது.

மாலை வெயிலில் கடலை ஊடுருவியவாறு கப்பல் வேகமாகச் சென்றுகொண்டிருக்கிறது.

தூரத்தெரியும் கடலின் எல்லைகளில் நிழலாடும் வெளிச்சப் பொட்டுகள். அண்ணாந்து பார்த்தால், வானமெங்கும் கடல் நீலம் செறிந்திருந்தது.

அவன் மனம் ஆனந்தித்ததா? துக்கித்ததா?

இரண்டுக்கும் இடைப்பட்ட ஊமை உணர்வு.

ஏறக்குறைய நான்கு வருடங்கள்வரை புங்குடுதீவில் அடைபட்டுக்கிடந்த அவன், அங்கிருந்து வெளியேறிவிட வேண்டும் என்ற நிலையை அடைந்திருந்தான். அவன் அங்கிருந்து இனிமேலும் வெளியேறாது போனால், அவன் எதிர்காலமே கேள்விக்குறியாகி விடும். அவன் வெளியேறிவிட வேண்டுமென்ற தீர்மானத்திற்கு வந்த காலத்தில், கப்பல் போக்குவரத்து மிக ஒழுங்காக நடந்து கொண்டிருந்தது. அத்தோடு, நவீன பயணக் கப்பல்களும் புழக்கத்திற்கு விடப்பட்டிருந்தன.

ஒருநாள் அவன் நினைத்தபடி தன் குடும்பத்தோடு புங்குடு தீவை விட்டுப் பயணமாகிறான்.

அலையெறியும் கடல் தாலாட்டில் அவர்கள் பயணம்.

நெஞ்சிலோ ஆர்ப்பரித்தெழும் ஆயிரம் அலைகள்.

அலைதலையே வாழ்க்கையாகக்கொண்டிருந்த அவனுக்கு, கட்டாய ஆறுதல் கொடுத்ததுபோல் நான்கு வருடங்கள் அடைபட்ட சிறை. ஆயினும், அங்கும் அவன் சும்மா இருக்கவில்லை. சமூகப் பணி தொடர்ந்தது. அங்கிருந்த மக்களுக்கு நிவாரணம் வழங்குபவனாக, உத்தியோகப்பற்றற்ற இறப்பு, பிறப்புப் பதிவாளனாக, கிராம சேவையாளனாக, ஆசிரியனாக, ஏன், சிலவேளைகளில் "அப்பு, ராசா, இந்த ஊசியை போட்டுவிடப்பு" என்று இரந்துவரும் வயோதிபங்களுக்கு 'ஆபத்தான' வைத்தியனாகவும் இயங்கியிருக்கிறான்.

அவனுக்குச் சிரிக்க வேண்டும்போலிருந்தது.

அங்கு அடைபட்டுக்கிடந்த ஐநூறுக்கும் மேற்பட்ட அப்பாவிச் சனங்களின் கூட்டுப்படிமம் அவன்முன் நிழலாடிற்று. ஏதோ ஒருவகைத் துக்கம் மேலாடி வந்தது. அவர்கள்பற்றி, அங்கு நிகழ்ந்தவைபற்றி, அவன் எடுத்த குறிப்புக்கள் அவனுக்கு நினைவில் வந்தன. அக்காலங்களில் நிறையவே எழுதினான். நிறையவே வாசித்தான். வாசிப்பதற்குப் பத்திரிகைகள் கிடைக்காத குறையைத் தவிர, நூல்கள் நிறையவே இருந்தன, அவனிடம்.

திடீரென, அவன் நெஞ்சைத் துக்கம் நிறைத்தது.

ஒரு சிறிய நகரத்துக்குரிய நூல்நிலையத்தையே உருவாக்க உதவக்கூடிய புத்தகங்களை விட்டுச் செல்கிறோம் என்ற துக்கம் அவன் நெஞ்சை அடைத்துக்கொண்டு வந்தது. அவனும், அவன் அண்ணனும் சேகரித்திருந்த புத்தகங்கள்!

மாலை வெயில் மங்கிக்கொண்டு வந்தது.

திருகோணமலையை நோக்கி அலைகளைக் கிழித்தபடி முன்னேறிக் கொண்டிருந்தது கப்பல். கப்பலின் பின்பகுதியில் கூடுபோல் கட்டப்பட்டிருந்த அடைப்புக்குள் நின்றவாறு எல்லையற்று விரியும் வானத்தையும் கடலையும் பார்த்துக்கொண்டு நின்றான். எல்லையற்று விரியும் வானமும் கடலும் எங்கோ தொலைவில் நிகழ்த்தும் போலிச் சங்கமிப்பின் அழகு, அவனை வியப்புற வைத்தது.

கலை என்பது இதுதானே?

சங்கமிக்காததைச் சங்கமிப்பதாகச் செய்த கலைஞன் யார்?

அந்த அற்புதத்தின் உள்ளே போகப்போக, அது திடீரென உனக்குள்ளேயே திரும்பி, உனக்குள்ளேயே கவிழ்ந்தது. அந்த முடிவின்மை உன்னிலேயே முடிவதாகத் தொடர்ந்தபோது அவன் அதிர்ந்திருக்கிறான்.

பிரபஞ்ச இருப்பின் அற்புதம், அவன் கடைவிழிகளில் கசிவை ஏற்படுத்திற்று. எல்லாவற்றின் பின்னாலும் ஓர் இனந்தெரியாத துயர் கசிந்துகொண்டுவந்தது.

அவன் நினைவில் திடீரென அந்தச் சம்பவம் மீண்டும் முகத்தில் அறைவதுபோல் முன்னெழுந்தது. அந்தத் துயர நிகழ்ச்சி...

○

பாடசாலை விட்டு, பகல் இரண்டு மணிபோல் பிள்ளைகள் வீட்டுக்கு போய்க்கொண்டிருந்தனர். இவர்களில் இருந்து பிரிந்து அக்காவும் தம்பியுமான இருவர் வெகுதூரத்திலுள்ள அவர்கள் வீட்டை நோக்கி விரைந்துகொண்டிருந்தார்கள். இடையில் ஓர் வல்லைவெளி போன்ற வயல்வெளியை அவர்கள் கடக்க வேண்டும். அந்த வெளியில், வெயிலில் வெடித்து, வெயிலின் கானலை நெளியவிட்டவாறு, வாய்பிளந்து ராட்சசிபோல் கிடந்தது, பெரிய கிராய் என்னும் குளம். அவர்கள் அதையும் கடந்து ஊர்மனையை எட்டிக்கொண்டிருந்தனர். ஒரு காக்கை குருவியும் பறக்கத் தயங்கும் அந்த நேரத்தில் எங்கோ ஒளிந்திருந்த, இயக்கத்தைச் சேர்ந்த, ஒருவன் அவர்கள் முன்னே நிற்கிறான்.

அவர்கள், அவனைக் கடந்து ஓட முற்படுவதற்குள், அந்தச் சிறுமியை அருகேயிருந்து யாருமற்ற வீட்டுக்குப் பலவந்தமாக இழுத்துக்கொண்டுபோக அவன் எத்தனிக்கிறான். அவர்கள் மூவருக்குமிடையில் இழுபறியும் கூக்குரலும் எழுகின்றன. முன்னைய கிராமமாய் இருந்திருந்தால் இந்தக் கூக்குரலால் முழுக் கிராமமே திரண்டிருக்கும். அவன் இழுத்துக்கொண்டு போவதில் தோல்வியுறவே, அந்தச் சிறுமியைத் தூக்கிக்கொண்டு ஓடுகிறான். ஆயினும், இவர்களின் இந்தச் சந்தடியால் உலுக்கப்பட்டு, அங்கே இரண்டொரு தலைக்கறுப்பு தெரிகிறது.

இதைக் கண்டதும் அவன், அவளை விட்டுவிட்டு அங்கிருந்து ஓட்டம் எடுக்கிறான்.

இச்செய்தி காட்டுத்தீ போல் பரவுகிறது.

அந்தப் பிள்ளையின் தாயும் பாட்டியும் இன்னும் சிலரும் கூக்குரல் இட்டவர்களாய் இவனிடம் ஓடி வர, இவன் அவர்களை அருகிருந்த இயக்க முகாமுக்கு இட்டுச்சென்று நடந்தவற்றை முறையிட வைக்கிறான்.

நடவடிக்கை துரிதகதியில் இடம்பெறுகிறது.

பாடசாலைச் சிறுமியோடு சேட்டையில் ஈடுபட்டவன் கைதுசெய்யப்பட்டு, கைகள் இரண்டும் கட்டப்பட்ட நிலையில், ஒரு ட்றாக்ரரின் பின்பெட்டியில் தூக்கிப்போடப்பட்டுக் கொண்டு வரப்படுகிறான்.

தீவின் நான்கு திசையிலுமுள்ள பிரஜைகள் குழுவைச் சேர்ந்தவர்களும் பொதுமக்களும் மகாவித்தியாலயத்திற்கு வருமாறு அழைக்கப்படுகின்றனர். போதுமான அளவு சனம் கூடியதும்

அங்கே ஒரு கூட்டம் நடைபெறுகிறது. இவ்வாறான அசம்பாவிதங்கள் இனிமேலும் இங்கே இடம்பெறாமாட்டாதென்பதை உறுதிப்படுத்துவதற்காகக் கூட்டப்பட்ட கூட்டம் அது.

இவ்வாறு கூட்டம் நடந்துகொண்டிருக்கும் சமயத்தில் குற்றச் செயலில் ஈடுபட்டவன் மகாவித்தியாலயத்திற்கு முன்னாலுள்ள வேப்பமரத்தின் கீழ் ட்றாக்ரரில் கொண்டுவரப்பட்டு இறக்கப்படுகிறான்.

மகாவித்தியாலயக் கூட்டத்தில் ஒருவர் பேசிக்கொண்டிருக்கிறார்.

இனிமேலும் இத்தகைய அசம்பாவிதங்கள் இடம்பெறாதென உறுதிமொழிகள் கூட்டத்தில் வழங்கப்படுகின்றன.

டிறாக்ரரில் இருந்து இறக்கப்பட்டவனின் கண்கள் கட்டப்படுகின்றன.

கூட்டம் முடிந்து மக்கள் வெளியே வந்துகொண்டிருக்கின்றனர்.

அவ்வேளை, 'சடசட'வென துப்பாக்கிச் சன்னங்கள் வெடித்துப் பாய்கின்றன.

'குற்றவாளி' இரத்தம் கொப்பளிக்க நிலத்தில் பிணமாகிச் சரிகிறான்.

கூட்டம் முடிந்து வெளியே வந்துகொண்டிருந்த அனைவரின் நெஞ்சையும் அது உறையவைக்கிறது.

அவனுக்கு இத்தனை கொடிய தண்டனையா? யார் இதைச் செய்யும்படி கேட்டது? அந்தச் சிறுமியின் பெற்றோரும் அவனும் குறிக்கப்பட்ட அந்த நபரை எச்சரித்துவிடும்படியே கேட்டுக்கொண்டனர்.

அப்படியிருந்தும்அவனுக்கேன் அத்தகைய கொடும் தண்டனை?

ஊர் மக்கள் தமக்கெதிராகத் திரும்பாமல் இருப்பதற்கான ஒரு வன்முறை எதிர்வினை அது?

இந்த எதிர்வினை மூலம் சுவாமி எனக்கு விடுக்கும் சமிக்ஞை என்ன? அவனைக் குடைந்த கேள்வி அது. அவனுக்குப் பழைய நினைவு ஓடிவந்தது. அவன் 'பொலிநீயூறைற்றிஸ்' நோயினால் பீடிக்கப்பட்டு, கால், கை வழங்காத நிலையில் யாழ். வைத்திய சாலையில் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கிறான்.

அப்போது, யாழ்நகரை ஆக்கிரமிக்கும் நோக்கில் புலிகளோடு பொருதியவாறு இந்திய ராணுவம் வந்துகொண்டிருக்கிறது.

ராணுவம் வைத்தியசாலைக்குள்ளும் நுழையுமா? அவன் தனக்குள் கேட்டுக்கொண்டான். இது சிங்கள ராணுவமல்ல வைத்தியசாலைகளுக்குள்ளும் நுழைந்து தமிழ்மக்களைக் கொல்லுவதற்கு. இது, இந்திய ராணுவம், இது அமைதி காக்க வந்த படை, அப்படிச் செய்யாது. அனேகர் அப்படித்தான் கூறினர்.

ஆனால், அவனுக்கு அப்படிப் படவில்லை.

அவனுக்குள், "இங்கிருந்து போய்விடு" என்று அவன் குரு குரல்கொடுப்பதுபோல்பட்டது.

அவன் தன் வார்ட்டுக்குப் பொறுப்பான டொக்டரிடம் தன்னை டிஸ்சார்ஜ் பண்ணிவிடுமாறு கேட்டான்.

டொக்டருக்குச் சிரிப்பாய் இருந்தது.

"உனக்கு எழுந்தே நிற்க முடியவில்லை. எப்படிப் போவாய்? நான் வெளியே போகவிடமாட்டேன்" என்றார்.

"ராணுவம் இன்று இரவு வைத்தியசாலைக்குள்ளும் வந்து வெறியாடலாம்."

"அப்படி நடக்காது, அவர்கள் இங்கே வரமாட்டார்கள்." டொக்டர் உறுதியளித்தார்.

ஆனால், அவன் கேட்கவில்லை. டொக்டரின் ஆத்திரத்தைச் சம்பாதித்தவாறே அங்கிருந்து வெளியேறினான்.

அவன் வெளியேறிய அன்றிரவு, ராணுவம் ஆஸ்பத்திரிக்குள் நுழைந்தது. நோயாளிகள், தாதிமார், வைத்தியர்கள் என்று பாராமல் சுட்டுத்தள்ளியது.

அவன் தனக்குள் எழுந்த குருவின் குரலைக் கேட்காது அங்கிருந்திருந்தால், அவனும், அவனுக்குத் துணையாக நின்ற அவன் மனைவியும், அவனது நண்பன் துரையனும் பலியாகியிருப்பார்கள். அன்று காலை அவர்கள் பயந்து பயந்து வாகனம் ஒன்றில் பயணித்தபோது, இரவு சிறுசிறு காயங்களோடு இந்திய ராணுவத்திடமிருந்து தப்பியிருந்தவர்களும் அதில் ஏறியிருந்தனர்.

இப்போ, மீண்டும் இத்துயர் நிகழ்வுமூலம் சுவாமி எனக்கு அனுப்பும் செய்தி என்ன?

இங்கிருந்து உன் குடும்பத்தோடு வெளியேறிவிடு என்பது போலவேபட்டது.

அவனுக்கு, மீண்டும் அவனது நண்பன் யாழ்ப்பாணத்தில் ஏதாவது தவறு புரிந்திருக்கலாம் என்ற உணர்வே தலைகாட்டிக் கொண்டிருந்தது.

சரி, அவன் அங்கு புரிந்த தவறு, இங்கு எம்மையும் ஆச்சிரமத்தையும் அகற்றுவதற்கொரு சமிக்ஞை தரும் நல்ல நிகழ்வாய் மாறுவதாயின்...

தீமை எது? நன்மை எது? அபபடி ஓர் இருமை இருக்கிறதா? இல்லை, இருப்பது ஒன்றுதான். அந்த ஒன்றே இப்படி இரண்டாகி மாயம் புரிகிறதுபோலும்? அவன் தனக்குள் பெரிதாகச் சிரித்தான்.

## 11

விரிந்துகொண்டு செல்லும் கடல்வெளியை அவன் பார்த்தவாறு நின்றிருந்தான்.

வானம் கவிந்து கடலுக்குக் காப்புத்தருவது போன்ற ஒரு படிமம் அவன்முன் எழுகிறது.

ஒன்றுக்கொன்று காவல், ஒன்றுக்கொன்று பகைமை. பகைமையாகத் தெரிவது, காவலாக மாறும். காப்பதாகத் தெரிவது, திடீரெனக் கூற்றுவனாக மாறும். ஒவ்வொன்றும் தாம் வரிக்கும் சார்பின் ஈர்ப்பில் போடும் மாயத்தோற்றங்கள்.

சார்பிலிருந்து விடுபடும்வரை எந்த நீதியான தீர்ப்பும், எங்கோவோர் மூலையில், அதிலுள்ள அநீதியைக் கிணுகிணுத்துக்கொண்டேயிருக்கும்.

அவன் கண்முன்னே சுடப்பட்டிறந்த அந்தக் 'குற்றவாளி'யின் முகம் வந்து, வந்து மறைந்தது.

அவனுக்கு அந்தத் தண்டனை சரியா?

தெய்வாதீனமாக அந்தச் சிறுமி தப்பினாள்.

அவள், அவன் கையில் சிக்கிச் சிதறடிக்கப்பட்டிருந்தால்...?

ஆனால் –

அவள், அவன் கையில் சிக்கிச் சிதறடிக்கப்படவில்லை!

அதுதான் மையப்புள்ளி – அங்குதான் நம் கண்ணுக்குத் தெரியாத ஒன்று நின்றாடும் – மையப்புள்ளி.

அந்த மையப்புள்ளியின் ஓரங்களில் பல முகங்கள் அவனுக்குத் தெரிந்தன.

புங்குடுதீவிலிருந்து மக்கள் இடம்பெயர்ந்துபோன பின்பு, எஞ்சியிருந்த ஜனங்களுக்குள் இடம்பெற்ற வன்முறைகள், களவுகள், வன்புணர்வுகள், வன்புணர்வு எத்தனிப்புகள், கொலைகள் – இவற்றின் காரணகர்த்தாக்களின் முகங்கள் அவன்முன் வந்து வந்து போயின.

தன் மனைவியையே அடித்துக் கொலை செய்து வளையில் தூக்கிலிட்டுவிட்டு, அவளே தற்கொலை செய்துகொண்டதாகக் கூறியவன்.

தனித்து வாழ்ந்த அப்பாவி மனிதன் ஒருவனைக் கொலை செய்துவிட்டு, அவனுடைய கையிருப்புத் தேடியவர்கள் –

பாலியல் வண்புணர்வில் ஈடுபட்டவர்கள், எத்தனித்தவர்கள்.

சுடப்பட்டு இறந்தவனைவிட எத்தனையோ மடங்கு அறிவும் ஆற்றலும் அறமும் உடையவராகக் காட்டிக்கொண்ட, அவனோடு பழகிய ஒருவர், அந்த அப்பாவியைவிடக் கீழ்நிலைக்கு இறங்கி அவன்முன் புழுவாக நெளிந்த காட்சி அவனை என்றுமே வெட்கிக்க வைத்துக்கொண்டிருந்தது...

அங்கு முகாம் போட்டிருந்த ராணுவத்தின் இயக்கம்போலவே, இவர்களின் இயக்கமும் காமம் மூடிய போர்வைகளாகவே இருந்தன.

அந்த அப்பாவிக் குற்றவாளியைத் துளைத்த சன்னங்கள் அவன் நெஞ்சைத் துளைத்தன.

அவன் உடல் கூனிக்குறுகியது.

அந்த மையப்புள்ளியை விட்டு, இவர்கள் எந்தச் சார்பு ஈர்ப்புச் சுழலால் அள்ளுப்பட்டனர்?

வேம்பின் கீழ் இரத்தம் கொப்பளிக்க வீழ்ந்துகிடந்த அந்த அற்ப மனிதனின் நினைவு அவனுக்குள் எழுந்தது.

அப்படியானால், அந்தக் கிராமத்தில் எத்தனை பேரை சன்னம் துளைத்திருக்க வேண்டும்.

அவன் கடைவிழிகளில் இருந்து தெறித்த நீர், கடலையும் உப்பாக்கியிருக்கலாம்.

திடீரென, அவன்முன்னே சுடப்பட்டிறந்தவன் கேள்வி கேட்பவன்போல் எழுந்தான்.

அப்படியானால், நீ எவ்வளவு உயர்த்தி?

அவன் மனம் அலைபாய்ந்தது.

நீ எவ்வளவு துப்புரவானவன்?

எனக்குத் தண்டனை வழங்கியவர்கள் எவ்வளவு துப்புரவான வர்கள்?

எத்தனை விரச உணர்வுகள், ஆபாசங்கள், வன்முறை மன விகாரங்கள்... அவன் மனமும் ஏறி, ஏறி விழுந்தேதான் வந்தது. ஆயினும், அந்தச் சார்பில் சுழலும் ஈர்ப்பில் அவன் உடல் விழ

வில்லை. அந்த ஈர்ப்பினால், அவன் பந்தாடப்படவில்லை. அவன் மனம் நேரியதாகவே நின்றது. அந்தப் பலத்தைத் தந்த பேராற்றலை அவன் கரங்கள் கூப்பி வணங்கின.

மீண்டும் அந்த மையப்புள்ளி

வானக்கவிப்பென...

அவன் கடைவிழிகளில் நீர் கசிய, நெஞ்சு கரங்குவிக்கிறது. என்றாலும், அந்த அற்ப மனிதனின் நெஞ்சில் பாய்ந்த சன்னங்கள் எல்லோர் நெஞ்சிலும் பாயவேண்டும்போல் குறுகியது.

அவன் கண்ணெதிரே இருந்தாற்போல் ஒரு காட்சி.

பிட்டுக்கு மண் சுமந்தவனாய் சுடப்பட்டிறந்தவன் நின்றான்.

நீரைக் கிழித்தபடி ஒரு பெரும் சுறா, ஜெற் விமானம்போல், பின்சிறகு நீர்மேலெழுந்து தெரிய, சிறு மீன்களைத் துரத்தியபடி வருகிறது.

அதற்கஞ்சி, சிறு மீன்கள் நீரைவிட்டெழுந்து பாய்ந்து பாய்ந்து அந்தரித்து வீழ்கின்றன. வெள்ளிப் பாளங்களாய் மாலை வெயிலில் அவற்றின் பளீரிடல். நீர்ப்பரப்பு, சிறிது நேரம் வன்முறைப் போர்க் களமாய் மாறுகிறது. சிறிது நேரந்தான்! பிறகு, எல்லாம் முடிவுக்கு வந்த அமைதியின் தாலாட்டு. அலைகள் எழுந்தெழுந்து, மெல்ல மெல்ல அடங்குகின்றன.

அப்போது, அங்கே தாலாட்டிய அலைகளிடையே மூன்று, நான்கு மீன்கள் குற்றுயிராய் துடித்தபடி துடித்தபடி... அவைகளில் ஒன்று சுடப்பட்டு இரத்தம் கொப்பளிக்க, வேம்பின் கீழ் கிடந்த அந்த அற்ப உயிராய் அவன் முன் துடித்துத் துடித்து...

❖

# துவக்குப்பிடியால் வாங்கிய அடி

இராமேஸ்வரம் கோவிலின் கோபுரம் அதிகாலை மங்கல ஒளியில் கருஞ்சிறு மலைபோல் எழுந்துநின்றது.

சுதந்திரா, அந்த மணல்வெளியில் அமர்ந்தவாறு, எதிரே கிடந்த கடலை வெறித்தபடி பார்த்துக்கொண்டிருந்தாள்.

அவளோடு வந்த பிள்ளைகள், உறவினர்கள், இன்னும் உதவ வந்த பணியாட்கள் என்று ஒவ்வொரு தரப்பினரும், தாம் வந்த வேலை முடிந்த நிலையில், அன்னதானம் முடிந்ததும் அங்கிருந்து போவதற்கான ஆயத்தங்களை மேற்கொள்வதில் மும்முரமாயிருந்தனர்.

சுதந்திராவின் கணவன் பாரத் இறந்து பதினைந்தாவது ஆண்டு நிறைவு தினம். இம்முறை இராமேஸ்வரத்தில் அனுஷ்டிக்கப்பட்டது.

காலைக்கதிர் கடலுக்குமேலால் தலைகாட்டும் நேரம்.

அதற்கு முன்னரே எல்லாச் சடங்குகளையும் முடித்துவிட்டு, அங்கு குழுமும் சனங்களுக்கு அன்னதானத்திற்கான ஒழுங்குகளை ஒப்படைத்துவிட்டு, அவள் மணல்வெளியில் துறவிபோல் விடுபட்டவளாய் ஒருக்கழித்து அமர்ந்திருந்தாள்.

சிறிது தூரத்திற்கப்பால், கடலோரத்தில் சிறு கூட்டம் ஒன்று கூடுவது, அவள் கண்களில் பட்டது.

அவளுக்கு அதன் காரணம் தெரியும்.

அன்று அதிகாலையில் அவளும், அவளது கூட்டத்தினரும் கடலுக்குள் இறங்கி முழுக்காடச் சென்றபோது, அந்த இடத்தில்தான் அவள் கால்கள் இடறுப்பட்டன. அவள் தன்னைச் சுதாரித்துக் கொண்டு, தன் கால்கள் இடறுப்பட்டதன் காரணத்தைக் காண முற்பட்டபோது, அவள் நெஞ்சு அதிர்ந்தது.

அங்கே, அவள் கால்களை இடறியவாறு இரண்டு பிணங்கள் கிடந்தன; தாயும் பிள்ளையுமாய் இரண்டு பிணங்கள். கடலில் மிதந்து சிதம்பி, ஊதிப் பருத்தவைபோல் அவளுக்குத் தெரிந்தன.

எப்படி அவை இங்கே?

இவற்றில் 'முழி'த்துவிட்டுத்தான், அவள் கணவனின் சடங்கு ஆரம்பமாக வேண்டுமா?

"என்ன பொருத்தம்!" – அவள் தனக்குள்ளேயே சொல்லிக் கொண்டாள்.

எதுவும் சும்மா நடப்பதில்லை. எல்லாவற்றுக்கும் ஒரு தொடர்பு. அந்தத் தொடர்பைத் தொட்டுக்கொண்டுபோனால் உலகின் அத்தனை நிகழ்வுகளும் – முன்னர் நடந்தது, இப்போ நடப்பது, இனி நடக்கப்போவது – ஒரே நாரில் தொடுக்கப்பட்ட பூமாலையாய் எழுந்து ஒவ்வொருவரது கழுத்தையும் சுற்றுவதைக் காணலாம்.

'இதுவும் அப்படித்தான்' – அவள் விரக்தியோடு தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

அன்று காலையில் காரணத்தோடுதான் அந்தப் பிணங்கள் அவள் கால்களை இடறின என்பதுபோலவே அவள் எடுத்துக் கொண்டாள்.

அவள் பார்ப்பதற்கு அழகாய் இருந்தாள். இந்தக் காலத்துக் குரிய நாகரிகத் தோரணைகள் அவளில் தெரிந்தன. ஆனால், அவளிடம் ஊறியுள்ள சுதந்திர வேட்கை, புதுக்கோலம் கொள்வது போல் கண்களில் பிரகாசித்தன.

அந்தப் பிணங்கள்?

'இலங்கை அகதிகள்' – அவள் தனக்குள் சொல்லிக்கொண்டாள்.

இலங்கை ராணுவத்திற்குப் பயந்து, காசைக் கொடுத்து, ஏதோ கிடைத்த மீன்பிடி வள்ளத்தின் தயவில் வந்து, இடைநடுவில் இறக்கப்பட்டு, கரைக்கு வரமுன்னரே அலைகளின் மோதலில் அகப்பட்டு அமிழ்ந்துபோன அபலைப் பெண்ணும் அவள் பிள்ளையுமாய் இருக்கலாம்.

அவள் நினைவுகள் கொந்தளிக்கத் தொடங்கின.

கரையொதுங்கும் இந்த அனாதைகளால் இந்த மண்தான் பாவமூட்டைகள் கொட்டப்படும் கழிவிடமாக மாறிக்கொண்டிருக்கிறது?

தென்னிலங்கையில் இராவணர்கள்தான் இன்னும் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்களா?

குவேனி போட்ட சாபத்திலிருந்து இன்னும் தென்னிலங்கை விமோசனம் பெறவில்லையா?

சுதந்திராவின் கண்முன் விஜயனால் ஏமாற்றப்பட்ட குவேனி, கண்ணீர் பெருக்கெடுக்க நிற்கிறாள். தம்மினத்தைக் காட்டிக் கொடுத்தவளை, அவளது இனத்தவர் சங்கிலியால் பிணித்து, இழுத்துச் செல்கின்றனர். அப்போது, அவள் போட்ட கூக்குரலும் சாபமும் பேரிடிபோல் உள்முழங்கி, தென்னிலங்கை எங்கும் பரவிக்கவிவதை அவள் காண்கிறாள்.

அச்சாபத்தில் தம்மையும் பங்காளியாக்கிவிட்ட, அவளது கணவன் பாரத்மேல் அவளுக்கு ஆத்திரம் பற்றிக்கொண்டுவருகிறது.

"அப்பாவை நினைக்க எனக்கு துக்கமாக இருக்கம்மா." – முணுமுணுத்தவளாய் சுதந்திராவின் அருகே வந்த அவள் மகள், அவளை, பழைய நினைவுகளில் இருந்து கீழ் இறக்கினாள்.

"அப்பாவைக் கொன்றவர்களுக்கு நல்ல பாடம் நாங்கள் படிப்பிக்கவில்லையே" என்று அவள் அருகே நின்று, அவள் மூத்த மகன் கோயில் கோபுரத்தைப் பார்த்தவாறு கூறினான்.

அவர்களுக்குத் தெரியும், அப்பாவைக் கொன்ற எதிரிகளைப் பழிவாங்க வேண்டும் என்று தமக்குள் குமுறியபூம் ஆத்திரம், அம்மாவைப் பாதிப்பதில்லையென்று. மாறாக, அவரை நினைவு கூரும் ஒவ்வொருசமயமும் அவளுக்குச் சினமேறி, முகத்தில் செம்மை படர்வதையே அவர்கள் கண்டிருக்கிறார்கள். அப்பொழு தெல்லாம் அதன் காரணத்தை அறிய அவர்கள் அவளைப் போட்டுக் குடைந்தபோதும், அவளிடமிருந்து எந்தப் பிடியும் கிடைத்த தில்லை.

ஆனால், ஒருநாள் வீட்டுக்கு வந்திருந்த உறவினரான ஒரு பெரியவரோடு – அவரைப் பார்க்கும்போது காந்தியின் சாயல் தெரிந்தது – சுதந்திரா கதைத்துக்கொண்டிருந்தபோது, இடையில் புகுந்த அவர்களுக்கு, சில வார்த்தைகள் காதில் புகுந்தன.

"அது பெரிய அவமானம் இல்லையா?"

சுதந்திரா அந்தப் பெரியவரைப் பார்த்து கேட்டாள்.

பெரியவர் லேசான புன்னகையோடு அதை ஆமோதிப்பது போல் கேட்டுக்கொண்டிருந்தார்.

"எத்தனையோ மகான்களை உலகுக்களித்த என் கோத்திரத் திற்கே தாங்கமுடியாத அவமானத்தை அவர் நடத்தை ஏற்படுத்தி விட்டது. அவர், அந்த இடத்திலேயே தன் வயிற்றைக் கிழித்துக் கொண்டு செத்திருக்க வேண்டும் அல்லது தனக்கு அந்த அவமா னத்தை ஏற்படுத்தியவர்களைச் சாகடித்திருக்க வேண்டும்."

பிள்ளைகளின் குறுக்கீட்டால் அவள் பேச்சு நின்றுவிட்டது.

இடையில் நின்ற பேச்சுக்கு அர்த்தம் கொடுக்கமுடியாது அவர்கள் அந்தரப்பட்டனர்.

எது பெரிய அவமானம்?

அவர்கள் தாயாரின் வாயில் இருந்து வந்த வார்த்தைகளின் அர்த்தம் என்ன?

அப்பாவுக்கு அப்படி என்ன அவமானம் ஏற்பட்டது?

அவர்களுக்கு ஒன்றும் புரிவதாய் இல்லை.

இவற்றுக்கு விடைகாண்பதாய் அம்மாவை நோக்கிய அவர்களது கேள்விகள், வெற்றுச் சுவரில் எறிந்த பந்தாகவே அவர்களை நோக்கித் திரும்பிவந்தன.

○

சுதந்திரா இன்னும் காலைக்கதிரையும், அது கடலில் பட்டுத் தெறிப்பதையும் சிறுகுழந்தைபோல் பார்த்துக்கொண்டிருந்தாள். அவள் பார்வையில் எண்ணிறந்த யுகயுகாந்தங்கள் எழுந்தெழுந்து படிவதுபோல்பட்டது.

காலம் மௌனித்து அவளை தொழுவதுபோல்...

திடீரென, அவளுக்கு அந்தப் பெரியவரோடு அன்று விடுபட்டுப்போன பேச்சு, வேறொருநாள் தொடர்ந்தது மீண்டும் நினைவில் எழுந்தது.

"..அப்படியானால் உன் கணவனைக் கொன்றவர்கள் சரியானதையே செய்தார்கள் என்பதா, உன் வாதம்?" பெரியவர் கேட்டார்.

"சரியானதைச் செய்தார்களா, இல்லையா என்பதல்ல என் வாதம். தன்னை அவமானப்படுத்தியவர்கள்மேல் தீர்க்க வேண்டிய வெஞ்சினத்தை, அவரது அன்பைக் கோரியவர்கள்மேலல்லவா என் கணவர் காட்டினார்! அந்த அப்பாவி மக்களையல்லவா கொன்றொழித்தார்! இந்த நிலையில் எந்த அற்ப உயிரும் தன்னைத் தாக்கியவர்களை எதிர்த்துத்தாக்கத்தான் செய்யும்."

"அப்போ, அவர்கள் செய்தது சரியா?" மீண்டும் பெரியவர் கேட்டார்.

"சரியானது என்பதைவிட, அதைத்தான் எவரும் செய்வார்கள். அப்படியான ஒரு நிலையில்தானே, என் மாமியும் கொல்லப்பட்டார், இல்லையா? ஆனால், ஒரு வேடிக்கை."

"வேடிக்கையா, என்ன அது?" அவர் கேட்டார்.

"என் மாமியாரைக் கொன்றவர்களின் இனத்தைச் சேர்ந்தவரைத்தான், இன்று தலைமை அமைச்சராய்வைத்து இப்போ அழகு பார்க்கிறோம். இது வேடிக்கை இல்லையா?" அவள் சொன்னாள்.

"இது உள்ளூர் விவகாரம். அவர்களைத் தள்ளிவைக்கமுடியாது."

"ஓ! பயங்கரவாதத்தில் உள்ளூர்ப் பயங்கரவாதம், வெளியூர்ப் பயங்கரவாதம் என்று இரண்டு இருக்கிறதோ?" என்று கேட்டுவிட்டு மெல்லச் சிரித்தாள்.

"இதுதான் அரசியல்" என்று கூறிவிட்டு அவர் பதிலுக்குச் சிரித்தார்.

"இது அரசியல் அல்ல. இதுதான் இன்றைய உலக வியாதி. இது, இன்று சுதந்திரத்துக்காக உலகமெங்கும் போராடிக்கொண்டிருக்கும் மக்களைக் கொன்றொழித்துக்கொண்டிருக்கிறது இதனால்தான். வெளியூர்க்காரன் எங்களைக் கூப்பிட்டுவைத்துக் கௌரவிப்பதாகக் கூறி அவமானப்படுத்தியதை நாங்கள் சௌகரியமாக மறந்ததுதான். அன்றைக்கே பாரத் செத்திருந்தால் நான் என்றைக்கும் அடிதொழும் மகாபுருஷராக இருந்திருப்பார்..."

"என்றைக்குச் செத்திருந்தால்?"

"அந்த அற்ப மூஞ்சூறு அரக்கனால் திட்டமிடப்பட்டு அவமானப்படுத்தப்பட்டபோது!"

○

காலைக்கதிர் இப்போ சுதந்திராவின் முகத்திலும் பட்டுத் தெறித்தது. அவள் முகத்தில் அரும்பிய வியர்வையை சேலைத் தலைப்பால் துடைத்துக்கொண்டே கோபுரத்தின் பக்கம் பார்வையை எறிந்தாள்.

தெய்வக்களை அதில் கசிவதுபோல் தெரிந்தது.

அன்னதானத்துக்கு அடிபட்டுக்கொண்டுநிற்கும் மக்களும் அந்தத் தெய்வக்களையால் குளிப்பாட்டப்படுவதுபோல் அவளுக்குப்பட்டது.

இராமேஸ்வரம்.

எண்ணங்கள் கிளர்ந்தன. அவள்முன் தொன்மை சிலிர்த்தது.

சீதையைப் பறிகொடுத்த இராமன் இங்கு வந்துதானே சிவலிங்கம்வைத்துப் பூஜித்தான்? அதன்பின்னர்தானே இந்த இந்துமா கடலைத் தாண்டி அவனும், அவனது வானரப் படைகளும் சீதையை மீட்கச் சென்றன?

ஆனால், அரக்கரோடு பொருத, வானரப் படைகளை அனுப்புவதற்கு முன்னர், சீதைக்குத் தூதனுப்புகிற சாட்டில், அழிவுவராமல் பேசித்தீர்ப்பதற்காக இராமன் முதலில் அனுமனைத் தூதனுப்பினான்.

சீதையைச் சந்தித்த அனுமனை, அரக்கர்கள் சுற்றிவளைத்து இராவணன்முன் கொண்டுபோய் இருக்கை தராது நிறுத்தியபோது –

அனுமன் அவர்கள் முகத்தில் அறைவதுபோல் –

தன் வாலைக்கொண்டே அரச சபையில், தான் இருந்து வந்த தேசத்தின் இமயம்போல் இராவணனுக்கும் மேலாக எழுந்து நின்றான்.

அரக்கர்களை அவமானமும் ஆத்திரமும் மாறி, மாறி ஆட்டுவித்தது.

அவனை அவமானப்படுத்த, அவன் வாலில் அவர்கள் பற்ற வைத்த தீ, தென்னிலங்கையையே தீயால் குளிப்பாட்டிற்று. ஏராள மான அரக்கர்கள் வாயுமைந்தனின் வாலின் சுழற்சியில் அறைபட் டழிந்தனர்.

அவமானப்படுத்த முனைந்தவரை அவமானத்தில் வீழ்த்தி வீரனாய் மீண்டுவந்தான் வானரத் தலைவன்.

ஆனால், இவள் கணவன்?

அவள் முகம் சிவந்தது.

அவள் கணவனும் இந்துமா கடலைக் கடந்துதான் லங்கா புரிக்கு படைநடத்திச் சென்றான்.

யாரை அழிக்க?

காலத்துக்குக்காலம் லங்காபுரியில் அரக்கர்கள் தோன்றிக் கொண்டுதான் இருந்தார்கள். அவர்கள் கையில் சிக்கிய சிற்றினம் சித்திரவதைக்குள்ளாகிச் சிறைப்பட்டனர், கொல்லப்பட்டனர்.

அவர்களைக் காப்பாற்றவா அவள் கணவன் பாரத் சென் றான்?

அப்படித்தான் இறந்துபோன அவன் அம்மா திட்டமிட்டிருந் தாள்.

ஆனால், அவளின் அகால மரணம், இவனுக்கு அவளின் திட்டத்தை எட்டச்செய்யவில்லையா?

இடையில் நின்றவர்களால் இவன் பிழையாக வழிநடத்தப் பட்டானா?

அரக்கரால் கொடுமைப்படுத்தப்பட்ட ஓர் இனத்தைக் காப்பாற்றத்தான் அவன் லங்காபுரி சென்றான் என்று இதிகாசம் கூறுகிறது. ஆனால், நடந்தது என்ன?

லங்காபுரியில் ஜெயவர்த்தனபுரக் கோட்டை அரக்கன், படையுடன் சென்ற சுதந்திராவின் கணவன் பாரத்தை வரவேற் றான். தன் சிறிய நாட்டின் மேல் ஆக்கிரமிப்புப் படை நடத்திவந்த பாரத்தின் மேல் அரக்கர் தலைவனுக்கு உள்ளூரக் கோபம்

பொங்கியது. ஆனால், காட்ட முடியுமா? பேரரசனான பாரத்தின் ஒற்றை விமானத்தின் இரைச்சல்கேட்டே லங்காபுரி நடுங்கியது. ஆகவே, நேருக்குநேர் பொருதமுடியாத அரக்கர் தலைவன் அவனை மானபங்கப்படுத்த மறைமுகமாகச் சூழ்ச்சி செய்தான்.

தன் இராஜ்ஜியத்தின் வட கிழக்கில் வாழும் தன் உள்ளூர்ப் பகைவர்களுக்கு இவன் உதவுவதா?

மாயப்போர் புரியும் வல்லரக்கர்களின் சூழ்ச்சி தெரியாதவன் பாரத். தன் பாட்டனின் சமகாலத்தவன் தான் என்றும் அவனோடு நெருங்கிய தொடர்பு வைத்திருந்தவன் என்றும், 'உங்கள் பாட்டனோடு சுதந்திரப் போராட்டத்திலும் பங்குபற்றினேன்' என்றும் லங்காபுரி ஜெயவர்த்தனபுரக் கோட்டை அரக்கன் அவிழ்த்துவிட்ட சுயபுராணத்தைப் பெரிதாக எடுத்துக்கொண்டான் அனுபவம் ஏதுமில்லாத பாரத்.

லங்காபுரி சென்ற அவனுக்கு ராணுவ மரியாதை வழங்க ஜெயவர்த்தனபுரக் கோட்டை அரக்கன் ஒழுங்கு செய்தான்.

கௌரவ வேட்டுக்கள் தீர்க்கப்பட்டன.

அதன்பின் ராணுவ மரியாதை ஏற்றல்.

பாரத் ராணுவ மரியாதையை ஏற்க, விறைத்துநின்ற ராணுவச் சிப்பாய்களான அரக்கர்கள் அருகே நடந்துகொண்டிருந்தான்.

ராணுவ மரியாதை முடியுந்தறுவாய் –

ஒரு மின்வெட்டு நேரத்தில் அது நடந்துமுடிந்தது –

பாரத், கடைசி ராணுவச் சிப்பாயான அரக்கன் அருகே சென்றபோது, அந்த ராணுவ அரக்கன், தான் பிடித்திருந்த துவக்கைத் திடீரென மறுவளமாகத் தூக்கிப்பிடித்து, பாரத்தின் தலையை நோக்கி ஒரே அடி! அவ்வேளை, ஏதோ அரவம் கேட்டு உந்தப்பட்டு அவன் சற்றுச் சரிந்தபோது அந்த அடி, அவன் பின்தோளிலும் கன்னத்திலும் விழுந்தது.

அடியை வாங்கிய அவன் அசடுவழிய சிரித்துக்கொண்டிருந்த போது –

அந்த அடி சுதந்திராவின் தலையில் விழுந்தது.

"ஐயோ" என்றவளாய், சுதந்திரா தன் தலையில் அடித்தவளாய் பற்களை 'நறநற'வென்று நறும்பினாள்.

எத்தனையோ பேரரசர்களையும் மன்னர்களையும் என்முன் மண்டியிடச்செய்த எனக்கு, ஓர் அற்பன் முதுகில் அடிப்பதா? அடிவாங்கிய அந்த இடத்திலேயே என் கணவன் செத்திருக்க வேண்டும்; அந்த அரக்கர் அனைவரையும் கொன்றுவிட்டு!

"சீ வெட்கக்கேடு" என்று காறியுமிழ்ந்தவளாய் சுதந்திரா சோர்ந்துபோனபோது, அவளது பிள்ளைகள், அவளைத் தாங்கிக் கொண்டனர்.

கேலியாகப் பார்த்துச் சிரித்த அவள் –

"இன்னுந்தான் இவர்களுக்கு எந்தத் தெளிவும் ஏற்படவில்லையே" என்று முணுமுணுத்தவளாய், தன் பிள்ளைகளைப் பார்த்து மீண்டும் சிரித்தாள், விரக்திச் சிரிப்பு.

❖

## ஆய்வு

**கா**ற்றில் எழுந்து முகத்தில் அறைந்தது
இரத்த வாடை
சிதறிக்கிடந்தன சதைகள்.
கால்கள் தறிக்கப்பட்டும் கைகள் முறிக்கப்பட்டும்
அரைகுறை கருகிய உடல்கள்
புகைந்தன.
சுவரிலும் தரையிலும் பீறியடித்த
இரத்தக் குழம்பிடை
இன்னும் ஒட்டியிருந்த உயிரில்
கிடந்து நடுங்கின உடல்கள்.
"புலிகளின் இறைச்சியை
எங்கள் நாய்களுக்கு ஊட்டுவோம்"
சுவரொட்டிகள் அறைந்தன.
பிந்துனுவெவ புனர்வாழ்வு முகாமில்
உடைந்து சிதறிய இளைஞர்கள் ஓலம்,
துங்ஹிந்த நீர்வீழ்ச்சியாய்
சொரிந்தது முடிவிலாத்
துயரை.

○

அவன் ஓர் ஆய்வாளன். அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றிலிருந்து இலங்கைக்கு வந்திருந்தான். அவன் வந்ததின் நோக்கம் பிந்துனுவெவப் புனர்வாழ்வு முகாமில் வாழ்ந்த தமிழ் இளைஞர்களில் இருபத்தியேழு பேர் கொல்லப்பட்டதும், பதினாலு பேர் படுகாயப்பட்டதுமான வன்முறைச் சம்பவம்பற்றிய ஆய்வை மேற்கொள்வதற்கே. அவரது ஆய்வின் முடிவில் பல விஷயங்கள் வெளிச்சத்துக்கு வந்தன. அந்த முகாமில் அடைக்கப்பட்டிருந்தவர்கள் புலிகள் இயக்கத்திலிருந்து தப்பி ராணுவத்திடம் சரணடைந்தவர்கள் மட்டுமல்ல, வேறு காரணங்களுக்காகப் பொலிஸாரின் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்பட்டவர்களும், அடையாள அட்டை இல்லை என்பதற்காகக் கைதுசெய்யப்பட்ட மலையக இளைஞர்களும் அங்கே இருந்தார்கள்.

இவர்கள் 'பயங்கரவாத இயக்கத்திலிருந்து விடுபட்டவர்கள்' என்ற எடுகோளில் அவர்களுக்குப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, பல்வகைத் தொழிற் பயிற்சிகளும் வழங்கப்பட்டன. ஆனால், பிரச்சினை என்னவென்றால், அவர்கள் சகலரும் விடுதலைசெய் யப்பட வேண்டிய காலம் கடந்தும் அங்கு அடைக்கப்பட்டிருந்ததே. அவர்கள் தம்மை விடுதலைசெய்யும்படி கோரினர். தமக்கு வரும் கடிதங்கள் கொடுக்கப்படாமல் கிழித்தெறியப்படுவதையிட்டுக் குரல்கொடுத்தனர். இதனால் ஏற்பட்ட வாக்குவாதத்தில் அங்கு கடமையாற்றிய பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவர் தாக்கப்பட் டார். அவர் அங்கிருந்து வெளியேறி, அக்கிராமத்து மக்களுக்கு, அவர்கள் கிராமத்தைப் புலிகள் வந்து தாக்கப்போவதாகக் கதை கட்டினார். ஏற்கனவே அந்த முகாமை அகற்ற வேண்டும் என்று குரல்கொடுத்த இனவாத அரசியல்வாதிகளுக்கு, முகாமைத் தாக்கி அழிப்பதற்கு இது சந்தர்ப்பத்தை வழங்கியது. இதைத் தூண்டி, வன்செயலுக்கு வழியமைத்தவர்களாக அப்பிரதேச ஹெட்குவார்ட்டர்ஸ் இன்ஸ்பெக்ரரும், உதவிப் பொலிஸ் சுப்பிரின் டனும் இருந்தனர் என்பதும் ஆய்வில் தெரியவந்தது. காவலில்நின்ற பொலிஸ்காரர்கள் அனைவருக்கும் இது தெரிந்திருந்தது.

தாக்குதல் தொடங்குவதற்கு முன்னரே 'புலிகளின் இறைச் சியை எங்கள் நாய்களுக்கு ஊட்டுவோம்!' என்ற சுவரொட்டிகள் அப்பிரதேசமெங்கும் ஒட்டப்பட்டிருந்தன.

○

விடியற்காலையிலேயே புனர்வாழ்வு முகாமைச் சுற்றி கத்திகள், பொல்லுகள் ஆகியவற்றோடு அந்தப் பிரதேசத்து மக்கள் என்ற பேரில் பலர் குழுமியிருந்தனர். சிவில் உடையில் பலவகையாறாக் கள் நின்றிருந்தன.

அப்போது, அங்கே ஜீப்பில் வந்து இறங்கினர் ஹெட்குவார்ட் டர்ஸ் இன்ஸ்பெக்ரரும், உதவிப் பொலிஸ் சுப்பிரின்டனும்.

கூட்டத்தை நோக்கி நடந்துவந்த இன்ஸ்பெக்டர் தன் 'பட்டன்' (*batton*) தடியை நீட்டிச் சைகை செய்தார்.

மறுகணம் –

அவர் மந்திரக்கோல் ஆட்டலில் அங்கு ஆயுதங்களோடு நின்ற அத்தனைபேரும் திடீரென வேட்டைநாய்களாகவும் வெறி நாய்களாகவும் உருமாறின.

அவரோடு வந்த உதவிப் பொலிஸ் சுப்பிரின்டன் திடீரென வெறிநாய்களாக மாறியவர்களுக்கு முகாமைக் காட்டி, 'சூ' என்றார்.

வெறிநாய்களின் வேட்டைப்பற்களாகக் கையிலிருந்த ஆயுதங்கள் மாறின.

"புலிகளை ஒழித்துக்கட்டுவோம்!"

பின்னிருந்து கோஷங்கள் எழுந்தன.

நிராயுதபாணிகளாக நின்ற இளைஞர்மேல் வெறிநாய்கள் பாய்ந்தன.

தஞ்சமடைந்தவர்களின் மண்டைகள் சிதறின

ஒவ்வொரு நாயும் ஒவ்வொரு மண்டையை உருட்டி உருட்டிக் குடைந்தன.

தொடைகள் குதறப்பட்டன, கைகள் சிதறப்பட்டன.

சிதறப்பட்ட விரல்களைக் குட்டிநாய்கள் கௌவிச் சுவைத்தன.

பெட்டை நாய்கள் வேறு, கத்திகளோடு சங்காரத்தில் ஈடுபட்டன.

வேதனை அலறலும் கூக்குரலும் அந்தப் பிரதேசத்தையே அதிரவைத்தன.

கதவுக்குப் பின்னால் ஒளிந்த சிறுவன் ஒருவனை வெளியே இழுத்து வெறிநாயொன்று, ஒரே வெட்டாக வெட்டிற்று.

வெட்டுவதற்குத் தேவைப்படும்போது வேட்டைப் பற்கள் நீண்டு கத்திகளாக மாறின. முன்கால்கள் கைகளாக மாறி உயர்ந்தன.

வெட்டும்போது பீச்சியடித்த இரத்தம் நாயொன்றின் கண்களை மறைக்கவே, அந்த இடைவெளிக்குள், அந்த நாயைத் தள்ளிவிட்டு இரண்டு இளைஞர்கள் வெளியே ஓடுகின்றனர்.

முன்னால் பொலிஸ் 'ட்றக்,' அதற்குள் புகுந்து அடைக்கலம் கோரலாம் என்று அவர்கள் எண்ணி, அதற்குள் புக எத்தனித்த போது, பொலிஸ் உடைக்குள் இருந்து வேட்டைநாய்கள் வெளி வந்தன.

அவற்றிடம் நீண்டிருந்த பற்கள், துப்பாக்கிகளாக மாறித் தஞ்சமடைந்தவர்களைச் சல்லடையிட்டன.

முகாமிலிருந்து இன்னும் சிலர் இரத்தம் சொட்டச்சொட்ட ஓடிவருகின்றனர்.

அவர்கள் பதின்மூன்று வயது மதிக்கத்தக்க சிறுவர்கள்.

இரத்த வாடை, வெளியே நின்ற நாய்களை ஊளையிடவைத்தன.

"அந்தா புலிப்பயங்கரவாதிகள்! கொல்லுங்கள்! கொல்லுங்கள்!"

செத்துவிழுகின்றனர் அந்தச் சிறுவர்கள்.

ஒரு மணித்தியால வெறியாட்டத்தில் அந்த புனர்வாழ்வு முகாமில் இருந்த அத்தனை தமிழ் இளைஞர்களும் வேட்டையாடப் படுகின்றனர்.

அசாதாரண அமைதி மெல்ல எழுந்தது.

திடீரென முகாமே தீப்பற்றி எரிந்தது.

அனுங்கியவாறு குற்றுயிராய்க் கிடந்த உடல்கள் அதற்குள் தூக்கி எறியப்படுகின்றன.

புலிகளின் இறைச்சியைத் தின்ற நாய்கள் மெல்லமெல்ல வெளியே வந்துகொண்டிருந்தன.

❖

# பீதி

எங்கும் இனந்தெரியாத பீதி மிதந்துகொண்டிருந்தது.

ஓசை அவித்துவரும் மெல்லிய காற்றின் வருடலிலும் பீதியின் நெருடல் கனத்தது. மேலே கருமை கலந்து வெளிறித்தெரியும் வானம் பெருந்தாச்சி சட்டியால் உலகை மூடுவதுபோல் கவிந்திருந்தது. மூச்சுவிடமுடியாது உலகம் திணறுவது தூரத்தெரியும் கடல் அலைகளின் உருளலில் தெரிந்தது. வானின் இருட்கவிப்பு கடலில் விழுந்து படர்ந்தது. கடல் அலைகளின் உருளல் நின்று, திடீரென மேலெழுந்த பேரலைகளின் வெண்நகைக் கொக்கரிப்பு, மாபெரும் அரக்கர்கள் கடல் அடியில் பொருதுவதின் அதிர்வாய் வெளி நெளிந்தது. இன்னும் சிறுபொழுதில், வானம் உலகை அப்படியே மூடிச் சிதறவைக்கும் மூர்க்கம் விட்டுவிட்டுத் துடிக்கும் மின்னலில் தெறித்தது. வேட்டைநாயின் பற்களாய் மின்னல் கோடிடும் ஒவ்வொருசமயமும் பீதி மிதந்தது. திடீரெனக் காற்றெழுந்து ஊளையிடத் தொடங்கிற்று. முன்தோப்புத் தென்னைகள் தம் ஓலைகளூடே சோகம் வழியவிட்டுத் துஞ்சிய நிலைவிட்டுச் சிகை அவிழ்த்தன. ஒருசிலபொழுதே அத்தோற்றம். மறுகணம் கூந்தலை சுழற்றிச் சுழற்றி ஆடும் 'கலைக்'காரிகளாய்க் கோபாவேசம் கொண்டெழுந்தன.

ஆடின, 'கலை' ஆடிச் சுழன்றன
விதுவிதுர்த்தன
எழுந்தன குனிந்தன
சடசடத்து நிலம்பெயர்ந்து முறிந்து
விழுந்தன.

மரமொன்றிலிருந்து விட்டுவிட்டுக் கரைந்த காகம், எச்சமிட்டு மேலெழுந்து அனாதரவாய் அள்ளுப்பட்டது காற்றில். அதனோடு மாயத் தொடர்பேற்றும் நூலிழையில், விண்ணெழுந்து புவியின் பீதிக்கவிப்பாய் பட்டமேற்றும் பருந்து. திடீரென வாய்பிளந்தது வானம். ஒரு பேரிடி கீழிறங்கி, புல்லிதழில் உயிர்ப்பேற்றும் நரம்பிலும் தன் சுவடெறிந்துசெல்கிறது. மீண்டும் மீண்டும் வானம் போர்க்களமாய்ப் பொருமி வெடித்து எரிகற்களை வாரி இறைக்க, ஒருகணம் உலகம் உறைந்து உயிர்ந்தது.

புவி தன் அச்சைவிட்டுப் பெயர்கிறதா?

"ஐயோ, ஐயோ!"

என் மனம் எனக்கு முன்னால் நின்று குளறியது.

நான் சிரித்தேன்

நீரில் தோய்ந்த காகம் இறக்கைகளை அடித்து, அடித்து நீரைச் சிதறவைப்பதுபோல், என் மனம் என்முன்னால் நடுங்கி, பீதியைச் சிதறவைத்தது.

"எனக்கு பயமாய் இருக்கே!"

மீண்டும் மனம் அலறியது.

"அதுக்கு என்னை என்ன செய்யச் சொல்கிறாய்?"

நான் விடுபட்டுக் கேட்டேன்.

"இப்படியேன் விடுபட்டுக் கதைக்கிறாய்?"

என் மனம் தேம்பியது.

"உன்னை நான் விட்டெறிந்து கனகாலம் ஆயிற்று. நீதான் அதை அறியாது என்னோடு ஒட்டிக்கொண்டு திரிகிறாய்."

நான் அழுத்திக் கூறினேன்.

"நீ என்னை விட்டெறிந்துவிட்டாய், துரோகி!"

ஆத்திரமும் அழுகையும் மேலிட அது கூறிற்று.

ஒவ்வொரு இடியின் பிளிறலில் அது நடுங்கிற்று.

மின்னல் சுழற்றிய சவுக்கு வீச்சில் அதன் பற்கள் கிடுகிடுத்தன.

"நான் இல்லாமல் உனக்கு வாழ்வேது? சுகமேது?"

அது நடுங்கியவாறு கேட்டது.

"இல்லை, என்னால்தான் நீ உயிர்வாழ்கிறாய்; உன்னால் நானல்ல."

நான் அழுத்தினேன்.

"எப்படி? நான் செத்தால் நீயும் செத்துப்போவாய்!"

அது உயிரற்றுக் கதைத்தது.

"உனக்குப் பைத்தியம்! நீ செத்தால், எனக்கு விடுதலை. நீ சாகச் சாக, நான் இந்த உலகமாய், பேரண்டமாய், அதற்கும் அப்பாலுமாய் விரிந்துகொண்டிருப்பேன்!

"என்ன?" என்முன் அற்பமாய் நின்று கண்களை அகல விரித்தது மனம்.

"ஆம், இப்பொழுதே செத்துப்போ. நீ சாகச் சாக, நான் ஒவ்வொரு பொருளிலும் உயிர்த்தெழுவேன். கொட்டும் மழைத் துளியில் என் விழி சுடரும். என் காலிலூரும் எறும்பிலும் என் விழுதிறங்கும். வானப்பெருவெளியின் நட்சத்திரங்கள் என் ஞானக் கண்ணாய் நின்றொளிரும். போ, இப்பொழுதே செத்துப்போ, என் பெரும் பாய்ச்சலுக்கு எதிராய்ச் சுவரெழுப்பும் நீ செத்துப்போ, போ, போ..."

கொட்டும் மழையிலும், வெட்டும் மின்னலிலும் பயந்து, நடுங்கி, நடுங்கி அற்பபொருளாய்ச் செத்துக்கொண்டிருக்கிறது, அது.

அதன் சாவில் என் ஆனந்தக் கூத்து.

அந்தக் கூத்தில் உச்சியோனி வெடித்து

பேரண்டத்திற்கும் அப்பாலான என் பிறப்பு, வியாபிப்பு.

❖

தமிழியல்
TAMILIYAL

## இதுவரை வெளியான
## தமிழியல் வெளியீடுகள்

1. **ஊரடங்கு வாழ்வு**
*('ஈழநாடு' பத்திரிகையில் 1984ஆம் ஆண்டு வெளியான ஆசிரியத் தலையங்கங்கள் 63இன் தொகுப்பு)*
*ந. சபாரத்தினம்*
*சென்னை, ஜூன் 1985*

2. **அக்கரைக்குப்போன அம்மாவுக்கு**
*(31 கவிதைகளின் தொகுப்பு)*
*ஹம்சத்வனி*
*சென்னை, ஓகஸ்ட் 1985*

3. **மரணத்துள் வாழ்வோம்**
*(31 கவிஞர்களின் 82 அரசியல் கவிதைகள்)*
*யாழ்ப்பாணம், நொவெம்பர் 1985)*

4. **இந்துப் பண்பாடு: சில சிந்தனைகள்**
*(லேடி இராமநாதன் நினைவுச் சொற்பொழிவு, 1985)*
*கா. கைலாசநாத குருக்கள்*
*சென்னை, செப்ரெம்பர் 1986*

5. **யுகங்கள் கணக்கல்ல**
*(பதின்மூன்று சிறுகதைகளின் தொகுப்பு)*
*கவிதா*
*சென்னை, நொவெம்பர் 1986*

6. **தேடலும் படைப்புலகமும்**
*(ஓவியர் மாற்கு சிறப்பு நூல்)*
*யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 1987*

7. **இலங்கையின் தோட்டப் பள்ளிக்கூடங்களின் கல்வியமைப்பும் பிரச்சினைகளும்**
*சொர்ணவல்லி பத்மநாப ஐயர்*
*யாழ்ப்பாணம், ஜூன் 1988*

8. **நீர்வளையங்கள்**
*(54 கவிதைகளின் தொகுப்பு)*
*சண்முகம் சிவலிங்கம்*
*சென்னை, நொவெம்பர் 1988*

9. **பெண்களின் சுவடுகளில்**
*சாந்தி சச்சிதானந்தம்*
*சென்னை, மார்ச் 1989*

10. **யதார்த்தமும் ஆத்மார்த்தமும்**
*(பத்துக் கட்டுரைகளின் தொகுப்பு)*
*மு. பொன்னம்பலம்*
*சென்னை, ஏப்ரில் 1991*

11. **மீண்டும் வரும் நாட்கள்**
*(கவிதைத் தொகுப்பு)*
*மு. புஷ்பராஜன்*
*தமிழியல், காலச்சுவடு*
*நாகர்கோவில், ஜூலை 2004*

12. **வர்ணங்கள் கரைந்த வெளி**
*(கவிதைத் தொகுப்பு)*
*தா. பாலகணேசன்*
*தமிழியல், காலச்சுவடு*
*நாகர்கோவில், ஜூலை 2004*

13. **AJ: The Rooted Cosmopolitan**
*(Festschrift)*
*Edited by: Chelva Kanaganayakam*
*Tamiliyal, London, UK, July 2008*

14. **ஒற்றை மைய உலக அரசியலில் போரும் சமாதானமும்**
*(உலக அரசியல்)*
*மு. திருநாவுக்கரசு*
*தமிழியல், காலச்சுவடு*
*நாகர்கோவில், செப்ரெம்பர் 2008 (இரண்டாம் பதிப்பு – மே 2009)*

15. **சுழலும் தமிழ் உலகம்**
*(புலம்பெயர்ந்த தமிழர் வாழ்வு தொடர்பான கட்டுரைகள்)*
*சந்திரலேகா வாமதேவா*
*தமிழியல், காலச்சுவடு*
*நாகர்கோவில், செப்ரெம்பர் 2008 (இரண்டாம் பதிப்பு – மே 2009)*

16. **தேடலும் விமர்சனங்களும்...**
*(கவிதை, சிறுகதை, கட்டுரை, கடிதங்கள் )*
*இ. ஜீவகாருண்யன்*
*தமிழியல், காலச்சுவடு*
*நாகர்கோவில், ஜூன் 2009*

❖



பிறருக்கு ஒருவன் கொடுப்பதெல்லாம்
தனக்கே கொடுத்துக் கொள்கிறான் - மகான் ரமணர்



சிறுகதை

## ஒரே ஒரு முற்போக்காளன்

மீண்டும் வேதாளம் கதைசொல்ல ஆரம்பித்தது:
உலகில் ஒரே ஒரு முற்போக்காளன் இருந்தான்.
அவன் முன்னோக்கி நடந்தான். அவன் நீண்ட நடை நடந்தான்.
நடந்தான், நடந்தான், நடந்தான். ஆயினும் என்ன
இவன் இன்னும் ஆரம்பித்த இடத்திலேயே நின்று கொண்டிருந்தான்.
“இவன் முற்போக்காளனா, பிற்போக்காளனா, திரிபு வாதியா,
இடைத் தரிப்பாளனா?” என்று வேதாளம் கேட்க,
“இவன் யாருமல்ல சாட்சாத் ஈழத்து தமிழ் மார்க்சிஸ்ட் எழுத்தாளன்”
என்று விக்கிரமாதித்தன் சரியாகவே பதில் கூற ........